கவிஸார்வபௌமரான காளிதாஸர் இயற்றிய

மேகஸந்தேச காவ்யம்

ஸாஹிதி வல்லப

வே. ஸ்ரீ. வேங்கடராகவாசார்யர்

எழுதிய தெளிவான தமிழ் உரையுடன்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

சென்னை-600 017 :: திருச்சி-620 002

கவிஸார்வபௌமரான்

காளிதாஸர்

இயற்றிய

மேகஸந்தேச காவ்யம்

காஞ்சீ பரமஹம்ஸ ஸ்ரீபரமாசார்யாளால் ''ஸாஹித்ீ வல்லப''
என்ற விருது அநுக்ரஹிக்கப்பட்டவரும், மயிலை விவேகா
நந்தர் கல்லூரியின் முன்னாள் ஸம்ஸ்க்ருதப் பேராசிரி
யரும், திருப்பதி கேந்த்ரீய ஸம்ஸ்க்ருத வித்யாபீடத்
தின் முன்னாள் முதல்வரும், ஸம்ஸ்க்ருதப் புலமைக்
காகப் பாரத ராஷ்டிரபதியின் ஸன்மான இதழ்
பெற்றவருமான

வே. ஸ்ரீ. வேங்கடராகவாசார்யர்

எழுதிய தெளிவான தமிழ் உரையுடன்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

சென்னை-600 017 : : திருச்சி-620 002

1986] [விலை ரூ. 20

THE MEGHASANDESA OF KALIDASA

FIRST EDITION : 1986

Stockists in the City :

Messrs. M. DAMODARAM & Co.
108, Corporation Fruit Market
Madras-600 108

Printed at :

Elango Achukoodam
166, R. H. Road
Mylapore
Madras-600 004
Phone : 74121

ஸ்ரீ:

காஞ்சீ ஸ்ரீ பரமாசார்யாளின் பரமானுக்ரஹம்

1965-ஆம் வருஷம் மே மாதம் 25-ஆம் தேதி. அப்பொழுது ஸ்ரீபரமாசார்யாள் சென்னை ஸ்ரீஏகாம்ரேச்வரர் அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருந்தார்கள். அன்று மாலை 6 மணிக்கு நான் அவர்களைத் தரிசனம் செய்யச்சென்ற பொழுது தரிசனம் அளித்தபின் ஸ்ரீ பரமாசார்யாள் "நீ ஏற்கனவே ரகுவம்சத்திற்கும், குமார ஸம்பவத்திற்கும் உரையெழுதியிருக்கிருய். அதே வகையில் மேகஸந்தேசத்திற்கும் உரை எழுது" என்று அருள் பாலித்தார்கள்.

அவர்களுடைய ஆணையைச் சிரமேற்கொண்டேனுயினும் நான் அப்பொழுது உத்யோகத்திலிருந்ததால் அது ஸம்பந்தமான பல வேலைகளாலும், மற்றும் பல காரணங்களாலும் இவ்வுரை எழுதுதல் உடனே மேற்கொள்ளப்படவில்லை. பதினறு வருஷங்களுக்குப் பிறகு இவ்வுரையை எழுதத்தொடங்கி இரண்டு வருடங்களில் முடித்தேன். பிறகு இதனைத்திருத்தி அச்சகத்திற்குக் கொடுக்கும் வகையில் நல்ல கையெழுத்தில் இவ்வுரையின் ப்ரதி எடுக்கப்பட்டது.

பெருங்காவ்யமான ரகுவம்சத்திற்கும் குமார ஸம்பவத்திற்கும் உரையெழுதும்படி முதன் முதலில் அருளியவர்களே ஸ்ரீ காஞ்சீ பரமாசார்யாள்தான். அவர்களின் பேரருளே இவ்விரண்டு உரைகளையும் எழுதும்படி ஆற்றல் அளித்தது. மாபெரும் சிறு காவ்யமான மேகஸந்தேசத்திற்கு உரையெழுதுவதற்கான சரீர ஆற்றலையும் மனத்திற்குச் சக்தியையும் கொடுத்ததும் ஸ்ரீ பரமாசார்யாளின் பரமானுக்ரஹமே.

திருவேங்கடவன் திருவருளாலும் ஸ்ரீ பரமாசார்யாளின் அனுக்ரஹத்தினுலும் இவ்வுரை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது பற்றி என் மனம் பக்தியினுல் நெகிழ்கின்றது. அவர்கள் இருக்கும் திசைநோக்கித் தலைவணங்கி ஸாஷ்டாங்கமாக அவர்களது திருவடிகளில் எனது ப்ரணமங்களை ஸமர்ப்பிக்கின்றேன்.

தாம்பரம் ஸானடோரியம்
ஜுலை 11, 1986

உரையாசிரியர்
வேங்கடராகவாசாரியார்

நன்றியுரை

1. நான் எழுதிய மேகஸந்தேசத்தின் தமிழ் உரையின் கையெழுத்துப் பிரதியை அச்சகத்திற்குக் கொடுக்க வேண்டிய வகையில் அழகிய கையெழுத்தில் தெளிவாகப் பிரதி செய்து கொடுத்தவர் குமாரி S. ரேவதி, M.A., ஸம்ஸ்க்ருதப் பிரிவு, சென்னை பல்கலைக்கழகம்.

2. இவ்வுரை அச்சிடப்படும் பொழுது பல முறையும் ப்ரூஃப் பார்த்து பிழைகளை நன்கு திருத்தி உதவியவர் டாக்டர் N. கங்காதரன், ரீடர், ஸம்ஸ்க்ருதப்பிரிவு, சென்னை பல்கலைக் கழகம்.

3. நான் ப்ரூஃப் பார்க்கும் பொழுது என்னுடன் இருந்து ப்ரூஃப்களைப் படித்துக்காட்டி திருத்த எனக்கு ஸஹாயம் செய்து, தானும் ஒரு முறை ப்ரூஃப் பார்த்துப் பிழைகளை நீக்க உதவியவர் குமாரி R. சம்பகலக்ஷ்மி (M.A. ஸம்ஸ்க்ருதம்).

4. இவ்வுரையைப் பதிப்பதில் ஏற்படும் பெரும் பொருட் செலவை மனத்தில் கொள்ளாது ஸம்ஸ்க்ருத மொழியைத் தமிழறிந்த அன்பர்கள் அறிய உதவ வேண்டுமென்ற பெருநோக்குடன் மிக்க பொருட்செலவில், குன்றாத ஊக்கத்துடன், இவ்வுரையை அச்சிட்டு வெளியிட முன்வந்தவர்கள் லிட்டில் ப்ளவர் கம்பெனியின் உரிமையாளர் ஸ்ரீ. T. N. C. வரதன் அவர்களும், அக்கம்பெனியின் அட்மினிஸ்டிரேடிவ் ஆபீஸர் குரேரு ஸ்ரீ V. வேங்கடேச அய்யர் அவர்களும் ஆவார்கள்.

மற்றும் பலரும் இதனை அச்சிடுவதில் உதவியுள்ளார்கள். பலனைச்சிறிதும் எதிர்பாராது, எனக்கு அன்புடன் உதவிசெய்த என் நண்பர்கள் அனைவருக்கும் திருமலையில் நித்யவாஸம் செய்கின்ற திருவேங்கடவன் நிர்வ்யாஜமான தனது அளவு கடந்த கருணையினாலே எல்லா நன்மைகளையும் அளிக்க வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

—உரையாசிரியர்

முக்கியமான குறிப்பு

இந்நூலை க்ருபையுடன் கடாக்ஷித்த காஞ்சி ஸ்ரீ பரமாசார்யாள் இதில் வந்துள்ள மூன்று பதங்களைக் குறிப்பிட்டு அவற்றின் பொருள்களைப்பற்றி தமது திருவுள்ளத்தை அனுக்ரஹித்து அருளினார்கள். அன்பார்ந்த வாசகர்களின் நலனைக் கருதி அப்பொருள்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

மேகஸந்தேசம் ச்லோகம் 16 (பக். 40) :

மாலம் : "நெல்லூர் ஜில்லாவில் 'மாலகொண்டா' என்று ஒரு மலை உள்ளது. அம்மலையில் ஒரு நரஸிம்ஹ ஸ்வாமி கோவில் இருக்கிறது. அந்த ஊரில் அநேகம் பேருக்கு 'மாலகொண்டய்யா' என்னும் பெயர் உள்ளது. மலைத்தொடர்களுக்கு இடையில் உள்ள பூமிக்கு 'மாலபூமி' என்று பெயர்."

மேகஸந்தேசம் ச்லோகம் 17 (பக். 41) :

ஆம்ரகூடம் : " குண்டூரிலிருந்து ஸ்ரீசைலத்திற்குப் போகும் வழியில் த்ரிபுராந்தக க்ஷேத்ரத்தின் ஸமீபத்தில் 'புல்லமாமிடி' என்ற மாந்தோப்பு இன்றும் இருக்கிறது. அதற்கு அர்த்தம் 'புளிப்பு மாமரக்கூட்டம்' என்பதாகும்."

ஸௌந்தர்யலஹரியில் 49-வது ச்லோகம் :

विशाला कल्याणी स्फुटरुचि-रयोध्या कुवलयैः
कृपाधाराधारा किमपि मधुराभोगवतिका ।
अवन्ती दृष्टिस्ते बहुनगर-विस्तार-विजया
ध्रुवं तत्तन्नाम-व्यवहरण-योग्या विजयते ॥

இந்த ச்லோகத்தில் அவந்தீபுரியும், விசாலா நகரமும் வெவ்வேறு ஊர்களாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

மேகஸந்தேசத்திலோ 30-வது ச்லோகத்தில் (பக். 71)

प्राप्यावन्तीनुदयनकथा-कोविदग्रामवृद्धान्
पूर्वोद्दिष्टामनुसरपुरीं श्रीविशालां विशालाम् ।

என்று அவந்தியையும் விசாலா நகரத்தையும் ஒன்றாகவே சொல்லியிருக்கிறது.

உரையாசிரியர்,
வேங்கட ராகவாசார்யர்:

முன்னுரை

உலக மகா கவியான காளிதாஸர் அபிஜ்ஞான சாகுந்தலம், விக்ரமோர்வசீயம், மாளவிகாக்னிமித்ரம், என்ற மூன்று நாடகங்களையும், ரகுவம்சம், குமார ஸம்பவம், மேகஸந்தேசம், ருது ஸம்ஹாரம் என்ற நான்கு ச்ரவ்ய காவ்யங்களையும் எழுதியுள்ளார். மகா காவ்யங்களான ரகுவம்சம், குமார ஸம்பவம் என்ற இரண்டும் விரிவான உரையுடன் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. கவி, அவரின் காலம், அவரது நூல்கள் இவை பற்றி விவரம் அறிந்து கொள்ள மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு காவ்யங்களின் முன்னுரையைக் காண்க. மேகஸந்தேசமும், ருது ஸம்ஹாரமும், அளவில் சிறியனவாதலால் இவையிரண்டும், சிறு காவ்யம் எனப்படும். தற்போது மேகஸந்தேசம் மூலம், பதவுரை, கருத்துரை, விரிவான விளக்க உரை என இவற்றுடன் வெளியிடப்படுகிறது.

மேக ஸந்தேசம் - நூல் பெயர்

ஸந்தேசம் என்ற சொல்லுக்கு வாய்மொழியாகவோ, கடிதம் மூலமாகவோ அனுப்பும் செய்தி என்று பொருள். மேக ஸந்தேசம் என்பதற்கு மேகத்தின் மூலம் அனுப்பப்பட்ட செய்தி என்பது பொருள். அளகாபுரியிலிருந்த குபேரனின் பணியாளரில் ஒருவன் ஏதோ ஒரு சாபம் காரணமாக ஒரு வருஷம் மனைவியை விட்டுப்பிரிந்து, அவனுக்கு ஏலாத சீதோஷ்ண ஸ்திதியுடைய பாரதத்தின் மத்தியப் பகுதியில் வசிக்கும்படி ஒரு நிர்பந்த நிலையில் வைக்கப்பட்டான். மனைவியைப் பிரிந்து ஒருவாறு எட்டு மாதங்களைக் கடத்தியபின் ஒரு நாள் அவன் வடக்கு நோக்கிச் செல்லும் மேகத்தைக் கண்டு, அதன் மூலம் தன் மனைவிக்கு ஆறுதல் மொழி கூறி நான்கு மாதங்களில் தான் அவளைச் சந்திப்பதாகக் கூறுகின்றான். இதுவே இக்காவியத்தின் பொருள். இதைக் கூறுவதால் இதுவே காவ்யத்தின் பெயருமாயிற்று.

மேக தூதமா? மேக ஸந்தேசமா?

மேக ஸந்தேசத்திற்கு உரை எழுதியவர்களில் சிலர் இக் காவ்யத்தை மேக தூதம் என்றே குறிப்பிடுகின்றனர். இது பிழையானது. காளிதாஸர் தமது நூலில் ஒரு இடத்தில்கூட தூதம் என்ற பெயரை உபயோகிக்கவில்லை. ஒரு காவ்யத்தில் கூறப்படும் முக்கிய பொருளைக் குறிக்கும் சொல்லைக் கொண்டே அக்காவ்யத்திற்குப் பெயரைக் குறிப்பதே காவ்யங்களின் மரபு. இக்காவ்யத்தில் தூதன், ஸந்தேசம் என்ற இரு பொருட்கள் வருவதாகக் கொண்டோமேயானல், இவ்விரண்டிலும் மிகமுக்யமானது ஸந்தேசமே அன்றி தூதன் அல்ல. எனவே 'தூத' என்கிற பதத்தைவிட்டுக் காளிதாஸர் 'ஸந்தேசம்' என்ற பெயரைத்தான் தமது காவ்யத்திற்கு இட்டிருக்கின்றூர். மேலும் ஸந்தேசம் என்ற சொல்லை ஐந்து இடங்களில் கவி குறிப்பிட்டிருக்கிருர் [I. 5, 7, 13, II. 22, 33]. தூதன் என்ற சொல்லை ஓரிடத்தில்கூடக் குறிப்பிடவில்லை. மேலும் தக்ஷிணாவர்த்த நாதர், பூர்ண ஸரஸ்வதி முதலியவர்களும், மேகஸந்தேசம் என்ற பெயரையே குறிப்பிட்டிருக்கின்ருர்கள். "சிந்தனை என்ற சாணைக்கல்லில் நன்கு தீட்டப்பட்ட கூர்மதியுடைய நான்" என்று கூறும் வேதாந்த தேசிகரும் தமது நூலுக்கும் மேக ஸந்தேசத்தை அனுசரித்து "ஹம்ஸ ஸந்தேசம்" என்றே பெயர் வைத்துள்ளார். வேதாந்த தேசிகரை ஒரு ஸாதாரண கவியாகக் கருத முடியாது. மேக ஸந்தேசத்தில் மொத்தம் எவ்வளவு ச்லோகங்கள் உள்ளன என்பதைக்காட்ட வேதாந்த தேசிகரின் ஹம்ஸ ஸந்தேசம் உதவுகின்றது.

மேக ஸந்தேசம் ஒரே நூலாகக் கருதப்படவேண்டியதா?

ஸர்க்கம், ஆச்வாஸம் என்று இரண்டு பிரிவாகப் பகுத்து ஒரு லகு காவ்யமாகக் கருதப்பட வேண்டுமா? ஸாஹித்ய அகாடமிக்காக மேக ஸந்தேசத்தைப் பல பதிப்புகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பதிப்பித்த டாக்டர் எஸ். கே. டே மேக ஸந்தேசம் முழுவதையும் ஒரே நூலாக-111 சுலோகமுள்ள

ஒரே தொகுதி நூலாகக் கருதுகிறார். ஆனால் அதற்கான காரணத்தை இதனுடைய இரண்டாம் பதிப்பிற்கு முன்னுரை எழுதிய டாக்டர் ராகவன் அவர்களும் கூறவில்லை. பதிப்பாசிரியரும் கூறவில்லை. உண்மையில் இதை இரண்டு பகுதியாகக் கொள்வதே சாலப்பொருத்தமானது. யக்ஷன் முதற் பகுதியில் அளகாபுரிக்கு மேகம் செல்ல வேண்டிய வழியைப் பற்றிக் கூறுகின்றான். இரண்டாம் பகுதியில் அளகாபுரி வர்ணனை, யக்ஷனின் மாளிகையை அடையாளங்காட்டுதல், பிரிவுற்ற யக்ஷியின் நிலை, யக்ஷிக்கு அனுப்பும் ஸந்தேசம் இவைகளைக் கூறுகின்றார். பொருள் வேறுபடுவதால் இரு பகுதிகளாகக் கொள்வதுதான் சிறந்தது.

காளிதாஸர் தமது நூலை ஒரே தொகுதியாகக் கருதினாரா அல்லது இரண்டு தொகுதியாகக் கருதினாரா என்பதற்குச் சான்றில்லை. சில பதிப்பாசிரியர்கள் இரண்டு பகுதியையும் ஸர்க்கம் என்ற பெயரில் பகுக்கிறார்கள். இது பிழைபட்டது. ஆசிரியர் தண்டி கூறியது போல் மகா காவ்யங்களுக்குத் தான் ஸர்க்கம் என்ற பகுப்பு உரியது. சிறு காவ்யங்களுக்கு அத் தகைய பெயர் உரியதல்ல. [சிறு காவ்யமான ருது ஸம்ஹாரத்தை ஸர்க்கம் என்று பகுத்திருப்பது யோசிக்கப்பட வேண்டியதாகும்]. இத்தகைய பகுப்பைக் காளிதாஸரே செய்தாரா? பதிப்பாசிரியர் செய்தாரா? என்பது தீர்மானிக்கப் பட வேண்டியது. கூர் மதியுள்ள வேதாந்த தேசிகர் தமது ஹம்ஸ ஸந்தேசத்தைக் காளிதாஸரை அனுசரித்து ஆச்வாஸம் என்ற பெயரில் இரண்டு பகுதியாகப் பிரித்திருக்கிறார். இதுதான் சரியானது.

மேகஸந்தேசத்தில் மொத்த சுலோகங்கள் எவ்வளவு?

மேகஸந்தேசம் என்ற இத்தகைய நூலை முதன் முதலில் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதியவர் காளிதாஸர் தான். பிறரிடம் காணப்படாத-அவர் ஒருவரிடமே காணப்படுகின்ற-ஒப்பற்ற ப்ரதிபா விசேஷத்தின் ஸ்ருஷ்டியாக அமைந்தது இக்காவியம். இக்காவியத்தின் சிறிய அளவு, இதன் வடிவமைப்பு, இதன்

முற் பகுதியில் மேகத்திற்கு வழி கூறுதல், பிற் பகுதியில் கணவனைப் பிரிந்த ஏக்கத்தால் வருந்தும் மனைவிக்கு ஆறுதல் கூறும் மொழிகள், இந்த காவ்யம் அமைக்கப்பட்ட மந்தாக்ராந்தா வ்ருத்தம், சொல் நடை அழகு, இந்த காவ்யத்தின் உயிராக அமைந்த விப்ரலம்ப ச்ருங்காரச் சுவை, அதனடியாகப் படிப்பவர்களின் மனத்தில் நிரந்தரமாக நீடித்திருக்கும் கருணைச் சுவை இவையெல்லாம் சேர்ந்து இந்தக் காவ்யத்தை ஓர் அற்புதப் படைப்பாகச் செய்து விட்டன. இதைக் கண்ணுற்ற காளிதாஸர் காலத்துக் கவிகளும் பிற் காலத்தில் தோன்றிய கவிகளும் இந்த அற்புத படைப்பை அனுசரித்து இது போன்ற ஸந்தேச காவ்யங்களை கணக்கிலடங்கா வகையில் எழுதினர். நாட்டு மொழிக் கவிகளும் இதே போல் பல தூது காவ்யங்கள் எழுதினர். ஒரு நூல் நன்கு அமையப் பெறின் சில அதம கவிகள் அந்த நூலிலுள்ள கவிதை போன்ற கவிதைகளை எழுதி முதல் நூலில் இடையிலே செருகி விடுவார்கள். இவைகளைக் கண்டறிவது கஷ்டம். உரையாசிரியர்கள் இடைச் செருகல் என்றறிந்தும் கூட உரையிட்டிருக்கிறார்கள். உதாரணமாக மல்லிநாதர் இடைச்செருகலென்று கூறியே பல ச்லோகங்களுக்கு உரையெழுதியிருக்கிறார். அவர் கணக்குப்படி மேக ஸந்தேசம் 124 ச்லோகமுடையது. உரையாசிரியர்களில் முதல்வராகக் கணக்கிடப்படுகின்ற தக்ஷிணாவர்த்த நாதர், மற்றொரு உரையாசிரியர் பூர்ண ஸரஸ்வதி போன்றோர் 110 சுலோகங்கள்தான் காளிதாஸருடையவை என்று கருதி 110 சுலோகங்களுக்குத்தான் உரையிட்டிருக்கிறார்கள்.

தக்ஷிணாவர்த்தநாதர் உரை செய்யாத गत्युत्कम्पाद् (II. 7) என்பது உண்மையிலேயே ப்ரக்ஷிப்தமானது. கவனக் குறைவினாலே அதற்குத் தொடர் எண் கொடுக்கப்பட்டுள்ளது. அத்தொடர் எண்ணை நீக்கிவிட்டால் எமது இந்த மேகஸந்தேச பதிப்பிலேயும் ச்லோகங்களின் மொத்த எண் 110 தான் ஆகும். அதுதான் சரியானது.

காளிதாஸரை எல்லா வகையிலும் போற்றிப் பின்பற்றுகின்ற வேதாந்த தேசிகரும் தமது ஹம்ஸ ஸந்தேசத்தை 110

சுலோகங்களில்தான் எழுதியிருக்கிறார். வேதாந்த தேசிகரின் ச்லோக ஸங்க்யையே மேக ஸந்தேசத்தின் ச்லோக ஸங்க்யைக்கு அதிகார பூர்வமான முத்திரையிடுவதாகும். ஸாஹித்ய அகாடமியின் மேக ஸந்தேச பதிப்பாசிரியராகிய டாக்டர் எஸ். கே. டே தமது ஆராய்ச்சியின் பயனாக இடைச் செருகல்களை நீக்கி 111 ச்லோகத்தில்தான் மேகஸந்தேசத்தை அச்சிட்டிருக்கிறார். गत्युत्कम्पात् என்ற ப்ரக்ஷிப்த சுலோகத்தை விலக்காமலே டே சேர்த்துக் கொண்டதால் டே பதிப்பில் 111 சுலோகங்கள் வந்தன. பிற உரையாசிரியர்களைக் கொண்டு நாம் ச்லோக ஸங்க்யையை கவனிக்கத் தேவையில்லை.

மேக ஸந்தேசத்திற்கு மூலநூல் எது?

ரகு வம்சத்திற்கு ராமாயணமும், குமார ஸம்பவத்திற்கு சிவபுராணமும், அபிஜ்ஞான சாகுந்தலத்திற்கு மஹாபாரதமும் மூலநூலாக அமைந்தன. அது போல் மேக ஸந்தேசத்திற்கு மூலநூல் ஒன்று இருக்க வேண்டுமென்று சிலர் கருதினார்கள். இது பிழைபட்ட கருத்தாகும். உரையாசிரியர்களில் முதல்வராகக் கருதப்படுகின்ற தக்ஷிணாவர்த்த நாதர் தமது மேக ஸந்தேச உரையின் தொடக்கத்தில் ஸீதைக்கு [ராமன்] ஹனுமார் மூலம் அனுப்பிய ஸந்தேசத்தை ஆதாரமாகக் கொண்டு காளிதாஸர் இந்த ஸந்தேச காவ்யத்தை எழுதினார் என்று கூறுகிறார். இவருக்குப் பின் வந்த மல்லிநாதரும் தக்ஷிணாவர்த்த நாதரின் கருத்தை திரும்பக் கூறியிருக்கின்றார். இவ்வுரையாசிரியர்கள் இருவரும் ராமாயணத்தில் இந்தப் பகுதியை நன்கு பார்த்தவர்களல்லர் என்று தெரிகிறது.

வால்மீகி ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் ஸுக்ரீவன் ஸீதையைத் தேட வானரர்களை அனுப்பும் போது ஜாம்பவான், ஹனுமார் முதலான மஹாவீரர்களைப் பார்த்துக் கார்யத்தை முடித்து வாருங்கள் என்றான். அதைக்கேட்டுக் கொண்டிருந்த ராமர் தம் வாயால் ஒரு வார்த்தைகூடக் கூறாமல் மோதிரத்தை மாத்திரம் ஹனுமாரிடம் கொடுத்தார். இங்கு ஸந்தேசம் எங்கிருக்கிறது! நாம் கூறுவதை ஸந்தேகிப்

பவர்கள் கிஷ்கிந்தா காண்டத்தின் கடைசி ஸர்க்கங்களை மறு முறை புரட்டிப் பார்க்க வேண்டும். இந்த அந்த பரம்பரை யான வ்ருத்தாந்தம் பல நூற்றுக்கணக்கான வருஷங்களாக தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

ஸுந்தர காண்டத்தில் ஹநுமார் சில செய்திகளை ஸீதைக்கு ஆறுதலுக்காக ராமரின் மொழியாகச் சொல்கின்றார். அது எங்ஙனம் என்று சிலர் ஸந்தேஹிக்கலாம். அது முற்றி லும் ஹநுமாருடைய ஸமயோசிதமான சாதுர்ய பேச்சைச் சேர்ந்ததாகும். "சிறந்த தூதனொருவன், யஜமானனுக்காகத் தூது சென்ற இடத்தில் யஜமானனுடைய கார்யத்தை முடித்த பின், கார்யத்திற்கு விரோதமில்லாமல் மேலும் சிலவற்றைச் செய்வது தூதனுடைய கடமையாகும்" என்று ஹநுமாரே கூறுகின்றார். ஸீதையைக் கண்ட பிறகு அவளுக்கு ஆறுதல் மொழி கூறிய பின், ஸுக்ரீவனோ ராமனோ கூருத அசோக வனத்தை அழித்தலையும், லங்கா நகரத்தை எரித்தலையும் ஹநுமார் எப்படிச் செய்தார்? ஸீதையைப் பார்த்துவிட்டுத் திரும்ப வேண்டிய ஹநுமார் இவ்விரண்டு செயல்களைச் செய் தது போலவே ஸீதைக்கு சில ஆறுதல்களையும் கூறியிருக்க லாம். இதை ஆதாரமாகக் கொண்டு ஹனுமத் ஸந்தேசம் என்று ஒன்று இருப்பதாகக் கூறுவது பகற் கனவாகும்.

மஹாகவி காளிதாஸரை மேக ஸந்தேசத்தை எழுதும்படி தூண்டியது எது?

தொன்று தொட்டு பாரத தேசத்தில் ராமாயணம், மஹா பாரதம் இரண்டும் கவிகள் பலருக்கும் கவிதை எழுதுவதில் தூண்டு கோலாக இருந்திருக்கின்றன. அவற்றின் பாதிப்பு களும் செல்வாக்குகளும் முதற்கால காவ்யங்களில் மிகுதியும் காணப்படுகின்றன.

கவிகள் ஸம்போக ச்ருங்காரம், விப்ரலம்ப ச்ருங்காரமென இரண்டு வகையாக ச்ருங்கார ரஸத்தை பிரித்துள்ளனர். ஒரு மித்த கருத்துடன் சேர்ந்து வாழ்ந்து, பரஸ்பரம் ஒப்பற்ற

அன்புடன் இல்லற இன்பத்தைக் காதலர்கள் சுவைப்பதையே ஸம்போக ச்ருங்காரமென்பர். இதைக் கவிகள் தமது காவ்யங்களில் விரிவாக வர்ணிப்பதில்லே. விரிவாக வர்ணிப்பதற்கு இதில் இடமில்லே. விரிவாக ஒருவர் வர்ணிக்க முயல்வாராயின் அது அவருடைய காவ்யத்தில் விரஸத்தை அதிகமாகத் தோற்றுவிக்கும். ஒத்த கருத்துடைய காதலர்கள் ஒன்று சேர்ந்து வாழ்ந்து, பின் ஏதோவொரு காரணத்தால் பிரிந்து அப்பிரிவையே நினைத்து நினைத்துப் பிரிவினைத் தாங்காமல் மிக மிக வருந்துவாராயின் இதனை விப்ரலம்ப ச்ருங்காரமென்பர். இதில் வர்ணிப்பதற்கு விஷயங்கள் பல இருக்கின்றன. இதில் விரஸம் ஏற்படுவதில்லே. கவிகளும் விப்ரலம்ப ச்ருங்காரத்தை பலபடியாக வர்ணித்துள்ளனர். இப்படியொரு விப்ரலம்ப ச்ருங்காரத்தை விரிவாக வர்ணித்து, வர்ணனையைப் படிப்பவர்கள் மனத்தில் கருணை ரஸத்தை தோன்றச்செய்வர் சிறந்த கவிஞர். இதில் தலை சிறந்து விளங்குபவர் ஆதி கவியான வால்மீகி மஹரிஷி ஒரேவரேயாவார்.

இணைபிரியாக் காதலுக்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்கள் ராமனும் ஸீதையும். ஸீதையை ராவணன் கவர்ந்து சென்ற பிறகு ஸீதையைச் காணுமல் ராமன் மனம் பரிதவித்த தவிப்பையும் ஸீதையைப் பிரிந்த நிலையில் ராமன் பலவாறு கூறிப் புலம்பியதையும் வால்மீகி ஆரண்ய காண்டத்திலும், கிஷ்கிந்தா காண்டத்திலும், யுத்த காண்டத்தில் ஒரு ஸர்க்கத்திலும் படிப்போர் மனம் உருகித் தவிக்கும் வண்ணம் வர்ணித்திருக்கிருர். இவ்வர்ணனையைப் படிப்பவர்கள் விப்ரலம்ப ச்ருங்கார ரஸத்தை உணராமலிருக்க முடியாது.

இவ்விப்ரலம்ப ச்ருங்காரத்தை நன்கு படித்ததன் பயனுக அதற்கு நல்லதொரு உருவங் கொடுத்து விப்ரலம்ப ச்ருங்காரத்தை முக்கியமாகக் கொண்ட ஒரு காவ்யம் எழுத வேண்டுமென்று காளிதாஸரின் மனத்தைத் தூண்டியது வால்மீகியின் இந்த விப்ரலம்ப ச்ருங்கார வர்ணனை தான். இதில் ஸந்தேகப்படும் நண்பர்கள் வால்மீகி ராமாயணத்தில் விப்ரலம்ப

ச்ருங்காரப் பகுதியை ஒரு முறைக்கு இரு முறை படிக்கலாம். மேலும் மேக ஸந்தேசத்தில் வால்மீகியின் விப்ரலம்ப ச்ருங் காரக் கருத்துக்கள் பல இடம் பெற்றுள்ளன. வால்மீகியின் வர்ஷாகால வர்ணனையை கிஷ்கிந்தா காண்டத்தில் (ஸ-28) படிப்பவர்கள் பத ஒத்த கருத்துகள் காளிதாஸரின் மேக ஸந் தேசத்தில் காணப்படுவதைப் பார்க்கலாம். விப்ரலம்ப ச்ருங் கார காவ்யத்தை எழுத வேண்டுமென்று தூண்டியது வால்மீகியின் விப்ரலம்ப ச்ருங்கார வர்ணனை தான். வர்ஷாகால வர்ணனையும் இதற்கு உதவியது. இதற்கு மேல் கவி தன்னுடைய காவ்யத்திற்கு ஒரு நாயகன் வேண்டு மேயென்று யோசித்திருக்கிறார். தேவ ஜாதியில் யக்ஷர்கள், கின்னரர்கள், கந்தர்வர்கள் அதிகம் காமமுடையவர்கள் என்பது புராணங்களிலே ப்ரஸித்தம். வால்மீகியே ஓரிடத்தில் காமம் மிகுந்தவர்கள் கந்தர்வர்கள் [கி-59-9] என்று கூறி யிருக்கிறார். யக்ஷர்களும் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் தான். எனவே, காளிதாஸரும் காமம் மிகுந்த யக்ஷ தம்பதி களை விப்ரலம்ப ச்ருங்காரத்தின் பாத்திரமாகச் செய்தார். விப்ரலம்ப ச்ருங்கார நாயகனாக யக்ஷனை உருவாக்கியது, அவன் காதலியாக யக்ஷியைக் காதல் மிகுந்த மனைவியாகக் காட்டியது, சாபத்தினால் அவர்களிருவரும் பிரிந்திருக்கும்படி செய்தது, மேகத்தைத் தூதனாக அமைத்தது, அது போக வேண்டிய வழியைப் பற்றி விஸ்தாரமாக வர்ணித்தது, யக்ஷ ராஜனின் அளகாபுரியை வர்ணித்தது, அடையாளங் காட்ட யக்ஷனுடைய வீட்டை வர்ணித்தது, யக்ஷனை பிரிந்த நிலையில் யக்ஷி எந்த நிலையிலிருப்பாளென்று அவளைப் பற்றி அடை யாளங் கூறியது; முடிவில் ஸந்தேசம் கூறியது என்று இவை யெல்லாம் காளிதாஸருடைய ஒப்பற்ற ப்ரதிபா விசேஷத்தின் படைப்பாகும். இப்பகுதிக்கும் ராமாயணத்திற்கும் எந்த வித மான ஸம்பந்தமுமில்லை. இப்படியொரு காவ்யத்தை அமைத் ததில்தான் காளிதாஸரின் ப்ரதிபா, கற்பனைத்திறன் இரண்டும் புலனாகின்றன.

மேக ஸந்தேசத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ராமகிரியைப் பற்றிய சிறு குறிப்பு

மேக ஸந்தேசம் முதல் சுலோகத்தில் கவி யக்ஷன் வசித்த இடம் ராமகிரி என்று கூறுகிறார். இந்த ராமகிரி சித்ரகூடம் தான் என்று உரையில் மல்லிநாதர் கூறுகின்றார். தக்ஷிணாவர்த்த நாதர் இதைப்பற்றி எதுவும் கூறவில்லை. பூர்ண ஸரஸ்வதி முதலில் சித்ரகூடம் என்று கூறிவிட்டுப் பிறகு, "வேறு ஒரு மலை என்பர் சிலர்" என்று கூறுகின்றார். ஆனால் யக்ஷன் வசித்த ராமகிரி சித்ரகூடமல்ல. ராமன் முதலில் சித்ரகூடத்திலிருந்தாலும் பரதனை சந்தித்த பிறகு சித்ரகூடம் அயோத்திக்கு அருகாமையில் இருப்பதால் நகர மாந்தர்கள் பலரும் அடிக்கடி சித்ரகூடம் வந்து தமது வனவாஸத்தை, நகரவாஸமாக்கிவிடுவர் என்று ராமர் கருதி சித்ரகூடத்தை விட்டு அதற்குத் தெற்கிலுள்ள காடுகளில் ஸஞ்சரிக்க ஆரம்பித்தார். பல மஹர்ஷிகளை சந்தித்தபின் முடிவில் அகஸ்தியரை சந்தித்து தாம் வசிக்க நல்லதோர் இடத்தை குறிப்பிட வேண்டுமென்று ராமர் அவரிடம் கேட்க, அகஸ்தியர் கோதாவரிக் கரையில் பஞ்சவடியில் வசிக்கும்படி ஆலோசனை கூறினார். அவருடைய ஆலோசனையை ஏற்றுப் பஞ்சவடியில் ஒரு குடிலை அமைத்துக் கொண்டு ராமர் பல [பத்து] வருஷங்கள் வஸித்தார். "ஜனக-தனயா-ஸ்நாந-புண்யோதகேஷு" என்று கவி காளிதாஸர் கூறுவதிலிருந்து ஸீதை பல வருஷங்கள் கோதாவரியிலும், கோதாவரிக்கு அருகிலுள்ள நீர்நிலைகளிலும் ஸ்நாநம் செய்து அவற்றின் நீருக்கு பாவனத்வத்தை ஏற்படுத்தி இருக்கிறாள் என்று தெளிவாக ஊகிக்க இடமிருக்கிறது. [ஒரு நாள், இரண்டு நாள் ஸ்நானத்தினால் நீருக்கு பாவனத்வம் ஏற்பட்டதாக ஜனக தனயா..என்ற விசேஷணம் காட்டும் என்று தோன்றவில்லை]. ஸீதாபஹாரம் நேரும் வரையில் ராமர் கோதாவரிக் கரையில் தான் வசித்தார். ஸீதாபஹாரத்திற்குப் பிறகு காட்டில் அவளைத்தேடி அலைந்த காலத்தில் கபந்தனின் ஆலோசனைப்படி பஞ்சவடிக்குத் தெற்கிலுள்ள "ருச்யமூகம்" சென்று ஸுக்ரீவனின் நட்பைப்

பெற்றுர். எனவே காளிதாஸர் குறிப்பிடும் ராமகிரி, ராமர் வசித்த மலையும் மலையைச் சார்ந்த இடமுமாகும். பிற்காலத்தில் ராமகிரி என்று பெயர் பெற்றிருக்கலாம். எனவே கோதாவரியின் அருகிலுள்ள ஒரு சிறு குன்று தான் ராமகிரி என்று கருத இடமுண்டு. வால்மீகி ராமாயணத்தில் ராமகிரி என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை. ராமகிரி என்ற பெயரில் ஆந்திர பிரதேசத்திலும், கர்நாடகத்திலும் தமிழ் நாட்டிலுங்கூட சில இடங்களிருக்கின்றன. பெயரை மாத்திரங்கொண்டு இவ்விடங்களில் யக்ஷன் வசித்தான் என்று கூறுவது சரியாகாது.

பேராசிரியர் வில்சன் என்பவர் தற்கால நாக்பூருக்கு வடமேற்கில் நாற்பது மைல் தொலைவில் இருக்கும் ராம்டீக் என்ற மலையை ராமகிரி என்று பல வருடங்களுக்கு முன் தமது "Cloud Messenger" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அப்பொழுது அறிஞர்கள் பலரும் அவர் கூறியதை நம்பினுர்கள். ஆனுல் இப்பொழுது பலருக்கும் அவர் கூறியதில் ஸந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பூனுவிலுள்ள பேராசிரியர் ஒருவர் ராமகிரி பூனுவிற்கு அருகிலுள்ள ஓர் இடம் என்றுர். ஆனுல் பலரும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

உண்மையில் ராமகிரி என்று ஒரு மலை இருக்க வேண்டிய அவச்யமில்லை. யக்ஷனின் கதையைக் கற்பனை செய்த காளிதாஸர் தனது கற்பனையினுல் ராமகிரி என்ற ஓர் இடத்தையும் குறிப்பிட்டு அங்கு யக்ஷன் வஸித்தானென்று கூறுகின்றுர் என ஏற்றுக் கொள்வதே சாலப் பொருத்தமாகும். யக்ஷன் வசிக்க ஓரிடம் வேண்டும். அதை ராமகிரி என்று கவி குறிப்பிட்டார்.

மேக ஸந்தேசத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பேராசிரியர் வில்ஸன் என்பவரும் மேக ஸந்தேசத்தில் குறிப்பிடும் நாடு நகரங்களை இப்பொழுது அடையாளங் கண்டு கொள்ள முடியவில்லை. பெயர்கள் மாறிப்போயுள்ளன என்கிறுர். பெரிய ராஜதானியாக இருந்த விதிசா என்ற நகரம்

இப்பொழுது விதிசா என்ற பெயரில் ஒரு சிறு நகரமாக இருக்கிறது. இந்த இடத்தில் விதிசா என்ற பெயரில் போபாலுக்கு வடக்கில் ஒரு ரயில்வே ஸ்டேஷனும் இருக்கிறது. தசார்ண என்ற நாடும் எது என்று நிச்சயமாகக் கூறமுடியவில்லை. காளிதாஸர் உஜ்ஜயினிக்கு அருகிலுள்ள சிற்றூறுகளைக்கூடத் தமது மேக ஸந்தேசத்தில் ஸ்வஜன்ம பூமி என்ற அபிமானத்தால் காவ்யத்தில் இடம் பெறச் செய்துள்ளார். உஜ்ஜயினி, மஹா காளரின் கோவில், சிப்ரா நதி இவைகள் இப்பொழுதும் அடையாளம் காணத்தக்கனவாக அதே பெயரில் உள்ளன. காளிதாஸர் கூறிய இடம் முதலியவற்றை அடையாளங் கண்டு கொள்ள நெடுங்காலமாக ஆராய்ச்சி செய்து வருகின்ற ஆராய்ச்சியாளர்கள் கூட இந்த இடங்களைப் பற்றி உறுதியாகச் சொல்ல முற்படவில்லை.

தமிழில் காளிதாஸரின் மேக ஸந்தேசம்

மேக ஸந்தேசத்திற்கு இது வரையில் தமிழில் ஐந்து மொழி பெயர்ப்புக்கள் வந்துள்ளன.

1. 1913ம் வருஷத்தில் வைத்யரத்னம் பண்டிட் எம். துரை ஸ்வாமி ஐயங்கார் என்பவர் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

2. 1920ல் எஸ். ஏ. குமாரசாமிப் பிள்ளை என்பவர் மேக ஸந்தேச காரிகை என்ற பெயரில் மேக ஸந்தேசத்தைப் பாடலாக மொழி பெயர்த்து வெளியிட்டார்.

3. பெரும் தேசபக்தரும், தியாகியும், சுதந்திரப் போர் வீரருமான கே. ஸந்தானம் அவர்கள் 1942ல் திருச்சி சிறையில் இருந்தபோது மேக ஸந்தேசத்தை வசன வடிவில் மொழி பெயர்த்தார். இதன் முதற் பதிப்பு 1953லும், இரண்டாம் பதிப்பு 1958லும் வெளி வந்தது.

4. 1953ல் கொழும்பு நகரத்தைச் சேர்ந்த என். எஸ். நடராஜா என்பவர் மேகஸந்தேச தமிழ் மொழி பெயர்ப்பை வெளியிட்டார்.

5. ராணிப்பேட்டையில் வன்னியர் குலத்தில் பிறந்த கே. ஆர். ஜமதக்னி என்பவர் மேகஸந்தேசத்தைப் 'பாவின்' வடிவத்தில் மொழி பெயர்த்து 1964ல் வெளியிட்டார். இந்த வன்னியரின் ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள ஆர்வமும் மேக ஸந்தேசத்தைத் தமிழ் மக்கள் அறிய வேண்டுமென்று பாவின் வடிவிலமைத்ததும் அறிஞர்களால் போற்றத்தக்கவை.

இவற்றில் 3-வது ஐந்தாவது மொழி பெயர்ப்புக்களை மாத்திரம் படித்துள்ளேன். நன்குகவே அவை உள்ளன.

இவையெல்லாம் மொழி பெயர்ப்புக்கள் தான். இவை மேகஸந்தேசத்தின் கருத்தினை அறிய உதவுமேயன்றி கவிதையின் அழகையும், ஸம்ஸ்க்ருத சொல் நடையின் கம்பீரத்தையும், மேகஸந்தேசம் படிக்கும்போது மனத்தில் ஏற்படும் அமைதியையும், பதங்களின் தொனிப் பொருளையும் அறியப் பொதுவாக மொழி பெயர்ப்புக்கள் தரும் உதவி போதுமானதாக இருப்பதில்லை. இலக்கியங்களின் வரிசையில் இவைகளுக்கு இரண்டாவது இடம் தான் கிடைக்கும். முற்றி லும் தாமரையை ஒத்திருக்கும்படி வர்ணக் காகிதத்தால் செய்த தாமரை பார்ப்பதற்கு அழகாகத் தானிருக்கும். ஆனால் மணம் இராது. எனவே பொதுவாக மொழி பெயர்ப்புக்களின் நிலையும் அது தான். "பொன் தாமரையை ஒரு சிற்பி செய்ய லாம். மணமுள்ள தாமரையைப் படைப்பது பிரம்மதேவன்" தான் என ஒரு கவி கூறியதைக் காண்க.

இப்பொழுது நாம் வெளியிடும் மேகஸந்தேசப் பதிப்பும் உரையும் அவற்றில் காணப்படும் சிறப்பான அம்சங்களும்

இப்பொழுது எம்மால் வெளியிடப்படுகின்ற இம்மேக ஸந்தேச உரை வெறும் மொழி பெயர்ப்பு அல்ல. பொதுவாக மூலநூல் எந்த மொழியிலிருக்கின்றதோ அதே மொழியில் உரை எழுதுவது தான் வழக்கம். ஆனால் தற்காலத்தில் மக்களின் தேவைக்கேற்ப மூலநூல் ஸம்ஸ்க்ருத மொழியிலிருந் தாலும் உரை தமிழில் எழுதப்படுகிறது. பகவத் கீதை, உப

நிஷத், ராமாயணம் முதலியவைகளுக்குத் தமிழில் உரை இருக்கிறது.

மேக ஸந்தேசத்திற்கு ஏறக்குறைய அறுபது உரைகள் இருப்பதாகக் கூறுகின்றார்கள். உரை என்று பெயர் பெற்ற இவையெல்லாம் காளிதாஸரின் கவிதையைச் சரியாக விளக்கின என்று கூற இயலாது. மல்லிநாதர் தமது மேக ஸந்தேச உரையின் தொடக்கத்தில் கூறுவது மிக முக்யமானது. "காளிதாஸருடைய வாக்கு கெட்ட வ்யாக்யானம் என்னும் விஷத்தினால் மூர்ச்சையடைந்து நினைவிழந்துள்ளது. அவ்வாறு நினைவிழந்துள்ள கவியின் வாக்கை என்னுடைய ஸஞ்ஜீவினீ என்ற இந்த உரை உயிர் தந்து எழுப்பும்" என்று கூறுகின்றார். மல்லிநாதர் கருத்துப்படி அவர் நாளிலேயே பல துர்வ்யாக்யானங்கள் மேக ஸந்தேசத்திற்கு இருந்தன என்று புலனாகிறது. எல்லா வ்யாக்யானங்களையும் பார்த்து உரையெழுதுவதென்பது ஸாத்யமானதல்ல. மேலும் அது பயனற்ற செயலாகும். வ்யாக்யானங்களிலுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்ட முயன்றால் இம்முன்னுரை மிக விரிவடையும். ஆனால் குறைபாடு காரணமாக வ்யாக்யானங்களை அறவே விலக்கி உரையெழுத வேண்டுமென்பதும் அவசியமில்லை. நல்ல வ்யாக்யானங்கள் என்று கருதப்படும் ஒன்றிரண்டை உபயோகித்து உரையெழுதுவதே பொருத்தமானது.

இம்மேக ஸந்தேச உரையெழுதுவதற்கு மூன்று உரைகள் ஆராய்ச்சிக் கண்ணுடன் பரிசீலிக்கப்பட்டன. அவை :

1. 1909ஆம் வருஷம் ஸ்ரீரங்கம் வாணி விலாஸ் ப்ரஸ்ஸில் பதிப்பிக்கப் பெற்ற பூர்ண ஸரஸ்வதி என்பவர் எழுதிய வித்யுல்லதா என்ற வ்யாக்யானம். இது சிறிது விரிவானது. பதஸாரம், தொனிப்பொருள் இவற்றைக் குறிப்பது.

2. 1919-ல் திருவனந்தபுரத்தில் வெளியிடப்பட்ட தக்ஷிணாவர்த்த நாதரின் ப்ரதீபம் என்ற வ்யாக்யானம். இது மிகச் சுருக்கமானது.

3. 1928-ல் சென்னையில் பதிப்பிக்கப் பெற்ற மல்லிநாதரின் ஸஞ்ஜீவினி என்ற உரை. இவ்வுரை ச்லோகத்திற்குப் பொருளை விளக்குவதுடன் இலக்கண ரீதியில் பல பதங்களின் வடிவத்தைப்பற்றி விளக்கமும் தருகின்றது. மல்லிநாதரின் உரை வெளிவரத் தொடங்கிய பிறகு மற்ற உரைகள் எல்லாம் மங்கிப்போய்விட்டன.

நாம் உரையெழுதுங்கால் இம்மூன்று உரைகளைப் பரிசீலனை செய்து எழுதினாலும் அவைகளையே சரணமடைந்து இவ்வுரை எழுதப்படவில்லை. அவ்வுரைகள் கூறும் பொருள் பொருந்தாத பொழுது எமது சுதந்திர உரை பல இடங்களில் உள்ளன. உரையைப் படிப்பவர்கள் அவற்றைக் காணலாம்.

இப்பதிப்பில் மேகஸந்தேசத்தின் மூலம் தேவநாகரி லிபியில் தரப்பட்டுள்ளது. அதற்கு அடுத்து வருவது பதவுரை. பதவுரையில் வாக்ய முறைப்படி ச்லோகங்களின் பதங்களை அன்வயப் படுத்தி ஒவ்வொரு பதத்திற்கும் தமிழில் பொருள் தரப்பட்டுள்ளது. இது ஸம்ஸ்க்ருத பதத்தின் பொருளையறிய உதவுவதாகும். அடுத்து வருவது கருத்துரை. பதவுரை மாத்திரம் படிப்பவர்கள் ச்லோகத்தின் முழுக்கருத்தையும் அறிய இயலாது. எனவே, ச்லோகத்தின் கருத்தை, பதவுரையை ஆதாரமாகக் கொண்டு பொருளை விளக்குவதற்குத் தேவையான அம்சங்களை சேர்த்து இக்கருத்துரை விரிவாக எழுதப்பட்டுள்ளது. ச்லோகத்தையோ பதவுரையையோ படிக்காதவர்கள்கூட இக்கருத்துரையைப் படித்தால் ச்லோகத்தின் கருத்தை முற்றிலும் தெள்ளத் தெளிய அறியலாம்.

இதற்கு அடுத்து வருவது விளக்க உரை; பதவுரையிலும் கருத்துரையிலும் எழும் ஸந்தேகங்களுக்குத் தெளிவு ஏற்படுத்துவது இவ்விளக்க உரை. பதஸாரங்கள், த்வனிப் பொருள், ஒத்த கருத்துள்ள பிற கவிகளின் ச்லோகங்கள் முதலியவை இவ்விளக்க உரைப்பகுதியில் தரப்பட்டுள்ளன. இம்மூன்று பகுதியை ஊன்றிப்படிக்கும் அன்பர்கள் காளிதாஸரின்

கவிதையை முற்றிலும் அறிய ஆற்றல் பெறுவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இத்தகைய உரையொன்று தமிழில் வருவது இதுவே முதல் தடவையாகும்.

ஸம்ஸ்க்ருத மொழி அறியாதவர்களும், மொழியைச் சிறிதே அறிந்தவர்களும், காளிதாஸரின் கவிதையின் நயத்தினையறிய அவா உற்றவர்களுமான தமிழன்பர்களுக்கு உதவ வேண்டுமென்ற ஒரே நோக்குடன் எழுதப்பட்டு வெளியிடப் படுவது இவ்வுரை.

இவ்வுரையை ஏற்றுத் தமிழன்பர்கள் பயன்பெறுவார்கள் என்று நம்புகின்றோம்.

தாம்பரம் ஸானடோரியம்
ஜுலை 11, 1986

உரையாசிரியர்
வேங்கடராகவாசாரியார்

மேக ஸந்தேசத்தின் பொருட்சுருக்கம்

முதல் ஆச்வாஸம்

அளகாபுரியின் தலைவனான குபேரனுடைய பணியாளனான யக்ஷன் ஒருவன், தன் அன்புக்காதலியினிடம் கொண்ட அளவு கடந்த பிரேமை காரணமாகத் தலைவனுக்குச் செய்ய வேண்டிய பணியைச் செய்யாது இருந்துவிட்டான். அவன் செய்த குற்றம், அக்குற்றத்திற்கு மூலகாரணமாயிருந்த மனைவியிடம் வைத்த அளவு கடந்த அன்பு, என்ற கடமை இழக்கச் செய்த இரண்டினையும் கருத்தில் கொண்டு, அவ்விரண்டிற்கும் ஏற்ற வகையில் யக்ஷனுக்குக் குபேரன் தண்டனை [சாபம்] கொடுத்தான். அச்சாபம் காரணமாக யக்ஷன் தனது தெய்வத் தன்மை நீங்கப்பெற்று மனைவியைப் பிரிந்து ஒரு வருஷ காலம் அளகாபுரிக்கு வெகு தொலைவில் ஓரிடத்தில் வசிக்க நேர்ந்தது. அவன் ராமகிரி என்ற இடத்தில் வசித்தான்.

மனைவியை விட்டுப்பிரிந்து எப்படியோ எட்டு மாதங்களை கடத்திய அந்த யக்ஷன் வர்ஷருது தொடங்குவதற்கு ஒரு மாதம் முன், ஆடி மாதத்தில் முதல் தினத்தில், ராமகிரி மலைச் சிகரத்தில் தங்கியிருந்த மேகமொன்றைக் கண்டு வர்ஷருது நினைவில் வர கடந்த வருஷங்களில் இதே ருதுவில் தன் மனைவியுடன் அனுபவித்த இன்பநாட்களை மனத்தில் நினைத்துக் கொண்டு மனக்கலக்கத்துடன் வெகு நேரம் நின்றான். பிரிந்தோர்க்கு வருத்தம் தரும் மழை நாள் நெருங்குவதை எண்ணித் தன் அன்புக்காதலிக்குத் தன் நலனை மேகத்தின் மூலம் தெரிவித்துக் காதலியை உயிர் வாழச்செய்ய விரும்பி மேகத்திற்கு மரியாதை செய்து பேசலுற்றான். [அறிவற்றதும் பேசும் திறனற்றதுமான மேகம் செய்தியைக் கொண்டு செல்லுமா? மேகம் தூதனாக அமையுமா? என்ற எண்ணம் காமப்பித்தம் தலைக்கேறிய அவன் மனத்தில் எழவில்லை. காமவெறி கொண்டவர்கள் பகுத்தறிவை இழப்பது ஸஹஜம்].

"மேகமே! என் தலைவன் குபேரனின் சாபம் காரணமாக மனைவியை விட்டுப்பிரிந்து இங்கு தவித்துக் கொண்டிருக்கிற என்னுடைய ஸந்தேசத்தை அளகாபுரியில் என்னைப்போலவே பிரிவினால் தவித்துக் கொண்டிருக்கும் என் அன்புக்காதலிக்கு தெரிவி. நீ செல்ல வேண்டிய இடம் அளகாபுரி. ஸந்தேசத்தைக் கூறுவதற்கு முன் நீ செல்ல வேண்டிய வழியைப் பற்றி உனக்குக் கூறுவேன். நீ அளகாபுரி சென்றால் திண்ணமாக என் காதலியைக் காண்பாய்.

நீ புறப்படுவதற்கு முன் உன் நண்பனாகிய ராமகிரி என்னும் இம்மலையிடம் 'சென்று வருகிறேன்' என்று கூறி விடைபெற்றுக் கொண்டு வடக்கு நோக்கிச் செல்லத் தொடங்கு. நீ செல்லும் வழியில் எதிர்ப்படும் மாலம் என்ற உயர்ந்த நிலப்பரப்பில் [பீடபூமி], முதலில் மழையை வர்ஷித்து உழவர்களை மகிழ்வித்த பின் சிறிது மேற்கே சென்று, பிறகு வடக்கு நோக்கிச் சென்று உன் நண்பனை ஆம்ரகூடம் என்ற மலையில் தங்கி இளைப்பாறி, மேலும் வடக்கு நோக்கிச் செல்கின்ற நீ விந்த்ய மலையின் அடிவாரத்திலுள்ள சிறு குன்றுகளின் பாறைகளின் மேல் வீழ்ந்து சிதறிப் பலகிளைகளாகப் பிரிந்து ஓடும் ரேவா [நர்மதா] நதியை ஆகாயத்தினின்றும் காண்பாய். [காளிதாஸர் மலைகளை மேகத்திற்கு நண்பனாகவும், ஆறுகளை காதலிகளாகவும் கூறுகின்றார்]. ரேவா நதியின் தெள்ளிய நீரைப் பருகி உன்னை வலுவுடையவனாக்கிக் கொண்டால் அல்பக் காற்று உன்னைத் தன் இஷ்டப்படி கடத்திச் செல்லாது.

தாழை வேலியுள்ள வீட்டுத் தோட்டங்களையுடைய தசார்ணம் என்ற நாடு அடுத்துச் செல்ல வேண்டியதாகும். தசார்ணத்தின் தலைநகரான விதிசை சென்று அதன் அருகிலுள்ள உன் நதிக்காதலியான வேத்ரவதியின் நீரைப் பருகி இன்பம் துய்ப்பாய். அருகிலுள்ள நீசம் என்ற மலையில் இரவு தங்கிக் களைப்பாறு.

நேரே வடக்கு நோக்கிச் செல்ல வேண்டிய உனக்கு வழி சிறிது சுற்றி வளைந்ததாய் இருந்தாலும் இடையிலேயுள்ள

வனாநதியைக் கடந்து, உயர்ந்த மாடமாளிகைகள் நிறைந்துள்ள அவந்தியின் தலைநகரான உஜ்ஜயினிக்கு நீ அவச்யம் செல்ல வேண்டும். அங்குள்ள பெண்களின் கண்ணழகிற்கு ஈடு இணை இல்லை. உஜ்ஜயினிக்குப் போகும் வழியில் நிர்விந்த்யா ஸிந்து என உன்னுடைய நதிக்காதலிகள் இருவருடனும் பழகிச்செல். மிக செல்வச்செழிப்புள்ளதால் உஜ்ஜயினிக்கு விசாலா என்ற பெயரும் உண்டு. ஸ்வர்க்கத்தின் ஒரு பகுதியைக் கொண்டு அமைத்தது போல் மிகப்பொலிவுடன் விளங்கும் அந்த நகரம். நகரத்தின் அருகிலுள்ள சிப்ரா என்ற நதியினின்றும் காலை வேளையில் தாமரை மலரின் நறுமணத்தோடு வீசும் காற்று, யுவகர்களின் உடல் தளர்ச்சியை போக்கும் திறனுடையது.

கந்தவதி என்ற நதியின் காற்று வீசப்பெற்றதும் உஜ்ஜயினி நகருக்கு அருகிலுள்ளதுமான மஹாகாளேச்வரரின் ஆலயம் சென்று ஸாயங்கால பூஜையில் படஹவாத்திய ஒலி போன்ற உன் இடியோசையை எழுப்பிச் சிவபிரானுக்குப் பூஜையில் ஸேவை செய். பின் உஜ்ஜயினிக்குத் திரும்பி ஒரு மாளிகையின் மேல் தளத்தில் இரவு தங்கி, பொழுது புலர்வதற்கு முன்பே புறப்பட்டுவிடு. பிறகு, பயணம் செய்து உன் அன்புக்காதலியான கம்பீரா நதியின் இனிய நீரைப்பருகி, ஸ்கந்தபிரான் நித்ய வாஸம் செய்கின்ற தேவகிரிக்குச் சென்று, உன்னை புஷ்ப மயமாக ஆக்கிக்கொண்டு, அப்புஷ்பங்களை ஆகாச கங்கை நீரில் நனைத்து, ஸ்கந்தபிரானுக்கு புஷ்பாபிஷேகம் செய். பின் சர்மண்வதீ நதியைக் கடந்து தசபுரம் என்ற நகரத்திலுள்ள கண்ணழகு வாய்ந்த பெண்களின் கண்களுக்குக்காட்சியளித்த வனாக ப்ரஹ்மாவர்த்தம் என்ற இடத்தைக் கடந்து குருக்ஷேத்ரம் அடைவாயாக. பின் அருகிலுள்ள பரமபாவனமான ஸரஸ்வதீ நதியின் நீரைப்பருகி தூய்மை பெறுவாயாக. அதன் பின், ஹிமாலயத்தினின்றும் தோன்றுவதான கங்கை, பாரத நாட்டின் ஸமதளத்தில் முதன்முதலாக இறங்குகின்ற கனகலம் என்ற இடத்தை நோக்கிச்செல். ஆகாயத்தில் இருந்து

கொண்டு அங்கிருந்தே கங்கை நீரைப்பருகிய பின், கஸ்தூரி மான்கள் படுப்பதால் அவற்றின் நாபியிலுள்ள கஸ்தூரி தரையில் படுவதால் நறுமணம் பெற்ற பாறைகளையுடைய ஹிமாலயத்தை அடைந்து அதன் சிகரத்தில் தங்கி இளைப்பாறு.

ஹிமாலயத்தின் சிகரத்தில் பாறையின் மேல் சிவபிரானுடைய இரு திருவடிச் சுவடுகள் பதிந்துள்ளன. சித்தர்களால் பூஜை செய்யப்படுகின்ற அத்திருவடிகளை நீயும் ப்ரதக்ஷிணம் செய்து புண்யம் பெறுவாயாக. ஹிமாலயத்தில் ஆங்காங்கு பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்தபின், அங்குள்ள க்ரௌஞ்ச மலையின் சுரங்கப் பாதையில் புகுந்து ஹிமாலயத்தின் வடபுறம் வருவாயாக. சுரங்கப் பாதையினின்று வெளியே வந்து, மேலே சென்று, அருகிலே உள்ள வெண்ணிறமான கைலயங்கிரியைக் காண்பாய். பின் அங்குள்ள தங்கத் தாமரை பூக்கும் மானஸ ஸரஸ் என்னும் நீர் நிலையிலுள்ள தெளிந்த சுவையுள்ள நீரைப் பருகுவாய்.

கைலயங்கிரியின் சரிவிலே ஒரு காதலனின் மடியில் படுத்திருக்கும் காதலி போல் அமைந்துள்ளதும், கங்கையினால் சூழப் பெற்றிருப்பதுமான அளகாபுரியைக் கண்ட உடனேயே இது அளகாபுரி என்று, நீ பிறர் கூருமலே அறிவாய்.

இரண்டாவது ஆச்வாஸம்

நீ ஆகாயத்தில் எந்த அளவு உயர்ந்துள்ளாயோ, அந்த அளவு உயர்ந்துள்ள மாளிகைகள் அளகாபுரியில் உள்ளன. அம்மாளிகைகள் எல்லாம் பலவகையிலும் உன்னுடன் ஒப்பிடத் தக்கப்பெருமை பெற்றவை. அளகாபுரியின் தலைவன் செல்வச் செழிப்புள்ள குபேரன். அவனால் ஆளப்படும் ப்ரஜைகள் யக்ஷர்கள். அங்கிருக்கும் கல்பக வ்ருக்ஷம் யக்ஷர்கள் விரும்பும் ஆபரணங்களையும் ஆடைகளையும் மற்றும் பல பொருட்களையும் அவர்கள் விரும்பும் போதெல்லாம் தங்கு தடையின்றி தரு

கின்றது. செல்வத்தை அளவுக்கு மீறித்தரும் நவநிதிகளும் அங்குள்ளன. யக்ஷர்கள் எப்பொழுதும் யௌவனத்துடன் இருப்பவர்கள். கிழப்பருவம் அவர்களை அடைவதில்லை. இன்பம் துய்ப்பதைத் தவிர வேறு எவ்வகையான செயல்களி லும் அவர்கள் ஈடுபடத்தேவையில்லை.

அங்கு குபேரனுடைய அரண்மனைக்கு அருகில், அதற்கு வடக்கில் எனது வீடு உள்ளது. வாசலில் தோரணமுடையது. இருபுறத்திலும் சங்கநிதி, பதுமநிதி தேவதைகளின் உருவம் வரையப்பட்டிருக்கிறது. வீட்டிற்குள் அருகாமையில் இளம் மந்தார மரம் உண்டு. வீட்டைச்சுற்றியுள்ள தோட்டத்தில் ஒரு வாவியும் ஒரு சிறு செய்குன்றும் உண்டு. இவ்வடையா ளங்களைக் கொண்டு என் வீட்டை அறிந்து, செய்குன்றின் மேல் சிறிய வடிவிலமர்ந்தவனாக, உன் மின்னலெனும் கண் கொண்டு என் வீட்டின் உட்புறத்தை நோக்குவாயாக.

அவ்வீட்டினுள் பிரிவாற்றாமையால் மெலிந்திருப்பினும் அழகின் சாயல் குறையாமல், பனியினால் அழிந்த தாமரை மலர் போல் கிடக்கும் என் காதலியைக் காண்பாய். அவளும் என் நல் வருகையை விரும்பி தேவ பூஜை செய்து கொண்டி ருக்கலாம். அல்லது என் வடிவினை எழுதிக் கொண்டிருக்க லாம். கூண்டிலிருக்கும் மைனாவுடன் பேசிக் கொண்டிருக்க லாம். என் பெயர் பதித்த பாடலை வீணையில் வாசிக்க முயன்று கொண்டிருக்கலாம். நான் திரும்பி வந்து சேருவதற்கு எவ் வளவு நாட்கள் எஞ்சியுள்ளன என்று பூக்களைக் கொண்டு எண்ணிக் கொண்டிருக்கலாம். இத்தகைய பல செயல்களின் மூலம் பகற் பொழுதைப் போக்கிய அவளுக்கு இரவுப் பொழுது எளிதில் செல்லாது. வெறுந்தரையில் படுத்திருப் பாள். நீ அப்பொழுது சாளரத்தின் அருகில் இருந்து உற்று நோக்கு. என்னை எவ்வாறேனும் கனவிலாவது சந்திக்க வேண்டுமென்ற விருப்பத்தால் மிக முயன்று தூக்கம் பெற்றி ருப்பாளாயின், அப்பொழுது அவளுடைய தூக்கத்தைக் கலைக் காதே. சிறிது பொறுத்திருந்து அவள் விழித்தெழும் தருணத்

தில் மெல்லிய குளிர்ந்த காற்றை வீசி அவளை எழுப்பு. என்னுடைய ஸந்தேசத்தைக் கூறி அவளை மகிழ்விப்பதற்கான தருணம் இதுவேயாகும்.

"ஸௌபாக்யவதி! உன் கணவனிடமிருந்து நற்செய்தி கொண்டு வந்திருக்கும் மேகமெனும் நண்பனாக என்னை அறிந்துகொள். எங்கள் தொழிலே, பிரிந்தவர்களைக் கூட்டி வைப்பது தான்". இவ்வாறு நீ கூறியவுடன் தலை நிமிர்த்தி ஜன்னலை உற்று நோக்கி உன்னை கௌரவித்து நீ கூறுவதைக் கவனத்துடன் கேட்பாள்.

"ராமகிரியில் நலனுடன் இருக்கின்ற உன் கணவன் முதலில் உன்னைப் பற்றிய குசலத்தை விசாரிக்கின்றான். அவனுடைய எல்லையற்ற காதல் காரணமாக தன் தேகமும் உன்னுடைய மேனியும் இரண்டறக் கலந்து ஒன்றாகிவிட வேண்டுமென்று தன் மனோரதத்தைச் சொற்களால் கூறாது புலப்படுத்துகிறான்."

யக்ஷனின் ஸந்தேசம் [யக்ஷனுடைய வாக்கியங்கள்]

"அன்பு காரணமாக என்னிடம் காணும் சிறு குற்றத்திற்கும் கூட உரிமையுடன் கோபம் கொள்ளும் என் ஆருயிர்க் காதலியே! ப்ரியங்குக் கொடிகளில் உன் மேனியழகையும், மான்களின் மருண்ட பார்வையில் உன் கண்ணோக்கின் அழகையும், சந்திரனில் உன் முக ஒளியையும், மயில்களின் தோகைகளில் உன் கேச பாசத்தின் அழகையும், நதியின் சிற்றலைகளில் உன் புருவ நெறிப்பின் ஸௌந்தர்யத்தையும் காண்கின்றேன். ஆனால் இவ்வழகு எல்லாவற்றையும் சேர்த்துக் காணும்படி இங்கு பொருள் ஒன்றுமில்லை. பாறையின் மேல் பலநிறமுள்ள தாதுப்பொடிகளால் உன் வடிவத்தை எழுதி, உன் காலில் விழுந்து உன்னிடம் மன்னிப்புக் கேட்கும் முறையில் என் உருவத்தை எழுதிப் பார்க்க நான் விரும்பினாலும், என் கண்களில் சோகத்தினால் நீர் பெருகிச் சித்திரத்தை முற்றும் எழுத முடியாதநிலை எனக்கு ஏற்படுகிறது. இதிலும்

பொல்லாவிதி எனக்குச் சதி செய்கின்றது. கனவிலே கண்டு உன்னை இறுகத் தழுவ வேண்டுமென விரும்பிக் கைகளை உயர்த்தி நான் செய்யும் வீண் முயற்சியைக் கண்டு வன தேவதைகள், பனிநீர் மூலம் கண்ணீர் உகுக்கின்றன. தேவ தாரு மரங்களின் இலைகளை அசைத்துக் கொண்டு அம் மரப் பாலின் நறுமணத்தோடு வடக்கினின்றும் தெற்கு நோக்கி வருங்காற்றை 'இக்காற்று உன் மேனியை ஸ்பர்சித்த பின் வந்திருக்கலாம்' என்ற ஆவலினால் அந்த ஹிமாலயக் காற்றை இறுகத் தழுவுகின்றேன். 'நீண்ட யாமங்களைக் கொண்ட இரவு ஒரு நொடிப் பொழுதாகச் சுருங்குமா? எல்லா ருதுக் களிலும் பகற் பொழுது மிகமிகக் குறைந்த வெய்யிலுடைய தாய் இருக்குமா? என்று உன்னைப் பிரிந்த ஏக்கத்தால் இந் நாட்டு வெய்யிலினால் தாபமடைந்து எந்தவிதப் பரிஹாரமும் கிடைக்கப் பெறாத இத்தகைய ஆசையை என் மனம் கொள் கின்றது. பலவகை மனோரதங்களை எண்ணியெண்ணி என்னை நானே தேற்றிக் கொள்கிறேன். கல்யாணி! நீ என் பிரிவாற்றா மையால் மிகவும் அச்சம் கொள்ளாதே. யாருக்குத்தான் எல்லையற்ற ஸுகமோ, துக்கமோ இருந்திருக்கிறது? அதிர்ஷ் டம் என்பது சக்கரத்தின் விளிம்புபோல் மேலும் கீழும் போய்க் கொண்டிருப்பதுதான். பகவான் மஹாவிஷ்ணு [கார்த்திகை மாதத்தில்] புஜக சயனத்தினின்றும் எழுந்தவுடன் [உத்தான ஏகாதசியன்று] என்னுடைய சாபம் முடிவு பெறுகிறது. ஆகவே மிச்சமுள்ள நான்கு மாதங்களையும் கண்ணை மூடிக் கொண்டு பொறுத்திரு. பிறகு நான் உன்னிடம் வந்து விடு கிறேன். பின் நமது ஒரு வருஷப் பிரிவினாலே பலமடங்காகக் கற்பனை செய்து கொள்ளப்பட்ட நம் ஆசைகளனைத்தையும் முதிர்ந்த சரத்கால இரவில் பலவிதமாக அனுபவிப்போம்."

இத்துடன் யக்ஷனின் ஸந்தேசம் முடிவு பெறுகிறது.

இவ்வாறு யக்ஷனின் ஸந்தேசத்தைக் கூறிய மேகம் "ஸௌபாக்யவதி! உன் கணவன் யக்ஷன் இந்த ஸந்தேசத்

தைக் கூறியபின் சிறிது நேரம் ஆலோசித்து மேலும் இரண்டொரு செய்தி கூறினன்."

"கல்யாணி! ஒரே சயனத்தில் என் கழுத்தை இறுகத் தழுவிக் கொண்டு படுத்து நித்திரை அடைந்த நீ சிறிது நேரத்திற்குப் பின் அழுது கொண்டு எழுந்திருந்தாய். நான் உன்னைத் தேற்றிக் காரணங் கேட்டதற்கு நீ கண்ட ஒரு அசட்டுக் கனவைப் பற்றிக் கூறினுய் (சுலோ. 45). இவ் வடையாளத்தை நான் கூறுவதிலிருந்தே நான் க்ஷேமமாக இருக்கிறேன் என்று நீ அறிந்து கொள். என்னைப் பற்றி ஜனங்கள் பரப்பும் பொய் வதந்திகளை நம்பாதே. காதலர்கள் பிரிந்திருக்கும் காலத்தில் அவர்களின் அன்பு பிரிவுற்ற காலத்தில் இன்பம் துய்க்காத காரணத்தால் குறைந்து விடும் என்ரெரு பழமொழி உண்டு. அது பொய். ஆனல் அக்காதல் மேன் மேலும் குவியல் குவியலாக வளர்ந்து வருகிறது."

இவ்வாறு யக்ஷனின் ஸந்தேசத்தை மேகம் கூறியது. பிறகு யக்ஷன் மேகத்திடம் கூறுவான். "நண்பனே என்னுடைய இந்த அனுசிதமான வேண்டுகோளைச் செய்வதாக நீ ஏற்றுக் கொண்டாயா ? நண்பனே ! என் வேண்டுகோளை மறுக்கும் தைரியம் உனக்கு இராதென நினைக்கிறேன். சாதகப் பறவைகள் தண்ணீர் வேண்டும் போது சப்தம் செய்யாமல் நீ அவற்றிற்கு நீரை அளிக்கின்ருய். பெரியோர்கள் அன்பர்களின் வேண்டுகோளுக்கு, அதனை செய்து முடித்தலையே பதிலாகக் கூறுவர். என்னிடம் அன்பினுலும் மனைவியைப் பிரிந்தவன் என்ற கருணையினுலும் என்னுடைய தகாத இந்த வேண்டுகோளைச் செய்து முடித்தபின் வர்ஷருதுவினுல் வளரப்பெற்ற சோபையுடைய நீ, உன் அன்புக் காதலியான மின்னலுடன் விரும்பிய இடங்களுக்குச் செல். எனக்கு ஏற்பட்டது போல் உன் காதலியான மின்னலுடன் உனக்கு ஒருநாளும் பிரிவு ஏற்பட வேண்டாம்.

இத்துடன் யக்ஷன் பேச்சு முடிவு பெறுகின்றது.

ஸஹ்ருதயர்கள் விப்ரலம்ப ச்ருங்கார ரஸத்தை நன்ருக அனுபவிக்கும்படி விரிவாக வர்ணித்து, இச்சுவையையும் இத ஞடியாக வரும் கருணை ரஸத்தையும் மனத்தில் தேக்கி மறுபடி யும் மறுபடியும் நினைத்து நினைத்துச் சர்வணம் செய்து (பன் முறை சுவைத்து) ரஸானுபவம் பெற வேண்டுமென்ற எண் ணத்துடன் கவி காவ்யத்தை இத்துடன் நிறுத்திவிட்டார்.

காவ்யம் இனிதே முடிய வேண்டுமென்று கருதியே மஹா னுபாவர் ஒருவர், "மேகம் கூறிய ஸந்தேசத்தைக் கேட்ட குபேரன், சாபத்தை நீக்கி யக்ஷனையும், யக்ஷியையும் ஒன்று சேர்த்து வைத்தான்" என்று ஐந்து சுலோகங்களில் கூறியுள் ளார். இது கவியின் நோக்கிற்கு முற்றிலும் முரணனது.

மேகஸந்தேசத்தில் கவியினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் முதலியன பற்றிய சிறுகுறிப்பு

ராமகிரி :— காளிதாஸர் தமது கதாநாயகனான யக்ஷன் வஸிக்கும் இடமாகக் குறிப்பிடும் மலை. இப்பெயரில் பாரதம் முழுவதும் பல இடங்களில் ராமகிரிகள் உள்ளன. உண்மையில் கவி தனது கதைக்கு ஓரிடம் வேண்டுமென்பதற்காக கற்பனையால் உருவாக்கிய பெயராகவும் இருக்கலாம்.

மாலம்:—மேகம் முதலில் செல்லும் இடம். மழை பெய்து நன்மை செய்யும் இடமாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆம்ரகூடம்:—மாமரங்களை சிகரத்தில் கொண்ட ஒரு மலை. மேகம் சிறிது நேரம் தங்கியிருப்பது.

ரேவா:— நர்மதா நதி.

தசார்ணம்:— ஒரு தேசம். தற்போது இன்னதென்று சொல்ல முடியாத ஓர் இடம்.

விதிசா:—ஒரு காலத்தில் ப்ரஸித்தமாக இருந்த ராஜதானி. இப்பொழுது ஒரு சிறு நகரம்.

வேத்ரவதி:— ஒரு ஆறு.

நீசை:— ஒரு சிறு குன்று. மேகம் சிறிது நேரம் தங்கியிருக்கும் இடம்.

வனநதி: — ஒரு ஆறு.

உஜ்ஜயினி:—மத்ய ப்ரதேசத்தில் உள்ள ஒரு நகரம். இப்பொழுதும் அதே பெயரில் அறியப்படுகிறது.

சிப்ரா:—உஜ்ஜயினிக்கு அருகிலுள்ள ஒரு ஆறு.

மஹாகாலம்:—உஜ்ஜயினிக்கு அருகில் வடக்கே உள்ளது. மஹாகாளேஸ்வரர் என்ற சிவபெருமான் நித்யவாஸம் செய்கின்ற ப்ரஸித்தமான சிவக்ஷேத்ரம்.

சிந்து, நிர்விந்த்யா, கந்தவதீ, கம்பீரா!— இவையெல்லாம் உஜ்ஜயினிக்கு அருகிலுள்ள சிற்ருறுகள்.

தேவகிரி:—சுப்ரமண்ய சுவாமி நித்யவாஸம் செய்யும் ஒரு மலே.

சர்மண்வதீ:— ஒரு நதி.

ரந்திதேவன்:—ஓர் அரசன்; இவன் நூற்றுக் கணக்கான கோஸவம் (गोसवम्) என்ற யாகங்களேச் செய்ததால், மேலே குறிப்பிட்ட சர்மண்வதீ என்று நதி ஏற்பட்டதாகக் கூறுவர்.

தசபுரம்:— ஒரு நகரம்.

ப்ரஹ்மாவர்த்தம்:—ஒரு க்ஷேத்ரம். ஸரஸ்வதி, த்ருஷத்வதீ என்ற இரண்டு நதிகளுக்கு இடையிலே உள்ள ஒரு பிரதேசம்.

குருக்ஷேத்ரம்:—கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் யுத்தம் நடந்த இடம். இன்றும் இதே பெயரில் உள்ள இடம்.

ஸரஸ்வதி:—ஒரு ஆறு.

கனகலம்:—ஹிமாலயத்திலிருந்து கங்கை பார்தத்தில் ஸம தளத்தில் இறங்கும் முதல் இடமாகக் காளிதாஸர் கூறுகின்ருர்.

சரண ந்யாஸம்:— ஹிமாலயத்திலுள்ள சிவபெருமானின் திருவடிச் சுவடுகள்.

க்ரௌஞ்ச ரந்த்ரம்:—க்ரௌஞ்சம் என்ற மலையில் பரசு ராமரும் சுப்ரமண்யரும் தமது பாணங்களை உபயோகித்து ஏற்படுத்திய சுரங்கப் பாதை. ஹம்ஸங்கள் இவ்வழியாக மானஸ ஸரஸ் செல்வதாகக் கவி கூறுகிறார்.

கைலாஸம்:—சிவபெருமான், பார்வதி இவர்களின் உறைவிடம்.

மானஸம்:—ப்ரம்ஹதேவரின் மனத்தினால் படைக்கப்பட்ட மிகப் பெரிய ஏரி.

அளகா:—கைலையின் சரிவில் ஒருபுறத்திலுள்ள குபேரனும் யக்ஷர்களும் வசிக்கும் நகரம்.

குறிப்பு முற்றும்.

॥ श्रीः ॥

महाकविश्रीकालिदासकृतः

॥ मेघसंदेशः ॥

प्रथमाश्वासः

कश्चित्कान्ताविरहगुरुणा स्वाधिकारात्प्रमत्तः
शापेनास्तंगमितमहिमा वर्षभोग्येण भर्तुः ।
यक्षश्चक्रे-जनकतनयास्नानपुण्योदकेषु
स्निग्धच्छायातरुषु वसतिं रामगिर्याश्रमेषु ॥ १ ॥

பதவுரை : स्वाधिकारात् - *தன் கடமையினின்றும்,* प्रमत्तः - *வழுவியவனும்,* कान्ता-विरह-गुरुणा - *காதல் மனைவியின் பிரிவைத் தந்ததால் (கனத்த) தாங்க முடியாத,* वर्षभोग्येण - *ஒரு வருஷம் தொடர்ந்து அனுபவிக்கப்படவேண்டிய,* भर्तुः शापेन - *தன் யஜமானன் [குபேரன்] கொடுத்த சாபத்தினால்,* अस्तंगमित-महिमा - *முற்றிலும் அழிக்கப்பட்ட தனது (தெய்வ) சக்தியுடையவனுமான,* कश्चित् यक्षः - *ஒரு யக்ஷன்,* जनक-तनया-स्नान-पुण्योदकेषु - *ஸீதை ஸ்நானம் செய்ததால் பாவனமான தீர்த்தங்களையுடையனவும்,* स्निग्ध-छाया-तरुषु - *மனம் கவரும் நிழல் தரும் மரங்களையுடையவையுமான,* रामगिरि-आश्रमेषु - *ராமகிரி என்ற மலையிலுள்ள ஆச்ரமங்களில்,* वसतिम् - *வஸித்தலை,* चक्रे - *செய்தான்.*

கருத்துரை: குபேரனின் பணியாளனாகிய யக்ஷன் ஒருவன், தன் கடமையினின்றும் வழுவியதால் அதற்குரிய தண்டனையாகத் தனது தெய்வத் தன்மையிழந்தும், மனைவியை விட்டுப் பிரிந்தும் ஒரு வருஷகாலம் இருக்க வேண்டும் எனச் சாபம் தரப்பட்டதால், ஸீதையின் ஸ்நாநத்தால் புனிதமான நீர்நிலைகளையுடைய ராமகிரியின் நிழல் தரும் மரங்கள் நிறைந்த முனிவர்களின் ஆச்ரமங்களில் இக்காலத்தில் வஸித்து வந்தான்.

சுலோகத்தின் பிற்பகுதியில் ஸ்வபாவோக்தி அணி உள்ளது.

விளக்கவுரை : स्वाधिकारात् प्रमत्तः-अधिकारः கடமை அதனின்றும் வழுவியவன். அவன் கடமையை, இன்னதென்று கவி கூறவில்லை. வழுவியதன் காரணம் ஒருவாறு சாபத்தினின்றும் ஊஹிக்கலாம். தனது காதல் மனைவியிடம் அவன் கொண்டிருந்த அன்பின் காரணமாக வழுவி இருப்பானாதலால் அத்தகைய குற்றத்திற்கு ஏற்ப அவனை மனைவியிடமிருந்து பிரித்து வைத்தலே சரியான தண்டனை என்று குபேரன் கருதி ஒரு வருஷம் மனைவியை விட்டுப் பிரிந்திருக்கும்படி தண்டனை கொடுத்தான். யக்ஷனின் கடமையைப் பற்றி மூன்று வகையான விளக்கங்கள் உள்ளன. காலையில் மலர்ந்த புஷ்பங்களைப் பறித்து சிவபூஜைக்குத் தரும் பணியில் இருந்த யக்ஷன் விடியற்காலைப் பொழுதில் மனைவியைப் பிரிய மனமின்றி முன்னிரவே தாமரை மொட்டுகளைப் பறித்து குபேரனுக்குக் கொடுத்தான் என்றும் மொட்டிலிருந்த வண்டு சிவபூஜை செய்யும் போது குபேரனின் விரலில் கொட்டிவிட்டதென்றும் அது காரணமாகவே மனைவியைப் பிரிந்து இருக்கும்படி சபிக்கப்பட்டான் என்பர் சில உரையாசிரியர். வேறு சிலர், குபேரனின்

உத்யான பாலகர்களின் தலைவன் யக்ஷன் என்றும் மனைவியினிடம் உள்ள அன்பு காரணமாக அவன் உத்யானத்தில் இருக்க வேண்டிய நேரத்தில் இல்லாததால் இந்திரனின் யானை வந்து உத்யானத்தை மிதித்து அழித்ததென்றும் அது காரணமாக சாபம் வந்தது என்றும் கூறுவர். நிதியைப் பாதுகாக்க நியமிக்கப் பட்ட யக்ஷன் மனைவியிடம் காதல் மிகுதியால் பிழை புரிந்தான் என பூர்ணஸரஸ்வதி என்ற உரையாசிரியர் கூறுவர். (அவரது மேகதூத உரை பக்கம் 165).

विरहगुरुणा - वर्षभोग्येण என்ற இரண்டு விசேஷணங்களும் சாபத்தின் கடுமையைக் குறிக்கின்றன. எனவே குபேரனுடைய ஆட்கள் யக்ஷனை அலகாபுரிக்கு வெகு தொலைவிலுள்ள ராமகிரியில் கொண்டுவந்து விட்டுச் சென்றனர் என்பதும் ஊஹிக்கப்படும். சாபகாரணம் எதுவும் ஆதாரத்துடன் கூறப்பட்டதன்று.

சாபத்தின் மற்றொரு பலன், யக்ஷன் அவனுடைய தேவசக்தியை இழத்தல்: தேவர்களுக்கு, விமான உதவியின்றியும் நினைத்த இடத்திற்குச் செல்லுதல், மனத்தின் மூலமே ஒருவரோடு ஒருவர் கருத்து பரிமாற்றம் கொள்ளுதல் முதலிய சக்திகள் உண்டு. இச் சக்திகள் அழிக்கப்படாவிடின் ராமகிரியிலிருந்தும் அவன் மனத்தின் மூலம் தன் மனைவியுடன் பேச முடியுமாதலால் அதையும் அழித்து அவனைச் சாதாரண மனிதனுக்கியது சாபம். இது, अस्तंगमितमहिमा என்றதால் குறிக்கப்படுகிறது.

यक्षः - தேவர்களில் ஒரு வகை இனத்தவர். மற்றவர், கந்தர்வர் முதலானவர்கள். कश्चित् - 'ஒருவன்' -

இச்சொல் எண்ணைக் குறிக்க வந்ததன்று. ஒருவரைப் பற்றித் தேவையற்ற அதிகப்படியான விபரங்களைத் தர நோக்கில்லாதபோது உபயோகிக்கும் சொல். யக்ஷன் காதலைப் பற்றி மாத்திரமே குறிப்பிட்டுக் காவ்யம் எழுத விரும்பியதால் இச்சொல்லை உபயோகித்தார் கவி. காதல் சுவை மிகுந்த தனிச்சுலோகங்களையோ தொடர்ச்சுலோகங்களையோ எழுதும் போது நாயகன் பெயர் முதலியன குறிப்பிடாமலிருப்பதை அமருகம், காதாஸப்தசதீ முதலியவைகளில் காணலாம். தமிழிலும் அகநானூற்றுச் செய்யுள்களில் தலைவன் தலைவியரின் பெயர் முதலியன குறிப்பிடப் படுவதில்லை. இது கவிமரபு எனத் தொல்காப்பியர் கூறுவர்.

மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்.
தொல்காப்பியம் பொருள் அகத்திணை இயல் 54.

முக்தகம் என்ற ஸம்ஸ்க்ருத தனிப்பாடல்களிலும் இம்முறையை அனுஸரித்ததைக் காணலாம்.

மேலும் कश्चित् என்பது ஊர்பேர் அறியப்படாத அநாமதேயனைக் குறிப்பதன்று. உயர்ந்தவன், சிறந்தவன், கிடைத்தற்கரியன் என்ற பொருளில், मनुष्याणां सहस्रेषु कश्चित् यतति सिद्धये। यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्त्वतः என்ற கீதா ச்லோகத்தில் [7.3] உபயோகித்திருப்பதாக வேதாந்ததேசிகர் கூறுகிறார். அவரும் कामी कश्चित् - என்று தமது கோபாலவிம்சதியில் (சு. 20) கிருஷ்ணனைக் குறிப்பிடுவதும் நோக்கற்பாலது.

जनकतनया - ஜனகரின் மகள் ஸீதை. கர்மயோகி யும் ப்ரஹ்மஞானியுமான ஜனகரின் மகள் என்று குறிப்பிடுவதால் ஸீதையின் பிறந்த குடிப்பெருமையும் கூறப்பட்டது. இத்தகைய குல குணச்சிறப்பு, ராம பத்னி என்ற பதிவ்ரதா குணச்சிறப்பு என்ற இவ் விரண்டு காரணத்தால்தான் ஸ்நாநம் செய்த நீருக்கும் தீர்த்தத்வத்தை - பிறருக்கும் தூய்மை அளிக்கும் சக்தியை - அவள் தந்தாள். 'भवद्विधा भागवता: तीर्थीभूता: स्वयं प्रभो। तीर्थीकुर्वन्ति तीर्थानि' (பாகவதம் 1-13-10) என்ப தையும் காண்க. आश्रमेषु - பல ஆச்ரமங்களில் என்ற பன்மைச் சொல் யக்ஷன், மனத்திலுள்ள விரஹதாபம் காரணமாக ஒரு ஆச்ரமத்திலும் நிலையாக வஸிக்க வில்லை என்பதைக் காட்ட வந்தது என்பர்.

विरहगुरुणा - விரஹம் என்பது என்ன என்பதைப் போதிக்க வந்த ஆசாரிய (गुरु) சாபம் வந்தது என சமத்காரமாகவும் சிலர் பொருள் உரைப்பர். कान्ता - விரும்புதல் என்ற பொருளுள்ள कमु என்ற வினையடி யாக வந்த இச்சொல் காதலிக்கப்பட்டவள் என்று பொருளுடையது. எனவே யக்ஷன் மனைவியைக் குறிக்க, भार्या जाया முதலிய பதங்களை நீக்கி இதனை உபயோகித்தார்.

रामगिरि - இது சித்ரகூடம் என்பர் மல்லிநாதர். ராமன் வசித்ததால் இப்பெயர் பெற்ற இம்மலை (நாக புரிக்கு) நாக்பூருக்கு அருகிலுள்ள, தற்போது மராட்டி யில் ராம்டீக் என்று கூறப்படுவதே ஆகும் என்பர் வில்ஸன் என்பவர். ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் சென்னைக்கு மேற்கே 50 மைல் தொலைவில், ஊத்துக்

கோட்டைக்கு அருகில் தற்போதைய ஆந்திரப் பிரதேசத்தில் ராமகிரி என்ற பெயரில் இருக்கும் மலையும் அதன் அருகிலுள்ள ஊருமே ராமன் வசித்த ராமகிரி என்பர்.

இங்கு வஸ்து நிர்தேசமான மங்களம் முதல் சுலோகத்தில் உள்ளது. ப்ரவாஸம் என்ற வெளிநாட்டு வாஸத்தால் ஏற்பட்ட (விப்ரலம்ப) பிரிவாற்றாமையால் வந்த ச்ருங்கார ரஸமே மேகஸந்தேச காவ்யத்தின் முக்யமான ரஸமாகும்.

ராமர் ஹனுமான் மூலம் ஸீதைக்குச் செய்தி அனுப்பியதை அனுசரித்து மேகதூதம் எழுதப்பட்டது என்பர் சிலர். இதைப்பற்றிய குறிப்பை முன்னுரையில் காண்க.

तस्मिन्नद्रौ कतिचिदबलाविप्रयुक्तः स कामी
नीत्वा मासान्कनकवलयभ्रंशरिक्तप्रकोष्ठः ।
आषाढस्य प्रथमदिवसे मेघमाश्लिष्टसानुं
वप्रक्रीडापरिणतगजप्रेक्षणीयं ददर्श ।। २ ।।

பதவுரை : **तस्मिन् अद्रौ** - அந்த ராமகிரியில், **अबला-विप्रयुक्तः** - (தன்) காதலியை விட்டுப் பிரிந்தவனும், **कनकवलय-भ्रंश-रिक्त-प्रकोष्ठः** - தங்க கடகம் நழுவியதால் அணியற்ற முன்கைப் பகுதியுடையவனும், **कामी** - காம உணர்ச்சி மிக்கவனுமான, **सः** - அந்த யக்ஷன், **कतिचित्** - சில, **मासान्** - மாதங்களை, **नीत्वा**-போக்கியபின், **आषाढस्य**- ஆடிமாதத்தின், **प्रथमदिवसे** - முதல் நாளில், **आश्लिष्ट-सानुम्** - மலையின் தாழ்வரையைத் தழுவியிருப்பதும், **वप्रक्रीडा**-

परिणत-गज-प्रेक्षणीयम् - (தன் தந்தங்களால்) மண் மேடு களை முட்டி விளையாடுவதில் ஈடுபட்டுள்ள யானை போல் காண்பதற்கு இனியதாகவுள்ளதுமான, **मेघम्** - ஒரு மேகத்தை, **ददर्श** - கண்டான்.

கருத்துரை : காதலியை விட்டுப் பிரிந்த ஏக்கத்தினால் உடல் மெலிந்து அவனது கையில் அணிந்திருந்த கடகமும் நழுவியதால் அவனது முன் கை ஆபரணம் ஏதுமின்றி இருந்தது. காம உணர்ச்சி மிகுந்த அந்த யக்ஷன் எவ்வாறோ எட்டு மாதங்களைக் கடத்தியபின் ஆடி மாதத்தின் முதல் நாளன்று ராமகிரி மலைச் சரிவில் தங்கியுள்ள நீருண்ட, கருத்த மேக மொன்றைக் கண்டான். அம்மேகம் தன் வடிவினாலும் நிறத்தாலும் அம்மலைச்சரிவில் படிந்திருக்கும் நிலையாலும், தன் தந்தங்களால் ஒரு மண்மேட்டினை முட்டி விளையாட முயலும் யானை போல் கண்ணிற்கு இனிய காட்சியளிப்பதாக இருந்தது. உவமையணி.

விளக்கவுரை : अबला - பலமற்றவர் என்று பதப்பொருளுடையதாய் ஆண்களைவிட உடல் பலம் குறைவாக உள்ள பெண் இனத்தைக் குறிக்கும். அபலை - பெண்களின் பொதுப்பெயர். இங்கு விரஹ தாபத்தைத் தாங்குவதில் யக்ஷனைவிடவும் பலமற்ற அவனுடைய காதலியைக் குறித்தது.

कनकवलय: - தங்கத்தினாலான கடகம் என்ற ஆபரணம். இது ஆண்கள் அணிவது; பெண்கள் அணியும் வளையல் வடிவினின்றும் சிறிது மாறுபட்ட வடிவமுடையது. வலயம் என்பது தமிழில் வளையல் எனப் படுகிறது.

प्रकोष्ठ: - முழங்கைக்குக் கீழும் மணிக்கட்டிற்கு மேலுமுள்ள கைப்பகுதி; முன் கை.

कामी - காமம்; வேட்கை. இது பொதுவாக எப்பொருளிலும் கொள்ளும் விருப்பைக் குறிக்குமாயினும் நாளடைவில் ஆண் - பெண் பரஸ்பரம் கொள்ளும் விருப்பைக் குறிப்பதாக வந்துள்ளது. யக்ஷர்கள் பொதுவாகக் காமம் மிகுந்தவர்கள். அதனுலேயே காளிதாஸர் காதலியின் பிரிவை அதிகம் உணரக் கூடிய யக்ஷனை விப்ரலம்ப ச்ருங்கார நாயகனுகச் செய்தார்.

कतिचित् मासान् नीत्वा - சில மாதங்களை என்று சொன்னுலும் எட்டு மாதங்கள் சென்றன என்பது; शेषान् मासान् गमय-चतुरः-'மிஞ்சியுள்ள நான்கு மாதங்களைப் போக்குவாயாக' என [உத்தரமேகம் 51-ஆவது சுலோகம்] தன் காதலிக்குச் செய்தி விடுப்பதினின்றும் அறியப்படும்.

आषाढ - பூராடம், உத்திராடம் என்ற இரண்டு நக்ஷத்திரங்களும் आषाढा எனப்படும். இவ்விரண்டினுள் ஒன்றுடன் சேர்ந்து பௌர்ணமி வரும் மாதத்திற்கு ஆஷாடம் எனப் பெயர்.

இதைத் தமிழில் ஆடிமாதம் என்பர். உண்மையில் இந்த ஆஷாடம் தமிழ் ஆனி மாதத்திற்கு இடையில் வரும். ஜ்யேஷ்ட (ஆனி) மாதத்தின் அமாவாஸ்யைக்கு மறுநாள் தொடங்கி அடுத்து வரும் அமாவாஸ்யை வரையிலுள்ள முப்பது நாட்கள் ஆஷாட மாதம். இது க்ரீஷ்ம ருதுவின் இரண்டாவது மாதம். இதற்கு அடுத்து வரும் நான்கு மாதங்கள் ச்ராவணம் (ஆவணி), பாத்ரபதம் (புரட்டாசி), ஆச்வயுஜம் (ஐப்பசி), கார்த்திகம் (கார்த்திகை) என்பனவாம்.

प्रथमदिवसे - ஆடியின் முதல் தினத்தில்; வர்ஷருது தொடங்க ஒருமாதம் இருக்கும் போதே முன்னெச்சரிக்கையாகத் தான் எதிர்பாராமல் கண்ட மேகத்தைத் தூது அனுப்ப விரும்பினுன். சிலர் ஆஷாட மாதத்தின் முடிவு நாளில் (प्रशमदिवसे) - கடைசி தினத்தில் என்று பொருள் கூறுவதை மல்லிநாதர் தமது உரையில் வன்மையாகக் கண்டிக்கிறுர்.

आश्लिष्टसानुम् - सानुः - மலையின் சரிவு அல்லது தாழ்வரை அல்லது சமமான தரையுள்ள இடம். அதில் பதிந்து மேகம் இருந்ததால் தாழ்வரையை அணைத்துக் கொண்டிருப்பதாகக் கூறினுர் கவி. सानु என்பதற்கு மலையுச்சி என்று பொருள் கூறுவர் சரித்ரவர்த்தனரும் மல்லிநாதரும்.

वप्र...परिणत; वप्र-நதி குளம் முதலியவற்றின் கரைகள்; அவை போன்றுள்ள மண்மேடுகள். இத்தகைய இடங்களைக் கண்டால் எருது, யானை முதலியவைகள் தங்கள் தலையைச் சாய்த்துக் கொம்பினுல் முட்டி விளையாடும். இதனை वप्रक्रीडा என்பர். அதில் ஈடுபட்டுள்ள யானையை परिणतः என்பர். तिर्यग्दन्तप्रहारी तु गजः परिणतो मतः என்பது ஹலாயுத கோசம். प्रेक्षणीयम् - காணுதற்குரிய என்பது பதப்பொருள். அழகான என்பது கருத்து. மேகங்கள் ஆகாயத்தில் பலவகை வடிவினையுடையனவாகத் தோன்றும். யக்ஷன் கண்ட மேகம் யானை போல் காணப்பட்டது.

तस्य स्थित्वा कथमपि पुरः कौतुकाधानहेतो-

रन्तर्बाष्पश्चिरमनुचरो राजराजस्य दध्यौ ।

मेघालोके भवति सुखिनोऽप्यन्यथावृत्ति चेतः
कण्ठाश्लेषप्रणयिनि जने किं पुनर्दूरसंस्थे ॥ ३ ॥

பதவுரை : राजराजस्य - குபேரனுடைய, अनुचरः - பணியாளனாகிய யக்ஷன், अन्तर्बाष्पः - கண்ணுள் அடக்கிய நீருடையவனாக, कौतुक-आधान-हेतोः - ஆவலை உண்டாக்குவதற்குக் காரணமான, तस्य - அம்மேகத்திற்கு, पुरः - எதிரில், कथमपि - ஒருவாறு (மிக முயன்று), स्थित्वा - நின்று, चिरम् - வெகுநேரம், दध्यौ - சிந்தித்தான்; मेघ-आलोके (सति) - மேகத்தை காணுங்கால், सुखिनः अपि - (மனைவியுடன் சேர்ந்திருந்து) சுகமாக இருப்பவனுக்கும் கூட, चेतः - மனம், अन्यथा-वृत्ति - வேறுபாடுற்ற நிலையுடையதாக, भवति - ஆகின்றது; (எனின்), कण्ठ-आश्लेष-प्रणयिनि जने - கழுத்திலே கைகளை இட்டு இறுகத் தழுவ விரும்பும் காதலி, दूर-संस्थे-सति - தொலைவிலிருக்கும் பொழுது (இருப்பாளாயின்), (तम्) - அத்தகைய மனிதனைப்பற்றி, पुनः - மேலும், (वक्तव्यम्) किम् - கூற வேண்டுவது என்ன உளது?

கருத்துரை:— மனத்தில் மிக மிக வேட்கையை உண்டாக்கும் அம்மேகத்தின் முன் மிக முயன்று எதனையோ ஒன்றைப் பற்றிக் கொண்டு நின்று வெகு நேரம் தன் நிலையைப் பற்றியும் தன் காதலியின் நிலையைப் பற்றியும் என்ன செய்வதென்று அறிந்து கொள்ள யோசித்தான். மனத்தில் வரும் காம வேட்கையை உடனே தணித்துக் கொள்ளுவதற்கு ஏற்ற வகையில் அன்பு மனைவியுடன் வசிப்பவனுக்கும் கூட காமத்தைத் தூண்டும் மேகத்தைக் காணின் புதிய வேகத்துடன் வேட்கையுணர்ச்சியுண்டாகி மனநிலை மாறுபடுமெனின் காதலி தொலைவிலிருக்க அவளை விட்டுப் பிரிந்திருக்கும் மனிதன் மனத்தில் அதே மேகம் எத்தகைய உணர்ச்சியை

ஊட்டவல்லது என்பதைக் கூறத் தேவையில்லை. அர்த்தாந் தரந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை : राजान: - யக்ஷர்கள். அவர்களின் அரசன்— राजराज: - குபேரன்; अन्तर्बाष्प: - இத்தருணத்தில் தன் காதலியின் பரிதாப நிலையை நினைத்த யக்ஷன் கண்களில் நீர் மல்கியும் அதனை அடக்கிக் கொண்டான். दध्यौ - மனவேறுபாடு மாறும் வரை யோசித்தான். தன் காதலியைப் பற்றி நினைத்தான் என்பர் பூர்ணஸரஸ்வதி.

वृत्ति - இச்சொல் பொதுவாக மனநிலையைக் குறிப்பது. अन्यथावृत्ति - மனோநிலையில் மாறுபாடு-வேட்கையின் மிகுதி சுகமாயிருப்பவர்களுக்கும் ஏற்படும்; ஏனெனில் மேகம், வேட்கையைத் தூண்டும் தென்றல் முதலிய பல பொருட்களில் ஒன்று. இத்தகைய பொருட்களை (தூண்டுபவை) உத்தீபனம் என்பர். जने - என்பது பொதுவாக மக்களைக் குறிக்கும் சொல். இங்கு ஸந்தர்ப்பம் காரணமாக காதலியைக் குறித்தது. காதலியைப் பிரிந்தவன் மனத்தில், காதலி தொலைவிலிருப்பாளாயின், வேட்கை மிகுதியும் ஏற்படும் என்பது கூறவேண்டுவதன்று.

केतकाधान - தாழம்பூவை உண்டாக்கும் மேகம் என்பது சிலர் உரை. केतकाधानहेतो: - என்று பாடம் உண்டு. "தாழை பூப்பதற்குக் காரணமான மேகத்தின் முன் நின்று" என்று பொருள். மழைக்காலத்தில் தாழை பூக்கும். தாழம்பூவின் மணமும் காதலைத் தூண்டுவதாகும்.

प्रत्यासन्ने नभसि दयिताजीवितालम्बनार्थी
जीमूतेन स्वकुशलमयीं हारयिष्यन् प्रवृत्तिम् ।
स प्रत्यग्रैः कुटजकुसुमैः कल्पितार्घाय तस्मै
प्रीतः प्रीतिमुखवचनं स्वागतं व्याजहार ।। ४ ।।

பதவுரை : सः - அந்த யக்ஷன், नभसि - ச்ராவண மாதம் (ஆவணி), प्रत्यासन्ने - சமீபத்திலிருக்கும் போது, दयिता-जीवित-आलम्बन-अर्थी - காதலியின் உயிரைக் காக்க விரும்பியவனாக, जीमूतेन - மேகத்தின் மூலம், स्व-कुशल-मयीम् - தனது க்ஷேமத்தை உள்ளடக்கிய, प्रवृत्तिम् - செய்தியை, हारयिष्यन्-அனுப்ப விரும்பியவனாக, प्रत्यग्रैः - புத்தம்புதிய, कुटजकुसुमैः - மலைமல்லிகை மலர்களால், कल्पित-अर्घाय - பூஜிக்கப்பட்ட, तस्मै - அந்த மேகத்திற்கு, प्रीति-प्रमुख वचनम् - ப்ரீதியை முன்னிட்ட வார்த்தை அமையும்படி, स्वागतम् - நல்வரவை, प्रीतः(सन्) - மகிழ்ச்சியுடையவனாக இருந்து கொண்டு, व्याजहार - கூறினான்.

கருத்துரை : மேகத்தைக் கண்ட யக்ஷன் வர்ஷருது அண்மையில் வரப்போவதை எண்ணி, மழைக் காலம் பிரிந்துள்ளவர்களுக்குத் தாபம் தரும் காலமாதலால் அம்மேகத்தைக் கொண்டே தன் காதலிக்குத் தனது நலத்தையும் மற்றும் சில ஆறுதல் மொழிகளையும் அனுப்ப விரும்பி அப்பொழுதே மலர்ந்த மலைமல்லிகை மலர்களால் அம்மேகத்திற்கு மரியாதை செய்து, ப்ரீதிக்கு முதற்போக்கான (முகமலர்ச்சியுடன்) நல்வரவு கூறினான். ஸ்வபாவோக்தியணி.

விளக்கவுரை : नभः - ஆவணிமாதம். ஆவணியும் புரட்டாசியும் வர்ஷருதுவாகும். नभसि प्रत्यासन्ने - வர்ஷருது அருகிலிருக்கும் போது. प्रत्यासन्ने मनसि என்று

பாடம் கொண்டு மனம் தேறியபின் என்று உரை கூறுவர் தக்ஷிணாவர்த்தநாதர்.

जीमूतः - நீர் நிறைந்தது என்பது பதப்பொருள்; மேகம்.

स्वकुशलमयीम् - கணவனது நலனை அறிந்தே பதிவ்ரதைகள் உயிர் தரிப்பாராதலால் 'தன் க்ஷேமரூபமான செய்தியை' என்றார்.

कुटजः - வெப்பாலை என்ற ஒரு வகைச் சிறிய மரம். அதன் மலர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

अर्घः பூஜை; தொலைவிலுள்ள சூரியனுக்குப் பூஜை கற்பூர ஆரத்தி முதலியன செய்வது போல் தொலைவிலுள்ள மேகத்தினையும் மலர் அளித்துப் பூஜித்தான் யக்ஷன்.

प्रीतिप्रमुखवचनम् என்பதைக் கிரியா விசேஷணமாகக் கொண்டு, 'ப்ரீதியை முன்னிட்ட வார்த்தைகள் அமையும்படி' என்று பொருள் உரைப்பர் மல்லிநாதர். 'ப்ரீதியின் முதல் வார்த்தை'யான என்று பொருள் கொண்டு 'ஸ்வாகதம்' என்பதற்கு விசேஷணமாகவும் கொள்ளலாம்.

स्वागतम् व्याजहार- 'உனக்கு நல்வரவு கூறுகின்றேன்' என்பது போன்ற - பிரியமான வார்த்தைகளைக் கூறினான் என்று கொள்ள வேண்டும்.

सपद्युपगते मित्रे 'कुशलेनागतं त्वया' । इति यत्प्रश्नवचनं तत्स्वागतमुदीरितम् ॥ என்பது ஸ்வாகதம் என்பதன் பொருளை விளக்குவது.

प्रीत: - தனக்கு ஒரு நல்ல தூதன் கிடைத்தானே என்பதால் மகிழ்ந்தான் யக்ஷன். ஸ்வாகதம் கூறும் போது அகமும் முகமும் மலர்ச்சியுடன் இருந்ததைக் காட்டவுமாம்.

धूमज्योतिःसलिलमरुतां सन्निपातः क्व मेघः
संदेशार्थाः क्व पटुकरणैः प्राणिभिः प्रापणीयाः ।
इत्यौत्सुक्यादपरिगणयन् गुह्यकस्तं ययाचे
कामार्ता हि प्रकृतिकृपणाश्चेतनाचेतनेषु ॥ ५ ॥

பதவுரை : धूम - ज्योतिः - सलिल - मरुताम् - புகை, நெருப்பு, நீர், காற்று இவற்றின், सन्निपातः - ஸமுதாய மான (தொகுப்பான), मेघः - (அறிவற்ற) மேகம், क्व - எங்கே? पटु-करणैः - சக்தி வாய்ந்த (கண் காது முதலான) புலன்களையுடைய, प्राणिभिः - அறிவுள்ள ஜீவர்களால் (மனிதர்கள் மூலம்), प्रापणीयाः - அடைவிக்கப் படவேண்டிய, संदेश-अर्थाः - வாய்மொழியாகக் கூறப் படும் பொருள் (செய்தி), क्व - எங்கே?, इति (एतत्) - என்ற இதனை (இவ்வேறுபாட்டை), औत्सुक्यात् - பெரு விருப்பம் காரணமாக, अपरिगणयन् - மனத்தில் சிறிதும் யோசிக்காமல், गुह्यकः - அந்த யக்ஷன், तम् - அந்த மேகத்தை, ययाचे - (தனக்குத் தூதனாக) வேண்டி யாசித்தான்; हि - ஏனெனில், काम-आर्ताः - பெரும் காமத் தினால் பீடிக்கப்பட்டவர் (உன்மத்தம் கொண்டவர் கள்). चेतन-अचेतनेषु - அறிவுடையன அறிவற்றன என இவ்விரண்டு வகையினிடத்திலும், प्रकृति-कृपणाः - இயற் கையிலே எளியவர்களாக, भवन्ति - ஆகின்றனர்.

கருத்துரை: புகை, நெருப்பு, நீர், காற்று இவற்றின் தொகுதியாக இருப்பதும் அறியும் ஆற்றலற்றதுமான மேகம் எங்கே? கூறுவதைக் கேட்டு அறிந்து மனத்திலிருத்திப் பிறகு கூற வேண்டுதற்கான திறமைவாய்ந்த புலன்களுடைய மனிதர்கள் மூலம் அனுப்ப வேண்டிய வாய்மொழிச் செய்தி எங்கே? மனைவிக்கு எப்படியேனும் செய்தியனுப்ப வேண்டும் என்ற பெரும் ஆவல் கொண்ட யக்ஷன் இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாட்டை அறியாமல் மேகத்தினிடம் வேண்டினன். இப்படி வேண்டுதல் பொருத்தமற்றதே, ஆனால் காமப்பித்தம் ஏறியவர்களின் மனம் பகுத்தறிவை இழப்பது இயற்கையாக உள்ளது. அவர்கள் இது உயிரினம், இது உயிரற்றது, அறிவுடையது, அறிவற்றது என்ற வேறுபாட்டை அறியும் விஷயத்தில் தரித்ரர்கள் - ஏழைமை கொண்டவர்கள். பகுத்தறிவை இழந்தவர்கள். அர்த்தாந்தரந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை: धूम--- ஸாதாரண மனிதர்களின் கண்களுக்குப் புலப்படும் மேகத்தின் வடிவினைக் கவி இங்கு கூறினர். கருத்த நிறம், மின்னல், நீர், காற்றினல் உந்தப்படுதல் என்ற இவைகளைக் கொண்டு இவற்றின் தொகுதி மேகம் என்றார். धूमः - நீராவி என்றும் பொருள் கொள்ளலாம்.

पटुकरणैः - புலன்கள் திறமை வாய்ந்தனவாக இருக்கவும் வேண்டும். கேட்டல், அறிந்து கொள்ளுதல், நினைவிற்கொள்ளுதல், பின் முறையாகத் தெரிவித்தல் என்பன திறமை வாய்ந்த புலனுடையார்க்கு அமைவனவாகும்.

क्व-क्व - இச்சொல் அடுத்தடுத்து வருவதால் இரண்டு கருத்துக்களுக்கும் இடையே உள்ள மிகுந்த வேறுபாட்டை உணர்த்தும்.

प्राणिभिः - என்றது இங்கு மனிதர்களை. सन्देशः - வாய்மொழியாகக் கூறப்படுவது. अर्थः - பொருள், செய்தி. उत्सुकः - தான் விரும்பியதை சாதிக்க முயல்பவன். பெரும் ஆவலுடையவன். औत्सुक्यम् - அத்தகைய ஆவல் நிலை.

गुह्यकः - தேவ ஜாதியில் வேறு ஒரு வகையினனைக் குறிப்பதாயினும் இங்கு யக்ஷனைக் குறித்தது. யக்ஷன் மேகத்தினிடம் செய்த பொருந்தாத வேண்டுகோளுக்குக் காரணம் கூறுவது कामार्ताः என்பது. காமப் பித்தம் கொண்டவர்கள் முதலில் இழப்பது, பகுத்து அறியும் திறன் ஆகும். இவர்களுக்கு இயற்கையாகவே இத்தகைய நிலை ஏற்படுகிறது.

नैव पश्यति जात्यन्धः कामान्धो नैव पश्यति ।
न पश्यति मदोन्मत्तस्त्वर्थी दोषं न पश्यति ।।

என்பதைக் காண்க. இது காரணமாக ஸீதையைப் பிரிந்த ராமன் அசோகு முதலிய மரங்களிடமும் ஸீதையைப் பற்றி வினவியதாக வால்மீகி கூறியுள்ளார்.

अशोक शोकापनुद शोकोपहतचेतनम् ।
त्वन्नामानं कुरु क्षिप्रं प्रियासन्दर्शनेन माम् ।।

என்பதைக் காண்க. रा. अर. स. ६० श्लो. १६.

हंस प्रयच्छ मे कान्ताम् எனக் கவி, ஊர்வசியை இழந்த புரூரவஸ் கூறுவதாக விக்கிரமோர்வசீயத்தில் (4. 17.) கூறுகிறார்.

அசேதனப் பொருளைத் தூது அனுப்புவது எவ்வாறு என்ற கேள்விக்குக் கவி சுலோகத்தின் நாலாவது அடியில் பதில் கூறி இருக்கிறார். இதையே வலுவாகக்

கேட்டுப் பதில் கூறியவர் பாமஹர் என்ற ஆலங்காரிகர். "பேச்சற்ற மேகமும் ஒலியுடையதாயினும் தெளிவான பேச்சற்ற ஹம்ஸம், கிளி முதலியனவும் வெகு தொலைவு செல்பவையாயினும் எவ்வாறு தூதன் தொழிலைச் செய்ய இயலும் என்ற கேள்வி யுக்தியுடன் சேராது. காதலன் ஒருவன் ஆவல் மிகுதியால் பித்தம் கொண்டவன் போல் பேசுவானாயின் இவ்வாறு தூது அமையலாம். மேதாவிகளான கவிகள் வ்யாஸர், காளிதாஸர் முதலியவர்கள் இத்தகைய தூது அனுப்பிக் காவ்யம் புனைந்துள்ளனர்" என்பது அவருடைய கருத்து. தூது காவ்யம் எழுதியவர்கள் பித்தம் பிடித்தவர்கள் அல்லர். இத்தூது காவ்யம் அவர்களது கற்பனையில் தோன்றியது. பாமஹரின் சுலோகங்கள்: अवाचोऽव्यक्तवाचश्च दूरदेशविचारिणः । कथं दूत्यं प्रपद्येरन् इति युक्त्या न युज्यते ॥ यदि चोत्कण्ठया यत्तत् उन्मत्त इव भाषते । तथा भवतु भूम्नेदं सुमेधोभिः प्रयुज्यते ॥ பாமஹாலங்காரம் (1-43, 44). வ்யாஸர் நளனுக்கும் தமயந்திக்குமிடையில் ஹம்ஸத்தை தூது செல்வதாகக் கூறியுள்ளார்.

प्रकृति - இயற்கை; மனிதனின் இயற்கையான பகுத்தறிவு. कृपणः - பணமிருந்தும் தரித்ரம் கொண்டாடுபவன், அல்பன், குறைவான செல்வமுடையவன், வறியன், என்ற பல பொருள் இதற்கு உண்டு. இங்கு பகுத்தறிவை இழந்தவன், தாழ்மையுற்றவன் என்பது பொருள். காமப்பித்தம் கொண்டவர்கள் இயற்கையாகவே அறிவிழந்தவர்களாகின்றனர் என்பது கருத்து. प्रणयकृपणाः - என்று பாடம் கொண்டு, 'யாசிப்பதினால் தாழ்வையுடையவர்' என்று கூறுவர் சிலர்.

जातं वंशे भुवनविदिते पुष्करावर्तकानाम्
जानामि त्वां प्रकृतिपुरुषं कामरूपं मघोनः ।
तेनार्थित्वं त्वयि विधिवशाद् दूरबन्धुर्गतोऽहम्
याच्ञा मोघा वरमधिगुणे नाधमे लब्धकामा ॥६॥

பதவுரை :— (मेघ) - மேகமே, त्वाम्- உன்னை, भुवन-विदिते - இவ்வுலகில் நன்கு அறியப்பட்டுள்ள, पुष्कर-आवर्तकानाम् - புஷ்கரங்கள் ஆவர்த்தகங்கள் என்ற மேகங்களின், वंशे - குலத்தில், जातम् - பிறந்தவனாகவும், मघोनः - இந்திரனுடைய, प्रकृति-पुरुषम् - ப்ரதான அதிகாரியாகவும், काम-रूपम् - விருப்பப்படி வடிவெடுக்கக்கூடியவனாகவும், जानामि - நான் அறிகின்றேன். तेन - அது காரணமாக, विधिवशात्- துரத்ருஷ்ட வசத்தால், दूर-बन्धुः- வெகு தொலைவிலிருக்கும் மனைவியுடைய, अहम् - நான் त्वयि - உன்னிடத்தில், अर्थित्वम् - யாசகனாக இருக்கும் நிலையை, गतः - அடைந்திருக்கின்றேன். अधिगुणे - (சிறந்த) குணமுள்ள மனிதனிடம் (செய்யப் பட்ட), याच्ञा - வேண்டுகோள், मोघा (अपि) - பயன் பெறாததாயினும், वरम् - சிறந்ததாகும். अधमे-குணமற்றவனிடம் (செய்யப்படும்), (याच्ञा) - வேண்டுகோள், लब्धकामा (अपि) - பெறப்பட்ட பயனுடையதாயினும், न (वरम्)- சிறந்ததன்று. (சிறிதும் மனத்திற்கு மகிழ்ச்சியளிக்காது).

கருத்துரை: — மேகமே, பிரளயகாலத்தில் பெருமழை பெய்து, இவ்வுலகினை நீரில் ஆழ்த்தும் வல்லமை பெற்றவை புஷ்கரங்கள் ஆவர்த்தகங்கள் என்ற மேகங்கள். இவைகளே பின்னுண்டான மேகங்களுக்கு முதற்காரணமானவை,

இவை உலகில் பிரசித்தி பெற்றவை. அவற்றின் வம்சத்தில் நீ பிறந்து குலப்பெருமை பெற்றுள்ளாய். தேவேந்திரனின் முக்ய அதிகாரிகளில் நீ ஒருவன். விரும்பியபடி வடிவெடுக்கும் ஆற்றலுடையவனுதலால் எங்கும் தடையின்றிச் செல்லும் திறன் உடையவன். இத்தகைய பெருமை வாய்ந்தவன் என்ற காரணத்தால், துரத்ருஷ்டவசமாகத் தொலைவிலே மனைவியையுடைய நான், உன்னிடம் ஒரு வேண்டுகோளுடன் வந்திருக்கிறேன். யாசிக்கப்படுபவனுக்கு இத்தகைய குணச் சிறப்புக்கள் தேவைதானு எனின், அதன் காரணத்தை உணர்வாயாக: - சிறந்த குணமுள்ளவனிடம் செய்யும் வேண்டுகோள் பயனளிக்காவிடினும் மனவருத்தம் தருவதில்லை. அல்பன் ஒருவனிடம் செய்யப்பட்ட வேண்டுகோள் பயனளித்தாலும் பிறகு மனம் வருந்தச் செய்யும் என்பது உலகமாந்தரின் இயற்கையாதலின் குணச்சிறப்புடைய உன்னிடம் யாசகனுக வந்துள்ளேன். அர்த்தாந்தரந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை: — पुष्कर-आवर्तक-என்பதை இரண்டு மேக வகையாகக் கொள்ளாமல் ஒரே வகையாகக் கொள்வர் சிலர். இவற்றின் கடமை பிரளய காலத்தில் உலகினை நீரில் மூழ்கடிப்பது. இவைகளின் பரம்பரையில் வந்தவைகளே பிற மேகங்கள்,

भुवन विदिते - என்பதை वंशे என்பதுடன் சேர்க்க வேண்டும். प्रकृतिपुरुष - அரசன், மந்திரிகள், நண்பர்கள், நிதி, நாடு, அரண், சேனை, இவ்வேழும் ராஜ்யத்தின் ஏழு உறுப்புக்களாகும். இவற்றின் பொதுப் பெயர் ப்ரக்ருதி என்பது. 'உயர்ந்ததாகச் செய்வன' என்பது பதப்பொருள். இது காரணமாகவே இவைகளில் ஒவ்வொன்றும் முக்யத்வம் பெற்றதாகும். நாடு செழிப்பதற்குக் காரணமான மழை தரும் மேகங்களுக்குத் தலைவன் இந்திரன். எனவே, மேகங்கள்

அவனுக்கு மந்திரியாகவோ நண்பனாகவோ இருந்து உதவுவதால் மேகத்தை முக்கிய அதிகாரியாகக் கூறினார் கவி.

कामरूपम् - விரும்பிய வடிவை எடுத்து, பிறர் செல்ல முடியாத இடங்களுக்கும் செல்லும் சக்தியுடையது மேகம். दूरबन्धुः - இங்குள்ள बन्धु என்ற சொல், "அன்பினால் பிணிப்பவள்" என்று பொருள் கொண்டு மனைவியைக் குறிக்கின்றது.

विधिवशात् - தற்போது தெய்வத்தின் வசத்தில் இருப்பதால் நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை என்பது கருத்து. विधि - இங்கு துரத்ருஷ்டத்தைக் குறித்தது. யாசிக்கப்படுபவனுக்கு உயர்ந்த குணம் இருக்க வேண்டும் என்பதைக் கூறுவது சுலோகத்தின் நான்காவது பாதம். मोघा-लब्धकामा - என்பவற்றுடன் अपि- என்பதனைச் சேர்த்துப் பொருள் கூறவேண்டும் என்பர் பூர்ணஸரஸ்வதி.

सन्तप्तानां त्वमसि शरणं तत्पयोद प्रियायाः
सन्देशं मे हर धनपतिक्रोधविश्लेषितस्य ।
गन्तव्या ते वसतिरलका नाम यक्षेश्वराणां
बाह्योद्यानस्थितहरशिरश्चन्द्रिकाधौतहर्म्या ॥७॥

பதவுரை: — पयोद - நீர் தரும் மேகமே, त्वम् - நீ, सन्तप्तानाम् - (கடும் வெய்யிலினாலோ, மனைவியின் பிரிவினாலோ) தாபமடைந்தவர்களுக்கு, शरणम् - ரக்ஷகனாக, असि - இருக்கின்றாய். तत् - அக்காரணத்தால், धनपति-क्रोध-विश्लेषितस्य - குபேரனின் கோபத்தால் (மனைவியை

விட்டுப்) பிரிக்கப்பட்டுள்ள; मे - என்னுடைய, सन्देशम् - செய்தியை, प्रियायाः - (என்) காதலிக்கு, हर - கொண்டு செல்வாயாக. बाह्य-उद्यान-स्थित-हर-शिरः - चन्द्रिका-धौत हर्म्या - (நகரத்திற்குப்) புறத்திலிருக்கும் மலர்ச்சோலையிலுள்ள - சிவபிரானது - தலையிலிருக்கும் சந்திரனின் ஒளியால் - பிரகாசமுடையதாகச் செய்யப்பட்ட மாளிகைகளையுடையதும், अलका-नाम - அலகாபுரி எனப் பிரசித்தி பெற்றதுமான, यक्षेश्वराणाम् - யக்ஷர்களின் தலைவரான குபேரனின், वसतिः - வாஸஸ்தானம், ते - உன்னால், गन्तव्या - செல்லப்பட வேண்டிய இடமாகும்.

கருத்துரை: — கோடையினால் தவிப்பவர்களுக்கு 'நீர் கொடுத்தும் மனைவியைப் பிரிந்து தவிக்கும் காதலர்களை அவர்களை வீடு நோக்கிச் செல்லும்படித் தூண்டியும் நீ அவர்களைப் பாதுகாக்கின்றாய். எனவே, நான் தரும் செய்தியை என் மனைவிக்குக் கொண்டு சென்று என்னையும் அவளையும் ஒரே சமயத்தில் நீ காப்பாற்ற வேண்டும். நீ போக வேண்டிய இடம் குபேரனின் தலைநகரான அலகாபுரி. அந்நகருக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அலகாபுரிக்கு வெளியில் உள்ள உத்யானத்தில் சிவபிரான் தங்கியிருப்பார். அவரது சிரஸிலுள்ள சந்திரனின் ஒளி அந்நகரிலுள்ள மாளிகைகளை ப்ரகாசமுடையதாகச் செய்யும். அது காண்பதற்கு இனியதொரு காட்சி; வேறு இடத்தில் காணக்கிடைக்காதது. எனவே, அங்கு உனக்கும் ஒரு நற்பயனுண்டு. உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை: — सन्तप्तानाम् - என்பதற்கு மேகம் தரும் உதவியை எதிர் நோக்கி இருக்கின்ற துன்பமடைந்துள்ளவர்களை இருவகையில் வகுத்தனர் உரைகாரர்கள். மனைவியை விட்டுப் பிரிந்து வெளியிடம் சென்றவர்கள் வர்ஷருதுவில் வீட்டிற்கு வர முற்படு

வதால் மேகம் அவர்களை வீடு செல்லத் தூண்டுவதன் மூலம் அவர்களுக்கும், அவர்களின் காதலிகளுக்கும் உதவுவதாகக் கூறினார். காதலன் காதலி என்ற இருவருமே தாபமடைந்தவர்கள். தான் தரும் செய்தியை மனைவிக்கு அளிப்பதன் மூலம் மேகம் அவளுக்கும் தனக்கும் ஆறுதலளிக்கும் என்றான் யக்ஷன்.

यक्षेश्वराणाम् - சபித்தவனாயினும், மதிப்பைக் காட்டும் பன்மைச் சொல்லால் குபேரனைக் குறிப்பிட்டான் யக்ஷன். யக்ஷர்களின் தலைவன் குபேரன். बाह्य-धौतहर्म्या- யக்ஷனுக்கு உதவும்போது மேகம் தன்னால் காண இயலாத ஒரு காட்சியைக் கண்டு பெரும் பேறும் பெறலாம் என்று குறிப்பிட்டான் யக்ஷன். பிற நகரங்களில் சந்திரன் ஒளி மேலிருந்து கீழ் நோக்கி வந்து மாளிகைகளை அழகுறச் செய்யும். அவ்வழகைக் காண மேகம் அண்மையில் வந்தால் சந்திரனின் ஒளி மறைக்கப்பட்டுவிடும். அலகாபுரியில் மலர்ச் சோலையில் பரமசிவனின் தலையிலுள்ள சந்திர ஒளி மேலிருந்து கீழ் நோக்கி வராமல் கீழிருந்து மேல் நோக்கியோ அல்லது நேர் எதிரிலிருந்தோ வந்து மாளிகைகளை அழகு செய்யுமாதலால் மேகம் ஆகாயத்திலிருந்து மாளிகைகளைக் காண இயலும். மேகத்தினால் சந்திரனின் ஒளி மறைக்கப்படாது என்பர் ஒரு உரையாசிரியர்.

சிவபிரானுக்கு நண்பன் குபேரன். कुबेरस्त्र्यम्बकसखः என்பது அமரம். அதனால் அவர் அவனுடைய உத்யானமான சைத்ரரதம் என்பதில் வந்து தங்கியிருப்பார். இந்த உத்யானத்தை கந்தமாதனம் என்றும்

கூறுவர். கைலாஸத்தின் சரிவில் அலகாபுரி இருப்ப தாகக் கவி சுலோகம் 63-இல் கூறுகிறார்.

अलका-नाम - नाम என்பது பிரசித்தியைக் குறிப்பது. धौत - அழுக்கு நீக்கப் பெற்றது - என்பது பதப் பொருள். அழகு செய்யப்பட்டது, ஒளியுடைய் தாக்கப்பட்டது-என்பது கருத்து.

त्वामारूढं पवनपदवीमुद्गृहीतालकान्ताः
प्रेक्षिष्यन्ते पथिकवनिताः प्रत्ययादाश्वसत्यः ।
कः संनद्धे विरहविधुरां त्वय्युपेक्षेत जायां
न स्यादन्योऽप्यहमिव जनो यः पराधीनवृत्तिः ॥ ८

பதவுரை : — पवन-पदवीम् - காற்றின் மார்க்கமான ஆகாசத்தை, आरूढम् - அடைந்துள்ள, त्वाम् - உன்னை, उद्गृहीत-अलक-अन्ताः - தூக்கிப்பிடிக்கப்பட்ட முன் நெற்றியில் விழும் குழல் கற்றைகளின் நுனிப்பகுதி களையுடைய, पथिक-वनिताः-(தன் வீடு திரும்பும் மார்க்கத் திலுள்ள காதலர்களின் வனிதைகள், प्रत्ययात्-(கணவன் சீக்கிரமே வருவான்) என்ற நம்பிக்கையால், आश्वसत्यः-(தாமே) ஆறுதல் அடைபவர்களாக, प्रेक्षिष्यन्ते - காண் பார்கள்; त्वयि - நீ, संनद्धे सति - (மழை பொழிந்து வர்ஷ ருதுவைத் தொடங்கத்) தயாராக இருக்கும் பொழுது, विरह विधुराम् - பிரிவினால் வருந்தும், जायाम् - (தன்) மனைவியை, अन्यः यः अपि जनः - (என்னைத் தவிர்த்த) வேறு எந்த ஒரு மனிதனும், अहमिव - நான் (இருப்பது) போல், पराधीन-वृत्तिः - பிறர் வசத்திலுள்ள வாழ்க்கை வழியுடையவனாக (பிழைப்பையுடையவனாக), न स्यात्- இல்லாதிருப்பானோ (இல்லாதிருப்பானயின்), (सः) कः-

அத்தகைய எந்த மனிதன்தான், जायां - (மனைவியை இந்த மழைப் பருவத்தில்) அலக்ஷியம் செய்வான்?

கருத்துரை: — மேகமே, எனக்காகத் தூது செல்வதை ஏற்று ஆகாசத்தில் நீ எழுந்தவுடனேயே, அயல் இடம் சென்றுள்ள காதலர்களின் வனிதைகள் மழைக்காலம் வந்து விட்டதால் இனித்தாமதியாமல் கணவர்கள் வீடு திரும்புவார்கள் என்ற நம்பிக்கையால் தம்மைத்தாமே தேற்றிக் கொண்டு உன்னை, நன்றியுடன் நன்கு காண்பதற்காகத் தம் முன் நெற்றியில் படிந்து கிடக்கும் குழல்கற்றைகளை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு உன்னை அன்பு கனிந்த பார்வையுடன் நோக்குவர். எனக்கு உதவி செய்யத் தொடங்கும் போதே நீ வனிதையரின் நன்றிக்குப் பாத்திரமாக இருக்கும் நிலையைப் பெற்று விடுகிறாய். "நான் ஆகாயத்தில் தோன்றி விட்டால் காதலர்கள் திரும்புவார்கள் என்பது என்ன உறுதி" எனின் கூறுகின்றேன். என்னைப் போல் பிறரை அண்டிப் பிழைக்கத் தேவையில்லாத சுதந்திர மனிதன் - காதலன், எவனும் மழைக்காலத்தில் தன்னைப் பிரிந்து வாடும் மனைவியை அலக்ஷியம் செய்ய மாட்டான். இது உலக இயல்பு. என் போன்ற அடிமைதான் மனைவியைப் பிரிந்து வாழ வேண்டியிருக்கும். அப்ரஸ்துதப்ரசம்ஸா அணி என்பர் பூர்ண ஸரஸ்வதி. அர்த்தாந்தரந்யாஸமும் உண்டு.

விளக்கவுரை: — पवनपदवी-காற்று செல்லும் வழி ஆகாயம். उद्गृहीत...अलक - முன் நெற்றியில் விழும் கேசம். अन्त: - முனை, அலகத்தின் முனைகளை-குழற் கற்றைகளின் முனைகளை தூக்கிப் பிடித்த வனிதையர் என்பது பொருள். மேகத்தை நன்கு நோக்குவதற்காகக் கண்களை மறைக்கும் குழற்கற்றைகளைத் தூக்கிப் பிடிப்பர். கணவனைப் பிரிந்திருக்கும் நிலையில் பெண்கள் அணி செய்து கொள்வதில்லையாதலால் கேசம் கன்னங்களிலும் முன் நெற்றியிலும் விழுந்துள்ளன.

पथिकाः - வழி நடை செல்பவர்கள் என்பது பதப் பொருள். வாஹன வசதிகள் அதிகமில்லாத முற் காலத்தில் படிப்பிற்காகவும் பணம் தேடுதற்காகவும் வியாபாரத்திற்காகவும் மற்றும் சில காரணங்களுக் காகவும் மனைவியைப் பிரிந்து தொலைவிலுள்ள அயல் இடங்களுக்கு வழிநடையாகச் செல்பவர்களைக் குறித் தது. இவர்களில் பெரும்பாலோர் மழைக்காலம் தொடங்குவதற்காக அறிகுறி தென்பட்டவுடனேயே வீடு திரும்புவர் என்பர்.

प्रत्ययात् आश्वसत्यः - முன் வருஷங்களில் மேகம் தோன்றியவுடனேயே கணவர்கள் திரும்பிவிட்டதால் அவ்வனுபவம் காரணமாகத் தற்போதும் மேகத்தைக் கண்டவுடன் காதலர் திரும்புவர் என்ற நம்பிக்கை உண்டாகி மனம் தேறுகின்றனர்.

पराधीनवृत्तिः-वृत्तिः-ஜீவனோபாயம் அல்லது பிழைப்பு. பிறரை அண்டிப் பிழைப்பவனுக்கு சுதந்திரமில்லை. எனவே, அவன் தன்னிஷ்டப்படி வீடு திரும்ப இய லாது என்று மாற்று உதாஹரணத்தைக் காட்டி, சுதந்திர மனிதன் எவனும் வீடு திரும்புவான் என்று யக்ஷன் கூறுகிறான். இங்கு யக்ஷனுக்குள்ள தன் னிரக்கம் கவனித்தற்குரியது.

मन्दं मन्दं नुदति पवनश्चानुकूलो यथा त्वाम्
वामश्चायं नदति मधुरं चातकस्ते सगन्धः ।
गर्भाधानक्षणपरिचयान्नूनमाबद्धमालाः
सेविष्यन्ते नयनसुभगं खे भवन्तं बलाकाः ॥ ९ ॥

பதவுரை: — अनुकूलः - அனுகூலமான, पवनः - காற்றும் (வீசி), मन्दम् मन्दम् - மிக மெதுவாக, त्वाम् - உன்னை, यथा - எவ்வாறு, नुदति - (பிரயாணத்திற்காகத்) தூண்டுகின்றதோ, वामः - (உனக்கு) இடது புறத்திலுள்ள (அல்லது அழகான), सगर्वः -(உன்னைக் கண்டதால்) களிப்புற்றுள்ள, अयम् - चातकश्च - இந்த சாதகப் பறவையும், यथा मधुरम् - எவ்வாறு இனிமையாக, नदति - கூவுகின்றதோ, (तथा) - அவ்வாறே, गर्भ-आधान-क्षण परिचयात् - கர்ப்பத்தைத் தோற்றுவிக்கும் மகிழ்ச்சிகரமான (உன்னுடன் ஏற்படுகின்ற) பழக்கம் காரணமாக, खे - ஆகாயத்தில், आबद्ध माला: - வரிசையை அமைத்துக் கொண்ட, बलाका: - பெண் கொக்குகளும், नयनसुभगम् - கண்களுக்கு மகிழ்ச்சி தரும், त्वाम् - உனக்கு, नूनम् - திண்ணமாக, सेविष्यन्ते - ஸேவை செய்யும் (உன்னுடன் தொடர்ந்து வந்து மகிழ்ச்சி தரும்).

கருத்துரை:—மேகமே, நீ புறப்படுதற்கான நற்சகுனங்கள் தோன்றியுள்ளன. நீ செல்ல வேண்டிய திசையை நோக்கி மெதுவாக வீசும் அனுகூலமான காற்று உன்னைப் பிரயாணம் மேற்கொள்ளத் தூண்டுகிறது. உனக்கு இடது புறத்தில் இருந்து கொண்டு உன் வரவினால் மகிழ்ச்சியுற்றுச் சாதகப் பறவை இனிதே கூவுகின்றது. உன் அண்மையை அடைந்து கர்ப்பத்தை ஏற்கும் மகிழ்ச்சியான பருவத்தினால் ஆகாயத்தில் வரிசை வரிசையாக உன்னருகில் பறக்கும் கொக்குகள் உனக்குப் பணிவிடை செய்வன போல் உன்னுடன் சிறிது தூரம் பறந்து உனக்கு வழியனுப்புதலைச் செய்யும். ஸமாஸோக்தி, அனுமானம் என்ற இரண்டு அணிகள் உண்டு.

விளக்கவுரை: — இங்கு இரண்டு சுப சகுனங்கள் கூறப்பட்டன. காற்று அனுகூலமாக வீசுதல், சாதகம் கூவுதல் முதலியவற்றைச் சுபசகுனமாக சகுன சாஸ்

திரம் கூறும். यथा - என்பதற்குப் பலன் ஏற்படு தலுக்குப் பொருத்தமாக என்றும் பொருள் கூறுவர் மல்லிநாதர்.

वामः-அழகான என்ற பொருளும் உண்டு. सगन्धः- உறவினன்; களிப்புற்றவன் என்றும் பொருள் உண்டு. गर्भाधान-क्षण-परिचयात् - மேகங்களிருக்குமிடம் சென்று கொக்குகள் கர்ப்பத்தைப் பெறுகின்றன என்பது கவி மரபு. क्षणः - மகிழ்ச்சியான ஸமயம்; गर्भं बलाकाः दधतेऽभ्रयोगात् नाके निबद्धावलयः समन्तात् என்று கர்ணோதயம் என்ற நூலில் உள்ள வாக்யம் இதனை வலியுறுத்துவதாக மல்லிநாதர் கூறுவர். 'மேகத்திற்கு அருகில் வரிசை வரிசையாகப் பறந்து செல்லும் கொக்குகள் கருவை பெறுகின்றன'' என்பது மேற்கூறிய சுலோகத்தின் பொருள்.

— आबद्ध-मालाः- माला - வரிசை; 'அமைத்துக் கொண்ட வரிசையுடையவைகள்' என்பது பதப்பொருள். கொக்குகள் பறக்கும் போது ஒன்றன் பின் ஒன்று கவும் வரிசை வரிசையாகவும் பறக்கும். அப்போது கொக்குகள் தங்களையே வரிசையாக அமைத்துக் கொள்ளும். தோரண மாலை போலும் தோன்றும். बलाकाः - இது பெண்பாற்சொல் என்பர் மல்லிநாதர்.

सेविष्यन्ते - ஸேவை செய்யும். இங்கு கொக்குகள் மேகத்துடன் சிறிது தூரம் உடன் செல்வதையே கொக்குகள் செய்யும் ஸேவையாகக் கூறினார். கர்ப்பம் தரிக்கும் காலத்தில் ஏற்பட்டுள்ள பழக்கத்தினால் கொக்குகள் மேகங்களின் அருகில் பறப்பதாகவும் கொள்ளலாம்.

இவ்வாறு நல்ல சகுனங்கள் ஏற்படுவதால் நீ தூது செல்வது திண்ணமாகப் பயன் பெறும். யக்ஷனின் மனைவியை மேகம் காணும் வாய்ப்பு உண்டு என்பதும் அடுத்த சுலோகத்தில் கூறப்படுகிறது.

तां चावश्यं दिवसगणनातत्परामेकपत्नी-
मव्यापन्नामविहतगतिर्द्रक्ष्यसि भ्रातृजायाम् ।
आशाबन्धः कुसुमसदृशं प्रायशो ह्यङ्गनानाम्
सद्यः पाति प्रणयि हृदयं विप्रयोगे रुणद्धि ॥१०॥

பதவுரை: — (मेघ) - மேகமே, दिवस-गणना-तत्पराम् - நாட்களை எண்ணுவதில் மிக ஈடுபட்டிருப்பவளும், अव्यापन्नाम् - உயிருடன் இருப்பவளும், एकपत्नीम् - பதிவ்ரதையும், भ्रातृ-जायाम् (உன்) ஸஹோதரனின் மனைவியுமான, ताम् - அவளை (யக்ஷியை), (अविहत-गतिः - தடையற்ற ஸஞ்சாரமுடையவனாக, अवश्यम् - திண்ணமாக, द्रक्ष्यसि च - நீ காண்பாய். आशाबन्धः - (நம்பிக்கையுடன் கூடிய) அவா என்ற ஒரு காம்பு, प्रणयि - அன்புடையதும், कुसुमसदृशम्-புஷ்பம் போல் மிருதுவானதும், विप्रयोगे- (கணவனது) பிரிவில், सद्यः पाति - உடனே விழும் தன்மையுடையதுமான, अङ्गनानाम् - பெண்களின், हृदयम् - ஹ்ருதயத்தை (மனத்தை), प्रायशः - பெரும்பாலும், रुणद्धि - அழியாமல் தடுக்கின்றது (காக்கின்றது).

கருத்துரை:—மேகமே, உன் தூது வீணுகுமோ என்று அஞ்ச வேண்டாம். சாபத்தின் எல்லையைக் காண, சென்ற நாட்களையும் நின்ற நாட்களையும் எண்ணிக் கொண்டு என் மனைவி உயிருடன் இருப்பாள். அவள் பதிவ்ரதையாகையால் நடத்தை பிறழாமலும் இருப்பாள். எனக்கு உதவி செய்கின்ற

உனக்கு நான் ஸஹோதரனாகின்றேன். எனவே, அவளும் ஸஹோதரன் மனைவி என்ற முறையில் இருப்பதால் தாயைக் காண்பது போல் அவளை எவ்விதத் தடையுமின்றி நீ காணலாம். கணவனது பிரிவு ஏற்பட்டவுடனேயே, புஷ்பம் போல் மென்மையான-அன்பு நிறைந்த, பெண்களின் மனம் உடனே கீழே விழ்ந்துவிடக் கூடியதுதான். உறுதி இழந்த மனம் உடைந்து போகும் என்று எண்ணலாம். ஆனால் வரப்போவதில் நம்பிக்கை கொண்ட (அவர்களின்) விருப்பமே, உறுதியான ஒரு பிடிப்பாகும். ஒரு பூவின் காம்பு அப்பூவைக் கீழே வீழ்வதினின்றும் தடுத்துக் காப்பது போல் இப்பிடிப்பே பெண்கள் உயிர் துறப்பதினின்றும் தடுத்துக் காக்கின்றது. அர்த்தாந்தரந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை: — दिवसगणना-तत्पराम् - *சாபகாலம் ஒரு வருஷம் தான் என எல்லையிருப்பதால், வேறு வகையில் பொழுது போக்காமல், 'இவ்வளவு நாட்கள் சாபகாலத்தில் சென்றன, செல்ல வேண்டிய நாட்கள் இவ்வளவு' என்று தினமும் எண்ணிக்கொண்டிருப்பாள். மாதங்களை எண்ணமாட்டாள் அவள். உலகிலும் கஷ்டப்படும் மனிதர்கள் 'நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன்' என்று கூறுவதைக் கவனிக்கலாம்.*

अव्यापन्नाम् - *'அவளுக்கு ஆபத்து (மரணம்) நிகழ்ந்திராது; அவள் உயிருடன் இருப்பாள். 'பிரிவினால் இறந்திருப்பாளோ, தூது வீணாகுமோ' என்று அஞ்ச வேண்டாம்'. இதற்கான காரணம், आशाबन्धः என்பதில் கூறப்படுகின்றது. एकपत्नी-என்பதால் நடத்தை பிறழாதவள் என்பது குறிப்பு.*

भ्रातृजाया - *ஸஹோதரன் மனைவி. யக்ஷனுக்கு உதவும் கர்ணத்தால், அவனுக்கு ஸஹோதரன்*

முறையிலிருப்பதாலே அவன் மனைவியை ஸஹோ தரன் மனைவியாகக் கருதித் தாயைக் காண்பது போல் காணலாம் என்பது கருத்து.

अविहतगतिः - தடையற்ற போக்கு அல்லது ஸஞ் சாரம். யக்ஷன் மனைவியைப் பார்ப்பதில் தடையிராது என்பர் உரையாசிரியர்கள். நற்சகுனம் காரணமாக மேகத்தின் ஸஞ்சாரத்தில் தடையிராது என்றும் கொள்ளலாம்.

आशा-बन्धः - விரும்பியது திண்ணமாய் நிறை வேறும் என்ற நம்பிக்கையுடன் இருக்கும் அவா. பெண்களின் மனத்தை (कुसुमसदृशम्) புஷ்பத்திற்கு ஒப் பிட்டதால் ஆசையை அம்மலரைப் பிடித்திருக்கும் காம்பாகக் (बन्धः) கூறினர். சிறு காற்றிலும் கீழே விழும் புஷ்பங்கள் போல் பெண்களின் மனமும் கண வனின் ஒரு சிறிய பிரிவிலும் தளர்ந்துவிடக்கூடியது. எனவே அத்தகைய மனத்தையும் அழியாமல் காப்பது கணவன் திண்ணமாய் வருவான் என்ற நம்பிக்கை கலந்த அவர்களது அவா தான்.

कर्तुं यच्च प्रभवति महीमुच्छिलीन्ध्रामवन्ध्याम्
तच्छ्रुत्वा ते श्रवणसुभगं गर्जितं मानसोत्काः ।
आ कैलासाद् बिसकिसलयच्छेदपाथेयवन्तः
संपत्स्यन्ते नभसि भवतो राजहंसाः सहायाः ॥११

பதவுரை: — यत् - எந்த உனது கர்ஜனை, महीम् - பூமியை, उच्छिलीन्ध्राम् - காளான்களுடையதாகவும், अवन्ध्याम्-(அது காரணமாகவே) நல்ல பயிர்ச்செழிப்புடை

யுடையதாகவும், कर्तुम् - செய்ய, प्रभवति - சக்தியுடைய தாக இருக்கின்றதோ, तत् - அத்தகைய, श्रवण-सुभगम् - காதிற்கு இனியதான, ते - உனது, गर्जितम् - கர்ஜனையை (இடி ஓசையை) श्रुत्वा - கேட்டு, मानस-उत्काः - மானஸ ஸரஸிற்குச் செல்ல விருப்பமுடையவைகளும், बिस-किसलय-च्छेद-पाथेयवन्तः - தாமரைக் குருத்தின் துண்டுகளை வழியுணவாகக் கொண்டவைகளுமான, राजहंसाः - ராஜ ஹம்ஸங்கள், नभसि - ஆகாயத்தில், भवतः - உனக்கு, आ-कैलासात् - கைலாஸ மலைவரை, सहायाः - உடன் வருபவை யாக (வழித்துணைகளாக), सम्पत्स्यन्ते - இருக்கும்.

கருத்துரை: — மேகமே, வர்ஷருதுவின் தொடக்கத்தில் நீ செய்யும் கர்ஜனையால் பூமி எங்கும் காளான்கள் முளைக்கும். இது பின்வரப் போகும் செழுமையான விளைச்சலுக்கு அறிகுறி. பூமி நிச்சயம் பலன் தரும் என்பதைக் காட்டுவது. இத்தகைய உனது கர்ஜனை பயிரிடுபவர்களின் காதுக்கு இனிமையாக இருக்கும். இக்கர்ஜனையைக் கேட்ட ஹம்ஸங்கள், மழையால் தண்ணீர் கலங்கிவிடும் என நினைத்து கலங்காத நீருடைய மானஸ ஸரஸிற்குச் செல்ல ஆவல் கொண்டு வழியுணவாகத் தாமரைக் குருத்துக்களை எடுத்துக் கொண்டு, வடக்கு நோக்கிச் செல்ல இருக்கின்ற உனக்கு வழித்துணையாக கைலாஸ பர்வதம் வரை வரும். இந்த ஹம்ஸங்கள் உடன் வருவதால் பிரயாண ச்ரமம் உனக்குத் தெரியாது. ஸ்வபாவோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — उत्-முளைத்த, शिलीन्ध्र-காளான்; இதனை நாய்க்குடை என்றும் கூறுவர். வர்ஷருதுவின் தொடக்கத்தில் இடியோசை ஏற்பட்டவுடனேயே இவை பூமியில் முளைக்கும். இவை முளைப்பது பின் வரப்போகும் நல்ல விளைச்சலுக்கு அறிகுறியாகும். कालाभ्रयोगादुदिताः शिलीन्ध्राः सम्पन्नसस्यां कथयन्ति धात्रीम् என

நிமித்தநிதானம் என்ற நூல் கூறுவதாக மல்லிநாதர் மேற்கோள் தருகிறார். இதனால் பூமி अवन्ध्या-மலடாக-பயனளிக்காததாக - இராது. वन्ध्या - மலடு, अवन्ध्या - அவ்வாறு இல்லாதது; பயனளிப்பது.

मानस-उत्का: - மழை பெய்தால் நீர் கலங்கிவிடுமாதலால் கலங்காத நீருள்ள மானஸ ஸரஸிற்கு ஹம்ஸங்கள் சென்று பிறகு சரத்காலத்தில் திரும்பும் என்பர். ஹிமாலயத்திற்கும் கைலாஸத்திற்கும் இடையில் இந்த ஸரஸ் இருப்பதெனவும் ப்ரஹ்மாவின் மனத்திலிருந்து தோன்றியது எனவும் ஸரயூ இதனின்றும் உற்பத்தியானதெனவும் கூறுவர். கைலாஸத்திற்கு அடுத்துள்ளது அலகாபுரி. எனவே, கைலாஸம் வரை ஹம்ஸங்கள் வரும் என்று கூறினார்.

बिस-किसलय-च्छेद-पाथेयवन्त: - ஹம்ஸங்கள் வழியுணவாகத் தாமரை குருத்துக்களை எடுத்துச் செல்லும். राजहंसा: - கால்களும் மூக்கும் சிவந்து, உடல் வெண்ணிறத்துடன் இருக்கும் ஒரு வகை அன்னப்பறவைகள். सहाया: - உடன் யாத்திரை செய்பவர்கள் என்பது பதப்பொருள். பயணத்தில் துணையாக இருப்பவர் என்பது இங்கு பொருள்.

आपृच्छस्व प्रियसखममुं तुङ्गमालिङ्ग्य शैलम्
वन्द्यैः पुंसां रघुपतिपदैरङ्कितं मेखलासु ।
काले काले भवति भवतो यस्य संयोगमेत्य
स्नेहव्यक्तिश्चिरविरहजं मुञ्चतो बाष्पमुष्णम् ॥१२॥

பதவுரை: — काले काले - ஒவ்வொரு வர்ஷருதுவிலும், भवत: - உன்னுடைய, संयोगम् - சேர்க்கையை,

(சந்திப்பை), एत्य - அடைந்து, चिर-विरहजम्-வெகு நாள் பிரிவினுல் ஏற்பட்ட, उष्णम्-बाष्पम् - உஷ்ணமான கண்ணீரை (நீராவியை), मुञ्चतः - விடுகின்ற, यस्य-எந்த இம்மலையினுடைய, स्नेह-व्यक्तिः - அன்பின் வெளிப்பாடு, भवति - (நன்கு) உண்டாகின்றதோ, तम् - அத்தகைய, प्रियसखम् - (உனது) ப்ரிய நண்பனும், तुङ्गम् - உயர்ந்ததும், पुंसाम् - மனிதர்களால், वन्द्यैः - வணங்குதற்குரிய, रघुपति-पदैः - ராமருடைய அடிச்சுவடுகளால், मेखलासु - தாழ்வரைகளில், अङ्कितम् - அடையாளமிடப் பெற்றுள்ளதுமான, अमुं शैलम् - இந்த ராமகிரி மலையை, आलिङ्ग्य - தழுவி, आपृच्छस्व - விடை பெற்றுக்கொள்.

கருத்துரை:— மேகமே, ராமருடைய திருவடிச்சுவடுகள் பதிந்து எல்லோராலும் வணங்கத்தக்க நிலையைப் பெற்றுப் பாவனமானதும், உன் நண்பனும் உயர்ந்திருப்பதுமான இம்மலையைத் தழுவி பிரயாணத்திற்கான விடையை முதலில் பெற்றுக் கொள். வருஷத்தில் பத்து மாதம் உன்னைப் பிரிந்து, ஒவ்வொரு வர்ஷருதுவில் மாத்திரமே உன்னைச் சந்திக்கின்ற இம்மலை உன்னைச் சந்திக்கும் பொழுது அதன் அன்பிற்கு அடையாளமாக உஷ்ணமான கண்ணீரை நீராவி வடிவில் வெளியிடுவதன் மூலம் வெகுநாட்களுக்குப் பின் சந்தித்த உன்னிடம் தனக்குள்ள அன்பைப் புலப்படுத்துகின்றது. எனவே பிரயாணத்திற்கு முன் நீ செய்ய வேண்டிய முதற் காரியம் உன் நண்பனிடம் விடை பெறுதலேயாகும். அப்ரஸ்துத ப்ரசம்ஸா அலங்காரம்.

விளக்கவுரை:— रघुपतिपदैः - ராமர் மலையின் அழகைக் காணப் பல முறையும் அதன் தாழ்வரைகளில் நடந்திருப்பதால் அங்கெல்லாம் ராமரின் அடிச்சுவடுகள் பதிந்தன; இதனுல் மலையின் பெருமை கூறப்பட்டது; वन्द्यैः - வணங்கத்தக்கன அவ்வடிச்சுவடுகள்.

काले काले - வர்ஷ ருதுவில்தான் மேகம் தோன்றி மலைகளில் தங்கும். எனவே, பிற பத்து மாதங்களில் மலைக்கும் மேகத்திற்கும் சந்திப்பு இல்லை எனலாம். வர்ஷருதுவிற்கு முன் உள்ள கடுங்கோடையில் காய்ந்துள்ள மலை மீது மழை பொழியுமாயின் அந்நீர் - அப்போதே ஆவியாக மாறி மேலே எழுவதை மலையருகில் வசிப்பவர்கள் கண்டிருக்கலாம். இந்த ஆவியைக் கவி, மேகம் சந்தித்ததால் உண்டான மலையின் கண்ணீராகக் கூறி, அதை விடுவதன் மூலம் மலை, தான் மேகத்தினிடம் கொண்ட அன்பினை புலப்படுத்துவதாகக் கூறினார். बाष्प: நீராவி, கண்ணீர் என்ற இரண்டு பொருளும் உண்டு.

मार्गं तावच्छृणु कथयतस्त्वत्प्रयाणानुरूपं

सन्देशं मे तदनु जलद श्रोष्यसि श्रोत्रपेयम् ।

खिन्नः खिन्नः शिखरिषु पदं न्यस्य गन्तासि यत्र

क्षीणः क्षीणः परिलघु पयः स्रोतसां चोपभुज्य ।। १३

பதவுரை:— जलद - மேகமே, तावत् - முதலில் (இப்போது), यत्र - எந்த வழியில், खिन्नः खिन्नः - மிகவும் களைப்புற்றவனாக, शिखरिषु - மலைகளில், पदं न्यस्य - காலை வைத்து(ம்) - (இளைப்பாறியும்), क्षीणः क्षीण :- உடல் மெலிந்தவனாக, स्रोतसाम् - நதிகளின், परिलघु - தெளிந்து (லேசான), पयः - நீரை, उपभुज्य - குடித்து(ம்) (வலிமை பெற்றும்), गन्तासि - நீ செல்வாயோ, त्वत्प्रयाण-अनुरूपम् - உனது ப்ரயாணத்திற்கு அனுகூலமான, तम् - அந்த, मार्गम् - மார்க்கத்தைப் பற்றி, कथयतः - சொல்லப் போகின்ற, (मत्तः) - என்னிடமிருந்து, शृणु - (முதலில்)

கேட்டுக்கொள். तदनु - அதற்குப்பின், श्रोत्रपेयम् - காதினால் பருகத்தக்க (கேட்பதற்கு இனியதான), मे सन्देशम् - என் வாய்மொழிச் செய்தியை, श्रोष्यसि - கேட்கலாம்.

கருத்துரை:— மேகமே, நீ வழியில் செல்லுங்கால் களைப்புறுவாய். அப்பொழுதெல்லாம் மலைகளின் சிகரங்களில் தங்கி இளைப்பாறு. வழிகளில் ஜனங்களின் நன்மைக்காக மழை பொழிவதால் உன் உடல் இளைக்கும். அப்பொழுதெல்லாம் பெரிய ஆறுகளில் பாறைகளில் மோதி ஓடுவதால் சுத்தமாகவும் மென்மையாகவும் இருக்கும் நீரைப் பருகி நீ, உடல் வலிமை பெற வேண்டும். எனவே, இவ்விரண்டிற்கும் உதவி ஏற்படும் வகையில் உனக்கு அனுகூலமான மார்க்கத்தை முதலில் சொல்கிறேன். என் மனைவியிடம் கூறவேண்டிய இனிய செய்தியைப் பிறகு கூறுகின்றேன். கவனமாகக் கேட்பாயாக. ஸ்வபாவோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — परिलघु - நீர் கனத்து இருத்தல் உடலுக்கு நலன் தராது. அது கனமின்றி இருக்க வேண்டும். ஆற்றுநீர் வழியில் பாறைகளில் மோதிச் செல்வதால் கனமின்றி இருக்கும். உடலுக்கு நலனும் தரும். "उपलास्फालनक्षेपविच्छेदैः भेदितोदकाः । हिमवन्मलयोद्भूताः पथ्या नद्यो भवन्त्यमूः" என்பது வாக்படர் கருத்து.

अनुरूपम्-मार्गम् - சிரமபரிஹாரமும் உடல் வலிமையும் பெற வசதியுள்ள மார்க்கத்தைக் கூறுகின்றேன். श्रोत्रपेयम्- இனிய செய்தியை; 'காதினால் பருகத்தக்கது' என்று கூறுவது கவிமரபு; 'செவிக்கினிய' என்பது பொருள்.

अद्रेः शृङ्गं हरति पवनः किंस्विदित्युन्मुखीभि-
र्दृष्टोत्साहश्चकितचकितं मुग्धसिद्धाङ्गनाभिः ।

स्थानादस्मात् सरसनिचुलादुत्पतोदङ्मुखः खं
दिङ्नागानां पथि परिहरन् स्थूलहस्तावलेपान् ।। १४

பதவுரை: — पवन: - *காற்று*, अद्रेः - शृङ्गम् - *ராமகிரியின் சிகரத்தை*, हरति किंस्वित्-*எடுத்து வருகின்றதோ?*, इति - *என்ற சந்தேகத்தினுல்*, उन्मुखीभिः-*தலை நிமிர்த்திய*, मुग्ध-सिद्धाङ्गनाभिः - *பேதையரான ஸித்தர் என்ற தேவ வகையினரின் மகளிரால்*, चकित-चकितम् - *மிக்க அச்சத்துடன்*, दृष्ट-उत्साहः - (*உனது*) *பிரயாணத்திற்கான உத்ஸாஹம் காணப்பெற்றவனுக*, सरस-निचुलात् - *பசுமையான நொச்சில் செடி நிறைந்த*, अस्मात्-स्थानात् - *இந்த இடத்தினின்றும்*, पथि - *வழியில்*, दिङ्नागानाम् - *திக்கஜங்களின்*, स्थूल-हस्त-अवलेपान् - *பருத்த துதிக்கைகளின் கர்வச்செயல்களை*, परिहरन् - *தவிர்த்துக் கொண்டு*, उदङ्मुखः - *வடதிசை நோக்கியவனுக*, खम् - *ஆகாயத்தை நோக்கி*, उत्पत - *எழுவாயாக*,

கருத்துரை:— மேகமே, உன் உருவம் மலைச்சிகரம் போல் பெரியது. நீ பிரயாணத்திற்காக இம்மலைச்சிகரத்தினின்றும் எழும்போது ஸித்த வகையைச் சேர்ந்த பேதையரான மகளிர், 'காற்று, மலைச்சிகரத்தைப் பெயர்த்து எடுத்து வருகின்றதோ?' எனத் தலை நிமிர்த்தி அச்சத்துடனும் ஆச்சர்யத்துடனும் உன்னைக் காண்பர்; அத்தகைய பெருமையை நீ பெறுவாய். எனவே, பசுமையான நொச்சில் என்ற செடிகள் நிறைந்த இவ்விடத்தினின்றும் நீ வடக்கு நோக்கிப் புறப்படு; வழியில் திக்கஜங்கள், மேகத்தைக் கண்டால் அதைத் தமது வலுத்த துதிக்கைகளால் சிதறவடிக்கும் வழக்கமுள்ளன. ஆதலால் அவற்றின் இவ்விதச் செயல்களை, அவைகளை எதிர்ப்படாமல் விலக்கிக் கொண்டு செல்வாயாக. ஸந்தேகம், ஸ்வபாவோக்தி என்ற இரண்டு அணிகள் உண்டு.

விளக்கவுரை:— अस्मात् स्थानात् என்பதை उत्पत என்பதுடன் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும். मुग्ध-सिद्धाङ्गनाभिः- தேவஜாதியில் ஒரு வகையினரான ஸித்தர்கள் பூமிக்கும் ஸ்வர்க்கத்திற்குமிடையிலுள்ள இடத்தில் வசிப்பவர்கள் என்பர். मुग्ध - 'அழகான' என்ற பொருளும் உண்டு. அத்தகைய ஸித்த மகளிர் என்றும் பொருள் கொள்ளலாம்.

चकितचकितम्-அச்சம் அல்லது வியப்பு. மேகத்தின் மூதன் முயற்சியே ஸித்த மகளிரின் வியப்புணர்ச்சியைப் பெறும் என்பது கூறப்பட்டது. अस्मात्-स्थानात्. 'இம்மலையினின்றும்,' 'இவ்வாச்ரமத்தினின்றும்' என இரு வகையில் பொருள் கூறுவர் உரையாசிரியர்கள். निचुल - நொச்சில், வஞ்சி, நீர்கடம்பு என்ற பல பொருள் கூறப்படுகிறது.

दिङ्नागानाम् - எட்டுத் திசையிலும் காவலுக்காக வைக்கப்பட்டுள்ள யானைகள், மேகங்கள் எதிர்ப்படுங்கால் தமது துதிக்கைகளால் அவற்றை உடைத்து மழை பொழியச் செய்யும் என்பர். அப்படி நிகழின், மேகம் தூது செல்ல முடியாமல் போகலாம். எனவே, திக்கஜங்களின் துதிக்கைகளின் அடாத செயல்களில் சிக்காமல் செல்ல வேண்டும் என்று முற்காப்பாக யக்ஷன் மேகத்திற்கு அறிவுரை கூறுகின்றான்.

மல்லிநாதர் இச்சுலோகத்தில் வரலாறு ஒன்றினைக் காளிதாஸர் குறிப்பதாகக் கூறுகின்றார். காளிதாஸரின் நண்பரான நிசுளன் என்ற கவி காளிதாஸரின் நூல்கள் மேல் கூறப்படும் குறைகளை மறுப்பவன். திங்நாகர் என்பவர் குறை கூறுபவரில்

ஒருவர். அவர் தமது திமிர் பிடித்த கையினால் எழுதும் குற்றங்களைத் தவிர்த்துக் கொண்டு, தனது மேகஸந்தேசம் என்ற கவிதை செல்ல வேண்டும் என்று கவி கூறுவதாக மல்லிநாதர் உரைப்பர். ஆனால் இதற்கு ஆதாரம் இல்லை என்பது அறிஞர் கருத்து. திங்நாகர் கி.பி. ஆறும் நூற்றாண்டிலிருந்தவர். காளிதாஸரின் காலம் கி.மு. முதல் நூற்றாண்டாகும்.

रत्नच्छायाव्यतिकर इव प्रेक्ष्यमेतत्पुरस्ताद्
वल्मीकाग्रात् प्रभवति धनुःखण्डमाखण्डलस्य ।
येन श्यामं वपुरतितरां कान्तिमापत्स्यते ते
बर्हेणेव स्फुरितरुचिना गोपवेषस्य विष्णोः ॥१५॥

பதவுரை:— रत्नच्छाया-व्यतिकरः इव - (பலவகை) ரத்னங்களின் ஒளியினுடைய கலவை போல், प्रेक्ष्यम् - காணத் தகுந்த (அழகான), आखण्डलस्य - இந்திரனுடைய, धनुःखण्डम् - (வான) வில்லின் ஒரு பகுதி, पुरस्तात् - எதிரில், वल्मीक-अग्रात् - புற்றின் முனையிலிருந்து प्रभवति - தோன்றுகிறது. येन - அந்த வானவில்லின் பகுதியால், ते - உன்னுடைய, श्यामं वपुः - கருத்த மேனி, स्फुरितरुचिना - ஒளிர்கின்ற காந்தியுடைய, बर्हेण - மயில் இறகினால், गोपवेषस्य - இடைய வடிவில் இருந்த, विष्णोः - விஷ்ணுவின் (பாலகிருஷ்ணனின்), श्यामं वपुः इव - கருத்த திருமேனி (காந்தியை அடைவது) போல், अतितराम् - மிகவும், कान्तिम् - காந்தியை, आपत्स्यते அடையும்.

கருத்துரை:— மேகமே, உனக்கு எதிரில் பாம்புப்புற்றினின்றும் பல்வகை ரத்னங்களின் ஒளிக்கதிர்க் குவியல்போல்

பல நிறத்தில் வானவில்லின் பகுதி தோன்றுகிறது. இதன் நிறம் உன் கருத்த மேனியில் படும் போது, மயில் இறகுமாலை யணிவதால் பாலகிருஷ்ணனின் உடல் அழகு பெற்றது போல், உனது கருத்த உடலும் மிக அழகு பெறும். உவமையணி.

விளக்கவுரை: — இங்கு கவி மேகத்தை கிருஷ்ணனுடன் ஒப்பிடுகிறார். மயில் இறகு மாலை வான வில்லிற்கு உபமானம்.

बर्ह-என்பது பாதம் வரையில் தொங்கும்படி கிருஷ்ணனுக்கு அணிவிக்கப்பட்ட நீண்ட மயில் தோகை மாலை என்பர் பூர்ணஸரஸ்வதி. धनुः खण्डम् - வானவில்லின் ஒரு பகுதியே தோன்றியது.

वल्मीकाग्रात् - புற்றுக்குள்ளிருக்கும் பாம்புகளின் படங்களிலுள்ள ரத்னங்களின் ஒளியே புற்றுக்கு வெளியில் தோன்றி வானவில் போல் காணப்பட்டது என்பர் சிலர். வானவில்லை இந்திரனது வில்லாகக் கூறுவர். வானவில்லின் பல நிறத்திற்கு பலவகை ரத்னங்களின் ஒளிக்கலவையை உபமானமாகக் கூறினார். ஆகாயத்திலுள்ள சந்திரனை சுட்டிக்காட்ட शाखायां चन्द्रः 'மரக்கிளையருகில் சந்திரன்' என்பர். உண்மையில் கிளையருகில் சந்திரன் இல்லை. அதுபோல் वल्मीकाग्रात् प्रभवति என்பது வானவில்லை சுட்டிக்காட்ட வந்த அடையாளமாகும். புற்றிலிருந்து வானவில் வந்தது என்று பொருள் அல்ல. தொலைவிலுள்ள ஒரு புற்றினைச் சுட்டிக்காட்டி அதன் மூலம் வில்லினை யக்ஷன் காட்டுகிறான். அண்மையில் பல நிறமுள்ள வானவில்லையுடைய மேகம், மயில் தோகையணிந்த கிருஷ்ணன் போல் காணப்படும் என்றான்.

त्वय्यायत्तं कृषिफलमिति भ्रूविलासानभिज्ञैः
प्रीतिस्निग्धैर्जनपदवधूलोचनैः पीयमानः ।
सद्यः सीरोत्कषणसुरभि क्षेत्रमारुह्य मालम्
किञ्चित् पश्चाद् व्रज लघुगतिर्भूय एवोत्तरेण ।। १६

பதவுரை: — कृषिफलम् - பயிர்த்தொழிலின் பயன், त्वयि - உன்னிடத்தில், आयत्तम् - உள்ளது. इति - என்ற காரணத்தால், प्रीतिस्निग्धैः - ப்ரீதியினால் குளிர்ந்திருப்பனவும், भ्रूविलास-अनभिज्ञैः - புருவ நெறிப்பு என்ற (வசீகரமான) செயல்களை அறியாதனவுமான, जनपद-वधू-लोचनैः - நாட்டிலுள்ள கிராமத்துப் பெண்களின் கண்களால், पीयमानः-அன்புடன் பார்க்கப்பட்டவனாய், मालम्-क्षेत्रम् - மாலம் என்ற இடத்தை, सद्यः-सीरोत्कषण-सुरभि - அப்பொழுதே கலப்பையினால் உழுவதன் மூலம் மண் மணமுடையதாகச் செய்து கொண்டு, आरुह्य - ஏறி (அடைந்து), किञ्चित् - சிறிது, पश्चात्-மேற்கு திசையில், लघुगतिः - வேகமான கதியுடையவனாக, व्रज - செல்; भूयः - மறுபடியும், उत्तरेणैव - வடக்கு நோக்கிய வழியாலேயே, व्रज - செல்வாயாக.

கருத்துரை:—மேகமே, நீ ஆகாயத்தில் தோன்றியவுடன் நாட்டிலுள்ள பெண்கள், பயிரிடுவதன் முழுப்பயனும் உன்னருளில் உள்ளதென உணர்ந்து அன்புடனும் நன்றிப்பெருக்குடனும் கூடிய கண்களால் உன்னை நன்கு காண்பர். அவர்கள் நகரத்திலுள்ள பெண்கள் போல் புருவநெறிப்பு முதலான வசீகரணங்களைச் செய்ய அறியாதவர்கள். ஆயினும் அவர்களது பார்வையில் அன்பின் கனிவு இருக்கும். இவ்வாறு பார்க்கப்பட்டு நீ, பர்வதத் தொகுதிகளின் உயர்ந்த சமநிலமான மாலம் என்ற இடத்தை அடைந்து மழை பொழிவாய்.

நீ மழை பொழிந்தவுடன் உழவர்கள் நிலத்தை உழவும் மண்ணின் நறுமணம் உண்டாகும். பின் மாலம் என்ற இடத்திலின்றும் சிறிது வேகமாக மேற்கு நோக்கிச் சென்று மறுபடியும் வடக்குத்திசை நோக்கி நீ செல்ல வேண்டும். ஸ்வபாவோக்தி அலங்காரம்.

விளக்கவுரை:—मालम्-मालमुन्नतभूतलं என்று உத்பல மாலா என்ற நிகண்டு கூறும். மாலம் உடையது மாளவதேசம் என்பர் ஒரு உரைகாரர்.

सद्य...। உழுது காய்ந்த நிலத்தில் மழை பெய்தாலும் மண்வாசனை வரும். மழை பெய்தபின் புதிதாக உழப்படும் நிலத்திலும் மண்வாசனை வரும். நீ சென்றவுடன் அத்தகைய நிலங்களையுடையதாக மாலம் என்ற இடம் ஆகும்.

आरुह्य - ஏறி. மண்வாசனையுண்டாகும்படி மாலத்தின் மீது நீ ஏறி, என்று பொருள். सीर - கலப்பை, उत्कषण - உழுதல். சிறிது மேற்குத் திசையில் சென்று வடக்கில் சென்றால் மேகம் தங்குவதற்கான ஆம்ர கூடம் என்ற மலை தென்படும் என்பது அடுத்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது.

त्वामासारप्रशमितवनोपप्लवं साधु मूर्ध्ना
वक्ष्यत्यध्वश्रमपरिगतं सानुमानाम्रकूटः ।
न क्षुद्रोऽपि प्रथमसुकृतापेक्षया संश्रयाय
प्राप्ते मित्रे भवति विमुखः किं पुनर्यस्तथोच्चैः ।।१७

பதவுரை: — आम्रकूटः-ஆம்ரகூடம் என்ற, सानुमान्-மலை, आसार-प्रशमित-वन-उपप्लवम् - வேகமான மழைக்

தாரைகளால் தணிக்கப்பட்ட காடுகளின் தீங்கை யுடையவனும், (மலையிலுள்ள காடுகளின் தீங்குகளை மழையால் தணித்தவனும்), अध्व-श्रम-परिगतम् - வழி நடையின் களைப்பினுல் வந்தவனுமான, त्वाम्-உன்னை, साधु - நன்ருக, मूर्ध्ना - (தன்) தலையினுல் (சிகரத்தால்), वक्ष्यति-தாங்கும்; क्षुद्रः अपि- ஒரு கிருபணனும் கூட, संश्रयाय- இய்வெடுக்குமிடத்திற்காக, मित्रे - நண்பன், प्राप्ते सति - (தன்னிடத்திற்கு) வந்திருக்கும் போது, प्रथम-सुकृत-अपेक्षया - (அவன்) முன்பு செய்த உதவியைக் கருது வதன் மூலம், विमुखः - பராமுகனுக (ஆதரவு காட்டா தவனுக), न भवति - இருப்பதில்லை; यः - எந்த ஆம்ர கூடமலை, तथा - அவ்வாறு, उच्चैः - உன்னதமாக இருக் கின்றதோ, सः - அது, विमुखः न भवति - ஆதரவு செய்யா ததாக இராது, (इति) - என்று, पुनः किम् - மறு முறை சொல்ல வேண்டுமா?

கருத்துரை:— மேகமே, நீ அடுத்துத் தங்குமிடம் ஆம்ர கூடம் என்ற மலை: நீ அம்மலைக்கு உண்டான காட்டுத் தீ, செடிகள் உலர்தல், நீர் நிலைகளில் வறட்சி ஏற்படுதல் முதலான இன்னல்களை மழை பொழிந்து நீக்கி முன்பெல்லாம் உதவியுள்ளாய். எனவே வழிநடையால் களைப்பாற அம்மலை அருகில் நீ செல்வாயாளுல் அது உன்னைத் தன் தலையினுல் தாங்கும். ஒரு அல்பன் கூட, தனக்கு உதவி செய்தவன் களைப்பாறத் தன் வீட்டிற்கு வருவானுயின் அவனை உபசரிப் பான். பல வகையிலும் உயர்ந்துள்ள மலை உனக்கு அதிதி உபசாரத்தைத் திண்ணமாகச் செய்யும் என்பதனைக் கூறவும் வேண்டுமா? அர்த்தாந்தரந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை:— आम्रकूटः - 'மாமரங்களைச் சிகரங் களில் உடையது' என்பது பதப்பொருள். மலையின் பெயர் ஆம்ரகூடம் என்பது, आसारः - வேகமாகப்

பெய்யும் மழை. இதனால் அம்மலையிலுள்ள காடுகளில் ஏற்படும் தீ, வறட்சி முதலிய பலவகை இன்னல்களையும் நீக்கி உதவி புரிந்துள்ளது மேகம் என்று தெரிவிக்கப்பட்டது.

சுலோகத்தின் இரண்டாவது பகுதி, ஒரு அல்பன் கூட நன்றியுணர்ச்சியுடன் இருப்பான் எனின் மிக உயர்ந்த மலை (குணத்திலும் சிறந்த ஒருவன் என்னும் பொருள் உண்டு) மேகத்திற்கு உதவும் என்பது கூற வேண்டுவதன்று.

छन्नोपान्तः परिणतफलद्योतिभिः काननाम्रै-
स्त्वय्यारूढे शिखरमचलः स्निग्धवेणीसवर्णे ।
नूनं यास्यत्यमरमिथुनप्रेक्षणीयामवस्थाम्
मध्ये श्यामः स्तन इव भुवः शेषविस्तारपाण्डुः ॥ १८

பதவுரை: — (मेघ) - மேகமே, **परिणत-फल-द्योतिभिः** - பழுத்த பழங்களின் மூலம் ஒளியுடன் இருக்கின்ற, **कानन-आम्रैः** - காட்டிலுள்ள மரங்களால், **छन्न-उपान्तः** - மறைக்கப்பட்ட சுற்றுப்புறமுடைய (சுற்றுப்புறமெங்கும் சூழப்பட்ட), **अचलः** - அம்மலை, **स्निग्ध-वेणी-सवर्णे** - பளபளக்கின்ற (பெண்கள்) கூந்தலின் நிறத்திற்கு நிகரான (கரு) நிறமுடைய, **त्वयि** - நீ, **शिखरम्** - (மலையின்) சிகரத்தில், **आरूढे** - ஏறி அமர்ந்திருக்கும் போது, - **मध्ये** - நடுவில், **श्यामः** - கறுத்திருப்பதும், **शेष-विस्तार-पाण्डुः** - எஞ்சிய பிற விசாலமான பகுதிகளில் வெளுத்திருப்பதுமான, **भुवः** - பூமியின், **स्तन इव** - ஸ்தனம் போல் (இருப்பதாக), - **अमरमिथुन-प्रेक्षणीयाम्** -

(ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும்) தேவ தம்பதிகளினுல் பார்க்கத் தகுந்த, अवस्थाम् - (அழகிய) நிலையை;, नूनम् - நிச்சயமாக, यास्यति - அடையும்.

கருத்துரை:— இம்மலையில் நன்கு பழுத்த பழங்களை யுடைய மாமரங்கள் சுற்றிலும் உள்ளன. ஸ்த்ரீகளின் பளபளக்கின்ற அழகிய கொண்டைகள் போல் கருநிறமுடைய நீ மலையின் சிகரத்தில் இருப்பாய். அப்போது நடுவில் கறுத்தும் சுற்றிலும் மாம்பழங்களால் வெண்ணிறமாகவும் காணப்படும் இம்மலை, இப்பூமி என்ற ஸ்த்ரீயின் ஸ்தனம் போல் தோன்றும்; இவ்வழகினை ஆகாயத்தில் இருப்பவர்களே காண இயலும். எனவே விமானத்தில் ஸஞ்சரிக்கும் தேவதம்பதிகள் இதனைக் கண்டு களிப்பர். உவமையணி; உத்ப்ரேக்ஷையும் உண்டு.

விளக்கவுரை: — अचलः भुवः स्तन इव प्रेक्षणीयां अवस्थां यास्यति என்பது வாக்யம். மலை, பூமியின் ஸ்தனம் போல் அழகு பெற்றுக் காணத்தக்க நிலையில் இருக்கும். स्निग्ध - 'எண்ணெய் தடவப் பெற்ற' என்பது பதப்பொருள். वेणी - கூந்தலின் முடிச்சு அல்லது பின்னல்; எண்ணெய் தடவி அலங்கரிக்கப்பட்ட பின்னல்; वेणी तु केशबन्धे என்பது வைஜயந்தி. இதற்கொப்பான நிறமுடையது மேகம். काननाम्रैः-காட்டுமா எனத் தனிவகையான மாமரம் இருப்பதாகவும் கூறுவர். மிக உயரமான இடங்களில் இருப்பதால் இதன் பழங்கள் மக்களால் அடைய முடியாமல் இருப்பனவாகும்.

अमर. . . . प्रेक्षणीयाम्-இவ்வழகை ஆகாயத்திலிருந்து தான் காண முடியுமாதலால் 'தேவ தம்பதிகளால் காணத்தகுந்த' என்ருர். தேவர்கள் தம் மனைவியருடனேயே ஸஞ்சரிக்கும் இயல்புடையவர்கள். ஆதலின்

अमरमिथुन-என்றார். ஸ்தனமும் மத்தியில் கருநிறமுடையதாகவும் பிறபகுதிகளில் வெளுத்தும் இருக்கும்.

अध्वक्लान्तं प्रतिमुखगतं सानुमानाम्रकूटः
तुङ्गेन त्वां जलद शिरसा वक्ष्यति श्लाघमानः ।
आसारेण त्वमपि शमयेस्तस्य नैदाघमग्निम्
सद्भावार्द्रः फलति नचिरेणोपकारो महत्सु ॥

பதவுரை: — जलद - மேகமே, सानुमान् - தாழ்வரைகளையுடைய, आम्रकूटः - ஆம்ரகூடம் என்ற மலை, अध्वक्लान्तम्-வழிப்பயணத்தால் களைப்படைந்துள்ளவனும், प्रतिमुखगतम् - தன்னை நோக்கி வந்திருப்பவனுமான, त्वां - உன்னை, श्लाघमानः - புகழ்வதாக, तुङ्गेन - உயர்ந்த, शिरसा - (தனது) தலையால் (சிகரத்தால்), वक्ष्यति - தாங்கும். त्वमपि - நீயும், तस्य - அம்மலையினுடைய, नैदाघम् - கோடையிலுண்டான, अग्निम् - தீயை, आसारेण- மழையினால், शमयेः - அணைப்பாயாக; महत्सु -பெரியோர் விஷயத்தில் (செய்யப்பட்ட), सद्भावार्द्रः - நல்ல எண்ணத்துடன் கூடிய, उपकारः - உதவி, नचिरेण - சீக்ரமே (உடனேயே), फलति - பயன் அளிக்கின்றது.

கருத்துரை:—மேகமே, வழிப்பயணத்தால் களைப்புற்றுத் தன்னிடம் வந்திருக்கின்ற உன்னை ஆம்ரகூடம் மகிழ்ச்சியுடன் தன் தலையால் தாங்கும். நீயும், கோடையினால் அம்மலையில் தோன்றிய தீயை - மழையைத் தாரைதாரையாகப் பெய்து அணைப்பாயாக. அன்புடன் பெரியோர்களுக்குச் செய்யும் உபகாரம் உடனேயே பயன் அளிக்கும். நல்லோனாகிய உனக்கு மலை செய்யும் உதவிக்கு நீ உடனேயே உதவி செய்வாய் என்பதில் ஐயமில்லை.

விளக்கவுரை: — பதினேழாம் சுலோகக் கருத்தினின்றும் மாறுபடாக் கருத்துடைய இச்சுலோகத்தை இடைச்செருகல் எனக் கருதி மல்லிநாதர் முதலிய உரையாசிரியர்கள் இதற்கு உரை எழுதவில்லை.

स्थित्वा तस्मिन् वनचरवधूभुक्तकुञ्जे मुहूर्तम्
तोयोत्सर्गद्रुततरगतिस्तत्परं वर्त्म तीर्णः ।
रेवां द्रक्ष्यस्युपलविषमे विन्ध्यपादे विशीर्णाम्
भक्तिच्छेदैरिव विरचितां भूतिमङ्गे गजस्य ।।१९।।

பதவுரை: — वनचर-वधू-भुक्त-कुञ्जे வேடுவர் மகளிரால் அனுபவிக்கப்பெற்ற கொடி வீடுகளையுடைய, तस्मिन् - ஆம்ரகூடமலையில், मुहूर्तम् - சிறிது நேரம், स्थित्वा - இருந்து (தங்கி), तोय-उत्सर्ग-द्रुततर-गतिः - நீரைப் பொழிந்தால் (பளு நீங்கப்பெற்று) வேகமான நடையுடையவனாகவும், तत्परम् - அம்மலைக்கு அடுத்துள்ள, वर्त्म - வழியை, तीर्णः(सन्) கடந்தவனாகவும் இருந்து கொண்டு, उपल-विषमे - பாறைகளால் மேடு பள்ளங்களுடைய, विन्ध्य-पादे - விந்த்யமலை அருகிலுள்ள சிறு மலைகளில், (குன்றுகளிடையில்), विशीर्णाम् - சிதறிய, रेवाम् - நர்மதா நதியை-गजस्य अङ्गे-யானையின் உடலில், भक्तिच्छेदैः - பலவித அலங்கார வரிகளால், विरचिताम् - செய்யப்பட்ட, भूतिम् इव - அணியினை (க் காண்பது) போல் - द्रक्ष्यसि - காண்பாய்.

கருத்துரை:-மேகமே, ஆம்ரகூடமலையிலுள்ள கொடி வீடுகளில் வேடுவரின் மகளிர் தம் காதலர்களுடன் இன்பம் நுகர்வர். அம்மலையில் சிறிது நேரம் தங்கி இளைப்பாறியபின்

அதற்கு அப்பால் உள்ள வழியைக் கடந்து விந்த்யமலைக்குச் சுற்றிலுமுள்ள குன்றுகளின் மேடு பள்ளமான பாறைகளில் மோதி பல அருவிகளாகப் பிரிந்து செல்லும் நர்மதா நதியைக் காண்பாய். மேலிருந்து நீ காணும் போது கறுத்த பாறைகளின் இடையே செல்லும் அந்நதி, ஒரு யானையின் கறுத்த உடம்பில் விபூதியைக் கொண்டு எழுதப்பட்ட அலங்காரவரிகளால் செய்யப்பட்ட அணி போல், தோற்றமளிக்கும். உவமையணி. த்ருஷ்டாந்தம் என்பர் பூர்ணஸரஸ்வதி.

விளக்கவுரை: — वनचरवधू - என்பதால் ஆம்ரகூடம் காதல் மிகுந்த வேடுவப் பெண்களின் இன்ப நுகர்ச்சிக்கேற்ற கொடிகளாலான சிறுகுடில் போன்ற இடங்களையுடையது என்று கூறப்பட்டது.

विन्ध्यपाद-पाद என்பது ஒரு பெரிய மலையின் அருகிலுள்ள சிறு குன்றுகளைக் குறிக்கும். அடிவாரம் என்றும் பொருள் கொள்ளலாம். भूतिम् - ச்ருங்காரம்- அணி-அழகு செய்தல், ஒப்பனை என்ற பொருளுடையது. இதைத் தமிழில் சிங்காரித்தல் என்பர்.

வெண்ணிற நீர்ப்பிரவாஹம் கறுத்த பாறைகளிடையே பல கிளைகளாகப் பிரிந்து ஓடுவதை மேகம் மேலிருந்து காணலாம். அப்போது அப்பிரவாஹங்கள் கருத்த யானையின் உடலில் அணி செய்தற்காக வண்ணப்பொருள் கொண்டு எழுதப்பட்ட வரிகள் போல் காணப்படும். இவ்வரிகள் நீரில் குழைத்த வெண்ணிறப் பொருளால் அல்லது விபூதியால் எழுதப்படும். भक्तिच्छेदः - அழகிற்கான வரிகள். இது ஒரு கண்கவரும் காட்சியாக இருக்கும் என யக்ஷன் கூறுகின்றான். "காமம் மிகுந்த பெண் ஒருத்தி தன்

"காதலன் காலடியில் இருப்பதை" இச்சுலோகக் கருத்து காட்டுகின்றது என்பர் மல்லிநாதர்.

तस्यास्तिक्तैर्वनगजमदैर्वासितं वान्तवृष्टि-
र्जम्बूकुञ्जप्रतिहतरयं तोयमादाय गच्छेः ।
अन्तःसारं घन तुलयितुं नानिलः शक्ष्यति त्वां
रिक्तःसर्वो भवति हि लघुःपूर्णता गौरवाय ॥२०॥

பதவுரை: — घन - மேகமே, वान्त-वृष्टिः-பொழியப் பட்ட மழையுடைய நீ (மழையைப் பொழிந்த நீ), तिक्तैः - மணம் கொண்ட, वन-गज-मदैः - காட்டு யானை களின் மதஜலத்தால், वासितम् - நறுமணம் பெற்றதும், जम्बूकुञ्ज-प्रतिहत-रयम् - நாவல் புதர்களால் தடையுற்ற வேகமுடையதுமான, तस्याः तोयम् - அந்நதியின் நீரை, आदाय-எடுத்துக் கொண்டு (பருகி), गच्छेः-(மேல்) செல் வாயாக. अन्तःसारम् - நீரிருப்பதால் உள்ளே பலம் (கனம்) உடைய, त्वाम् - உன்னை, अनिलः - காற்று, तुलयितुम् (தன் விருப்பப்படி) அசைப்பதற்கு, न-शक्ष्यति - திறனுடையதாக இராது; रिक्तः - ஸாரமில்லாத (பல மில்லாத), सर्वः - யாவரும், लघुः - கனமற்றவராக, भवति - இருப்பர். पूर्णता - நிறைவு, गौरवाय - கௌரவத் திற்கு (பலமுடைமைக்கு), (भवति) - காரணம் ஆகின்றது.

கருத்துரை:—மேகமே, யானைகள் நிறைந்த இடம் விந்திய மலை. நதியின் நீரில் குளிப்பதால் அந்த யானைகளின் மண முள்ள மதஜலத்தினால் நறுமணம் கொண்டிருக்கும் நர்மதை யின் நீர். நாவல் புதர் வழியே மோதிச் செல்லும். அந்நீர் இலேசாகவும் இருக்கும். முன்பு ஆம்ர கூடத்தில் மழை

பெய்ததால் உடல் இளைத்த நீ நர்மதையின் நீரைப் பருகி உள்ளே நீர் நிறைந்து கனமுடையவனாகு. இந்நிலையில் காற்று உன்னைத் தான் நினைத்த இடத்திற்குக் கொண்டு செல்ல இயலாது. கனமுடையவனை (செல்வமுடையவனை) யாவரும் மதிப்பர். இளைத்தவன் யாவராலும் இலேசாகக் கருதப்படுவான் (அவமதிக்கப்படுவான்). இது உலக இயல்பு. சுலோகத்தில் முன் பாதியில் ஸ்வபாவோக்தி. பிற்பகுதியில் அர்த்தாந்தரந்யாஸ அணி.

விளக்கவுரை:—சுலோகத்தில், वान्त, तिक्त முதலிய சொற்களால் வைத்ய சாஸ்திரத்தில் கூறப்பட்ட பொருள் ஒன்று தோன்றுவதாக மல்லிநாதர் கூறுவர். 'கபம் நிறைந்த மனிதனுக்கு முதலில் வமனம் (வாந்தியை) உண்டாக்கிக் கபத்தை நீக்கியபின் சிறிது கசப்புடைய கஷாயத்தைச் சாப்பிடச் செய்தால் ச்லேஷ்மம் குறைந்து வாதநோயின் உபத்ரவமும் இராது' என்பதே அக்கருத்தாகும்.

तिक्त - கசப்பு. நறுமணம் என்ற பொருளும் உண்டு. रिक्तः - கனமற்றவன்; வறியன். நாவல் செடிகளின் புதர்கள் நர்மதையின் கரை ஓரங்களில் மண்டிக் கிடப்பதை, கவி கூறுவதினின்றும் அறியலாம்.

नीपं दृष्ट्वा हरितकपिशं केसरैरर्धरूढै-
राविर्भूत-प्रथममुकुलाः कन्दलीश्चानुकच्छम् ।
जग्ध्वारण्येष्वधिकसुरभिं गन्धमाघ्राय चोर्व्याः
सारङ्गास्ते जललवमुचः सूचयिष्यन्ति मार्गम् ॥२१

பதவுரை: — अर्धरूढैः - பாதியே தோன்றிய, केसरैः - கேஸரங்களால், हरित-कपिशम् - பச்சையும் கரும் சிவப்பு

முடைய, नीपम् - தரைக் கடம்ப மலரை, दृष्ट्वा - பார்த்தும், अनुकच्छम् - சதுப்பு நிலங்களின் அருகில், आविर्भूत - प्रथममुकुलाः - முதன் முதலாகத் தோன்றிய மொட்டுக் களையுடைய, कन्दलीः - செங்காந்தள் (இலை)களை, जग्ध्वा- உண்டும், अरण्येषु - காட்டுப் பிரதேசங்களில், अधिक-सुरभिम् - அதிகம் வாசனையுடைய, उर्व्याः - மண்ணின், गन्धम् - நறுமணத்தை, आघ्राय - நுகர்ந்தும், (स्थिताः) - இருக்கின்ற, सारङ्गाः - மான்கள், जललवमुचः - ஜலத்துளி களை வர்ஷிக்கின்ற, ते - உன்னுடைய, मार्गम् - (நீ சென்ற) வழியை, सूचयिष्यन्ति-(மனைவியைப் பிரிந்துள்ள வழிப்போக்கர்களுக்கு) காட்டப் போகின்றன.

கருத்துரை: — மேகமே, நீ நீரை வர்ஷிக்கும் ஸ்வபாவ முடையவன். எனவே நீ போகும் வழியில் மக்களுக்கு இதமான வகையில் நீர்த் திவலைகளை தெளித்துக் கொண்டும், மழையைப் பொழிந்து கொண்டும் செல்வாய். புதிய மழைத் துளி விழுந்தவுடன் தரைக் கடம்பம் பூக்கும். மலர்களின் கேஸரங்கள் என்ற பகுதி பாதியே வெளிவந்திருக்கும். சதுப்பு நிலங்களின் அருகில் செங்காந்தள் செடிகள் முதன் முதலாகச் சிவந்த பூக்களுடன் காணப்படும். கோடையில் காய்ந்த தரையில் புதிய மழைத்துளி விழுந்தவுடன் மண்ணினின்றும் நறுமணம் அதிகம் தோன்றும். இவை எல்லாம் மழையின் தொடக்கத்தின் அறிகுறிகளாகும். கடம்பமலரைக் கண்டும், காந்தள் இலைகளைச் சுவைத்தும், தரையின் நறுமணத்தை நுகர்ந்தும் இருக்கின்ற மான்கள், வழிப்போக்கர்களுக்கு நீ வந்து சென்றதனைக் காட்டும். மழையின் பயனாகிய இவற்றைக் கண்டு மனைவியரைப் பிரிந்த காதலர்கள் மழைக் காலம் வந்துவிட்டதென உணர்வர். வீடு திரும்பவும் முற்படுவர். காவ்யலிங்கம் அலங்காரம்.

விளக்கவுரை: — இச்சுலோகத்திற்கு உரைகாரர்கள் பலவாறு பொருளுரைப்பர். ஸாரங்க என்ற

சொல்லுக்கு வண்டு, மான், யானை என்ற மூன்று பொருளுண்டு. அம்மூன்றினையும் கொண்டு வண்டுகள் கடம்ப மலரைக்கண்டும் (மொய்த்தும்), மான்கள் செங்காந்தள் இலைகளைச் சுவைத்தும், யானைகள் மண் மணத்தை விரும்பி நுகர்ந்தும்; வழிப்போக்கர்களுக்கு மேகம் வந்து சென்றதைக் காட்டும் என்பர்.

नीपम् - கடம்பு; நீர்க்கடம்பு, நிலக்கடம்பு என இது இரு வகைப்படும். இங்கு கூறப்பட்டது நிலக்கடம்பு. இது ஒருசாண் உயரமே வளர்வது என்பர் தக்ஷிணாவர்த்தர். केसर - மகரந்தப் பொடிகளைத் தாங்கிய, நுண்ணிய கம்பி போன்ற மலர்களின் உறுப்பு. दृष्ट्वा. என்பதற்குப் பதிலாக दष्ट्वा என்று பாடம் கொண்டு 'மான்கள் கடம்ப மலரைக் கடித்தும்' என்று கூறுவர் பூர்ண ஸரஸ்வதி. कन्दली என்பதைத் தமிழில் செங்காந்தள் என்பர். இது வாழை (कदली) இல்லை.

अधिकसुरभिः - மண்ணிற்கு ஏற்கனவே மணமுண்டு. மழைத்துளி வீழ்தலால் அந்த மணம் அதிகமாகத் தெரியும். आघ्राय - என்பதற்குப் பிறகு, स्थिताः என்ற பதத்தைக் கூட்டிப் பொருள் கொள்வது சில இடர்ப்பாடுகளைத் தவிர்க்கும்.

जललवमुचः - நீர்த்துளியை விடுகின்ற என மேகத்தின் இயற்கை கூறப்பட்டது. नवजलमुचः என்றும் பாடம் உள்ளது. கடம்ப மலரைப் பார்த்தும், செங்காந்தள் இலையை உண்டும், மண் வாசனையை மோந்தும் களிப்புற்றன மான்கள் என மேகத்தின் வரவினால் ஏற்படும் பயன் கூறப்பட்டது.

अम्भोबिन्दुग्रहणचतुरांश्चातकान् वीक्षमाणाः
श्रेणीभूताः परिगणनया निर्दिशन्तो बलाकाः ।
त्वामासाद्य स्तनितसमये मानयिष्यन्ति सिद्धाः
सोत्कम्पानि प्रियसहचरीसंभ्रमालिङ्गितानि ॥

பதவுரை: — अम्भः-बिन्दु-ग्रहण-चतुरान्- (மேகத்தினின்றும் வரும்) நீர்த்துளிகளை (தம் அலகுகளில்) ஏற்றுக் கொள்வதில் திறமைமிக்க, चातकान् - சாதகப் பறவைகளை, वीक्षमाणाः - பார்த்துக் கொண்டிருப்பவர்களும், श्रेणी-भूताः - (உன்னருகில்) வரிசையாக இருக்கின்ற, बलाकाः - கொக்குகளை, परिगणनया - எண்ணுவதன் மூலம், निर्दिशन्तः - (தம் மனைவியருக்கு) சுட்டிக் காட்டுபவர்களுமான, सिद्धाः - ஸித்தர்கள், स्तनित-समये - (நீ) கர்ஜிக்கும் ஸமயத்தில், सोत्कम्पानि - (அச்சத்தினுல்) நடுக்கத்துடன் கூடிய, प्रिय-सहचरी-सम्भ्रम-आलिङ्गितानि - அன்புத் துணைவியரின் பரபரப்புடன் கூடிய தழுவுதல்களை, आसाद्य - பெற்று (அதற்காக), त्वाम्-உன்னை, मानयिष्यन्ति- கௌரவிப்பர்.

கருத்துரை: — ஆகாச வீதியில் ஸித்தர்கள் என்ற தேவ வகையினர் தம் அருமைக் காதலிகளுடன் ஸஞ்சரிப்பர். நீ வானத்திலிருந்து தரும் ஜலத்துளிகளை அவை பூமியின் விழுவதற்கு முன்னமே சாதகப்பறவைகள் தம் அலகுகளைத் திறந்து மிகத்திறமையாக ஏற்றுக் கொள்ளும். இதனை வியப்புடன் ஸித்தர்கள் காண்பர். உன்னருகில் ஒன்றன் பின் ஒன்ருகப் பறக்கும் கொக்குகளை ஒன்று இரண்டு மூன்று என்று எண்ணி விரல்களால் அவற்றைச் சுட்டித் தம் காதலிகளுக்குக் காட்டுவர் ஸித்தர்கள். அச்சமயம் நீ இடி இடித்தால் அதனைக் கேட்டு அச்சமுற்ற காதலிகள் உடல் நடுங்க மிக பரபர

புடன் தாமே வலுவிற் சென்று தம் காதலர்களை (ஸித்தர்களை) ஆலிங்கனம் செய்வர். கெஞ்சிக் கேட்கப்படாமல் வலுவிலே இவ்வாறு காதலிகளால் அணைக்கப்படும் இன்பத்தை நுகரும் ஸித்தர்கள் அதற்குக் காரணமான உன்னை மிகவும் நன்றிப் பெருக்குடன் போற்றுவர். ஸ்வபாவோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — *சாதகப் பறவை தரையில் விழும் தண்ணீரைக் குடிக்காமல் மழை பெய்யும் போது ஆகாயத்தில் பறந்து ஒன்றிரண்டு துளியேயா யினும் தம் அலகைத் திறந்து அதில் அவை விழும்படித் திறமையாக நடந்து கொள்ளும். இதனை வியப்புடன் நோக்குவர் ஸித்தர்கள்.* सर्वसह्रापतितमम्बु न चातकस्य *என் பது, தரையில் விழுந்த தண்ணீரை சாதகம் குடிக்காது எனக்கூறுகின்றது.* सर्वसह्रा - *பூமி. மேகம் தோன்றின் அவற்றின் அருகில் கொக்குகள் பறந்து செல்வதை தம் காதலிகளுக்கு எண்ணிக் காட்டுகின்றனர் ஸித்தர்கள். ஆண்கள் விரும்பிக் கேட்டுப் பெறும் ஆலிங்கனத்தைக் காட்டிலும் காதலிகள் தாமே வலிய வந்து செய்யும் ஆலிங்கனம் சுவை மிக்கதாம். பிரிந்த காதலர்களுக்குத்தான் மேகம் உதவுமென்பதில்லை. காதலர்கள் சேர்ந்திருக்கும் நிலையிலும் மேகத்தின் உதவி உண்டு என்று கூறி மேகத்தின் பெருமையைப் பேசினான் யக்ஷன்.*

இச்சுலோகத்தை இடைச்செருகல் எனக்கூறிய மல்லிநாதர் இதற்கு உரை செய்துள்ளார். முன்பின் வரும் சுலோகக் கருத்துடன் இச்சுலோகக் கருத்திற்கு இயைபு இல்லாததால் இது இடைச்செருகல் எனக் கருதப்பட்டது.

उत्पश्यामि द्रुतमपि सखे मत्प्रियार्थं यियासोः
कालक्षेपं ककुभसुरभौ पर्वते पर्वते ते ।
शुक्लापाङ्गैः सजलनयनैः स्वागतीकृत्य केकाः
प्रत्युद्यातः कथमपि भवान् गन्तुमाशु व्यवस्येत् ॥ २२

பதவுரை: — सखे - நண்பனே, मत्प्रियार्थम् - என் அன்பு மனைவியின் நலனுக்காக, द्रुतम् - வேகமாக, यियासोः अपि - செல்ல விரும்புபவனுயினும், ते - உனக்கு, ककुभ-सुरभौ-காட்டு மல்லிகை மலரால் வாசனையுடைய, पर्वते - पर्वते - மலை தோறும், काल-क्षेपम्-காலதாமதத்தை (காலதாமதம் நிகழ்வதை), उत्पश्यामि - எதிர்பார்க்கிறேன். सजलनयनैः - (உன்னைக் கண்ட மகிழ்ச்சியால்) கண்களில் நீருடைய, शुक्लापाङ्गैः - மயில்களால், केकाः - (தங்களது) அகவுதல்களை (ஒலிகளை), स्वागतीकृत्य - நல்வரவு கூறுதற்கானச் சொல்லாகக் கொண்டு, प्रति-उद्यातः- எதிர்கொள்ளப்பட்ட (வரவேற்கப்பட்ட), भवान् – நீ, कथमपि-எவ்வாறேனும், आशु-துரிதமாக, गन्तुम्-(மேலே) செல்ல, व्यवस्येत् - உறுதி கொள்வாயாக.

கருத்துரை: — நண்பனே, என் மனைவியின் உயிரைக் காக்கக் கருதி நீ வேகமாகச் செல்லவே விரும்பியுள்ளாய். ஆயினும் மல்லிகை மணம் நிறைந்த ஒவ்வொரு மலையிலும் நீ உன் நண்பர்களைச் சந்திப்பதால் அவர்களுடன் சிறிது நேரம் தங்குவதால் காலதாமதம் நேரும் என்பதை என் மனம் எதிர் பார்க்கின்றது. உதாஹரணமாக உன் வரவினால் மகிழ்ச்சியுற்றுக் கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்ப, தங்களின் இனிய ஒலிகளையே உனக்கு நல்வரவு கூறும் சொற்களாகச் செய்து உன்னை உபசரிக்க முயலும் மயில்களும் உனது நண்பர்கள்தாம். எனவே, அவற்றின் உபசாரத்தைப் பெற்றுப்

பின் அவைகளின் அன்புப் பிணிப்பினின்றும் எப்படியேனும் விடுதலை பெற்று சீக்கிரமே (மேலே) செல்ல நீ உறுதியான எண்ணம் கொள்ள வேண்டும். தாமதித்தல் கூடாது. வர்ஷா காலம் வருவதன் முன்னமே மேகம் யக்ஷன் மனைவியைக் காண வேண்டும் என்பது கருத்து. அப்ரஸ்துத ப்ரசம்ஸா அணி என்பர் பூர்ணஸரஸ்வதி.

விளக்கவுரை: — மயில்களின் கூவுதலை அகவுதல் எனத் தமிழிலும், கேகா என ஸம்ஸ்கிருதத்திலும் கூறுவர். இங்கு மயில்களின் அகவுதலை நல்வரவு கூறுவதற்கான சொல்லாகக் கூறியது, வரவேற்றல், எதிர்கொண்டு செல்லுதல் என்ற பயன் கருதி ஏற்பட்டதால் பரிணாம அணியும் உண்டு.

சுலோகத்தின் முதல் பாதியில் காலதாமதம் நேரும் என்று கூறி, அதை வலியுறுத்த இரண்டாம் பகுதியில் காலதாமதம் நேருவதற்கான காரணத்தையும் கூறி, தாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதனையும் யக்ஷன் வலியுறுத்தினான்.

शुक्ल-अपाङ्गाः - கடைக்கண் வெளுத்திருப்பவை என்பது பதப்பொருள். மயில்கள், மேகத்தைக் கண்டவுடன் ஆனந்தத்துடன் பேரொலி செய்து ஆரவாரிப்பதை மேகத்திற்கு அவை அளிக்கும் வரவேற்பாகவும் உபசாரமாகவும் கூறினார் கவி. மலைகளில் தாமதம் ஏற்பட இதுவும் காரணமாகும் என்பது கூறப்பட்டது.

पाण्डुच्छायोपवनवृतयः केतकैः सूचिभिन्नैः

नीडारम्भैर्गृहबलिभुजामाकुलग्रामचैत्याः ।

त्वय्यासन्ने परिणतफलश्यामजम्बूवनान्ताः

संपत्स्यन्ते कतिपयदिनस्थायिहंसा दशार्णाः ॥ २३ ॥

பதவுரை: — (मेघ) - மேகமே, त्वयि - நீ, आसन्ने - ஸமீபிக்கும் பொழுது (அண்மையில் வரும் போது), दशार्णाः - தசார்ணம் என்ற தேசம், सूचिभिन्नैः - முனையில் மாத்திரமே மலர்ந்துள்ள, केतकैः - தாழை மலர்களால், पाण्डुच्छाया-उपवन-वृतयः - வெண்ணிறமுடைய தோட்டத்தின் வேலிகளையுடையதாகவும், गृह-बलि-भुजाम्-காக்கைகளால் (செய்யப்படும்), नीडारम्भैः-கூடு கட்டும் முயற்சியால், आकुल-ग्राम-चैत्याः - பெரும் ஒலியுடைய மரங்களையுடையதாகவும், परिणत-फल-श्याम - जम्बू - वनान्ताः - நன்கு பழுத்த பழங்களால் கருநிறமுடைய நாவல் மரக்காடுகளையுடையதாகவும், कतिपय-दिन-स्थायि-हंसाः - சில நாட்களே தங்கியிருக்கும் அன்னப் பறவைகளையுடையதாகவும், सम्पत्स्यन्ते - ஆகும்.

கருத்துரை — மேகமே, நீ அடுத்துச் செல்லுமிடம் தசார்ணம் என்ற நாடாகும். நீ அதன் அருகில் சென்றவுடனே அந்நாடு இருக்கப்போகும் நிலையைக் கூறுகிறேன். அங்கு தோட்டங்களுக்கு வேலியாக அமைக்கப்பட்டுள்ள தாழைகள் பூக்கத் தொடங்கும். மழைக்காலத் தொடக்கமாதலால் பூக்கள் முற்றிலும் மலரா. முனைகளில் மாத்திரம் சிறிதே மலர்ந்திருக்கும். தாழம்பூக்கள் தோன்றியதால் வேலிகள் வெண்ணிறமுடையதாகக் காணப்படும். வீட்டிலுள்ள பெண்டிர் தினந்தோறும் இடும் உணவை உண்கின்ற காக்கைகள் கூடு கட்டும் காலமிது. எனவே, தெரு ஓரங்களில் உள்ள மரங்களில் அவை கூடு கட்ட முயல்வதால் எங்கும் சலசலப்பு ஏற்படும். நாவல் பழம் பழுக்கும் காலமும் இதுவே. ஆதலால் நகரத்திற்குப் புறத்தேயுள்ள நாவல் மரக்காட்டுப் பிரதேசங்

கள் பழுத்த பழங்கள் காரணமாகக் கருத்திருக்கும், இதுவரை நீர் நிலைகளிலே வசித்த அன்னப்பறவைகள் மழை பெய்து நீர் கலங்கி விடுமாதலால், அந்நாட்டில் சில நாட்களே தங்கி இருக்கும். பிறகு மானஸ ஏரியை நோக்கிச் சென்றுவிடும். இந்நிலையையடையும் தசார்ணம் என்ற நாட்டை நீ காண்பாய். ஸ்வபாவோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — पाण्डु... *இதுவரை பசுமை நிறத்தில் இருந்த தாழை வேலிகள் இப்போது பூக்கள் தோன்றுவதால் வெண்ணிறம் பெறும்.* सूचि *- தாழை மலரின் முனை.* गृह... *இங்குள்ள* गृह *என்ற சொல் இல்லத்தரசிகளைக் குறிக்கும். பலி என்றது பிரதி தினம் காக்கைகளுக்கு வைக்கப்படும் சோற்றைக் குறித்தது.* वलिभुजः *- இவ்வுணவை உண்கின்ற காக்கைகள்.* वलिभुक् *- காக்கை. இதனால் நகரத்தில் உள்ள பிற பறவைகளையும் குறிக்கலாம்.* चैत्य *- தெருவிலுள்ள மரங்கள். சுற்றிலும் மேடை கட்டி வளர்க்கப்படும் ஆல், அரசு இவைகளையும் புத்தர் கோயிலையும் இச்சொல் குறிக்கும். காக்கைகள் ஆடி மாதத்தில் கூடு கட்டுவதையும், கூடு கட்டும் காலத்தில் இங்குமங்கும் பறந்து பேரொலி செய்து தொந்தரவு கொடுப்பதையும் இன்றும் காணலாம்.*

श्याम-जम्बू *- நாவல் பழம் பழுக்கும் காலமும் இது தான்.* कतिपय... *அன்னங்கள் மழை பெய்து கலங்கின நீரைக் குடிக்க விரும்பாமல், மேகம் தோன்றியவுடனே மானஸம் என்ற ஏரிக்குச் செல்லும். எனவே, அவை சில நாட்களே தசார்ணத்தில் தங்கியிருக்கும்.* ऋण *- கோட்டை.* दश-ऋण *- என்பது* दशार्ण *என ஆயிற்று. பத்துக் கோட்டையுள்ள நாடு என்பது*

பொருள். இது எந்த நாடு என்று குறிப்பாகக் கூற முடியாவிடினும் தற்போது சதீஸ்காட் என்று குறிப்பிடப்படும் இடமாக இது இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

तेषां दिक्षु प्रथितविदिशालक्षणां राजधानीं
गत्वा सद्यः फलमविकलं कामुकत्वस्य लब्धा ।
तीरोपान्तस्तनितसुभगं पास्यसि स्वादु यस्मात्
सभ्रूभङ्गं मुखमिव पयो वेत्रवत्याश्चलोर्मि ॥ २४ ॥

பதவுரை: — दिक्षु-திசைகளில், प्रथित-विदिशा-लक्षणाम्-பிரசித்தமான விதிசா எனப் பெயர் கொண்ட, तेषाम् - அந்த தசார்ண தேசத்தின், राजधानीम्-தலைநகரை, गत्वा-அடைந்து, सद्यः - உடனேயே, कामुकत्वस्य-உனது காமுகநிலைக்கு (ஏற்றபடி), अविकलम् - குறைவற்ற (பரிபூர்ணமான), फलम् - பயனை, (भवान्) लब्धा - நீ அடைவாய். यस्मात् - ஏனெனில், स्वादु - ருசி மிகுந்த (சுவையான), चलोर्मि - அசையும் சிற்றலைகளையுடைய, वेत्रवत्याः - வேத்ரவதி நதியின், पयः - நீரை, - सभ्रूभङ्गम् - புருவ நெறிப்புடன் கூடிய, मुखमिव - (ஒரு யுவதியின்) முகத்தைப் பருகுவது போல், तीरोपान्त - स्तनितसुभगम् - கரையின் அருகில் இருந்து கொண்டு உனது மெல்லிய ஒலியினால் இனிதாகச் செய்து, (त्वं) - நீ, पास्यसि - பானம் செய்யப் போகின்றாய்.

கருத்துரை : — நண்பனே, திக்கெங்கும் புகழ் பெற்றுள்ள தசார்ணத்தின் தலைநகரான விதிசை என்பதை அடைந்தவுடனேயே உனது காம உணர்ச்சிக்கு ஏற்ற வகையில் ஒரு நற்பயனைப் பெறப் போகின்றாய். காமுகர்களுக்கு கலவியைவிடக்

காதலிகளின் இதழைச் சுவைப்பதிலே விருப்பு அதிகம் என்பர். அன்பர் இதழைச் சுவைக்குங்கால் காதலிகள் புருவத்தை நெறிப்பர். இனிய ஒலிகளைச் செய்வர். விதிசைக்கு அருகில் வேத்ரவதி என்ற நதியின் இனிய நீரை, அதன் சிற்றலைகள் சிறிதே அசைய, நதியின் கரையில் இருந்து கொண்டு செவிக்கினிய ஒலி செய்து அழகிய புருவ நெறிப்புடன் கூடிய ஒரு காதலியின் முகத்தை-இதழைப் பருகுவது போல, பருகப்போகின்றாய். பெரிய பேரின்பத்தை நீ அடைவாய். ஸமாஸோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — विदिशा - இதை இப்போது பில்ஸா என்ற பெயரால் அழைக்கின்றனர். இது ஒரு சிறிய க்ராமம். போபால் ஸ்டேஷனுக்கு வடக்கில் ஸாஞ்சிக்கு அருகில் விதிசா என்ற ஒரு ரயில்வேஸ்டேஷனும் உள்ளது. लक्षणम् - பெயர். राजधानी - அரசர் வசிக்கும் தலைநகர்.

लप्स्य - என்ற வினைச்சொல்லுக்குச் சேர भवान् என்ற பதம் வருவித்துப் பொருள் கூறப்பட்டது. உரையாசிரியர் பலரும் त्वया என்பதை வருவித்து 'மேகமே உன்னால் பயன் அடையப்பட இருக்கின்றது' என்று கூறுவர். காமுகர்கள் ஸ்த்ரீ ஸுகப் பிரியர்கள். எனவே, அதற்கு ஏற்ற வகையில் காமுகன் ஒருவன் பெற விரும்பும் பயனை மேகமும் அடையும் என்று கூறினான் யக்ஷன். (வேத்ரவதி - ஒரு நதியின் பெயர்). வேத்ரவதி நதியின் அசையும் சிற்றலையுடைய நீரைப் பருகுதல் என்பதே அப்பயன். வேத்ரவதியின் நீருக்கு முகமும் அலைகளுக்கு புருவநெறிப்பும் உபமானங்கள். வேத்ரவதி என்ற தலைவியின் புருவநெறிப்புடன் கூடிய முகம் போலுள்ளது அலையுடன் கூடிய நீர்.

विलासी कामुकः कामी स्त्रीपरो रतिलम्पटः — என்பது காமுகனைப் பற்றிக் கூறுவது. स्तनितसुभगम् - என்பதை पास्यसि என்ற செயலுக்கு விசேஷணமாக்கிப் பதவுரை கூறப்பட்டது. இதுவே மல்லிநாதர் கூறிய உரையாகும். स्तनितम् - கலவிக்காலத்தில் இன்ப நுகர்ச்சியின் மிகுதியால் காதலர்கள் செய்யும் ஒரு வகை ஒலி என்று கொண்டு, "கரையோரங்களில் அலைமோதும் (ஸ்தனிதங்களால்) ஒலியினால் அழகாயிருப்பதுமான நதியின் முகத்தை-இதழை" என்று முகத்திற்கு விசேஷணமாக்கிப் பொருள் கூறுவர் பூர்ணஸரஸ்வதி. 'மேகமே, நீ நீரைப் பருகும் போது, நதி-இன்ப நுகர்ச்சியின் காலத்தில், அலைகள் கரையில் மோதுவதால் உண்டான ஒலியை-ஸ்தனிதமாகச் செய்யும்' என்பது கருத்து. நீரை உறிஞ்சிப் பருகினால் ஒலி உண்டாகும். இதை இதழுக்கும் சேர்க்க.

नीचैराख्यं गिरिमधिवसेस्तत्र विश्रामहेतोः

त्वत्संपर्कात् पुलकितमिव प्रौढपुष्पैः कदम्बैः ।

यः पण्यस्त्रीरतिपरिमलोद्गारिभिर्नागराणा-

मुद्दामानि प्रथयति शिलावेश्मभिर्यौवनानि ।। २५ ।।

பதவுரை: — (मेघ) - மேகமே, तत्र - விதிசையில் (விதிசையின் அருகில்), विश्रामहेतोः - இளைப்பாறுதலின் காரணமாக, प्रौढपुष्पैः-நன்கு அலர்ந்த மலர்களையுடைய, कदम्बैः - கடம்ப மரங்களால், त्वत्सम्पर्कात् - உன்னைச் சந்தித்ததால், पुलकितम् इव (स्थितम्) - மயிர்க்கூச்சம் உற்றது போல் இருக்கின்ற, नीचैराख्यम् - நீசை: (நீசம்) என்று பெயருடைய, गिरिम् - மலையில், अधिवसेः - தங்கியி

ருப்பாயாக; यः - அம்மலை, पण्य-स्त्री-रति-परिमल-उद्गारिभिः - விலைமாதர்களுடைய கலவியில் உபயோகித்த வாசனைப் பொருளின் நறுமணத்தைக் கொப்பளிக்கும் (வெளியிடுகின்ற), शिला-वेश्मभिः - குகைகளால், नागराणाम् - நகர யுவர்களின், उद्दामानि - கட்டுக்கடங்காத, यौवनानि-யௌவனப் பருவத்தை, (பருவச்செயல்களை), प्रथयति- நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

கருத்துரை: — மேகமே! விதிசையின் அருகில் உள்ள நீசை: என்ற மலையில் நீ தங்கி இளைப்பாறுவாயாக. அம்மலை நெடுநாட்களுக்குப் பிறகு உன்னை சந்தித்த மகிழ்ச்சியாலே நன்கு மலர்ந்த மலர்களையுடைய கடம்ப மரங்களால் மயிர்க் கூச்சம் உற்றது போலிருக்கும். அம்மலையின் குகைகள், நகரத்திலுள்ள யுவ புருஷர்களுடன் இன்பம் நுகர்ந்த விலை மாதர்கள் உபயோகித்த வாசனைப் பொருளின் நறுமணத்தை எங்கும் வீசுவனவாய், யுவ புருஷர்களின் வரம்புக்கடங்காத யௌவனச் செயல்களை நன்கு புலப்படுத்துவனவாக இருக்கும். கடம்ப மலர்களை மயிர்க்கூச்சமாகக் கூறியதால் உத்ப்ரேக்ஷை அணி. நகரமாந்தர்களின் செல்வப் பெருக்கைக் கூறியதால் சுலோகத்தின் இரண்டாம் பகுதியில் உதாத்தம் என்ற அணி யும் உண்டு.

விளக்கவுரை: — नीचैः - உயரமில்லாத காரணத் தால் மலைக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். नीचैः - தாழ்ந்தது; உயரமில்லாதது; விலைமாதர்களுக்கு இட மளித்ததாலும் இது 'தாழ்ந்தது' என்ற பெயருடைய தாயிற்று என்பர் தக்ஷிணாவர்த்தர்; सुरतगृहत्वतया नीचैराख्यत्वम् என்பர் அவர். மேகம் தோன்றியவுடன் கடம்ப மரம் பூக்கும். இதன் மலரையே மயிர்க்கூச்ச மாக வர்ணிப்பது மரபு. இங்கு கவி, நன்கு மலர்ந்த மலர்களையுடைய கடம்ப மரத்தையே மயிர்க்கூச்ச

மாகக் கூறியது சிறிது மாறுபட்ட வகையாகும். இது காரணமாக தக்ஷிணாவர்த்தர் कदम्बैः என்பதற்கு கடம்பமலர் என்று பொருள் கொள்ள வேண்டும் என்பர். कदम्बैरित्युक्तेऽपि कदम्बकुसुमैरित्यर्थो गृह्यते என்பது அவர் உரை. அப்போது प्रौढपुष्पैः-என்பதற்கு மலர்ந்த என்றே பொருள் கொள்ள வேண்டும். यः என்பதற்குப் பொருள் தெளிவு கருதி அம்மலை என்ற பொருள் கூறப்பட்டது. மலையின் குகைகள் நகரமாந்தர் (இளைஞர்கள்) விலைமாதர்களுடன் இன்பம் நுகருவதற்கு இசைந்த வகையில் அமைந்திருந்தன. கலவிக் காலத்தில் அம்மாதர்கள் உபயோகித்த வாசனைப் பொருள்களின் நறுமணத்தை அக்குகைகள் நன்கு புலப்படுத்தின. நகரத்திலுள்ள யுவ புருஷர்களின் மிக அதிகமான யௌவனத்தையும் அதனால் வரும் பிற விளைவுகளையும் இக்குகைகள் காட்டின. காதலர்கள் மகிழும் இடமாதலால் மேகத்தை அங்கு தங்கியிருக்கும்படி யக்ஷன் கூறினான்.

विश्रान्तः सन् व्रज वननदीतीरजातानि सिञ्च-
न्नुद्यानानां नवजलकणैर्यूथिकाजालकानि ।
गण्डस्वेदापनयनरुजा क्लान्तकर्णोत्पलानां
छायादानात् क्षणपरिचितः पुष्पलावीमुखानाम्॥२६॥

பதவுரை: — विश्रान्तः सन् - (அங்கு) இளைப்பாறியவனாய் இருந்து கொண்டு நீ, वन-नदी-तीरजातानि - வன நதியின் கரையில் உள்ள, उद्यानानाम् - பூந்தோட்டங்களின், यूथिका-जालकानि - முல்லையரும்புகளை, नव-जल कणैः - (உனது) புதிய நீர்த்துளிகளால், सिञ्चन् - நனைத்துக் ...

கொண்டு, **गण्ड-स्वेद-अपनयनरुजा-क्लान्त-कर्णोत्पलानाम्** - *கன்னங்களில் உள்ள வியர்வையை நீக்குவதில் (துடைப்பதில்) ஏற்பட்ட கடின ஸ்பர்சத்தால் வாடின காதணியான கருங்குவளை மலர்களையுடைய,* **पुष्पलावी-मुखानाम्** *-பூவைப் பறிக்கும் பெண்களின் முகங்களுக்கு,* **छाया-दानात्** - *நிழல் தருவதன் மூலம்,* **क्षण-परिचितः** - *(அப்பெண்களுடன்) சிறிது நேரமே பழக்கம் கொண்டு,* **व्रज** - *(மேலே) செல்வாயாக.*

கருத்துரை — மேகமே, அம்மலையில் இளைப்பாறியபின் நீ செல்லும் வழியில் வனநதி என்ற ஆற்றைக் காண்பாய். அதன் கரைகளில் முல்லைத் தோட்டங்கள் தாமே எழுந்துள்ளன. அவை மனிதர்களின் முயற்சியினால் உண்டானவை அல்ல. அத்தோட்டங்களில் உள்ள முல்லையரும்புகளின் மேல் நீ மெல்ல உன் நீர்த்துளிகளைத் தெளிப்பாயாக. அங்கு பெண்கள் அரும்புகளையும் மலர்களையும் கொய்து கொண்டிருப்பார்கள். அவர்கள், காதுகளின் மேல் கருங்குவளை மலரை அணிந்திருப்பார்கள். பூவைப்பறிக்கும் பெண்கள், வெய்யிலினால் தம் கன்னங்களில் உண்டாகும் வியர்வையைக் கையினால் அழுத்தித் துடைப்பர். அப்படித் துடைக்கும்போது அவர்கள் கை உராய்ந்து குவளை மலர்களை வலியுறச் செய்ய அவை வாடும். எனவே, நீ அப்பெண்களுக்கு வெய்யிலை மறைத்து நிழலைக்கொடு. இதன் மூலம் நீ அப்பெண்களுடன் நொடிப் பொழுதே பழக்கம் (உறவு) கொள்வாய். நீ அதிக நேரம் அங்கு தாமதியாமல் உடனே உன் பயணத்தை மேற்கொண்டு செல்வாயாக. ஸ்வபாவோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — *வனநதி என்பதை ஒரு நதியின் பெயராகக் கொள்வர்* **வில்ஸன்** *என்பவர். காளிதாஸர் மேகத்திற்கு வழி கூறுங்கால் அவ்வப்பொருளைக் குறிப்பிட்டுக் கூறுகின்றாரேயன்றிப் பொதுவாகக்*

கூறுததால் இங்கும் வனநதி என்பது ஓராற்றைக் குறிக்கும் என்பது அவர் கருத்து. மல்லிநாதர் 'காட்டாறுகள்' என்று பொருள் கூறுகிறார். उद्यानानाम् - அவ்வாற்றின் கரையில் தாமாகவே முல்லை, மல்லிகை, குருக்கத்தி முதலிய பூச்செடிகள் வளர்ந்து பூந்தோட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்குள்ள மலர்களுக்கும் அரும்புகளுக்கும் நீர் தெளிக்க வேண்டும் என்று கூறுகிறார். यूथिका - முல்லை; மல்லிகை, குருக்கத்தி என்பாரும் உண்டு. जालकानि - அரும்புகள்.

पुष्पलावी - பூப்பறிக்கும் பெண்; இங்கு பலர். அவர்கள் வியர்வையை நீக்கக் கன்னத்தைத் துடைக்கும் பொழுது அப்பெண்களின் மென்கரம் பட்டும் வலி ஏற்பட்டு (रुजा வலி அல்லது கசங்குதல்) குவளைமலர் வாடும் என்று கூறுவது நோக்கத் தக்கது. மலர்களுக்கும் மென்மையுணர்வு கூறப்பட்டது. அப்பெண்களுக்குச் சிறிது நேரமேனும் சூரியனை மறைத்து மேகம் நிழல் தரவேண்டும் என்பது யக்ஷன் வேண்டுகோள்.

छाया - நிழல்; ஒளி என்று பொருளும் உண்டு. மேகம் வெய்யிலை மறைத்து அதன் மூலம் அப்பெண்களின்முகத்திற்கு ஒளிதர வேண்டும் என்று கூறியதாகவும் கொள்ளலாம். வெய்யில் மறைந்தாலே முகங்கள் பிரகாசிக்கும்.

क्षण - परिचित: - மேகம், பெண்களின் அழகில் மயங்கி அதிகநேரம் தங்க வேண்டாம் என்பதை வற்புறுத்த, 'நொடிப்பொழுதே அவர்களின் பரிசயமுடையவனுக' என்றான் யக்ஷன்.

वक्रः पन्था यदपि भवतः प्रस्थितस्योत्तराशाम्
सौधोत्सङ्ग-प्रणयविमुखो मा स्म भूरुज्जयिन्याः ।
विद्युद्दामस्फुरितचकितैस् तत्र पौराङ्गनानां
लोलापाङ्गैर्यदि न रमसे लोचनैर्वञ्चितोऽसि ।। २७ ।।

பதவுரை:— (मेघ) - மேகமே, उत्तराशाम् (प्रति) - வடக்கு திசையை நோக்கி, प्रस्थितस्य - புறப்பட்டுள்ள, भवतः - உனக்கு, पन्थाः - (உஜ்ஜயினி செல்லும், மார்க்கம், वक्रः यदपि - (வளைந்ததாக) சுற்றலாகத்தான் (தொலைவாகவே), (भवेत्) - இருக்கும். उज्जयिन्याः - (ஆயினும்) உஜ்ஜயினி நகரத்தின், सौध-उत्सङ्ग-प्रणय-विमुखः - மாளிகைகளுடைய மேல்தளங்களின் பழக்கத்தில் பராமுகனாக, मा- स्म-भूः - இராதே; तत्र - அங்கு, विद्युद्-दाम-स्फुरित-चकितैः - கொடி போன்ற மின்னலின் தோற்றத்தினால் அச்சமுற்றவைகளும், लोलापाङ्गैः - சஞ்சலமான கண்களின் கடைப்பகுதிகளையுடையனவுமான, पौर-अङ्गनानाम् - நகரப்பெண்களின், लोचनैः - கண்களால் (கண்களைக்கண்டு), न रमसे यदि - நீ இன்பமுறுவிடின், वञ्चितः - (வாழ்க்கைப் பயன் பெறாது) ஏமாந்தவனாக, असि - இருக்கின்றாய் (ஆவாய்).

கருத்துரை:—மேகமே, நேர் வடக்கு நோக்கிச் செல்லுகின்ற உனக்கு உஜ்ஜயினிக்குப் போகும் மார்க்கம் சிறிது சுற்று வழியாகவேயிருக்கும். ஆயினும் நீ உஜ்ஜயினிக்கு அவச்யம் செல்ல வேண்டும். சென்று அந்நகரிலுள்ள மாளிகைகளின் மேல் தளத்தின் பரிசயம் பெற்று அங்கு தங்க வேண்டும். அந்நகரில் உள்ள பெண்கள் கண்ணழகிற்குப் பெயர் பெற்றவர்கள். நீ கொடி போன்ற மின்னலை வீசும் போது, அச்சமுற்ற அப்பெண்களின் கடைக்கண்கள் வெகு

வாகச் சலிக்கும். இத்தகைய அழகு பெற்ற கண்களைப் பார்த்து மகிழும் வாய்ப்பை நீ பெருவிடின் வாழ்க்கையில் பெற வேண்டிய பயனைப் பெருது ஏமாந்தவனுவாய். கண்ணழகை விசேஷித்துக் கூறுவதால் வ்யதிரேகாலங்காரம்.

விளக்கவுரை: — वक्रः - வளைவு. நேராக இராதது; சுற்று வழி. விதிசையிலிருந்து நேர் வடக்கு நோக்கிச் செல்ல வேண்டிய மேகம் விதிசைக்கும் நிர்விந்த்யா என்ற நதிக்கும் மேற்கிலுள்ள உஜ்ஜயினிக்குச் செல்ல வேண்டுமாயின், வடக்கு நோக்கிச் செல்லும் வழியை விட்டு மேற்கு நோக்கிச் செல்ல வேண்டும். பிறகு உஜ்ஜயினிலிருந்து கிழக்கே வந்து வடக்கு நோக்கிச் செல்ல வேண்டியதால் உஜ்ஜயினியின் வழியை 'வக்ரம்' - 'சுற்றுவழி' என்று கூறினர்.

सौधोत्संग-उत्संग - மாளிகைகளின் மேல்தளம். இது மேகம் தங்குவதற்கு உரிய இடம். மாளிகையின் உட்புறம் என்ற பொருளும் உண்டு. प्रणय:- பரிசயம் -பழக்கம். दाम - கயிறு; இங்கு கயிறு அல்லது கொடியைக் குறித்தது. மின்னலும் கயிறு அல்லது கொடி போன்றிருக்கும்.

अपाङ्गौ नेत्रयोरन्तौ-என்பது அமரம்; अपाङ्ग - கடைக்கண்; கண்ணின் புறப்பகுதி. மின்னல் தோன்றும் போது கண் மூடுதலும் அது இல்லாத போது கண் திறத்தலும் என்ற செயல்களால் கண் இமைகளில் உள்ள சலனத்தை கடைக்கண்களில் இருப்பதாகக் கூறினர். लोचनैर्यदि न रमसे - பெண்களின் கண்களைக் கண்டு நீ கண் பெற்ற பயனைப் பெறவேண்டும். பெருவிடின் உன் வாழ்க்கையே வீணுகும். காளிதாஸ

ரின் பிறப்பிடம் உஜ்ஜயினி. மல்லிநாதரும் தக்ஷிணா வர்த்தரும் நிர்விந்தியா நதிக்கு கிழக்கில் உஜ்ஜயினி இருப்பதாகக் கூறுவர்.

१. वञ्चितोऽसि-वञ्चितः स्याः २. यदपि भवतः-तव भवतु च என்ற பாடங்கள் உண்டு.

वीचिक्षोभस्तनितविहग-श्रेणिकाञ्चीगुणायाः
संसर्पन्त्याः स्खलितसुभगं दर्शितावर्तनाभेः ।
निर्विन्ध्यायाः पथि भव रसाभ्यन्तरः संनिपत्य
स्त्रीणामाद्यं प्रणयवचनं विभ्रमो हि प्रियेषु ॥ २८ ॥

பதவுரை: — पथि - (உஜ்ஜயினியின்) வழியில், **वीचिक्षोभ-स्तनित-विहग-श्रेणि-काञ्चीगुणायाः** - அலைகளின் அசைவால் ஒலி செய்கின்ற நீர்ப்பறவைகளின் வரிசையாகிய மேகலை (இடையணி) யுடையதும், **स्खलित-सुभगम्**- (பாறைகளில்) இடறுதலால் அழகாக, **संसर्पन्त्याः** - (மெள்ளச்) செல்வதும், **दर्शित-आवर्तनाभेः**-நீர்ச்சுழல் என்ற நாபியைப் புலப்படுத்துவதுமான, **निर्विन्ध्यायाः** - நிர்விந்த்யா என்ற நதியின் (நதியோடு), **संनिपत्य** - சேர்க்கையைப் பெற்று (கலந்து), **रस-अभ्यन्तरः** - நீர் தன்னை உள்ளுடையவனாக, (இன்பமுடையவனாக) **भव** - நீ ஆவாயாக. **प्रियेषु** - காதலர் விஷயத்தில், **स्त्रीणाम्** - ஸ்திரீகளுக்கு, **विभ्रमः**- (வனிதையரின்) இனிய செய்கை, **आद्यम्**- முதலில் தோன்றும், **प्रणयवचनम् हि** - (காதலைத் தெரிவிக்கும்) சொல் ஆகும் அல்லவா?

கருத்துரை:— நண்பனே, உஜ்ஜயினி போகும் வழியில் நிர்விந்த்யா என்ற நதிப் பெண் இருக்கின்றாள். அலை அசைவ

திரில் கூவுகின்ற அன்னம் முதலிய பறவைகளின் வரிசையே அவளது இடுப்பிலுள்ள மேகலை. பாறைகள் குறுக்கிடுவதால் இடருற்று அவள் தளர்நடையழகு பெற்றுச் செல்வாள். நீர்ச் சுழல் அவளது நாபியாகும். இடையணி, தளர்நடை, இடையழகைப் புலப்படுத்துதல் என்ற இம்மூன்று இனிய செயல்கள் மூலம் அந்த நதி வனிதை உன்னிடம் தான் கொண்ட காதலைப் புலப்படுத்துவதால், நீ அவளையடைந்து அவ்வாற்றின் நீரைப் பருகி சுவை (ஜலம்) நிரம்பிய (உள்பகுதியுடைய) வனாக ஆவாயாக. ஸ்திரீகள் முதன் முதலில் காதலர்களுக்குத் தம் காதலைச் செயலால் தெரிவிப்பரேயன்றி சொல்லால் தெரிவிக்க மாட்டார்கள். நதியின் செயலைக் கொண்டு நதிப்பெண் உன்னிடம் காதல் கொண்டதை அறிந்து தயங்காது அதனை (அவளை) அணுகிச் சுவை பெறலாம்.

"ஒலிக்கின்ற மேகலையுடையவளும், நாபியின் தளர் நடை கொண்டவளும், தன் நாபியின் மூலம் இடையழகைப் புலப் படுத்துபவளுமான ஒரு வனிதையை அணுகி இன்பம் பெற வேண்டும்" என்று, ஒரு நண்பன் தன் தோழனுக்குக் கூறுவ தான பிறிதொரு பொருளும் இதில் தோன்றுவதால் ஸமா ஸோக்தி என்ற அணி உளது என்பர்.

விளக்கவுரை: — நிர்விந்த்யா என்பது நதியின் பெயர். பெண்பாற்சொல். ஆதலால் அதனை மேகத்தினிடம் காதலைச் செயல் மூலம் காட்டும் பெண்ணாகக் கூறினார். (நதிகளை மேகத்தின் காதலிகளாகக் கூறுவதை மேலும் காணலாம்). அலையசைவால் ஒலி செய்வனவும் நதியில் வாழ்வனவுமான அன்னம் முதலிய பறவைகளின் வரிசைதான் இந்த நதி என்னும் வனிதைக்கு ஒலிக்கும் மேகலை. நதியும், குறுக்கிடும் பாறையால் பெண்களைப் போல் தளர்நடை கொண்டு அழகுறச் செல்கிறது. சில பெண்கள் இடைப்பகுதி தெரிய உடை உடுப்பர். நதியின் நீர்ச்

சுழலும் அத்தகையதே ஆகும். எனவே மேகம் நதியுடன் இணைந்து நீர்பருகி இன்பமடைதல் வேண்டும். रसः என்பதற்கு ஜலம், இன்பச்சுவை என்ற இரு பொருள் இருப்பதால் रसाभ्यन्तरः நீர் நிறைந்த வளுக என்றும், காதல் இன்பச் சுவையால் மனம் நிறைந்த வளுக என்றும் இரண்டு பொருளும் பொருந்தும். தன் காதலைப் புலப்படுத்தாத வனிதையை எவ்வாறு அணுகுவது என்பதற்கு யக்ஷன் கூறும் பதில் சுலோகத்தின் நான்காம் அடியில் உள்ளது. "வனிதையர் தம் காதலை முதலில் சொல்லால் தெரிவிக்க மாட்டார்கள். அவர்கள் அதனைத் தெரிவிக்க உபயோகிப்பது சில இனிய (विभ्रमः) செயல்களே தாம்" என்பதாம்.

काञ्ची - மேகலை. गुणः நூல்; மேகலை; பொன்னுலான மணிகளை நூலில் கோத்து அணிவர். स्तनित - என்பது பறவைகளின் ஒலியைக் குறிக்காதெனக் கொண்டு स्वनित என்ற பாடத்தைக் கொள்வர் பூர்ண ஸரஸ்வதி.

वेणीभूत-प्रतनुसलिला तामतीतस्य सिन्धुः
पाण्डुच्छाया-तटरुहतरु-भ्रंशिभिर्जीर्णपर्णैः ।
सौभाग्यं ते सुभग विरहावस्थया व्यञ्जयन्ती
कार्श्यं येन त्यजति विधिना स त्वयैवोपपाद्यः ।।२९।।

பதவுரை: — सुभग - அழகனே, वेणीभूत-प्रतनु सलिला - (பெண்களின்) ஒற்றைப் பின்னல் போல் மிகக் குறைந்த-அருகி ஓடும்-நீருடையதும், तटरुह-तरु-भ्रंशिभिः - கரையில் வளர்கின்ற மரங்களினின்றும் விழுந்த, जीर्ण-

पर्णैः - பழுத்த இலைகளின் மூலம், पाण्डुच्छाया - வெளிறிய நிறம் பெற்றதும், विरह-अवस्थया - (உன்னைப் பிரிந்த) விரஹ நிலையால், ताम् - நிர்விந்த்யை நதியை, अतीतस्य - கடந்துள்ள, ते - உனக்கு இருக்கின்ற, सौभाग्यम् - பெண் களை வசீகரிக்கும் (உனது) நற்பேற்றை, व्यञ्जयन्ती - காட்டுகின்றதுமான, सिन्धुः - ஸிந்து (காளிஸிந்து) என்ற நதி, येन विधिना - எவ்வுபாயத்தினால், कार्श्यम् - (தன்) மெலிந்த நிலையை, त्यजति - விடுகின்றதோ, सः - அவ்வுபாயம், त्वया एव - உன்னாலேயே, उपपाद्यः - செய் யப்பட வேண்டும்.

கருத்துரை:— அழகனே, நீ பெண்கள் யாவராலும் விரும் பத்தக்க அழகும் பேறும் உடையவன். நீ நிர்விந்த்யையை கடந்தவுடனேயே உன் பிரிவினால் வருந்தும் நதிக்காதலியான ஸிந்துவைக் காண்பாய்; நீர் அருகி ஓடுவதினால் அவள் உடல் மெலிந்திருப்பாள். கரையிலுள்ள மரத்தினின்றும் பழுத்த இலை கள் விழுந்து வெண்ணிறம் பெற்று உன் பிரிவினாலே ஏற்பட்ட ஏக்கத்தினால் வெளிறியும் இருப்பாள். இவ்விரண்டு அடை யாளங்களாலும் ஸிந்து என்ற அந்த நதிப்பெண், நீ பெண் களால் விரும்பப்படும் பாக்யமுடையவன் என்பதைக் காட்டு பவள் போல் இருப்பாள். எவ்வகையில் அவளது மெலிந்த நிலையைப் போக்கலாமோ அவ்வுபாயத்தைக் கைக் கொள். மழை பொழிவாயாக என்பது கருத்து.

காதலனை அடைவதன் மூலம் பெண்களின் மெலிவும் நீங் கும். காதலன் ஒருவன் தனக்காக ஏங்கி நிற்கும் காதலியை மகிழ்விக்க வேண்டும் என்ற பிறிதொரு பொருளும் தோன்று வதால் ஸமாஸோக்தி என்ற அலங்காரம் உண்டு.

விளக்கவுரை: — கணவனால் விரும்பப்படும் நிலையை, பெண்களுக்கு ஸௌபாக்யம் என்று கூறுவர். அதனாலேயே ஸௌபாக்யவதி என்ற அடைமொழி

யும் பெண்களுக்குத் தரப்படுகின்றது. அது போல் பெண்கள் யாவராலும் விரும்பப்படும் ஒரு ஆண் மகனின் நிலையையும் கவி இங்கு ஸுபக (ஸௌபாக்யம்) என்ற சொல்லால் குறித்தார். பெண்களை வசீகரிக்கும் குணநலன்களுக்கு ஸௌபாக்யம் எனப் பெயர்.

सिन्धु: — நிர்விந்த்யைக்கு அடுத்து உஜ்ஜயினி போகும் வழியில் கடக்க வேண்டிய மற்றொரு நதி ஸிந்து என்ற சிற்றாறு. இதனை காளிஸிந்து என்றும் கூறுவர் என்பர் உரையாசிரியர்கள். மல்லிநாதர் இங்கு குறிப்பிடப்படுவதும் நிர்விந்த்யைதான் என்கிறார். वेणी - தலைப்பின்னல்;

அடுத்து வரும் பத்து சுலோகங்கள் உஜ்ஜயினியையும் அதன் சுற்றுப்புறங்களையும் பற்றிக் கூறுவன.

प्राप्यावन्तीनुदयनकथाकोविदग्रामवृद्धान्
पूर्वोद्दिष्टामनुसर पुरीं श्रीविशालां विशालाम् ।
स्वल्पीभूते सुचरितफले स्वर्गिणां गां गतानां
शेषैः पुण्यैर्हृतमिव दिवःकान्तिमत्खण्डमेकम् ॥ ३० ॥

பதவுரை: — (मेघ) மேகமே, उदयन-कथा-कोविद-ग्राम-वृद्धान् - உதயனன் கதையை நன்கு அறிந்த கிராமத்திலுள்ள முதியோர்களையுடைய. अवन्तीन् - அவந்தி நாட்டை, प्राप्य - அடைந்து, पूर्व-उद्दिष्टाम् - முன்பு (என்னால்) குறிப்பிடப்பட்ட, श्रीविशालाम् - செல்வச் சிறப்பால் விசாலமானதும், सुचरितफले-நற்செயலின் பயனான புண்யம், स्वल्पीभूते - குறைந்த போது, गाम् - பூமியை,

गतानाम् - வந்தடைந்த, स्वर्गिणाम् - ஸ்வர்க்கவாஸிகளின், शेषैः- எஞ்சியுள்ள, पुण्यैः புண்யத்தினுல், हृतम्-கொண்டு வரப்பட்ட, कान्तिमत् - அழகு பொருந்திய, एकम् - ஒரு, दिवः - ஸ்வர்க்கத்தின், खण्डम् इव - பகுதி போல், (स्थिताम्) இருக்கின்றதுமான, विशालाम् पुरीम् - விசாலா என்ற உஜ்ஜயினி நகரத்தை, अनुसर - அணுகுவாயாக.

கருத்துரை:- மேகமே, பிறகு நீ அவந்தி நாட்டை அடைவாய். அந்நாட்டின் கிராமத்திலுள்ள முதியோர்கள் அந்நாட்டில் நிகழ்ந்த உதயனன் சரிதையை நன்கு அறிந்துள்ளவர்கள்; நாட்டின் தலைநகரானதும் செல்வச் செழிப்பினுல், விசாலா - மிகவிரிவானது - என்ற மற்றும் ஒரு பெயர் பெற்றதுமான - உஜ்ஜயினியை அணுகுவாயாக. அந்நகரம், ஸ்வர்க்கத்தின் ஒரு பகுதியோ என்று நினைக்கும்படி மிகவும் பொலிவுடன் காணப்படும். நகரமாந்தர்களும், தேவர்களோ என ஐயுறுவண்ணம் தோற்றப் பொலிவுடன் இருப்பர். நல்வினை செய்தவர்கள் புண்யத்தை ஈட்டி அதன் பயனுக ஸ்வர்க்கம் சென்று வசிக்கின்றனர். புண்யத்தின் பெரும் பகுதியை ஸ்வர்க்கத்தில் அனுபவித்த பின் எஞ்சிய சிறிது புண்யத்துடன் திரும்புகின்றனர். திரும்பும் ஸ்வர்க்க வாஸிகள் தம் புண்யத்தின் பயனுக ஸ்வர்க்கத்தின் முக்யமான ஒரு பகுதியைக் கொண்டு வந்து உஜ்ஜயினியை அமைத்தனரோ என்று நினைக்கும்படி அந்நகரம் இருக்கின்றது. உத்ப்ரேக்ஷா அலங்காரம்.

விளக்கவுரை: — अवन्तीन् - என்பது நாட்டைக் குறிக்கும் சொல்லாதலால் பன்மையில் வந்தது. இரண்டாம் வேற்றுமைப் பன்மை. उदयनकथा - உஜ்ஜயினியின் அரசன் சண்டமஹாஸேனன் என்பவன் தன் மகள் வாஸவதத்தையை ஸஞ்ஜயன் என்ற அரசகுமாரனுக்கு மணம் செய்விக்க விரும்பினுன்.

வாஸவதத்தையோ தான் கனவிலே கண்ட வத்ஸ நாட்டு அரசஞன உதயனனே மணக்க விரும்பினுள். மகளின் காதலே அறிந்த மஹாஸேனன் யானே வேட்டையாடுவதில் பிரியமுள்ள உதயனனே வஞ்சனே யால் வேட்டையாடும் சமயத்தில் பிடித்துச் சிறை யில் இட்டான். உதயனனின் மந்திரி யௌகந்தராய ணன் என்பவன் தனது முயற்சியால் தன் அரசனே விடுவித்ததுடன் வாஸவதத்தையையும் மஹாஸேனன் அறியாதபடி கவர்ந்து செல்ல உதயனனுக்கு உதவி ஞன். உதயனன் வாஸவதத்தையை தன் நகரத்தில் மணந்து கொண்டான் என்பது உதயனன் கதை. அவந்தி நாட்டில் கிராமத்திலுள்ள முதியோர் இச்சம் பவத்தைக் காதல் வெற்றியைக் கொண்டாடும் வகை யில் கதை கதையாகச் சுவையுடன் எடுத்துக் கூறுவர்.

முற்காலத்தில் நாட்டில் மக்களிடையில் வழங் கும் வரலாற்றினேயும் கதைகளேயும் முதியோர்களே பின் ஸந்ததிக்குக் கூறுதல் பழக்கத்திலிருந்ததால் அவந்தி நாடும் அத்தகைய முதியோர்களேயுடையதாக இருந்ததென்பதை...ग्रामवृद्धान् என்பதால் குறித்தார். உதயனன் கதை குணுட்யர், க்ஷேமேந்திரர், ஸோம தேவர் என்ற இவர்களால் தம் நூல்களில் கூறப் பட்டுள்ளது. தமிழிலும் உதயன குமார சரிதம் என்ற காவ்யம் உள்ளது. श्रीः - செல்வம்; அதனுல் विशाला - விசாலமானது. உஜ்ஜயினி; वि - விலக்ஷணமான, शाला - மாளிகைகளேயுடையது என்றும் பொருள் கூறலாம்.

पूर्वोद्दिष्टाम्-சுலோகம் 27-இல் सौघोत्सङ्ग-என்பதனேக் காண்க. एकम् - முக்யமான என்ற பொருள் உண்டு.

ஸ்வர்க்கத்தின் முக்யமான ஒரு துண்டு அல்லது ஒரு பகுதி போல் உஜ்ஜயினி இருந்தது. खण्ड - துண்டு, பகுதி என்பர் மல்லிநாதர். कान्तिमत् - என்பதால் ஸ்வர்க்கத்தின் பொலிவுடைமை கூறப்பட்டது. மக்களும் தேவர்கள் போலிருந்தனர் என்பதும் இதனுல் பெறப்படும்.

दीर्घीकुर्वन् पटु मदकलं कूजितं सारसानां
प्रत्यूषेषु स्फुटितकमलामोदमैत्रीकषायः ।
यत्र स्त्रीणां हरति सुरतग्लानिमङ्गानुकूलः
शिप्रावातः प्रियतम इव प्रार्थनाचाटुकारः ॥ ३१ ॥

பதவுரை: — यत्र - எந்த உஜ்ஜயினியில், प्रत्यूषेषु - விடியற்காலே வேளைகளில், पटु-मदकलम् - தெளிவானதும் களிப்பினுல் இனியதுமான, सारसानाम् - நீர்ப்பறவைகளின், कूजितम् - (கூவுதலின்) ஒலியை, दीर्घीकुर्वन् - நீண்டதாகச் செய்து கொண்டும், स्फुटित-कमल-आमोद-मैत्री-कषायः - மலர்ந்த தாமரை மலர்களின் இனிய நறுமணத்துடன் நட்பினுல் (தொடர்பினுல்) நறுமணமுடையதும், अङ्ग-अनुकूलः - உடலுக்கு இதமுமான, शिप्रा वातः - சிப்ரா நதியின் (காலை) காற்று, प्रार्थना-चाटुकारः - மறுமுறையும் கலவியைப் பெறுதற்காக இனிதாகப் பேசும், प्रियतमः-इव- அன்புமிக்க காதலன் போல், स्त्रीणाम्-வனிதையரின், सुरत-ग्लानिम - கலவி நுகர்ச்சியால் வந்த அயர்ச்சியை, हरति - நீக்குகின்றதோ, (ताम्) पुरीं अनुसर - அந்த நகரத்தை அணுகுவாயாக

கருத்துரை: — மேகமே! உஜ்ஜயினியின் அருகில் சிப்ரா என்ற நதி உள்ளது. காலே வேளைகளில் அந்த நதியின்

றும் குளிர்ந்த இதமான காற்று நகரத்தை நோக்கி வீசும். அப்பொழுது நதியில் உள்ள நீர்ப்பறவைகளின் இனிய தெளிவான ஒலியை அக்காற்று நெடுந்தூரம் கொண்டு செல்லும். காலையில் அலர்ந்த தாமரை மலர்களின் நறுமணத்துடன் சேர்ந்து அக்காற்று வாசனை உடையதாகவும் உடலுக்கு ஹிதமாகவும் இருக்கும். மறுமுறை கலவியை விரும்பும் காதலன் தன் காதலியிடம் இனிமையாகப் பேசி அவளது அயர்ச்சியைப் போக்குவான். அதுபோல, சிப்ரா நதியின் குளிர்ந்த காற்றும் ஸ்திரீகளுக்கு கலவியினாலுண்டான தளர்ச்சியை நீக்குகின்றது. இத்தகைய காற்று வீசும் உஜ்ஜயினிக்கு நீ செல்ல வேண்டும். உவமையும் ஸஹோக்தியும் அலங்காரம்.

விளக்கவுரை: — शिप्रा - இந்த நதி பழைய உஜ்ஜயினிக்கு வடக்கில் ஒரு மைல் தொலைவில் உள்ளது. இதனை सिप्रा, क्षिप्रा என்றும் கூறுவர்.

दीर्घीकुर्वन् – காற்று ஒலியை வெகுதூரம் எடுத்துச் செல்வதை அறிந்தே கவி, நீர்ப்பறவைகளின் குறுகிய ஒலியை நீளமாக்கி நெடுந்தூரம் எடுத்துச்செல்கின்றது என்றார். पटु - அவைகளின் ஒலி தெளிவானது, मदकल- களிப்பினால் கேட்க இனிதாயிருப்பது. 'स्फुटित...कषाय:- தாமரை மலரின் வாசனையுடன் நட்பு கொண்டு மணம் பெற்றது காற்று. कषाय: - மணமுடையது.

अंगानुकूल: - காலைக்காற்று உடலுக்கு இதமானது. चाटुकार: இனிய சொல் கூறுபவன் அல்லது புகழுரை கூறுபவன். காதலியைத் தன் விருப்பத்திற்கு இணங்க வைக்க விரும்பி இனிதாகப் பேசும் அன்பு மிக்க காதலன், அவள் உடலைப் பிடித்துவிட்டு அவளது அயர்ச்சியைப் போக்குவான். அவனைப் போன்றே காற்றும் சுகமாக வீசி உஜ்ஜயினிப்பெண்

களுக்குக் கலவியினால் வந்த அசதியைப் போக்குவது. (तां) पुरीं अनुसर முன் சுலோகத்திலுள்ள இப்பதங்களைச் சேர்த்துப் பொருள் கூறவேண்டும். இதற்கு மேலே உள்ள மூன்று சுலோகங்கள் இடைச்செருகலாயினும் அவற்றிற்கும் உரை எழுதப்படுகிறது என்று கூறி மல்லிநாதர் உரை எழுதியுள்ளார்.

हारांस्तारांस्तरलगुटिकन् कोटिशः शङ्खशुक्तीः
शष्पश्यामान् मरकतमणीनुन्मयूखप्ररोहान् ।
दृष्ट्वा यस्यां विपणिरचितान् विद्रुमाणां च भङ्गान्
संलक्ष्यन्ते सलिलनिधयस्तोयमात्रावशेषाः ॥

பதவுரை: — यस्याम् - எந்த உஜ்ஜயினியில், कोटिशः- கோடிக்கணக்கில், विपणि - रचितान् - கடைத்தெருவில் பரப்பப்பட்டுள்ள, तारान् - சுத்தமான, तरल-गुटिकान् - நடுநாயக ரத்னமுடைய, हारान् - முத்து மாலைகளையும், शङ्खशुक्तीः - சங்குகளையும் முத்துச்சிப்பிகளையும், शष्पश्यामान् - இளம்புல் போல் பச்சை நிறமுடைய, उन्मयूख-प्ररोहान् - மேல் நோக்கிய ஒளிக்கதிர்களையுடைய, मरकत-मणीन् பச்சை ரத்னங்களையும், विद्रुमाणान् - பவழங்களின், भङ्गान्, च - துண்டங்களையும், दृष्ट्वा - பார்த்து, (स्थितैः जनैः) - இருக்கின்ற ஜனங்களால், सलिल-निधयः - ஸமுத்ரங்கள், तोयमात्र-अवशेषाः-ஜலத்தை மாத்திரமே எஞ்சியதாயுடையனவாக, संलक्ष्यन्ते - காணப்படுகின்றனவோ, (கருதப்படுகின்றனவோ), (तां) पुरीं अनुसर - அந்த உஜ்ஜயினி நகரத்தை அணுகுவாயாக.

கருத்துரை: — மேகமே, அந்த உஜ்ஜயினி செல்வச் சிறப்புள்ளது என்பதைக் கடைவீதியைக் கண்டு அறியலாம்,

விற்பதற்காக சுத்தமான முத்துக்களாலான ஹாரங்கள், நடு நாயகமான இரத்தினத்துடன் அமைக்கப் பெற்று, கோடிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. சங்குகளும் முத்துச்சிப்பி களும், பசும்புல் நிறத்தில் இருக்கும் பச்சை ரத்னங்களும், பவழங்களும் கோடிக்கணக்கில் உள்ளன. ஸமுத்திரத்தின் விலை பொருள்களான இவைகளைக் கடைத்தெருவில் ஏராள மாகக் காண்பவர்கள், "ஸமுத்ரம் இப்போது உப்புத் தண்ணீர் மாத்திரமே எஞ்சியதாக இருக்கும்" என ஊஹிப்பர். அதி சயோக்தி அணி.

விளக்கவுரை: — तार - சுத்தமான முத்தை இச் சொல் குறிக்கும். तरल - முத்து முதலிய மாலைகளில் நடுவில் வைக்கப்படுவது. நடுநாயகம். तरलो हारमध्यगः- என்பது அமரம்.

गुटिका - ரத்னம். तरलगुटिका - நடுநாயக ரத்னம். महारत्ने गुटिका என்பது சப்தார்ணவ கோசம். मयूख - கிரணம்; ஒளி. प्ररोह - முளைகள், கதிர்கள்; भङ्गः - உடைக்கப்பட்ட துண்டுகள். பவழத்தின் தரம் அறி வதற்காக அவை உடைக்கப்பட்டு வைக்கப்பட் டுள்ளன எனலாம். मरकत-பச்சை நிறமுள்ள ரத்னம்.

प्रद्योतस्य प्रियदुहितरं वत्सराजोऽत्र जह्रे
हैमं तालद्रुमवनमभूदत्र तस्यैव राज्ञः ।
अत्रोद्भ्रान्तः किल नलगिरिः स्तम्भमुत्पाट्य दर्पा-
दित्यागन्तून् रमयति जनो यत्र बन्धूनभिज्ञः ॥

பதவுரை: — अत्र-இங்கு (இந்த இடத்தில்தான்), वत्सराजः - வத்ஸ நாட்டு மன்னன் உதயனன், प्रद्योतस्य राज्ञः -ப்ரத்யோத ராஜனின், प्रियदुहितरम् - அன்பு மகளை

(வாஸவதத்தையை), जह्रे - கவர்ந்து சென்றான். अत्र-एव-இங்குதான், तस्य (राज्ञः) - அந்த அரசனுக்கு, (ப்ரத்யோதனனுக்கு), हैमम् - தங்கநிறமுள்ள, ताल-द्रुम-वनम् - பனைமரக்காடு, अभूत् - இருந்தது; अत्र - இங்குதான், नलगिरिः - நளகிரி என்ற யானை, दर्पात् - மதத்தினால், स्तम्भम् -கட்டுத்தறியை, उत्पाट्य-பெயர்த்துக் கொண்டு, उद्भ्रान्तः - கட்டுக்கடங்காமல் திரிந்தது, इति - என்று (கூறி), अभिज्ञः जनः - வரலாறு அறிந்த மக்கள், आगन्तून्-(தம் வீட்டிற்கு) வந்த, बन्धून् - உறவினர்களை, यत्र - எந்த உஜ்ஜயினியில், रमयति - மகிழ்விக்கின்றனரோ, तां पुरीं अनुसर-அந்த உஜ்ஜயினி நகரை அணுகுவாயாக.

கருத்துரை: — உஜ்ஜயினியில் வாழும் மக்கள் தம் வீட்டிற்கு வரும் உறவினர்களுக்கு உதயனன் கதையைக் கூறி மகிழ்விப்பார்கள். "இந்த இடத்திலிருந்துதான் உதயனன் சண்டமஹாஸேனனின் அருமைப்புதல்வி வாஸவதத்தையைக் கவர்ந்து சென்றான். இந்த இடத்தில்தான் அவனுடைய தங்கப் பனைமரக்காடு இருந்தது. அவ்வரசனின் நளகிரி என்ற யானை மதம் கொண்டு கட்டியிருந்த தூணையும் பெயர்த்தெறிந்து விட்டு இங்கு தான் திரிந்தது" என்று அந்தந்த இடங்களைச் சுட்டிக்காட்டி உறவினரை நகரமாந்தர் மகிழ்வித்தனர். அந்த நகரத்திற்கு நீ செல். ப்ரத்யோதனன் என்பது சண்ட மஹாஸேனன் என்ற உஜ்ஜயினி அரசனின் மற்றொரு பெயர். கடந்த கால ஸம்பவங்களை கண்ணெதிரில் நடப்பன போல் வர்ணிப்பதால் பாவிகம் என்ற அணி.

விளக்கவுரை — हैमम्-तालद्रुमवनम् - மஹாஸேனன் வேட்டையாடுதற்காக பொன்னிறம் கொண்ட பெரும் பனம் காடு ஒன்றை வைத்திருந்தான். नलगिरिः-மஹாஸேனனின் தவத்தால் மகிழ்ந்த சண்டிதேவி அவனுக்கு ஒரு கத்தியைக் கொடுத்தாள். நளகிரி

என்ற பலம் பொருந்திய யானையை இந்திரன் கொடுத்தான் என்றும், மதம் கொண்ட அந்த யானையை உதயனன் அடக்கினான் என்றும் பல்விநாதர் கூறுவார்.

पत्रश्यामा दिनकरहयस्पर्धिनो यत्र वाहाः
शैलोदग्रास्त्वमिव करिणो वृष्टिमन्तः प्रभेदात् ।
योधाग्रण्यः प्रतिदशमुखं संयुगे तस्थिवांसः
प्रत्यादिष्टाभरणरुचयश्चन्द्रहासव्रणाङ्कैः ॥

பதவுரை: — **यत्र** - *எந்த உஜ்ஜயினியில்,* **वाहाः** - *குதிரைகள்,* **पत्र-श्यामाः** - *இலை போல் பச்சை நிறத்தன வாய்,* **दिनकर-हय-स्पर्धिनः** - *(நிறத்திலும் வேகத்திலும்) சூர்யனின் குதிரைகளுடன் போட்டியிடுகின்றனவோ,* **शैल-उदग्राः** - *மலை போல் உயரமான,* **करिणः** - *யானைகள்,* **प्रभेदात्** - *மத நீரைப் பெருக்குவதால்,* **त्वमिव** - *உன்னைப் போல்,* **वृष्टिमन्तः** - *(மத) நீரைப் பொழிகின்றனவோ,* **योध-अग्रण्यः** - *தலை சிறந்த வீரர்கள்,* **संयुगे** - *யுத்தத்தில்,* **प्रतिदश-मुखम्** - *ராவணனையும் எதிர்த்து,* **तस्थिवांसः** - *நின்றனரோ, (இது காரணமாக அவர்கள்),* **चन्द्र-हास-व्रण-अङ्कैः** *(ராவணனுடைய) சந்த்ரஹாஸம் என்ற கத்தியினால் உண்டான புண்ணின் தழும்புகளாலே,* **प्रत्यादिष्ट-आभरण-रुचयः** - *மறுக்கப்பட்ட ஆபரண காந்தியையுடையவர்களோ, (तां) पुरीं अनुसर - அந்த உஜ்ஜயினி நகரை அடைவாயாக.*

கருத்துரை:— மேகமே, உஜ்ஜயினியில் குதிரைகள் நிறத்திலும் வேகத்திலும் சூரியன் குதிரைகளுடன் போட்டியிடுபவை. யானைகளும் மலைபோல் உயர்ந்து, நீ நீரைப் பொழிவது போல், மதஜலத்தைப் பெருக்குவன. வீரர்களும் ராவண

னுடன் எதிர்த்துப் போர் புரிந்தவர்கள். ராவணன் கத்தியான சந்திரஹாஸத்தினல் வெட்டுப்பட்டு ஏற்பட்ட தழும்புகளை உடலில் அணிகலனுகக் கொண்டவர்கள். இதனுல் நகைகளால் வரும் அணியை நீக்கியவர்கள். அத்தகைய உஜ்ஜயினியை நீ அடைய வேண்டும். அதிசயோக்தி அணி.

விளக்கவுரை — ஸூர்யனின் குதிரைகள் பச்சை நிறமுடையவை. வேகமும் கொண்டவை. அவற்றுடன் போட்டியிடும் சக்தி வாய்ந்தவை உஜ்ஜயினிக் குதிரைகள். வீரர்கள் தழும்புகளை அணியாகக் கருதியதால் வேறு அணிகளில் விருப்பமற்று இருந்தனர் என்று பொருள். முதலிரண்டு சுலோகங்கள் இடைச்செருகலாயினும் சிலர் அவற்றை ஏற்றுக் கொண்டனர். ராவணனுடன் சண்டையிட்டது ஒருகாலும் நடந்திராது என்பதால் இடைச் செருகலாக இருப்பதற்கும் கூடத் தகுதியற்றதென இச்சுலோகத்தை முற்றிலும் ஒதுக்கிவிட்டனர் சிலர். ராவணன் திக்விஜயத்தில் உஜ்ஜயினிக்கும் வந்திருக்கலாம் என்று கருதுகின்றனர் வேறு சிலர்.

जालोद्गीर्णैरुपचितवपुः केशसंस्कारधूपै-
र्बन्धुप्रीत्या भवनशिखिभिर्दत्तनृत्योपहारः ।
हर्म्येष्वस्याः कुसुमसुरभिष्वध्वखेदं नयेथाः
लक्ष्मीं पश्यन् ललितवनितापादरागाङ्कितेषु ॥ ३२ ॥

பதவுரை — (मेघ) - மேகமே, जाल-उद्गीर्णैः - ஜன்னல்கள் வழியாக வெளிவந்த, केश-संस्कार-धूपैः - (பெண்களின்) கூந்தலுக்கு வாசனையூட்டுவதற்கான நறுமணப் புகையால், उपचित-वपुः-விருத்தியடைந்த உடலுடையவனுகவும், बन्धु-प्रीत्या - உறவினன் (நண்பன்)

என்ற ப்ரீதியினாலே, **भवनशिखिभि:**-*வீட்டு மயில்களால்,* **दत्त-नृत्य-उपहार:**-*தரப்பட்ட நர்த்தனம் என்ற அன்பளிப்புடையவனாகவும் இருந்து கொண்டு,* **कुसुम-सुरभिषु** - *மலர்களால் நறுமணம் பொருந்திய,* **ललित-वनिता-पाद-रागाङ्कितेषु** - *அழகான வனிதையரின் பாதத்தில் பூசப்பட்ட செம்பஞ்சின் சிவந்த நிறத்தால் அடையாளமிடப் பெற்ற,* **हर्म्येषु** - *மாளிகைகளில் (தங்கி),* **अस्या:** - *உஜ்ஜயினியின்,* **लक्ष्मीम्** - *அழகை,* **पश्यन्** – *பார்த்துக் கொண்டு,* **अध्वखेदम्** - *வழிப் பயணத்தால் வந்த கஷ்டத்தை,* **नयेथा:** - *நீக்கிக் கொள்வாயாக.*

கருத்துரை: — மேகமே! உஜ்ஜயினியில் உள்ள மகளிர் சந்தனம், அகில் இவற்றைத் தணலில் இட்டு அதனின்றும் வரும் நறுமணப் புகையினால் தங்கள் கூந்தலுக்கு வாசனை ஊட்டுவர். அப்புகை மாளிகைகளின் ஜன்னல் வழியே வெளியிலே வந்து உன்னுடன் சேர்ந்து உன் தேஹத்திற்குப் புஷ்டியை (வளர்ச்சியை)த் தரும். வீடுகளில் வளர்க்கப்பட்டு வரும் மயில்கள், அவற்றின் நண்பனாகிய உன்னுடைய வருகையைக் கண்டு களிப்பினால் நடனமாடி உனக்கு வரவேற்பு அளிக்கும். மழை பெய்து இளைத்த உன் உடல், புகையினால் வளரப் பெற்றவனாக, மயில்கள் தரும் அன்பளிப்பான நடனத்தை ஏற்றுக்கொள்வாயாக! அலங்காரத்திற்காக வைக்கப்பட்டுள்ள புஷ்பங்களால் நறுமணமுடையனவாகவும், செம்பஞ்சு பூசிய பாதத்துடன் நடக்கும் அழகிய பெண்களின் அடிச்சுவடு பதிந்து அழகாகவும் இருக்கின்ற உஜ்ஜயினியிலுள்ள மாளிகைகளின் சிகரங்களில் தங்கி நகரத்தின் அழகைக் கண்டு களிப்புற்றவனாக, பயணத்தால் ஏற்பட்ட உன் கஷ்டத்தை நீக்கிக் கொள்வாயாக. உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை — केशसंस्कारधूपै: - धूम: - *புகை;* धूप:- *நறுமணப் புகை;* संस्कार-*ஒரு பொருளுக்குச் சிறப்பைத் தரும் செயல். பெண்கள் தங்கள் கூந்தலின் ஈரத்தைப்*

போக்கவும் வாசனையூட்டவும் சந்தனம், அகில் இவற்றின் பொடிகளால் நறுமணப் புகையையுண்டாக்கி அதைக் கூந்தலில் பரவச் செய்வர். இது இப்போதும் வழக்கத்திலுள்ளதே. இப்புகை ஜன்னல் வழியே வெளிவந்து மாளிகையின் மேற்பகுதியில் தங்கியிருக்கும் மேகத்துடன் சேர்ந்து, மழை பெய்து இளைத்த உடலுக்கு புஷ்டி தரும். புகை முதலியவற்றின் தொகுதியே மேகம் என்பதை 5-ஆம் சுலோகத்தில் கவி கூறியுள்ளார்.

उपहार: - கொடுக்கப்படுவது என்பது பதப்பொருள். கடவுளுக்கும் பெரியோர்களுக்கும் பக்தி, மரியாதை இவற்றுடன் தரப்படும் பொருளைக் குறிப்பது. இங்கு மயில்கள் தம் நண்பனான மேகத்திற்குத் தங்களது நர்த்தனத்தையே உபஹாரமாக - அன்பளிப்பாகத் தரும் என்று கூறினர்.

बन्धु: - உறவினர்; இங்கு நண்பன் என்ற பொருளில் வந்தது. மனம் மகிழ்ந்தால் உடல் அயர்ச்சி நீங்குமாதலால் உஜ்ஜயினியின் அழகைக் கண்டு களித்து உடல் அயர்ச்சியைப் போக்கிக் கொள்ளும்படி கூறப்பட்டது. कुसुमसुरभिषु - மாளிகைகள் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்குமாதலால் மணமுடையதாக இருக்கும்.

ललित... अंकितेषु- உஜ்ஜயினிப் பெண்கள் இயற்கையாகவே அழகுடையவர்கள். அவ்வழகினை அதிகமாக்க விரும்பியவர்கள் போல் அவர்கள் பாதங்களின் அழகைக் கருதி செம்பஞ்சு ரஸம் பூசுவர். காலில் இடப்பட்ட செம்பஞ்சு ரஸம் அவர்கள் நடக்கும்

போது தரையில் பதிந்து இருக்கும். இப்படிப் பதிந்த அடிச்சுவடுகளும் தரைக்கு அழகு தருவன. हर्म्य - மாளிகைகள்.

भर्तुः कण्ठच्छविरिति गणैः सादरं वीक्ष्यमाणः
पुण्यं यायास्त्रिभुवनगुरोर्धाम चण्डीश्वरस्य ।
धूतोद्यानं कुवलयरजोगन्धिभिर्गन्धवत्या-
स्तोयक्रीडानिरतयुवतिस्नानतिक्तैर्मरुद्भिः ॥ ३३ ॥

பதவுரை: — गणैः - பிரமத கணங்களால் (சிவ ஸேவகர்களால்), भर्तुः - (தம்முடைய) தலைவரது, कण्ठच्छविः - கழுத்தின் நிறம் போன்ற நிறமுடையவன் (நீ), इति - என்ற காரணத்தால், सादरम् - அன்புடன் (கனிவுடன்), वीक्ष्यमाणः (सन्) - பார்க்கப்படுகின்றவனாக இருந்து கொண்டு, कुवलय-रजो-गन्धिभिः - நீலோத்பல மலரின் மகரந்தப் பொடிகளால் வாசனையுடையதும், तोय-क्रीडा-निरत-युवति-स्नान-तिक्तैः - ஜலக்ரீடையில் ஈடுபட்டுள்ள அழகிகளின் ஸ்நாநப் பொருளால் நறுமணமுடையதுமான, गन्धवत्याः - கந்தவதி என்ற நதியின், मरुद्भिः - காற்றினால், धूत-उद्यानम् - அசைக்கப்பட்ட நந்தவனமுடையதும், पुण्यम् - தூய்மை தருவதுமான, त्रिभुवनगुरोः - மூவுலகிற்கும் குருவான (தலைவரான), चण्डीश्वरस्य - சிவபிரானுடைய, धाम-மஹாகாளம் என்ற கோயிலை, यायाः - அடைவாயாக.

கருத்துரை:- மேகமே, உஜ்ஜயினியின் மாளிகைகளில் தங்கி இளைப்பாறிய பின் அதற்கு அருகில் உள்ள மஹாகாளம் என்ற சிவபிரானுடைய கோயிலை நீ அடைய வேண்டும். நீ அக்கோயிலை அணுகும் போதே, சிவஸேவகர்

களாகிய பிரமதகணங்கள், சிவபிரானுடைய கழுத்தின் நிறம் நிகர்த்த நீல நிறமுடையவன் நீ என்ற காரணத்தால் உன்னை அன்புடன் நோக்குவர். கோயிலின் அருகில் கந்தவதி என்ற ஆற்றினின்றும் கருங்குவளை மலரின் மகரந்தப் பொடிகளின் வாசனையுடையதும், அவ்வாற்றில் ஜலக்ரீடை செய்யும் யுவதிகள் ஸ்நாநத்திற்குக் கொண்டு வந்த நறுமணப் பொருளினால் மணம் பொருந்தியதுமான காற்று, கோயிலின் அண்மையில் உள்ள நந்தவனத்தின் செடி கொடி மரங்களின் மேல் வீசி அவற்றை இனிதே அசைக்கும். கோயில் தூய்மை தருவதாகவும், அதன் சுற்றுப் புறங்கள் மனத்திற்கு இன்பம் தருவதாகவும் உள்ளன. உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை: — कण्ठच्छविः-பாற்கடலைக் கடைந்த பொழுது வந்த விஷத்தை உண்டு கழுத்தில் நிறுத்திக் கொண்டதால், சிவபிரானுடைய கழுத்து நீல நிறமாயிற்று; அதே நிறத்தில் இருக்கும் மேகத்தைக் காணும் போது சிவஸேவகர்களுக்கு அதனிடத்தில் அன்பு தோன்றுகிறது. கவிகள், கருமை நீலம் இரண்டினையும் ஒன்றாகவே கருதுவர்.

त्रिभुवनगुरुः - மூவுலகிற்கும் தலைவர்; ஞானம் தரும் ஆசார்யர்; शङ्करात् ज्ञानमन्विच्छेत् - என்பதைக் காண்க. जगतः पितरौ - என்பதால் உலகின் தந்தை என்ற பொருளும் கொள்ளலாம்.

धाम - இடம், கோயில், அந்த இடத்திற்கு மஹாகாளம் என்று பெயர். அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபிரானுக்கும் மஹாகாலர் என்றே பெயர். பொன்னார் மேனியராயினும், (கழுத்திலே) மிகவும் கருநிறமுடையவர் என்பதனைக் குறிப்பது 'மஹா-கால' என்ற சொல். पुण्यम् - புண்யம் தருவது; चण्डी - உக்ர கலையுடன் இருக்கும்போது பார்வதிக்கு இப்பெயர் உண்டு. चण्डी-ईश्वरः-சிவபிரான்.

गन्धवती - மஹாகாளத்திற்கு அருகிலுள்ள ஒரு ஆறு. स्नान - ஸ்நாநத்திற்கு உபயோகப்படும் வாசனைப் பொருளையும் இச்சொல் குறிக்கும் என்பது வைஜயந்தி.

अप्यन्यस्मिञ्जलधर महाकालमासाद्य काले
स्थातव्यं ते नयनविषयं यावदत्येति भानुः ।
कुर्वन् संध्याबलिपटहतां शूलिनः श्लाघनीया-
मामन्द्राणां फलमविकलं लप्स्यसे गर्जितानाम् ॥३४॥

பதவுரை:- जलधर - மேகமே, महाकालम् - மஹாகாளம் என்ற இடத்தை, अन्यस्मिन् काले - (ஸாயங்காலமல்லாத) வேறு நேரத்தில், आसाद्य अपि - அடைந்திருப்பினும், यावत् - எந்த நேரத்தில், भानुः - ஸூர்யன், नयनविषयम् - கண்களுக்கு புலனாகும் இடத்தை, अत्येति - கடந்து செல்கின்றானோ, (तावत्) - அந்த நேரம் வரை, ते - உன்னால், स्थातव्यम् - (அங்கு தங்கி) இருக்கப்பட வேண்டும் (நீ இருக்கவேண்டும். அப்படி நீ இருந்தால்), शूलिनः - சிவபிரானுக்கு, श्लाघनीयाम् - போற்றத் தகுந்த, सन्ध्याबलिपटहताम् - ஸந்த்யாகால பூஜையில் ம்ருதங்க வாத்யமாக இருக்கும் நிலையை, कुर्वन् - செய்பவனான நீ, आमन्द्राणाम् - மென்மையும் ஆழமுமுடைய, गर्जितानाम् - (உனது) கர்ஜனைகளுக்கு, अविकलम् - பரிபூர்ணமான (முழுமையான), फलम् - பலனை, लप्स्यसे - அடைவாய்.

கருத்துரை:- மேகமே, சாயங்காலதிற்கு முன்பே நீ மஹாகாளம் சென்றால் ஸூர்யன் அஸ்தமிக்கும் வரை அங்கு தங்கியிரு. ஸூர்யன் அஸ்தமித்தவுடன் சாயங்கால பூஜை சிவபிரானுக்கு நடைபெறும். பூஜை காலத்தில் ம்ருதங்கம் முதலான வாத்யங்களை வாசிப்பார்கள். நீ சிவபூஜை

காலத்தில் மென்மையும் ஆழமும் வாய்ந்த உனது இடி யோசையால் ம்ருதங்க ஒலியைச் செய்து இடியோசை செய்வதின் நற்பயனைப் பெறுவாய். இவ்வோசை காதிற்கு இனியதாக எல்லோருடைய புகழுரைகளையும் பெறும். சிவ பூஜையில் சேருவதன் மூலம் இடித்தலின் முழுப்பயனையும் பெறுவாய். ரூபகம் அலங்காரம்.

விளக்கவுரை:— ते स्थातव्यम् - நீ இருக்க வேண்டும் என்பது கருத்து. बलिः - பூஜை. पटह - ஒரு வகை வாத்யம்; ம்ருதங்கம், பேரிகை என்றெல்லாம் உரை யாசிரியர் கூறுவர். शूली - சூலாயுதமுடையவர், சிவ பிரான். मन्द्र-கம்பீரமான, கேட்பதற்கு இனிய, गर्जित - கர்ஜனை.

पादन्यासैः क्वणितरशनास्तत्र लीलावधूतै

रत्नच्छायाखचितवलिभिश्चामरैः क्लान्तहस्ताः ।

वेश्यास्त्वत्तो नखपदसुखान् प्राप्य वर्षाग्रबिन्दू-

नामोक्ष्यन्ते त्वयि मधुकरश्रेणिदीर्घान् कटाक्षान्।।३५।।

பதவுரை — तत्र - ஸந்த்யா பூஜையில், पादन्यासैः - (நர்த்தனத்திற்கு அங்கமாக) காலடிகளை வைத்தலால், क्वणित-रशनाः - ஒலிக்கின்ற மேகலையுடையவர்களும், लीला-अवधूतैः — அழகாக வீசப்பட்ட, रत्नच्छाया-खचित-वलिभिः - (கைவளைகளிலுள்ள) ரத்னங்களின் ஒளி படர்ந்த பிடிகளையுடைய, चामरैः - சாமரங்களால், क्लान्त-हस्ताः - சிரமமடைந்த கைகளையுடைவர்களுமான, वेश्याः - கணிகையர்கள், त्वत्तः - உன்னிடமிருந்து, नख-पद-सुखान् - (காதலர்கள் உண்டாக்கிய) நகக்கீறல் களுக்கு ஸுகமளிக்கும், वर्ष-अग्र-बिन्दून् - மழையின்

முதல் துளிகளை, प्राप्य - பெற்று, त्वयि - உன்னிடத்தில், मधुकर-श्रेणि-दीर्घान् - வண்டுகளின் வரிசை போல் நீண்ட, कटाक्षान् - கடைக்கண் நோக்குகளை, आमोक्ष्यन्ते - இடுவார்கள் (செய்வார்கள்).

கருத்துரை:- மேகமே, மஹாகாளருடைய கோயிலில் ஸந்த்யாகால பூஜையில் கையில் சாமரம் பிடித்து, கணிகையர் நர்த்தனமாடி சிவபிரானுக்குத் தொண்டு செய்வர். நர்த்தனத்திற்கு அங்கமாக தாளத்திற்குச் சேர பாதங்களை வைக்கும் போது அப்பெண்களின் இடையிலுள்ள மேகலை ஒலி செய்யும். அவர்கள் கைகளில் அணிந்துள்ள ஆபரணங்களிலுள்ள ரத்னங்களின் ஒளி சாமரப் பிடிகளில் படரும். சாமரங்களை வீசி நடனமாடியதால் அவர்கள் களைப்புறுவர். அவர்களின் உடலில் காதலர்கள் உண்டாக்கிய நகக்குறிகள் (நகக்கீறல்கள்) இருக்கும். நீ அப்போது முதன் முதலாகத் தரும் சிறு மழைத்துளிகள் நகக்குறிகள் மேல் விழுந்து இதமாக இருக்கும். இப்படி உதவி செய்த உன்னை நன்றிப் பெருக்குடன், தம் முகங்களை நீ இருக்கும் திசையில் திருப்பாது, வண்டுகளின் வரிசைபோல் கருத்து நீண்டிருக்கும் அவர்களது கடைக்கண் நோக்குகள் என்ற மாலையை உனக்கு இடுவர். பெண்களின் கடைக்கண் நோக்கிற்கு இடமாக இருத்தல் என்ற நற்பேற்றை நீ பெறுவாய். ஸ்வபாவோக்தி அலங்காரம். மழைத்துளிகளைக் கொடுத்து கடைக்கண்களைப் பெறுவதால் பரிவ்ருத்தி என்ற அலங்காரமும் உண்டு.

விளக்கவுரை:—கணிகையர் கோயில்களில் நடனமாட அமர்த்தப்பட்ட மகளிர் - தேவதாஸிகள். அவர்கள் ஆடிய நர்த்தனம் தேசிகம் என்ற வகையைச் சார்ந்தது என்பர் மல்லிநாதர். கத்தி, பந்து, சேலையின் முனை, சிறுகுச்சி, சாமரம், பூமாலை, சிறு வீணை முதலியவைகளைக் கையில் வைத்துக் கொண்டு செய்யப்படும் ந்ருத்யம், 'தேசிகம்' எனப்படும் என்று

ந்ருத்யஸர்வஸ்வம் என்ற நூல் கூறும். அத்தகைய ந்ருத்தியத்திற்கு இணங்க பாதவைப்புகளைச் செய்யுங் கால், இடையிலுள்ள மேகலை ஒலிக்கின்றது. அவர் கள் சாமரம் பிடித்து வீசி நர்த்தனம் செய்வதால் கை யணிகளின் காந்தி சாமரப் பிடிகளில் பரவுகின்றது. சாமரங்களை வீசுவதாலும் நர்த்தனம் செய்வதாலும் அவர்கள் களைப்புறுவர்.

नखपदसुखान् - கலவிக் காலத்தில் காதலிகளின் உடலில் நகக் கீறல் ஏற்படும் என்று கூறுவது கவி மரபு. கணிகையரின் உடலில் உள்ள நகக்குறிகளுக்கு மேகத்தின் முதல் மழைத்துளிகள் இதமாக இருக்கும். எனவே இத்தகைய சுகம் பெற்ற கணிகையர் தமது நன்றியை கடைக்கண் நோக்கினால் காட்டுவர். கடைக்கண் நோக்கும், கருத்து, வண்டுகளின் வரிசை போல் மேகம் வரை செல்லுமாதலால் நீண்டு இருக் கும். தாங்கள் மேகத்தினிடம் பெற்ற நன்மைக்கு ப்ரதியுபகாரமாக தாங்கள் கடைக்கண் நோக்கு என்ற மாலையை மேகத்திற்கு அணிவிப்பர்.

आमोक्ष्यन्ते - இச்சொல் ஆபரணம் அணிவித்தலை யும் குறிக்கும். आमुञ्चतीवाभरणं द्वितीयम् - என்பது ரகு வம்சம் 13-21. वलि - சாமரத்தின் கைப்பிடி.

पश्चादुच्चैर्भुजतरुवनं मण्डलेनाभिलीनः
सान्ध्यं तेजः प्रतिनवजपापुष्परक्तं दधानः ।
नृत्तारम्भे हर पशुपतेरार्द्रनागाजिनेच्छां
शान्तोद्वेगस्तिमितनयनं दृष्टभक्तिर्भवान्या ।। ३६ ।।

பதவுரை — पश्चात् - (ஸந்த்யாகால பூஜைக்குப்) பிறகு, पशुपतेः - சிவபிரானுடைய (மஹாகாலருடைய), नृत्तारम्भे - (ஆனந்த) தாண்டவ நர்த்தனத்தின் தொடக்கத்தில், प्रति-नव-जपापुष्प-रक्तम् - புத்தம் புதிய செம்பருத்திப் பூவைப் போல் சிவந்த, सान्ध्यम् - மாலைக் காலத்திலுள்ள, तेजः - ஒளியை, दधानः - தாங்கியவனாக (நீ), उच्चैः भुज-तरुवनम् - (சிவபிரானுடைய) உயரமான புஜங்களாகிய மரக்காட்டினை (மரம் போல் உயர்ந்துள்ள புஜங்களைச் சுற்றிலும்), मण्डलेन – வட்டமான வடிவினால், अभिलीनः - சூழ்ந்து கொண்டு, भवान्या - பார்வதி தேவியால், शान्त-उद्वेग-स्तिमित-नयनम् - பயம் (அல்லது அருவருப்பு) நீங்கி அமைதி கொண்ட கண்ணுடன், दृष्ट-भक्तिः - பார்க்கப்பட்ட பக்தியுடையவனாக, आर्द्र-नागाजिन-इच्छाम् - (ரத்தத்தினால்) ஈரமான யானைத்தோலை அணிவதில் உள்ள (சிவபிரானுடைய) விருப்பத்தை, हर - நீக்குவாயாக.

கருத்துரை:- மேகமே, நீ பூஜைகாலத்தில் ம்ருதங்கம் போல் ஒலித்து சிவஸேவை செய்தாய். பூஜை முடிந்த பின் மற்றொரு கைங்கர்யமும் நீ செய்ய வேண்டும். பூஜைக்குப் பின் சிவபிரான் தமது இருபது கைகளையும் உயர்த்தி அசைத்து ஆனந்த தாண்டவம் செய்வது வழக்கம். அப்போது ரத்தம் சொரியும் யானைத்தோலை உத்தரீயமாக அணிவார். நீ சாயங்கால சூரியனின் செங்கிரணம் பட்டு, அப்போது மலர்ந்த செம்பருத்தியின் சிவந்த நிறமுடையவனாவாய். கருமையும் சிவப்பும் உள்ள உனது நிறம் ரத்தம் சொட்டும் யானைத்தோலின் நிறம் பெற்று இருக்கும். சிவபிரான் நர்த்தனம் தொடங்கும் போது நீ வட்ட வடிவம் கொண்டு, காடு போல் பரவியுள்ள அவரது புஜங்களைச் சூழ்ந்து கொண்டு யானைத்தோல் உத்தரீயம் செய்யும் பணியைச்

செய். பார்வதி, யானைத்தோலைப் பார்க்கும்போது கொள்ளும் அருவருப்பையோ அச்சத்தையோ உன்னைப் பார்க்குங்கால் கொள்ளமாட்டாள். நீ சிவபிரானுக்குத் தரும் அழகைக் கண் இமைக்காது பார்த்து மகிழ்வதுடன் உனது பக்திச் செயலையும் ஆதரவுடன் கவனிப்பாள். இவ்வாறு தொண்டு செய்யும் நீ சிவபிரானுக்கு யானைத்தோல் அணிவதிலுள்ள விருப்பத்தை நீக்குவாயாக. யானைத்தோலுக்குப் பதிலாக நீ அவரைச் சூழ்ந்து இருக்கும் போது யானைத் தோலில் அவர் விருப்பம் கொள்ள மாட்டார். மேகத்தைக் காணும் போது யானைத்தோலின் நினைவு வருதலால் ஸ்மரணலங்காரம் என்பர் பூர்ண ஸரஸ்வதி.

விளக்கவுரை: — उच्चैः भुजतरुवनम् - ஆனந்த தாண்டவம் செய்யும் போது கைகளை உயர்த்துவதால் उच्चैः என்ற விசேஷணம் தரப்பட்டது. புஜங்கள் நீண்டும் பலவாயும் இருத்தலால் तरुवनम् - மரங்களின் காடு என்றார். मण्डलेन-मण्डलाकारेण - வட்டமான வடிவத்துடன், अभिलीनः - பதிந்தவனாக, सान्ध्यं तेजः - மேகத்திற்கு இயற்கையிலே செந்நிறமில்லை. எனவே அஸ்தமிக்கும் சூரிய ஒளியினால் செந்நிறம் பெற்றதெனக் கருத வேண்டும். आर्द्रनागाजिनेच्छाम् - யானை வடிவில் வந்த கஜாசுரன் என்பவனைக் கொன்று அவன் தோலை நர்த்தன காலத்தில் விரும்பி அணிவார் சிவபிரான்; கஜாசுரன் யானைத்தோலைப் போர்த்திக் கொண்டு வந்தான் என்றும் அவனைக் கொன்றபின் சிவபிரான் அத்தோலை அணிந்து கொண்டார் என்றும் கூறுவர்.

शान्तोद्वेग - ரத்தம் சொட்டும் யானைத்தோலைப் பார்க்கும் போது பார்வதி அச்சம் கொள்வது இயற்கையே. ஆனால் யானைத்தோலுக்குப் பதிலாக மேகம் இருக்குமாயின் அதனைப் பார்ப்பதில் அச்சமோ அரு

வருப்போ இராது. மேகத்தின் அழகைக் கண் இமைக்காது (स्तिमित) காண்பாள். दृष्टभक्तिः இங்கு भक्ति என்ற சொல் பக்தியின் செயலான மேகத்தின் தொண்டினைக் குறிக்கும். हर - மேகமே, நீ ஹரனுக்கும் ஹரனுக்கு இருக்கும் பேறு பெறுவாய்.

गच्छन्तीनां रमणवसतिं योषितां तत्र नक्तं
रुद्धालोके नरपतिपथे सूचिभेद्यैस्तमोभिः ।
सौदामन्या कनकनिकषस्निग्धया दर्शयोर्वीं
तोयोत्सर्गस्तनितमुखरो मा स्म भूर्विक्लवास्ताः ॥३७॥

பதவுரை: — तत्र - உஜ்ஜயினியில், नक्तम् - இரவில், रमण-वसतिम् - காதலர்களின் இருப்பிடம் நோக்கி, गच्छन्तीनाम् - செல்லுகின்ற, योषिताम् - வனிதையர்க்கு, सूचिभेद्यैः - ஊசியினால் பிளக்கும்படியான, तमोभिः - இருளினாலே, रुद्ध-आलोके - பார்வை தடுக்கப்பட்ட, नरपति-पथे - ராஜ வீதியில், कनक-निकष-स्निग्धया - உரைத்த தங்கத்தின் ரேகை போல் அழகான, सौदामन्या - மின்னலினால், उर्वीम् - தரையை (வழியை), दर्शय - காட்டு; तोय-उत्सर्ग-स्तनितमुखरः - மழை பொழிதல், இடி இடித்தல் இவற்றால் பேரொலி செய்பவனாக, मा स्म भूः - இராதே. ताः - (ஏனெனில்) அவர்கள், विक्लवाः - அச்சமுறும் இயல்புடையவர்கள்.

கருத்துரை:- மேகமே, சிவஸேவை முடிந்தவுடன் உஜ்ஜயினிக்குத் திரும்பு. அங்கும் நீ செய்ய வேண்டிய பணி ஒன்று உண்டு. நகரில் உள்ள அபிஸாரிகைகள் முன்னிரவில் ராஜ வீதி வழியாக தம் காதலர் இல்லம் நோக்கிச் செல்வர். ஊசியால் குத்தி எடுக்கலாம் என்னும்படி அழுத்தமான இருள்

ராஜவீதியில் கவிந்து பார்வையை மறைக்கும். அச்சமயத்தில் உரை கல்லில் உரைக்கப்பட்ட தங்கத்தின் ரேகை போல் மென்மையான உன்னுடைய மின்னலால் அவ்வனிதையர்க்கு வழியைக்காட்டு. மழை பெய்தும் இடி இடித்தும் ஓசையுண்டாக்காதே. அவர்கள் அச்சமுறும் இயல்பினர். உனது இடியோசையையோ மழை ஒலியையோ கேட்பராயின் அவ்வனிதையர் பயந்து காதலர்களிடம் செல்வதைத் தவிர்ப்பர். அவர்கள் காதலின்பத்திற்கு தடைசெய்யாதே. விஷமாலங்காரம் என்பர் பூர்ணஸரஸ்வதி.

விளக்கவுரை: — சிவ ஸேவை சாயங்காலத்தில் முடிந்து விடுவதால் முன்னிரவில் மேகம் செய்ய வேண்டிய பணி உஜ்ஜயினியில் உள்ளதெனக் கூறுகிறார்.

योषिताम् - காதலர்களை சந்திக்க அவர்கள் இருக்கும் இடம் செல்லுகின்ற இப்பெண்கள் அபிஸாரிகைகள் எனப்படுவர். காவ்யங்களில் வருணிக்கப்படுகின்ற எட்டுவகை ச்ருங்கார நாயகிகளில் ஒருத்தி இவள். सूचिभेद्यैः - இருளின் அடர்த்தியைக் காட்ட ஊசியினால் குத்தி எடுக்கலாம் என்று எண்ணும்படி இருக்கும் இருள் என்றார். कनकनिकषस्निग्धया - தங்கத்தின் உரை தேய்த்தாற் போல் காண்பதற்கு இனிய என்பது பதப்பொருள். 'உரைகல்லில் உரைத்த தங்கத்தின் கோடு போல் அழகிய' என்பது கருத்து. तोयोत्सर्ग 'மழை பெய்தும் இடி இடித்தும் ஓசை செய்ய வேண்டாம்' என்றார்.

துணிவுடன் இருளில் காதலர் இல்லம் செல்பவர்களாயினும் அப்பெண்கள் இயற்கையிலே அஞ்சும் ஸ்வபாவமுடையவராதலால் இடி ஓசையால் அச்ச

முற்றுக் காதலர் இருக்குமிடம் போகாமல் நின்று விடுவர். கவி காதலர்களிடம் கொண்ட கனிவு இதனால் புலனாகும்.

मा स्म भूः என்பதில் स्म என்பது வாக்யத்தின் அழகிற்காகச் சேர்க்கப்பட்டது. இதை வாக்யாலங்காரம் என்பர். मा च भूः என்று பாடத்தில் ஓசை நயம் இல்லை என்பது கவனித்தற்குரியது. क्लैब्यं मास्म गमः என்பதில் स्म என்பது வந்துள்ளதையும் கவனிக்க; கீதை 2-3.

तां कस्यांचिद्भवनवलभौ सुप्तपारावतायां

नीत्वा रात्रिं चिरविलसनात्खिन्नविद्युत्कलत्रः ।

दृष्टे सूर्ये पुनरपि भवान् वाहयेदध्वशेषं

मन्दायन्ते न खलु सुहृदामभ्युपेतार्थकृत्याः ॥ ३८ ॥

பதவுரை: — चिर विलसनात् - வெகு நேரம் மின்னியதால்; खिन्न-विद्युत्-कलत्रः - களைப்படைந்த மின்னல் என்ற மனைவியையுடைய, भवान् - நீ, सुप्त-पारावतायाम् - தூங்கும் புறாக்களையுடைய, कस्यांचित् - ஒரு, भवन-वलभौ - வீட்டின் மேற்தளத்தில், ताम् रात्रिम् - அந்த இரவை, नीत्वा - போக்கியபின், सूर्ये - சூரியன், दृष्टे - பார்க்கப்பட்ட போது (உதயமான பிறகு), पुनरपि - மேலும், अध्वशेषम् - வழியின் எஞ்சியுள்ள பகுதியை, वाहयेत् - போக்குவாயாக. सुहृदाम् - நண்பர்களின், अभ्युपेत-अर्थ-कृत्याः - காரியங்களைச் செய்வதாக ஏற்றுக் கொண்டவர்கள், न मन्दायन्ते खलु - தாமதம் செய்வதில்லையல்லவா?

கருத்துரை:- மேகமே, அபிஸாரிகைகளுக்கு வெளிச்சம் தருவதற்காக வெகு நேரம் மின்னியதால் உன் மனைவியாகிய

மின்னல் களைத்திருப்பாள். எனவே, உஜ்ஜயினியில் உள்ள ஒரு மாளிகையில் மேல்தளத்தில் இரவைப் போக்கு. அம் மாளிகைகளின் கொடுங்குகளில் புருக்கள் அயர்ந்து தூங்கும். பின் சூரிய உதயம் தொடங்கியவுடன் பயணத்தை மேற்கொள்வாயாக. நண்பனின் காரியத்தை நிறைவேற்றுவதாக ஏற்றுக் கொண்டவர்கள் தாமதம் செய்யமாட்டார்கள். எனவே, நீ தாமதித்தல் கூடாது.

முதல் மூன்று அடிகளில் குறிப்பிட்ட பொருளை வலியுறுத்த நாலாவது அடியில் பொதுவான ஒரு நீதி கூறப்படுவதால் அர்த்தாந்தரந்யாஸம் என்ற அணி.

விளக்கவுரை: — खिन्नः... कलत्रः - *மின்னலை மேகத்தின் மனைவியாகக் கூறினார்.* वलभिः - *மாளிகைகளின் மேற்தளம். இது திறந்த வெளியாக இருப்பது. வீடுகளில் புருக்கள் தங்கியிருக்க சிறு சிறு புரைகள் அமைத்து இருப்பர். அவற்றில் புருக்கள் தூங்கும் என்று புருக்களின் இயற்கை கூறப்பட்டது. இப்புரைகளை கொடுங்கு என்பர்.*

உஜ்ஜயினியின் அழகில் மயங்கி தாமதிக்க வேண்டாம் என்பதை நினைவுறுத்துவது मन्दायन्ते न खलु *என்பது.*

तस्मिन् काले नयनसलिलं योषितां खण्डितानां
शान्तिं नेयं प्रणयिभिरतो वर्त्म भानोस्त्यजाशु ।
प्रालेयास्रं कमलवदनात् सोऽपि हर्तुं नलिन्याः
प्रत्यावृत्तस्त्वयि कररुधि स्यादनल्पाभ्यसूयः ॥ ३९ ॥

பதவுரை: — तस्मिन् काले - *அந்த (விடியற் காலை) வேளையில்,* प्रणयिभिः - *காதலர்களாலே,* **खण्डितानाम्** -

கலவி மறுக்கப்பட்ட ('கண்டிதை' என்றழைக்கப் படும்), योषिताम् - ஸ்த்ரீகளின், नयनसलिलम् - கண்ணீர் (பெருகுவதனின்றும்), शान्तिम् - ஓய்தலை, नेयम् - அடைவிக்கப்பட வேண்டும். अतः - ஆதலால், भानोः - சூரியனின், वर्त्म - வழியை, आशु - சீக்ரம், त्यज - விட்டுவிடு; सः अपि - அவனும் (சூரியனும்), नलिन्याः - தாமரைக் குளம் என்ற தன் காதலியின், कमलवदनात् - தாமரை மலர் என்ற முகத்தினின்றும், प्रालेय-अस्रम् - பனித்துளி என்ற கண்ணீரை, हर्तुम् - நீக்க, प्रत्यावृत्तः - திரும்பி வந்தவனாக, त्वयि - நீ, कररुधि - (அவன்) கையை (கிரணங்களை)த் தடுக்கும் போது, अनल्प-अभ्यसूयः - (உன்னிடம்) அதிகம் கோபமுடையவனாக, स्यात् - ஆவான்.

கருத்துரை: — மேகமே! காதலிகளைச் சில காதலர்கள் இரவில் துறந்து, வேறு காதலிகளுடன் இரவைப் போக்கி விட்டு விடியற்காலை வீட்டிற்கு வருவர். அக்காதலிகள் கணவரால் புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக கண்ணீர் உகுத்துக் கொண்டிருப்பர். கணவர்கள் விடியற்காலை வேளையில் வீடு திரும்பி காதலிகளிடம் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டுக் கண்ணீரைத் துடைப்பர். விடியற்காலைதான் இது நிகழும் நேரமாகும். எனவே, பொழுது புலர்ந்தது என்பதைக் காட்ட சூரியன் வரும் பொழுது, சூரியனை நீ மறைக்காதே; மறைத்தால் பொழுது புலரவில்லை எனக் கணவர்கள் வருவதில் தாமதம் ஏற்படும். அத்தகைய தாமதத்திற்கு நீ காரணமாக வேண்டாம். சூரியன் தன் காதலியான தாமரைக்குளத்தை விட்டு எங்கோ சென்று காலையில் வந்து தன்னால் புறக்கணிக்கப்பட்ட காதலியின் தாமரைமலர் என்ற முகத்தினின்றும் பனித்துளி என்ற கண்ணீரைத் துடைக்க முற்படும் நேரமும் அதுவே. எனவே, அச்சமயத்தில் நீ குறுக்கே வந்து அவனது கரங்களை-கிரணங்களை-மறைத்தால் அவனுக்கும் மிக்க கோபம்

வரும். ஆதலால் உஜ்ஜயினி நகரத்தை விட்டுச் சீக்கிரமே புறப்படுவாயாக. ஸமாஸோக்தி அணி.

விளக்கவுரை: — खण्डिता - ஸம்ஸ்க்ருத காவ்யங்களிலே வர்ணிக்கப்படும் எட்டு வகை நாயகிகளில் ஒருத்தி. இரவை வேறு ஒருத்தியுடன் போக்கிய பின் தன் வீடு திரும்பும் கணவனிடம் கலவிக்குறிகளைக் கண்டு கோபம் கொள்பவள். 'கண்டிதா' 'खण्डिता எனப்படுவாள். नीत्वान्यत्र निशां प्रातरागते प्राणवल्लभे अन्यासम्भोगचिह्नैस्तु कुपिता खण्डिता मता என்பது அவளுக்கு இலக்கணம் கூறுவது. खण्डिता - புறக்கணிக்கப்பட்டவள். இத்தகைய காதலியைத் தேற்ற காதலர்கள் வரும் நேரம் பொழுது புலரும் நேரம்தான். சூரியனும் தன் காதலியைத் தேற்ற வரும் நேரமும் இதுவே என்றார். தாமரை மலரில் படர்ந்த பனித்துளி சூரியன் வந்தவுடன் உலர்ந்து நீங்குவதை சூரியக் காதலன் தாமரைக் குளக்காதலியின் தாமரை மலர் முகத்தினின்று பனிக் கண்ணீரைத் துடைப்பதாக உத்ப்ரேக்ஷித்தார்.

गम्भीरायाः पयसि सरितश्चेतसीव प्रसन्ने
छायात्मापि प्रकृतिसुभगो लप्स्यते ते प्रवेशम् ।
तस्मादस्याः कुमुदविशदान्यर्हसि त्वं न धैर्यात्
मोघीकर्तुं चटुलशफरोद्वर्तनप्रेक्षितानि ॥ ४० ॥

பதவுரை — गम्भीरायाः - கம்பீரா என்ற, सरितः - நதியின், प्रसन्ने चेतसि-इव - தெளிந்த மனம் போன்றிருக்கின்ற, पयसि - நீரில், प्रकृति-सुभगः - இயற்கையிலே அழகு வாய்ந்த, ते छायात्मा अपि - உனது நிழல் (பிரதி பிம்ப)

வடிவமும், **प्रवेशम्** *- புகுதலை (இடத்தை),* **लप्स्यते** *- அடையும்.* **तस्मात्** *- ஆதலால்,* **अस्याः** *- இந்த நதி என்ற காதலியின்,* **कुमुद-विशदानि** *- ஆம்பல் போல் வெண்ணிற மான,* **चटुल-शफर–उद्वर्तन-प्रेक्षितानि** *– வேகமான சபரம் என்ற மீன்களின் துள்ளுதல்களாகிய கடைக்கண் நோக்குகளை,* **धैर्यात्** *- தைர்யத்தினால் (துணிவினால்),* **मोघीकर्तुम्** *- பயனற்றதாகச் செய்ய,* **त्वम्** *- நீ,* **न अर्हसि** *- தகுந்த வனில்லை.*

கருத்துரை:- மேகமே, நீ போகும் வழியில் கம்பீரா என்ற ஒரு நதிக் காதலி உனக்கு இருக்கின்றாள். அதன் நீர் தூய மனம் போல் தெளிவானது. எனவே, நதியின் மனம் என்ற நீரில் நீ புக விரும்பாவிடினும் உன் நிழலோ பிரதி பிம்பமோ அதனுள் புகத்தான் செய்யும். அந்த நதிக் காதலியும் கம்பீர மானவள். ஆழ்ந்த மனமும் உணர்ச்சியும் உடையவள். எளி திலே தன் காதலைப் புலப்படுத்த மாட்டாள். ஆம்பல் போல் வெண்ணிறமான சபரம் என்ற ஒரு வகை மீன்கள் அந்நீரில் வேகமாகப் புரளும். அதுவே ஆம்பல் மலர்போல தெளிந்த அவளது கடைக்கண் நோக்கு ஆகும். அதன் மூலமே அவள் தனக்கு உன்னிடமுள்ள காதலைத் தெரிவிப்பாள். "எல்லோ ரும் விரும்பும் அழகுடையவன் நான்" என்று இறுமாந்து துணிந்து அவளது காதலை வீணாக்காதே. புறக்கணிக்காதே. ஸமாஸோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — गम्भीरा - *கந்தவதி போல் இது வும் ஒரு நதி.* छाया *- நிழல் அல்லது பிரதிபிம்பம். நீ புகாவிடினும் உன் நிழலோ பிரதிபிம்பமோ அந்நதி யின் நீர் என்ற மனத்துள் புகுந்துவிடும்.* शफर *- வெண் ணிறம் ஒரு புறமும் கருநிறம் ஒரு புறமும் கொண்ட ஒரு வகை மீன்.* चटुल *- வேகமான; இதனை* उद्वर्तन *என்ப துடன் சேர்க்க வேண்டும்.* उद्वर्तन *- புரளுதல், திருப்பங்*

கள், வேகமான துள்ளுதல்,'கயலுகள' என்பது திருப்பாவை 3-ஆம் பாசுரம், மீன்கள் புரள்வதைக் குறிக்கின்றது. धैर्यात्-धौर्त्यात्-என்பது மல்லிநாதர் பாடமாகயிருக்கலாம். தூர்த்தனின் தன்மையை धौर्त्यं என்பர்.

उपैति अरक्तां यत्नेन, रक्ताम् धूर्तः विमुञ्चति விரும்பாதவளை அடைவான். காதல் கொண்டவளை கைவிடுவான் என்பது காதலில் நேர்மையுடன் நடக்காத தூர்த்தனின் இயல்பைக் கூறுவது.

तस्याः किञ्चित्करधृतमिव प्राप्तवानीरशाखं
हृत्वा नीलं सलिलवसनं मुक्तरोधोनितम्बम् ।
प्रस्थानं ते कथमपि सखे लम्बमानस्य भावि
ज्ञातास्वादो विवृतजघनां को विहातुं समर्थः ॥ ४१ ॥

பதவுரை: — **सखे** - நண்பனே, **मुक्त-रोधो-नितम्बम्** - கரை எனும் இடையினின்றும் நழுவியதும், **प्राप्त-वानीर-शाखम्** - நீர்வஞ்சிச் செடிகளின் கிளைகளைப் பற்றி இருப்பதும் (அது காரணமாகவே), **किञ्चित्** - சிறிது, **करधृतम् इव**-கையினால் தாங்கப்பட்டது போல், (**स्थितम्**)-இருப்பதுமான, **तस्याः** - கம்பீரா நதியின், **नीलम्** - நீல நிறமுடைய, **सलिलवसनम्** - தண்ணீர் எனும் வஸ்த்ரத்தை, **हृत्वा** - கவர்ந்த பின், (நீரைப் பருகியபின்), **लम्बमानस्य**-கனத்திருக்கின்ற(தாமதிக்கின்ற), **ते**-உனக்கு, **प्रस्थानम्** - பயணம், **कथमपि** - மிக்க ச்ரமத்துடன்தான், **भावि** - நேரும் (இதில் ஸந்தேகமில்லை). **ज्ञात-आस्वादः** - (ஏனெனில்) காதல் இன்பத்தை நுகர்ந்த, **कः** - எவன் தான், **विवृतजघनाम्** - அழகை புலப்படுத்தி மனம் கவர்

கின்றவளை, विहातुम् - *விடுதற்கு,* समर्थः (स्यात्) - *திற னுடையவனாக இருப்பான்?*

கருத்துரை:— மேகமே, கம்பீரா என்ற நதி தன் மீன்களின் மூலம் காதலைத் தெரிவித்துள்ளதால் இடையினின்றும் நழுவிய வஸ்த்ரத்தைக் கையில் தாங்கியிருக்கும் ஸ்த்ரீ போல கரையினின்றும் இறங்கிய தனது நீர் என்னும் வஸ்த்ரத்தைக் கரையிலுள்ள நீர்வஞ்சிச்செடியின் கிளைகள் நீரில் படுவதால், அக்கிளைகளாகிய கைகளால் தாங்கிப் பிடித்திருப்பவள் போல் காணப்படுவாள். இவ்வகையிலும் அவள் உன்னிடம் தான் கொண்ட காதலைப் புலப்படுத்துவாள். நீயும் அவளை அனுபவிக்க - அதன் நீரைப் பருக விரும்பி - அதன் அருகில் தாழ இறங்கி நீரினைப் பருகுவாய். ஒரு காதலியின் சேலையைப் பற்றி இருப்பவன் போல் இருப்பாய். இந்நிலையில் அந்நதியைப் விட்டு நீ புறப்படுவது மிகவும் கடினம்தான். இது உலக இயற்கை. காதலின்பத்தைச் சுவைத்த எவன்தான், தன்னழகைப் புலப்படுத்தி மனம் கவரும் மாதினைவிட்டுச் செல்ல மனம் துணிவான்?

'சிறிது தாமதித்தாலும் உடனே புறப்பட்டுவிடு' என்பது கருத்து. காதலர்களின் நடத்தை என்ற பிறிதொரு பொருள் தோன்றுவதால் ஸமாஸோக்தி அலங்காரம். அர்த்தாந்தரந்யாஸமும் உண்டு.

விளக்கவுரை: — मुक्तरोधोनितम्बम् - *மழை காலத்தில் நதியில் வெள்ளம் இரு கரைகளின் முகட்டினைத் தொட்டுச் செல்லும். கோடையில் தண்ணீர் குறைந்து கரையினின்றும் நீங்கி நதியின் அடிப்பகுதியில் செல்லும். கரையை நதியின் இடையாகவும் நீரை நதியின் சேலையாகவும் உருவகம் செய்து கவி நதியின் சேலை அதன் இடையினின்றும் நழுவியுள்ளது என்றார்.*

प्राप्त-वानीरशाखम् - கரையிலுள்ள நீர்வஞ்சி என்ற சிறு மரத்தின் கிளைகள் தண்ணீரில் படிந்திருந்தன. எனவே, அச்சிறு கிளைகள் என்னும் கையால் அந்த நதிப்பெண் நழுவிய சேலையைப் பிடித்திருப்பதாகக் கூறினர். நழுவிய சேலையை கைகளால் தாங்கிப் பிடிப்பது இயற்கை. இதனையே किञ्चित्करधृतमिव - என்றார். சேலை தானாக நழுவியதாகவோ விருப்பத்தி னாலே நழுவவிட்டதாகவோ கொள்ள வேண்டும். மேகம் மேலிருந்து கீழ் இறங்கி ஜலத்தின் அருகே சென்று அதனைப்பருகுதல் வேண்டும். हृत्वा-சேலையைப் பற்றி இழுத்து எனக் காதலன் செயலைக் கூறினர்.

लम्बमानस्य - கீழே தாழ இறங்கியிருப்பது. विलम्बमानस्य - 'தாமதிக்கின்ற' என்ற பொருளும் உண்டு. காதலியை விட்டு நீங்க மனமில்லாததால் தாமதம் ஏற்படும். சுலோகத்தின் நான்காவது அடி உலக இயற்கையைக் கூறித் தாமதத்தின் காரணத்தைப் புலப்படுத்துகின்றது.

विवृतजघनाम् - என்பதற்குப் பதிலாக विवृतपुलिनाम् - என்ற பாடபேதத்தை காளே என்ற பதிப்பாசிரியர் குறிப்பிடுகிறார். ஆனால் இது கவி கூறுகின்ற அர்த்தாந் தர ந்யாஸத்திற்குப் பொருந்தாது. ஸாஹித்ய அகாடமி பதிப்பும் இப்பாடத்தைக் குறிக்கவில்லை. न विवृतोमदनो न च संवृतः என்று (சாகுந்தலம் 2-11) கூறியிருப்ப தில் உள்ள இரண்டாவது மூன்றாவது சொற்றொடர் களை அனுசரித்து विवृतमदनाम् - என்று பாடமிருந்திருக் கலாமோ என ஊஹிக்க வேண்டியிருக்கிறது.

त्वन्निष्यन्दोच्छ्वसित-वसुधागन्धसंपर्करम्यः
स्रोतोरन्ध्रध्वनितसुभगं दन्तिभिः पीयमानः ।
नीचैर्वास्यत्युपजिगमिषोर्देवपूर्वं गिरिं ते
शीतो वायुः परिणमयिता काननोदुम्बराणाम् ॥४२॥

பதவுரை: — त्वन्निष्यन्द-उच्छ्वसित-वसुधा-गन्ध-संपर्क-रम्यः - *உனது மழையினால் ஊதிப்போன (ஊறின) பூமியின் மணத்துடன் சேர்ந்து மனம் மகிழ்விப்பதும்,* स्रोतोरन्ध्र-ध्वनितसुभगम् - *(காற்றை உள்ளிழுக்கும் போது துதிக்கையின்) த்வாரத்தினின்றும், (எழுகின்ற) ஒலியினால் (கேட்க) இனிதாக இருக்கும்படி,* दन्तिभिः-*யானைகளால்.* पीयमानः - *நுகரப்படுவதும்,* कानन-उदुम्बराणाम् - *காட்டு அத்திக் காய்களை,* परिणमयिता - *முதிரச் செய்வதுமான,* शीतः वायुः - *குளிர்ந்த காற்று,* देवपूर्वम् – *'தேவ' என்ற சொல்லை முதலில் உடைய,* गिरिम् - *மலையை (தேவகிரி என்ற மலையை),* उपजिगमिषोः - *அடைய விரும்புகின்ற,* ते - *உனக்கு,* नीचैः - *மெதுவாக,* वास्यति - *வீசும்.*

கருத்துரை: — மேகமே, கம்பீரா நதியை விட்டபின் நீ போகவேண்டிய இடம் தேவகிரி என்ற மலையாகும். போகும் வழிகளில் மழை பெய்து நிலம் ஊறி ஊதியிருக்கும் மண்ணின் வாசனையுள்ள காற்றை யானைகள் துதிக்கைகளால் இழுத்து ஒலியுடன் மோந்து அனுபவிக்கும். இந்தக் காற்று படுவதால் காட்டிலுள்ள அத்திமரங்களின் காய்கள் முதிர்ந்து பழுக்கும். எனவே இத்தகைய குளிர்ந்த காற்று மெதுவாக வீசி, தேவகிரி செல்லும் உனக்குத் துணை செய்யும். ஸ்வபாவோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — निष्यन्द - *நீர்ப்பெருக்கு,* இங்கு *மழைநீரைக் குறித்தது.* उच्छ्वसित - *ஊதியது;* பருத்

தது. மழைநீர் பட்டு தரை ஊறி உப்பி இருக்கும்; எனவே, மண்ணினின்றும் வரும் வாசனை காற்றுடன் கலந்து இனிதாக இருக்கும். இந்த கிராமப் பகுதியி லுள்ளவர் நன்கு அறிவர்.

स्रोत: – கண், காது முதலிய புலன்கள்; இங்கு யானைகளின் துதிக்கையைக் குறித்தது. रन्ध्र-துவாரம். மணமுள்ள காற்றை யானைகள் விருப்பத்துடன் மோந்து பார்க்கும். யானைகள் அத்தகைய காற்றைத் துதிக்கை த்வாரத்தின் வழியே உள்ளே இழுக்கும் போது உண்டாகும் ஒலி கேட்பதற்கு இனிதே இருக் கும். पीयमान:-குடிக்கப்படுவது என்பது பதப்பொருள். ச்வாஸிக்கப்படுவது என்பது கருத்து परिणमयिता - காட்டிலுள்ள அத்திக்காய்கள் இக்காற்று படுவதால் பழுக்கும். மண்ணின் மணமுடையது, யானைகளால் அது காரணமாக விருப்பத்துடன் மோந்து அனுப விக்கப்படுவது, காட்டு அத்திக்காய்களை முதிரச்செய் வது, குளிர்ந்திருப்பது என இந்நான்கு விசேஷணங் களால் காற்றிற்கு வேண்டிய மணம், மென்மை, குளிர்ச்சி என்ற மூன்று குணங்களும் கூறப் பட்டுள்ளன.

तत्र स्कन्दं नियतवसतिं पुष्पमेघीकृतात्मा
पुष्पासारैः स्नपयतु भवान् व्योमगङ्गाजलार्द्रैः ।
रक्षाहेतोर्नवशशिभृता वासवीनां चमूना-
मत्यादित्यं हुतवहमुखे संभृतं तद्धि तेजः ।। ४३ ।।

பதவுரை:— तत्र-அம்மலையில், नियत-वसतिम् - நிரந்தர மான வாசம் செய்கின்ற, स्कन्दम्-கந்தப் பெருமானுக்கு,

पुष्प-मेघी-कृतात्मा - புஷ்பமயமான மேகமாகச் செய்து கொள்ளப்பட்ட (உன்) வடிவினையுடையவனாக, व्योम-गङ्गा-जल-आर्द्रैः - ஆகாசகங்கையின் நீரினால் நனைந்த, पुष्प-आसारैः - புஷ்ப மழையால் (பூமாரியால்), भवान् - நீ, स्नपयतु - அபிஷேகம் செய். तत् - அப்பெருமான், वासवीनाम् - இந்திரனுடைய, चमूनाम् - சேனைகளின், रक्षा-हेतोः - பாதுகாப்புக் காரணமாக, नवशशिभृता - சிவபிரானால், हुतवहमुखे - அக்னி தேவனிடத்தில், सम्भृतम् - தரப்பட்ட, अत्यादित्यम् - சூரியனையும் மிஞ்சிய, तेजः हि - ஒளியல்லவா?

கருத்துரை:— மேகமே, அத்தேவகிரியில் குஹப் பெருமான் நித்யவாஸம் செய்கிறார். நீ உன் நீர்வடிவத்தை புஷ்பவடிவாக்கிக் கொண்டு ஆகாசகங்கையின் நீரால் அப்புஷ்பங்களை நனைத்து ஸ்கந்தபிரானுக்கு அபிஷேகம் செய். இந்திரனுடைய சேனைகளின் பாதுகாப்பைக் கருதி சிவபிரானால் அக்னி தேவனிடம், ஒப்படைக்கப்பட்டதும் சூரியனை மிஞ்சியதுமான சிவபிரானுடைய சக்தியின் வடிவமே ஸ்கந்தபிரான். அப்ரஸ்துத ப்ரசம்ஸா அலங்காரம்.

விளக்கவுரை: — नियतवसतिम् - தேவர்களுக்காகத் தாரகன் முதலான அசுரர்களைக் கொன்றபின் தேவகிரியில் இளைப்பாறிய குஹப்பெருமான், பக்தர்களின் வேண்டுகோளின்படி அம்மலையிலே, சிவபிரான், பார்வதி இவர்களுடன் தாம் ஸ்திரமான வாசம் செய்வதாக வரமருளினார் என்று வரலாறு உள்ளது என்பர் தக்ஷிணாவர்த்தர்.

पुष्पमेघीकृतात्मा - 'நீர்வடிவினை மாற்றி புஷ்ப வடிவினனாகச் செய்து கொண்டு' என்பது கருத்து. काम-रूपम् என்று சுலோகம் ஆறில் கூறியபடி மேகம்

நீண்ட வடிவெடுக்கும் ஆற்றலுடையது. पुष्प-आसारैः- आसार - தாரையாகப் பெய்யும் மழை. பூ மழையால் ஸ்நாநம் செய்விக்கும்படி கூறினாலும் புஷ்பங்களின் நறுமணம் கலந்த ஆகாச கங்கையின் நீரினால் அபிஷேகம் செய் என்று கூறியதாகக் கொள்ள வேண்டும் என்பர் பூர்ணஸரஸ்வதி. சிவபிரானைப் போல் ஸ்கந்தரும் அபிஷேகப்பிரியர் என்பது இதனால் பெறப்படும். हुतवहमुखे संभृतम् - தேவர்களின் வேண்டு கோளின்படி குமாரனைப் படைக்க தமது தேஜஸை ஒருமிக்கச் சேர்த்து அக்னியிடம் கொடுத்தார் என்பது புராண வரலாறு. சிவபிரானே ஸ்கந்தனை அவதரித்தார் என்பது கருத்து. नवशशिभृत् - புதிய சந்திரனை தரித்த என்பது பதப்பொருள். சிவபிரான் தலையில் அணிந்துள்ள சந்திரகலைக்கு எவ்வித மாறுபாடும் இல்லாததால் அதனை 'புதிய' என்று விசேஷித்தார். तेजः- ஒளி-சக்தி.

ज्योतिर्लेखावलयि गलितं यस्य बर्हं भवानी
पुत्रप्रेम्णा कुवलयदलप्रापि कर्णे करोति ।
धौतापाङ्गं हरशशिरुचा पावकेस्तं मयूरं
पश्चादद्रि-ग्रहणगुरुभिर्गर्जितैर्नर्तयेथाः ॥ ४४ ॥

பதவுரை:—ज्योतिर्लेखा-वलयि - வரிவரியாக அமைந்த ஒளியினால் வட்டமான வடிவுடையதும், गलितम् - (தானே தோகையினின்றும்) நழுவியதுமான, यस्य बर्हम्- எந்த மயிலின் பீலியை, भवानी - பார்வதி தேவி, पुत्र-प्रेम्णा - புத்திரனிடம் உள்ள அன்பினால், कुवलय-दल-प्रापि - (காதில் முன்பே உள்ள) கருங்குவளை இதழுடன்

சேர்ந்திருக்கும்படி, कर्णे - காதில், करोति - வைத்துக் கொள்ளுகிறளோ, हरशशिरुचा - சிவபிரானின் சந்திர காந்தியினுல், धौतापाङ्गम् - மேலும், வெளுத்த கடைக் கண் உடைய, पावकेः - குமரனின் (வாஹனமான), तम् मयूरम् - அந்த மயிலே, पश्चात् - (அபிஷேகம் செய்த)பின், अद्रि-ग्रहण-गुरुभिः - மலை ஏற்பதால் எதிரொலிக்கின்ற, गर्जितैः - (உனது) கர்ஜனைகளால், नर्तयेथाः - ஆடும்படி செய்.

கருத்துரை:— மேகமே, அபிஷேகம் செய்தபின் சரவணப் பெருமானுக்கு நீ செய்யவேண்டிய தொண்டு ஒன்று உண்டு. குஹனுடைய வாஹனமான மயில் அங்குள்ளது. ஒளி வரிசையை வட்டமாகக் கொண்ட அதன் பீலிகை தானே தரையில் விழும். பார்வதிதேவி தன் மகனிடத்திலுள்ள அன்பை மயிலினிடமும் கொண்டு அந்த சிறகை எடுத்துத் தன் காதிலே முன்பே வைத்துள்ள நீலத்தாமரை மலருடன் சேர்ந்திருக் கும்படி வைத்துக்கொள்வாள். மயிலின் கடைக்கண் வெண் ணிறமுடையது. சிவபிரானுடைய சிரஸிலுள்ள நிறவொளி யால் மேலும் வெண்மை பெற்றது. உன்னைக்கண்டால் களிப்படையும் மயில். உனது கர்ஜனையின் ஒலி மலைக்குகையில் சென்று எதிரொலியாகத் திரும்பும்போது பெரியதாகி (மிருதங்கச் சத்தம் போன்று) இருக்கும். இவ்வொலியினுல் அம்மயிலை மகிழ்வித்து அதனை ஆடச்செய்வாயாக. இதுவும் குஹப் பெருமானுக்கு நீ செய்யும் ஸேவையாகும். உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை: — कुवलयदलक्षेपि - என்றும் பாடம் உண்டு; 'கருங்குவளையின் இதழை இகழ்கின்ற பீலி' என்பது பதப்பொருள். पावकिः - குமரன். பார்வதி தேவி, தனது புத்ரன் கார்த்திகேயனுடைய வாஹன மான மயிலை மகிழ்வித்த உன்னிடம் அருளுடையவு ளாவாள்,

आराध्यैनं शरवणभवं देवमुल्लङ्घिताध्वा
सिद्धद्वन्द्वैर्जलकणभयाद् वीणिभिर्मुक्तमार्गः ।
व्यालम्बेथाः सुरभि-तनयालम्भजां मानयिष्यन्
स्रोतोमूर्त्या भुवि परिणतां रन्तिदेवस्य कीर्तिम् ।।४५।।

பதவுரை:— शरवण-भवम्-நாணல் காட்டில் பிறந்த, एनम् देवम् - இத் தேவன் குஹப்பெருமானை, आराध्य - பூஜித்த பின், वीणिभिः-வீணையைக் கையிலேந்திய, सिद्ध-द्वन्द्वैः-சித்தர் என்ற தேவ வகையினரின் தம்பதிகளால், जलकणभयात् - (வீணையின் மேல்) நீர்த்துளி விழும் என்ற அச்சத்தினால், मुक्त-मार्गः - வழிதரப்பட்டவனாக, उल्लङ्घिताध्वा - (சிறிது) வழிகடந்து, सुरभि-तनया-आलम्भजाम् - காமதேனுவின் பெண்களான பசுக்களை (யாகத்தில்) பலியிட்டதால் உண்டானதும், भुवि - இவ்வுலகில், स्रोतोमूर्त्या - நதியின் வடிவிலே, परिणताम् - மாறி இருக்கின்றதுமான, रन्तिदेवस्य - ரந்திதேவனின், कीर्तिम् - கீர்த்தியை (சர்மண்வதி என்ற நதியை), मानयिष्यन् - கௌரவிப்பவனாக, व्यालम्बेथाः - (அதன் அருகில்) கீழே இறங்குவாயாக.

கருத்துரை:— மேகமே, நீ சரவணபவனை குஹனை முன் கூறிய வகையில் பூஜித்தபின், சிறிது தூரம் கடந்து நதி வடிவெடுத்த, ரந்தி தேவனின் புகழ்போல் இருக்கின்ற சர்மண்வதி என்ற நதியை கௌரவிப்பதற்காக ஆகாயத்தினின்றும் இறங்குவாயாக. குஹனை ஸேவிக்க ஆகாயத்தில் வீணையைக் கையிலேந்தி வரும் ஸித்த தம்பதிகள் உன்னுடைய ஜலத்துளி பட்டால் வீணை ஒலிக்காதென அஞ்சி உனக்கு வழி விட்டுச் செல்வர். தேவகிரிக்கும் சர்மண்வதி நதிக்கும் இடையிலுள்ள வழியை நீ எளிதிலே கடந்து நதியைக் காண்பாய்,

நதியின் வடிவினை மறுத்து கீர்த்தியாகக் கூறியதால் அபஹ்நுதி என்ற அலங்காரம் என்பர் பூர்ணஸரஸ்வதி.

விளக்கவுரை: — இங்கு கூறப்பட்ட வரலாறு மஹாபாரதத்தில் ஆனுசாஸனிக பர்வம் 123-ஆம் அத்யாயத்தில் உள்ளது. அரசன் ரந்திதேவனுடைய பசுக்கள் காட்டில் மேய்ந்து கொண்டிருக்கும்போது தங்கமயமான கால்களையும் கொம்புகளையுமுடைய சில பசுக்களைப் பார்த்து அவ்வாறிருப்பதின் காரணம் கேட்க, அவை யாகத்தில் தாங்கள் உபயோகிக்கப் பட்டதால் இவ்வடிவத்துடன் ஸ்வர்க்கத்தில் இருப்பதாகக் கூறவும் அப்பசுக்கள் ரந்திதேவனிடம் வந்து தங்களையும் யாகத்தில் உபயோகிக்கும்படி வேண்டின. அவனும் கோஸவம் என்ற யாகத்தை, பல பசுக்களை ஹவிஸாகக் கொடுத்துச் செய்தான். யாகத்தில் உபயோகிக்கப்பட்ட பசுக்களின் தோல்களை ஓரிடத்தில் குவித்து வைக்க அதனின்றும் பெருகிய குருதியே சர்மண்வதி என்ற நதியாகியது. ரந்தி தேவனது புகழே நதி வடிவெடுத்தது என்றும், இந்த நதியை கௌரவிப்பதற்காக மேகம் அதன் அருகில் செல்லக் கீழே இறங்கவேண்டும் என்றும் கூறுகின்றார். நதியின் பெயர் சர்மண்வதி. சர்ம - தோல். அதனின்றும் தோன்றியதால் சர்மண்வதி எனப்பெயர் பெற்றது. தற்காலப் பெயர், சம்பல் என்பது.

त्वय्यादातुं जलमवनते शार्ङ्गिणो वर्णचौरे
तस्याः सिन्धोः पृथुमपि तनुं दूरभावात् प्रवाहम् ।
प्रेक्षिष्यन्ते गगनगतयो नूनमावर्ज्य दृष्टी-
रेकं मुक्तागुणमिव भुवः स्थूलमध्येन्द्रनीलम् ॥ ४६ ॥

பதவுரை:—शार्ङ्गिण: . கிருஷ்ண பகவானின், वर्णचौरे- நிறத்தைக் கவர்ந்தவனுகிய (கிருஷ்ணனின் நிற முடைய), त्वयि - நீ, जलं-आदातुम् - நீரை எடுத்துக் கொள்ள, अवनते - தாழ்ந்து இருக்கும் போது, पृथुमपि - விசாலமாக இருப்பினும், दूरभावात् - தொலைவு காரண மாக, तनुम् - மெல்லியதாக இருக்கின்ற, तस्याः सिन्धोः - அந்த சர்மண்வதி நதியின், प्रवाहम् - வெள்ளத்தை, गगन-गतयः - ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் தேவர்கள், नूनम् - திண்ணமாய், दृष्टीः - (தம்) கண்களை, आवर्ज्य - திருப்பி, स्थूल-मध्य-इन्द्रनीलम् - பெரிய-நடுவிலிருக்கின்ற- இந்திரநீலரத்னமுடைய, भुवः - பூமிதேவியின், मुक्तागुणम् इव - முத்து மாலையின் வடம்போல, प्रेक्षिष्यन्ते - காண் பார்கள்.

கருத்துரை:— மேகமே, நீ கிருஷ்ண பகவானின் கருநிற முடையவன். சர்மண்வதி நதியின் பிரவாஹம் விசாலமாக இருக்கும். நீ நீர் பருக வெள்ளத்தின் மேல் படிந்திருக்கும் போது அவ்வழகை ஆகாயத்தில் செல்லும் தேவர்கள் தங்கள் பார்வைகளைத் திருப்பிக் காண்பர். தொலைவிலிருந்து பார்ப்ப தால் விசாலமான வெள்ளமும் மெல்லியதாகத் தோன்றும். வெளுத்த பிரவாஹத்தையும் அதன் மேல், கருத்த நிறமுள்ள உன்னையும் சேர்த்துப் பார்க்கும் தேவர்கள் பிரவாஹத்தை பூமிதேவியின் கழுத்திலணிவிக்கப்பட்ட ஒற்றை வடமுள்ள ஒரு முத்துமாலை போலும், உன்னை அதன் நடுவில் உள்ள நாயக மணியான இந்திர நீலரத்னம் போலும் காண்பர். உத்ப்ரேக்ஷா அலங்காரம்.

விளக்கவுரை: — शार्ङ्गी - சார்ங்கம் என்ற வில்லை யுடைய விஷ்ணு. இங்கு கிருஷ்ணனைக் குறித்தது. वर्णचौर = வர்ணத்தைக் கவர்ந்தவன்-ஒத்த நிறமுடைய வன் என்பது கருத்து. गगनगतयः - ஆகாயத்தில் செல்

லும் திறனுடைய சித்தர், வித்யாதரர் முதலிய தேவர்கள். दूरभावात् - தொலைவு காரணமாக; ஆகாயத்தில் தொலைவிலிருந்து காண்பதால் விசாலமான வெள்ளமும் குறுகியது போல் தோன்றும். நீரின் வெண்ணிறம் அது பூமி தேவிக்கு இடப்பட்ட ஒற்றை வடமுள்ள முத்து மாலை போல் தோற்றமளிக்கும்.

मध्य-इन्द्रनीलम् - மாலையின் நடுவிலே ரத்னத்தை வைப்பர். நீர் என்ற முத்து மாலையின் நடுவில் உள்ள நீலரத்னம் போல் மேகம் உள்ளது. மேகத்தின் நிறம் கருதி அதனை நீல ரத்னமாகக் கூறினார். मेघश्यामम् - மேகம் போல் கருத்த நிறமுடையவர் என்று, விஷ்ணுவிற்கு உபமானமாக வரும் மேகத்திற்கு இங்கு விஷ்ணுவை உபமானமாகக் கூறினார்.

तामुत्तीर्य व्रज परिचितभ्रूलताविभ्रमाणाम्
पक्ष्मोत्क्षेपादुपरिविलसत्कृष्णशारप्रभाणाम् ।
कुन्दक्षेपानुगमधुकरश्रीमुषामात्मबिम्बं
पात्रीकुर्वन्दशपुरवधूनेत्रकौतूहलानाम् ॥ ४७ ॥

பதவுரை: — **ताम्-उत्तीर्य** - அந்த நதியைக் கடந்து, **परिचित-भ्रूलता-विभ्रमाणाम्** - நன்கு பயிலப்பட்ட, கொடி போன்ற புருவத்தினுடைய நெறிப்பின் அழகுடையவைகளும், **पक्ष्म-उत्क्षेपात्** - இவைகளை மேலே உயர்த்துவதால், **उपरि-विलसत्-कृष्ण-शार-प्रभाणाम्**-(கண்களுக்கு) மேலே காணப்படும் கருமை நிறம், வெண்மை நிறம் என்ற இவற்றின் ஒளியுடையனவும், **कुन्द-क्षेप-अनुग-मधुकर-श्रीमुषाम्** - மேலே எறியப்பட்ட மல்லிகை மலரைத்

தொடர்ந்து செல்லும் கருவண்டுகளின் காந்தியுடையனவுமான, दशपुर-वधू-नेत्र-कौतूहलानाम् - உன்னைக் காண விழையும் தசபுரத்திலுள்ள பெண்களின் ஆவல் நிறைந்த கண்களுக்கு, आत्मबिम्बम् - உனது வடிவினை, पात्रीकुर्वन् - இலக்காகச் செய்து கொண்டு, व्रज - (மேலே) செல்வாயாக.

கருத்துரை:— மேகமே, சர்மண்வதியில் நீர் பருகியபின் அதனைக் கடந்து தசபுரம் என்ற நகரத்தின்மேல் சென்று உன் வழியைத் தொடர்வாயாக. தசபுரத்திலுள்ள பெண்கள், புருவங்களை நெறித்து அழகுடன் நோக்குவதில் பழக்கப் பட்டவர்கள். இமைகளை உயர்த்தி உன்னைக் காணும்போது கருவிழியின் கருநிறமும் கண்ணின் வெண்பகுதியின் வெண்ணிறமும் மேல் நோக்கி வரும். மல்லிகை மலர்களை மேலே தூவினால் அவற்றைத் தொடர்ந்து வண்டுகள் செல்லும்போது உள்ள அழகை இருநிறத்துடன் கூடிய கண்கள் பெற்றிருக்கும். உன்னைக் காணவிரும்பும் தசபுரப் பெண்களின் ஆவல் நிறைந்த அத்தகைய கண்கள் உன்னைக் காணும்படி உன் உருவைக் காட்டுவாயாக. பெண்களால் ஆவலுடன் பார்க்கப் படும் பெருமையை நீ அடைவாய். உத்ப்ரேக்ஷா அலங்காரம்

விளக்கவுரை:—परिचित-भ्रू-लता-विभ्रमः- विभ्रमः - யுவதிகள் பருவம் காரணமாகச் செய்யும் செயல்கள். இங்கு புருவத்தின் அழகிய சலனத்தைக் குறித்தது என்பர். கிராமத்துப் பெண்கள் இக்கலையைப் பயின்றவர்கள் இல்லை. தசபுரப் பெண்களுக்கு இது நன்கு கைவந்த கலை என்றார். பெண்களின் குணமான இதனைக் கண்களின் மேல் ஏற்றிக் கூறியுள்ளார்.

पक्ष्मोत्क्षेपात् - இமைகளை உயர்த்தி நோக்குவதால் கண்களினின்றும் இருவகை ஒளிகள் வருகின்றன. கரு

விழியினின்றும் கருநிறமும், வெண்பகுதியினின்றும் வெண்ணிறமும் மேல் நோக்கிச் செல்கின்றன.

शार:-कृष्ण रक्त सित: शार: - என்பது வைஜயந்தி. கருப்பும், சிவப்பும் வெண்மையும் கலந்த நிறம் சாரம் எனப்படும். இங்கு இடப்பொருத்தம் கருதி வெண்ணிறமே கொள்ளப்பட வேண்டும்.

कुन्द-क्षेप...श्रीमुषां - இவ்விரண்டு நிறமும் மேல் நோக்கிச் செல்வதற்கு ஏற்ற உவமை இதில் கூறப்படுகிறது. மல்லிகை மலர்களை மேலே எறிந்தால் அவ்வெண்மலர்களைத் தொடர்ந்து கருநிற வண்டுகள் செல்லும். கண்ணின் கருத்த ஒளி வண்டின் நிறத்தையும், வெண்ணிறம் மல்லிகை நிறத்தையும் ஒத்திருந்தன.

दशपुरवधू-नेत्र-कौतूहलानाम् - 'தசபுரப் பெண்களின் கண்களுடைய ஆவலுக்கு' என்று பதப்பொருள். 'ஆவல் நிறைந்த கண்களுக்கு' என்று கருத்து. दशपुर - பத்து நகரங்களைக் கொண்ட நாடு; தசபுரம் என்பது ஒரு நகரத்தின் பெயரும் ஆகும். இது ரந்திதேவனுடைய தலைநகராக இருக்கலாம். தற்காலத்தில் இதை சம்பல் நதிக்கு வடமேற்கில் உள்ள ரந்திபூர் என்பர் வில்ஸன். மந்தஸார் என்பதின் அருகிலுள்ள தஸோர் என்பதே தசபுரம் என்பர் வேறு சிலர்.

ब्रह्मावर्तं जनपदमथ च्छायया गाहमानः
क्षेत्रं क्षत्रप्रधनपिशुनं कौरवं तद्भजेथाः ।
राजन्यानां शितशरशतैर्यत्र गाण्डीवधन्वा
धारापातैस्त्वमिव कमलान्यभ्यवर्षन्मुखानि ॥ ४८ ॥

பதவுரை:—अथ - பிறகு, ब्रह्मावर्तम्-பிரஹ்மாவர்த்தம் என்ற, जनपदम् - நாட்டை, छायया - (உன்) நிழல் மூலம், गाहमानः - பிரவேசிப்பவனாக, यत्र - எந்த குருக்ஷேத்ரத்தில், गाण्डीव-धन्वा - அர்ஜுனன், राजन्यानाम् - க்ஷத்ரியர்களின், मुखानि - முகங்களின் மேல், शित-शर-शतैः - கூரான நூற்றுக்கணக்கான பாணங்களை, - धारापातैः - மழை தாரைகளை பொழிவதன் மூலம், कमलानि - தாமரைகளின் மேல், त्वम् इव - நீ வர்ஷிப்பது போல், - अभ्यवर्षत् - வர்ஷித்தானோ, क्षत्र-प्रधन-पिशुनम् - க்ஷத்ரியர்களின் அழிவினை (இப்போதும்) காட்டுகின்ற, तत् - அந்த, कौरवं - குருமன்னர்களின், क्षेत्रम्-இடத்தை, भजेथाः-(நீ) அடைவாயாக.

கருத்துரை:—மேகமே, தசபுர மடந்தையரின் அழகிய கண்களுக்கு உன்னை இலக்காக்கியபின் பிரஹ்மாவர்த்தம் என்ற நாட்டை உன் நிழல் மூலமே புகுந்து அதற்குப் பிறகு குருக்ஷேத்ரத்தையடைவாயாக. நீ தாமரை மலர்கள் மேல் உன் கனமான மழைத் தாரைகளைப் பொழிந்து அழிப்பது போல் அக் குருக்ஷேத்ரத்தில்தான் அர்ஜுனன் கூரான அம்பு மாரியை க்ஷத்ரியர்களின் மேல் நூற்றுக்கணக்கில் எய்து அவர்களை அழித்தான். க்ஷத்ரிய ஜாதியின் முழுநாசத்தை இன்றும் எடுத்துக் காட்டுகின்ற அந்த குருக்ஷேத்ரத்தை அடைவாயாக. உவமையணி.

விளக்கவுரை: — ब्रह्मावर्त - த்ருஷத்வதி நதியின் வடகரை தொடங்கி ஸரஸ்வதி நதிக்குத் தென்கரை வரையுள்ள பகுதிக்கு ப்ரஹ்மாவர்த்தம் என்று பெயர். सरस्वतीदृषद्वत्योर्देवनद्योर्यदन्तरम् । तं देवनिर्मितं देशं ब्रह्मावर्तं प्रचक्षते என்பர் மனு. 2.17.

छायया गाहमानः — மேகம் மேலே செல்லும். அதன் நிழல் கீழே அத்தேசத்தில் விழும். அதன் மூலமே

ப்ரம்மாவர்த்த தேசத்திற்கு மேகம் சென்றதாகக் கருதலாம். மற்ற இடம் சென்றது போல் ப்ரம்மா வர்த்தம் செல்ல வேண்டாம் என்பது கருத்து. புண்ய தேசமாதலால் 'போக வேண்டாம்' என்று மல்லிநாதர் கூறுகிறார். தாமதம் தவிர்க்கவும் இருக்கலாம். क्षेत्रम् - புண்ய பூமி. क्षत्र - இச்சொல் க்ஷத்ரிய ஜாதியை யும் க்ஷத்ரியர்களையும் குறிக்கும். प्रधनपिशुनम् க்ஷத்ரியர் களின் நாசத்தைத் தற்போதும் அங்கு புதைந்து கிடக் கும் எலும்புகள் காட்டுகின்றன என்பர். गाण्डीवधन्वा- गाण्डीवम् என்ற வில்லையுடையவன்: அர்ஜுனன்; அர்ஜு னன் அம்பு மழை பெய்ததை மேகத்தின் மழைக்கு ஒப்பிட்டது மேகத்திற்குப் பெருமை தருதற்காக.

हित्वा हालामभिमतरसां रेवतीलोचनाङ्कां
बन्धुप्रीत्या समरविमुखो लाङ्गली याः सिषेवे ।
कृत्वा तासामभिगममपां सौम्य सारस्वतीना-
मन्तः शुद्धस्त्वमसि भविता वर्णमात्रेण कृष्णः ॥ ४९॥

பதவுரை:—सौम्य - அழகனே, बन्धुप्रीत्या - உறவினர் களிடம் அன்பினால், समर-विमुखः யுத்தத்தில் மனமற்ற வராக, लाङ्गली - பலராமர், अभिमत-रसाम् – தமக்கு விருப்பமான சுவையுடையதும், रेवती-लोचन-अङ्काम् - ரேவதியின் கண்களின் பிரதிபிம்பத்தை அடையாள மாக உடையதுமான, हालाम् - மதுவை, हित्वा - விட்டு, याः - எந்த (ஸரஸ்வதியின்) நீரை, सिषेवे - பருகி அனு பவித்தாரோ, तासाम् - அந்த, सारस्वतीनाम् - ஸரஸ்வதி நதியின், अपाम्-अभिगमम् - தண்ணீரை அடைதலை, (அனுபவித்தலை), कृत्वा - செய்து, त्वं अपि - நீயும், अन्तः

शुद्धः - மனத்திலும் ஆத்மாவிலும் தூய்மையுடையவனு கவும், **वर्णमात्रेण** - (புறத்தில்) நிறத்தினுல் மாத்திரமே, **कृष्णः** - கருநிறமுடையவனுகவும், **भविता असि** - ஆவாய்.

கருத்துரை:— மேகமே, பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் சண்டை தொடங்கியபோது இருவரும் உறவினராதலால் அவர்களின் அழிவிற்குக் காரணமான யுத்தத்தை விரும்பாது பலராமர், தமக்கு மிக விருப்பமான மதுவையும் விட்டு குருக்ஷேத்திரத்திற்கு மேற்கிலுள்ள ஸரஸ்வதிக் கரையில் தங்கி அதன் நீரைப் பருகி தூய்மை பெற்ருர். அழகனே, நீயும் குருக்ஷேத்ரம் சென்றபின் அதன் அருகிலுள்ள ஸரஸ்வதி நதிக்குச் சென்று பாவனமான அதன் நீரைப்பருகி அகத் தூய்மை பெறுவாயாக. வெளியிலே உன் நிறம் மாத்திரமே கறுப்பாக இருப்பினும் அது ஒரு குறையாகாது. உதாத்தம், விரோதம் என்ற இரண்டு அலங்காரங்கள் உண்டு.

விளக்கவுரை — रेवती-लोचनाङ्काम् - பலராமர் மது ப்ரியர். அவர் அருந்தும் மதுவை பான பாத்திரங்களில் ஊற்றி அவர் மனைவி ரேவதி அதனை உற்று நோக்குவாள். அப்போது அவள் கண்கள் அதில் பிரதிபலிக்கும். இவ்வாறு அவள் கண்களின் பிரதிபிம்பமுடைய மதுவையே பலராமர் விரும்பி அருந்துவார்.

समरविमुखः - பாரத யுத்தத்தில் பலராமர் ஈடுபடாததற்குக் காரணம்—இரண்டு வகையினரும் உறவினரே; யார் இறந்தாலும் அது பலராமருக்கு வருத்தமளிக்குமாதலால் அவர் சண்டையில் சேர விரும்பவில்லை. எனவே ஸரஸ்வதி நதிக்கரையில் தங்கி இருந்தார்.

பலராமர் ஸரஸ்வதி நதியினருகில் இருந்ததற்கு வேறு ஒரு காரணமும் கூறப்படுகிறது.

நைமிசாரண்யத்தில் மஹர்ஷிகளின் கூட்டத்திற்கு சென்ற போது தமக்கு மரியாதை செய்யாத ஸூதமஹர்ஷியைக் கொன்றதால் அதற்கு பிராயச்சித்தமாக பலராமர் ஸரஸ்வதி நதியில் ஸ்நாநபானம் செய்து வந்தார் என பாகவதம் கூறும். ஸ்கந்தம் 10, அத்யாயம் 78. பலராமர் வெண்ணிறமுடையவராயினும் பாவம் செய்து அகத்தூய்மையில்லாதவராக இருந்தார். மேகம் வெளியில் கறுத்திருப்பினும் அகத்தூய்மை பெறும் என்று கவி கூறுகிறார். வெண்மையை தூய்மையின் அடையாளமாகவும் கருநிறத்தை தூய்மையற்ற நிலேயின் அடையாளமாகவும் கூறுவது கவிமரபு. हाला - என்பது தேசபாஷைப் பதம் என்பர் மல்லிநாதர்.

तस्माद् गच्छेरनुकनखलं शैलराजावतीर्णां
जह्नोः कन्यां सगरतनयस्वर्गसोपानपङ्क्तिम् ।
गौरीवक्त्रभ्रुकुटिरचनां या विहस्येव फेनैः
शंभोः केशग्रहणमकरोदिन्दुलग्नोर्मिहस्ता ॥ ५० ॥

பதவுரை:—तस्मात् - அந்த குருக்ஷேத்திரத்திலிருந்து, अनु-कनखलम् - கனகலம் என்ற மலேக்கு அருகில், शैलराज-अवतीर्णाम् - மலேயரசனை ஹிமயமலேயிலிருந்து இறங்கியதும், सगर-तनय-स्वर्ग-सोपान-पङ्क्तिम् - ஸகர மஹாராஜனின் குமாரர்களுக்கு ஸ்வர்க்கம் ஏறுதற்கான படிகளின் வரிசையானதும், जह्नोः - ஜஹ்னு மஹர்ஷியின், कन्याम् - பெண்ணுமான கங்கையை, गच्छेः - அடைவாயாக. या - அந்த கங்கை, गौरी-वक्त्र-भ्रुकुटि-रचनाम्-பார்வதியின் முகத்திலுள்ள புருவ நெறிப்பை, फेनैः - (தன்

வெண்ணிற) நுரைகளால், विहस्य इव - பரிஹஸிப்பது போல் இருந்து கொண்டு, इन्दुलग्नोर्मि-हस्ता - (சிவபிரான் சடையிலுள்ள) சந்திரனில் பதிந்த அலை என்ற கை யுடையவளாக, शम्भोः केशग्रहणम् -(சிவபிரானின்) கேசத் தைப் பிடித்தலை, अकरोत् - செய்தாள்.

கருத்துரை:— மேகமே, நீ குருக்ஷேத்ரத்திலிருந்து கனகலம் என்ற மலைக்குச் செல். அங்குதான் ஹிமாலயத்தி னின்றும் கங்கை நதி முதன் முதலாக பாரதநாட்டின் நிலத்தில் இறங்குகின்றுள். ஸகரமன்னனின் அறுபதினுயிரம் குமாரர் களும் ஸ்வர்க்கம் அடைவதற்குப் படிகளின் வரிசை போல் இருந்தவள்; ஜஹ்னு என்ற ராஜரிஷியால் தம் பெண்ணுகக் கருதப்பட்டவள். சிவபிரானது ஜடாபாரத்தில் தாங்கப்பட்ட அவளை, பார்வதி தன் ஸகளத்ரம் என்று நினைத்துப் பொருமை யால் புருவத்தை நெறித்து நோக்குவாள். தனக்குச் சிவபிரா னிடமுள்ள செல்வாக்கைக் காட்ட கங்கை வெண்ணிற நுரையின் மூலம் பார்வதியைப் பார்த்து பரிஹாஸம் செய்பவள் போல் இருந்து கொண்டு, தன் அலை என்னும் கைகளால் சிவபிரானது சந்திர கலையைப்பற்றி அதன் மூலம் அவரது ஜடையையும் பற்றி இழுப்பவள் போல் காணப்படுவாள். அத்தகைய கங்கையை நீ அடைவாயாக. உத்ப்ரேக்ஷாலங் காரம்.

விளக்கவுரை: — अनुकनखलम् - கனகலம் என்பது ஒரு மலை என்பர் மல்லிநாதர். புண்யஸ்தலம், புண்ய தீர்த்தம் என்றும் கூறுவர். கனக-கலம், தங்கம் நிறைந்த இடம் என்ற சொல், இடையிலே உள்ள 'க' என்ற எழுத்து குறைந்து கனகலம என்ற பெயர் ஏற்பட்டது. இந்த இடத்தில் ஸ்நானம் செய்த, कः - எந்த, खलः - அயோக்யன்தான், न - முக்தியடைவ தில்லை என்ற பொருளில் कनखल என்ற சொல் வந்தது

எனப் புராணம் கூறுகின்றது. खल: केनात्र मुक्तिं वै भजते तत्र मज्जनात् । अत: कनखलं तीर्थम् नाम्ना चक्रुर्मुनीश्वरा: என்பது ஸ்கந்த புராணம்.

शैलराज–अवतीर्णाम् - ஹிமாலயத்தில் தோன்றிய கங்கை ஹிமாசலத்திலிருந்து பூமியில் இறங்குமிடம் கனகலம், ஹரித்வாரத்திற்கு ஸமீபத்திலுள்ளது. सगर-पङ्क्तम् - சூர்ய வம்ச மன்னன் ஸகரன் என்பவன் அசுவமேதம் செய்த பொழுது அதற்கான குதிரையை இந்திரன் கவர்ந்து, பாதாளத்தில் தவம் செய்து கொண்டிருந்த கபில முனிவரின் முன் விட்டுச் சென்முன். ஸகரனுடைய குமாரர்கள் அறுபதினுயிர வரும் பூமியைத் தோண்டிப் பாதாளம் சென்று குதிரையைக் கண்டு, கபிலரே கவர்ந்தவர் என அவரை எதிர்க்க அவரது கோபாக்னியில் அவர்கள் சாம்பலாயினர்.

ஸகரனுடைய பேரன் அம்சுமான் குதிரையைக் கொண்டு வந்து யாகத்தைப் பூர்த்தி செய்வித்தான். முனிவரின் கோபத்தால் சாம்பலான ஸகர புத்ரர்களின் சாம்பல் கங்கை நீரினுல் நனைக்கப்பட்டால் அவர்கள் பாவம் நீங்கி ஸ்வர்க்கம் அடைவர் என்ற அசரீரி கூறிய பின்னும் கங்கையைக் கொண்டுவர அம்சுமானுல் இயலவில்லை. அவனுடைய பேரனை பகீரதன் தவம் செய்து பிரம்மதேவரது அருளால் கங்கையை தேவருலகினின்றும் சிவபிரான் முடியில் இறக்கினுன். பிறகு ஹிமாலயத்திலும் அதன் பின் கனகலத்திலும் இறங்கி வரும் வழியில் ஜஹ்னு மஹரிஷியின் ஆச்ரமத்தை அழிக்கவும் அவர் கங்கை

யைத் தன்னுள் அடக்கப் பின் பகீரதன் வேண்டு கோளால் விடுவித்தார். பின் கங்கை ஸமுத்ரத்திற்குச் சென்று பாதாளத்திலுள்ள ஸகர குமாரர்களின் சாம்பல் மேல் பாய்ந்து அவர்களை நற்கதியடை வித்தது. எனவே, ஸகர குமாரர்கள் ஸ்வர்க்கம் ஏறு தற்குப் படியாக இருந்தது கங்கை.

जह्नोः कन्या - பகீரதன் ஜஹ்னு மஹர்ஷியிடம் கங்கை செய்த குற்றத்தை மன்னித்து அவளை அவரது பெண்ணாக ஏற்க வேண்டுமென்று வேண்ட அவரும் அவ்வாறே ஏற்றுக்கொண்டதால் கங்கை ஜஹ்னு மஹர்ஷியின் பெண்ணாகக் கருதப்பட்டதால் जाह्नवी - என்ற பெயரும் பெற்றாள். "இவ்வரலாறு ராமா யணம் பாலகாண்டத்தில் ஸர்க்கம் 35-36இல் கூறப் பட்டுள்ளது.

गौरी...रचनाम् - கங்கையைச் சிவபிரானின் இளைய மனைவியாகக் கவிகள் கூறுவர். பார்வதிக்குத் தமது பாதி உடலைத் தந்த சிவபிரான் கங்கைக்குத் தன் தலையையே கொடுத்துத் தலை மேல் ஏற்றி வைத்துக் கொண்டார். கங்கையின் செல்வாக்கு இதனால் உயர்ந்ததைக் கண்டு பொறாமை கொண்டு பார்வதி புருவத்தை நெறித்ததாகவும், கங்கை, தனது நுரை என்ற சிரிப்பினால் அவளை பரிஹஸிப்பதாகவும் கவி உத்ப்ரேக்ஷித்தார்.

பார்வதியைப் பரிஹஸித்ததோடு நில்லாமல் ஈச் வரனிடம் தனக்குள்ள செல்வாக்கைக் காட்ட அலை என்னும் கையால் சந்திர கலையைப்பற்றி இழுப்பதா கவும் கூறினார். ஒருவருடைய இரு மனைவியரில் செல்

வாக்குடையவள் தன் சக்களத்தியை அலக்ஷ்யம் செய்து அவள் எதிரிலேயே தன் விருப்பப்படி கணவனைத் தலையில் பிடித்து இழுப்பது போல் உள்ளது கங்கையின் செயல் என்று விரித்துரைப்பர் மல்லிநாதர். அலையைக் கையாகவும் சந்திரனை சிரஸில் ரத்னமாகவும் கருத வேண்டும்.

तस्याः पातुं सुरगज इव व्योम्नि पश्चार्धलम्बी
त्वं चेदच्छस्फटिकविशदं तर्कयेस्तिर्यगम्भः ।
संसर्पन्त्या सपदि भवतः स्रोतसि च्छाययासौ
स्यादस्थानोपगतयमुनासङ्गमेवाभिरामा ।। ५१ ।।

பதவுரை: — सुरगजः इव - திசையிலுள்ள யானை போல், व्योम्नि - ஆகாயத்தில், पश्चार्धलम्बी - (உன்) உடலின் பிற்பகுதி மேலே இருப்பதாகக் கொண்டு, अच्छ-स्फटिक-विशदम् - நிர்மலமான பளிங்கு போல் தெளிவான (வெண்மையான), तस्याः - கங்கையின், अम्भः - நீரை, तिर्यक् - சிறிது சாய்வாக இருந்து கொண்டு, पातुम् - குடிக்க, त्वम् - நீ, तर्कयेः चेत् - நினைப்பாயானால் (அப்போது), सपदि - உடனே, स्रोतसि - (அதன்) பிரவாஹத்தில், संसर्पन्त्या - (விழுகின்ற) பரவுகின்ற, भवतः छायया - உனது நிழலால், असौ - கங்காநதி, अस्थान-उपगत-यमुना-सङ्गमा इव - (பிரயாகை தவிர்த்த) வேறொரு இடத்தில் யமுனையுடன் சேர்ந்தது போல், अभिरामा - அழகுடையதாக, स्यात् - இருக்கும்.

கருத்துரை: — மேகமே, திக்கஜங்கள் பூமியில் இறங்கித் தண்ணீரைப் பருகா. அதுபோல் நீயும் ஆகாயத்திலிருந்து கொண்டு கங்கையின் ஜலத்தினருகில் இருக்கும்படி சிறிதே

தாழ்ந்து உனது உடலின் பிற்பகுதி ஆகாயத்தை நோக்கி யிருக்க முன்பகுதியை நீரருகில் சிறிது சாய்வாக வைத்துக் கொண்டு தூய பளிங்கு போல் வெண்ணிறமான நீரைப் பருகத் தொடங்குவாயானல் அப்போது உன் கருத்த நிழல் நீரில் படர்ந்து தோன்றும். வெண்ணிற கங்கை நீரில் தோன்றி இருக்கும் கருநிறத்தைக் காண்பவர், ப்ரயாகை தவிர்த்துப் பிறிதொரு இடத்தில் கங்கை யமுனையின் ஸங்கமத்தைப் பெற்றதோ என்று நினைப்பர். உத்ப்ரேக்ஷா அலங்காரம்.

விளக்கவுரை: — सुरगज इव - திக்கஜம் தரையில் இறங்காது ஆகாயத்திலிருந்து கொண்டு உடலின் பிற் பகுதியை மேலே வைத்துக் கொண்டு முற்பகுதியால் தண்ணீரை அடைவது போல், மேகம் தன் உடலை அமைத்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் குடிக்கும் போது நேர் தலைகீழாக இராமல் மேகமும் நீரின் மேற் பரப்பில் சிறிது சாய்வாக இருந்தால் நீரில் அதன் நிழல்பகுதி நீண்டு காணப்பட்டு யமுனையுடன் கங்கை கலந்துவிட்டதோ என்ற எண்ணத்தை உண்டாக்க உதவும். तिर्यक् - குறுக்காக, சாய்வாக.

अस्थान-संगमा - பிரயாகையில் யமுனை கங்கையுடன் சேர்கிறது. அதற்கு முன்புள்ள வேறு ஒரு இடத்தில் யமுனையுடன் சேர்ந்துவிட்டது போல் கங்கை காணப் படும். ஏனெனில் யமுனை ஜலம் கருத்த நிறமுடையது. மேகத்தின் நிழலும் கருத்து இருக்கும். ஆதலால் யமுனை ஜலத்துடன் கலந்ததென்ற தோற்றத்தைத் தரவல்லது ஆகும். கனகலத்திலே யமுனையுடன் கங்கை கலந்ததோ என்று நினைப்பர். இது கங்கைக்கு அழகையும் அளிக்கும்.

आसीनानां सुरभितशिलं नाभिगन्धैर्मृगाणां
तस्या एव प्रभवमचलं प्राप्य गौरं तुषारैः ।
वक्ष्यस्यध्वश्रमविनयने तस्य शृङ्गे निषण्णः
शोभां शुभ्रत्रिनयनवृषोत्खातपङ्कोपमेयाम् ॥ ५२ ॥

பதவுரை:—आसीनानाम् - படுத்திருக்கின்ற, मृगाणाम्- கஸ்தூரி மான்களின், नाभिगन्धैः - கஸ்தூரியின் வாசனை யால், सुरभितशिलम् - மணம் பொருந்திய பாறைகளையு டையதும், तस्याः एव - அக்கங்கைக்கு, प्रभवम् - உத்பத்தி ஸ்தானமாக இருப்பதும், तुषारैः - பனிக்கட்டிகளால், गौरम् - வெண்ணிறமுடையதுமான, अचलम् - ஹிமய மலையை, प्राप्य-அடைந்து, अध्व-श्रम-विनयने - வழிப்பயணக் களைப்பைப் போக்கும், तस्य शृङ्गे - அம்மலையின் சிகரத் தில், निषण्णः (त्वम्)-அமர்ந்திருக்கின்ற நீ, शुभ्र-त्रिनयन-वृष-उत्खात-पङ्कोपमेयाम् - வெண்ணிறமான, சிவபெருமானின் விருஷபத்தினுல் பெயர்த்தெடுக்கப்பட்ட மண்ணு டன் ஒப்பிடத்தக்க, शोभाम् - காந்தியை (அழகை), वक्ष्यसि - தாங்குவாய்.

கருத்துரை: — மேகமே, கங்கையின் நீரைப் பருகியபின் ஹிமயமலையை அடைவாயாக. அங்கு பாறைகளில் கஸ்தூரி மான்கள் படுத்திருப்பதால் அவற்றின் நாபியிலுள்ள கஸ்தூரி படிந்து அப்பாறைகள் மணமுடையனவாக இருக்கும். கங்கை யின் பிறப்பிடமும் ஹிமாலயமாகும். அது பனிப்பாறைகளால் வெண்ணிறமுடையது. உன் பயணக்களைப்பைப் போக்கிக் கொள்ள அதன் சிகரத்தில் தங்குவாயாக. வெண்ணிறச் சிகரத்தில் தங்கி இருக்கும் கருநிறமுடைய நீ, சிவபிரானின் விருஷபம் தன் கொம்பினுல் நதியின் கரையில் முட்டிப்பெயர்த் தெடுத்துக் கொம்பின் முனையில் தாங்கி இருக்கும் மண்ணின்

நிறம் பெற்று, பொலிவுறுவாய். நீ அம்மண்ணின் நிறத்துடன் ஒப்பிடத்தக்க அழகு பெற்றிடுவாய். உவமை அணி.

விளக்கவுரை: — வெண்ணிற மலைச்சிகரத்திற்கு விருஷபமும் மேகத்திற்கு மண்ணும் உபமானங்கள். नाभिगन्धैः-नाभि - கஸ்தூரி; கஸ்தூரி மான்களின் நாபியிலே உள்ள நறுமணப் பொருள். கஸ்தூரி மான்கள் பாறைகளில் படுப்பதால் நாபியுடன் சம்பந்தப்பட்ட பாறைகளில் கஸ்தூரி படிந்து பாறைகள் நறுமணம் பெறுகின்றன. तुषार: பனி; பனிக்கட்டி. शुभ्र என்பது விருஷபத்திற்கு விசேஷணம். उत्खात - மண்ணைப் பெயர்த்தெடுத்தல் என்பது கொம்புள்ள பிராணிகளுக்கு ஸ்வபாவமாகும்.

तं चेद्वायौ सरति सरलस्कन्धसंघट्टजन्मा
बाधेतोल्काक्षपितचमरीवालभारो दवाग्निः ।
अर्हस्येनं शमयितुमलं वारिधारासहस्रै-
रापन्नार्तिप्रशमनफलाः संपदो ह्युत्तमानाम् ॥ ५३ ॥

பதவுரை: — वायौ - (பெருங்)காற்று, सरति सति - வீசும்போது, सरल-स्कन्ध-सङ्घट्ट-जन्मा - ஸரள மரங்களின் அடிப்பகுதிகள் உராய்வதால் உண்டானதும், उल्का-क्षपित-चमरी-वालभार: - தீப்பொறிகளால் சமரம் என்ற மான்களின் அடர்ந்த வாலை அழித்ததுமான, दवाग्नि: - காட்டுத்தீ, तम् - அம்மலையை, बाधेत चेत् - துன்புறுத்துமானால், एनम् - அத்தீயை, वारि-धारा-सहस्रै: - நீரின் ஆயிரக்கணக்கான தாரைகளால், अलम् - நன்கு, शमयितुम् - அணைப்பதற்கு. अर्हसि - தகுந்தவனாகின்றாய். उत्तमानाम् - சிறந்தவர்களின், सम्पद: - செல்வங்கள், आपन्न-आर्ति-प्रशमन-

फलाः हि - துயருற்றவர்களின் துயரைப் போக்கு வதையே பயனாக உடையன அல்லவா?

கருத்துரை: — மேகமே, ஹிமாலயத்தில் (கஸ்தூரி மான்கள் போல்) சமரம் என்ற கவரிமான்களும், உள்ளன. இவை, மயிர் அடர்ந்த வாலுடையன; அம்மலையில் ஸரளம் என்ற நெடிதுயர்ந்து வளரும் மரங்களும் உண்டு. கடுங் காற்று வீசும் போது ஸரள மரங்களின் அடிப்பகுதிகள் உராய்ந்து தீ தோன்றி அதன் பொறிகள் அங்குள்ள கவரி மான்களின் கவரிகளில் பட்டு அவற்றை அழிக்க முற்படு மாயின் நீ உடனே மழைத்தாரைகளை ஆயிரம் ஆயிரமாகப் பொழிந்து அத்தீயை அணைக்க வேண்டும். உனது செல்வ மான நீர், கஷ்டமடைந்த மான்களின் கஷ்டத்தை நீக்க உதவு வதையே பயனாக உடையது. உலகிலும் சிறந்த மனிதர் களின் செல்வத்திற்குப் பயன் பிறருடைய துயர் தீர்ப்பதே யாகும். அர்த்தாந்தர ந்யாஸம் அணி.

விளக்கவுரை: — सरल - தேவதாரு இனத்தைச் சேர்ந்த ஒரு வகை மரம். உயரமாகவும் நெருக்கமாகவும் வளர்பவையாதலால் இம்மரங்களின் அடிப் பகுதிகளே ஒன்றோடொன்று உராய்வதற்கு வாய்ப் புடையன. स्कन्ध - என்பதற்கு கிளைகள் என்ற பொருளும் உண்டு.

उल्का - நெருப்பு, நெருப்பின் பொறி. चमरी - பெண் கவரிமான், இவற்றின் வால் மயிர் அடர்ந்து இருப்பதால் இதனின்றே சாமரம் செய்வர்.

वालभारः - இங்கு भार என்ற சொல் कचभार (கூந்தல் மிகுதி) என்ற இடத்தில் போல, வாலின் அடர்த்தியைக் காட்டியது.

மேகம் ஹிமயமலையின் சிகரத்தில் தங்கி களைப் பாறியதால் அதற்குப் பிரத்யுபகாரமாக ஹிமவானின்

ப்ரஜையான கவரிமான்களின் கஷ்டத்தை மேகம் உடனே நீக்க வேண்டும் என்று உணர்த்துவதற்காக 'நீ தகுந்தவனுகின்றாய்' என்றார். आपन्नार्ति - சுலோகத்தின் நான்காவது அடி, முதல் மூன்று அடிகளில் கூறிய பொருளை வலியுறுத்த வந்தது.

ये संरम्भोत्पतनरभसाः स्वाङ्गभङ्गाय तस्मिन्
मुक्ताध्वानं सपदि शरभा लङ्घयेयुर्भवन्तम् ।
तान् कुर्वीथास्तुमुलकरकावृष्टिपातावकीर्णान्
के वा न स्युः परिभवपदं निष्फलारम्भयत्नाः ॥५४॥

பதவுரை — तस्मिन् - அம்மலையில், संरम्भ-उत्पतन-रभसाः - கோபத்துடன் (உன்) மேலே பாய்வதில் வேகமுடைய, ये - எந்த, शरभाः - சரபம் என்ற மிருகங்கள், मुक्त-अध्वानम् - அவற்றின் வழியை விட்டு நீங்கிய, भवन्तम् - உன்னை (உன் மேல்), सपदि - உடனே, स्वाङ्ग-भङ्गाय-தங்கள் உடலுறுப்புக்கள் ஒடியும்படி, लङ्घयेयुः - தாக்குமோ, तान् - அவைகளை, तुमुल-करका-वृष्टिपात-अवकीर्णान् உக்ரமான ஆலங்கட்டி மழையைப் பொழிவதால் நாற்புறமும் சிதறப்பட்டவைகளாக, कुर्वीथाः - செய்; निष्फल-आरम्भ-यत्नाः - பயனற்ற செயல்களில் முயற்சியுடைய, के वा - எவர் தான், परिभवपदम् - அவமானத்திற்கு இடமாக, न स्युः - ஆகமாட்டார்கள்?

கருத்துரை: — மேகமே, ஹிமாலயத்தில் சிங்கங்களையும், யானைகளையும் கொல்லும் திறன் வாய்ந்த எட்டுக்கால்களையுடைய சரபம் என்ற மிருகங்கள் உள்ளன. உன்னைக்கண்டு யானை என்றோ உன் கர்ஜனை கேட்டு சிங்கமென்றோ நினைத்து கடுங்கோபங்கொண்டு மிக வேகமாக மேல்நோக்கித் துள்ளி

உன்னைத் தாக்க முயலும். ஆனால் அவைகள் பாயும் வழியை விட்டு நீ மேலே இருப்பதால், அவை உன்னையடைய முடியாமல் கீழே பாறைகளில் வீழ்ந்து தங்கள் அவயவங்களைத் தாங்களே உடைத்துக் கொள்ளும். ஆயினும் நீயும் அவற்றிற்குத் தண்டனை தரவேண்டும். கடுமையான கல்மழை பொழிந்து அவற்றை அடித்து நாற்றிசையிலும் அவை சிதறி ஓடும்படி செய்ய வேண்டும். பயனற்ற காரியங்களை செய்யத் தொடங்குபவர்கள் நிச்சயம் அவமானமடைவார்கள். அர்த்தாந்தர ந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை: — முன் சுலோகத்தில் கஷ்டப்படுபவர்களுக்கு உதவ வேண்டுமென்று கூறிய பின் இதில் துஷ்டர்களுக்குத் தண்டனை தரவேண்டும் என்பது கூறப்படுகிறது. शरभः-எட்டுக்கால்கள் உடைய பலம் பொருந்திய ஒருவகை மிருகம். நான்கு கால்கள் மற்ற மிருகங்களுக்கு இருப்பது போல் இருக்கும். முதுகிலே நான்கு கால்கள் உண்டு என்பர்.

स्वांगभङ्गाय लंघयेयुः - அவைகள் உன்னை எதிர்க்க முற்படுதல் தங்கள் உடலையும் உறுப்புக்களையும் முறித்துக் கொள்வதற்கேயாகும். मुक्त-अध्वानम् 'விடப்பட்ட (அவற்றின்) வழியுடைய' என்பது பதப்பொருள். तुमुल - கடுமையான, உக்ரமான; आरम्भः - செயல்.

करका-करकः - ஆலங்கட்டி. மேகத்தினின்றும் மழை நீர் வரும் போது குளிர்ச்சியால் இறுகிக் கல் போல் ஆகும். இதனைக் 'கரகா' என்பர். இந்தக் கற்கள் மழைபோல் விழுவதைக் 'கரகா வ்ருஷ்டிபாத' என்றார்.

तत्र व्यक्तं दृषदि चरणन्यासमर्धेन्दुमौलेः
शश्वत्सिद्धैरुपचितबलिं भक्तिनम्रः परीयाः ।
यस्मिन् दृष्टे करणविगमादूर्ध्वमुद्धूतपापाः
संकल्पन्ते स्थिरगणपदप्राप्तये श्रद्दधानाः ॥ ५५ ॥

பதவுரை:— तत्र - *ஹிமாலயத்தில்*, दृषदि - (*பாவனமான*) *ஒரு பாறையில்*, व्यक्तम् - *தெளிவாகப் புலப்படுவதும்*, शश्वत् - *எப்போதும்*, सिद्धैः - *யோகிகளாலே*, उपचित-बलिम् - *செய்யப் பெற்ற பூஜையுடையதுமான*, अर्धेन्दुमौलेः - *பாதி மதி சூடிய பிரானின்*, चरण-न्यासम् - *அடிச்சுவட்டினை*, भक्ति-नम्रः - *பக்தியால் வணங்கியவனாக*, परीयाः - *வலம் வருவாயாக*. यस्मिन् - *அத் திருவடிச் சுவடு*, दृष्टे - *தர்சனம் செய்யப் பெறும் போது*, उद्धूत-पापाः-*உதறப்பட்ட பாவமுடைய*(*பாவத்தை உதறிய*), श्रद्दधानाः - *சிரத்தையுள்ள மனிதர்கள்*, करण-विगमात्-ऊर्ध्वम् - *உடல் நீங்கியதன் பின்*, स्थिर-गणपद-प्राप्तये - *நிலையான சிவஸேவகப் பதவியை அடைய*, कल्पिष्यन्ते - *சக்தியுடையவர்கள் ஆவார்கள்*.

கருத்துரை: — மேகமே, பரோபகாரம் செய்தும் துஷ்டர்களை தண்டித்தும் இருக்கின்ற நீ உனது ஆத்ம க்ஷேமத்திற்கான கார்யம் ஒன்றையும் அங்கு செய்ய வேண்டும். சிவபிரான் தமது எல்லையற்ற கருணையால் ஒரு பாறையின் மேல் தமது திருவடிச்சுவடுகளை நன்கு பதித்து கண்களுக்குப் புலப்படும்படி செய்திருக்கிறார். அவைகளை சித்தர்கள் என்ற யோகிகள் எப்போதும் பூஜித்து வருகின்றனர். அச்சுவடுகளை நீ பக்தியுடன் பிரதக்ஷிணம் செய். அத்திருவடிகளைக் கண்டவர்கள், காண்பது என்ற அந்த நற்செயலாலேயே இவ்வுடம்பு நீங்கிய பின் உறுதியான ப்ரமத கணங்களில் ஒருவனாக இருக்கும் நிலையைப் பெறுகின்றனர் எனின் பிரதக்ஷிணம் செய்யும்

நீ பெறப்போகும் பயனைக் கூறவேண்டுமா? பயனைக்கூறிக் காரணத்தைக் காட்டுவதால் அப்ரஸ்துத ப்ரசம்ஸா என்ற அணி யாகும்.

விளக்கவுரை: — अर्ध - என்ற சொல்லுக்கு பாதி என்ற பொருள் இருப்பது போல் ஒரு சிறு பகுதி என்ற பொருளும் உண்டு. எனவே சந்திரகலையணிந்த சிவபிரான் என்று பொருள்.

श्रद्धधानाः - பக்தியுடன் ச்ரத்தையும் வேண்டும் என்பதைக் குறித்தது இச்சொல். करणम् - உடல்; करणविगमे உடல் நீங்கும் போது; இறந்தபின்; பாவம் நீங்கிய பக்தர்கள் இறக்கும்வரை இவ்வுலகில் இன்பம் அனுபவித்துப் பிறகு சிவபதம் ஏறுவர். அவ்வாறு சென்றவர் ஸ்திரமாக அங்கு வாசம் செய்வர். மறுபடி அவர்களுக்கு இவ்வுலகு திரும்புதல் இல்லை. திருவடிகளைப்பற்றி சம்புரஹஸ்யம் என்ற நூல் கூறுவது: - अव्यक्तो व्यञ्जयामास शिवः श्रीचरणद्वयम् । हिमाद्रौ शाम्भवादीनां सिद्धये सर्वकर्मणाम् । दृष्ट्वा श्रीचरणन्यासं साधकः स्थिरयेत्तनुम् । इच्छाधीनशरीरो हि विचरेच्च जगत्त्रयम् என்பதாம்.

பாதுகா ஆராதனம்-பாதபூஜை இவை காளிதாஸர் காலத்திற்கு முன்பேயிருந்ததென்பது தெளிவு.

शब्दायन्ते मधुरमनिलैः कीचकाः पूर्यमाणाः
संसक्ताभिस्त्रिपुरविजयो गीयते किन्नरीभिः ।
निर्ह्रादस्ते मुरज इव चेत्कन्दरेषु ध्वनिः स्यात्
संगीतार्थो ननु पशुपतेस्तत्र भावी समग्रः ॥ ५६ ॥

பதவுரை — (मेघ) - மேகமே, अनिलैः - காற்றினாலே, पूर्यमाणाः - நிரப்பப்படுகின்ற, कीचकाः - மூங்கில்கள்,

मधुरम्–இனிமையாக, शब्दायन्ते - ஒலிக்கின்றன. संसक्ताभिः- இணைந்த (ஒன்று சேர்ந்த), किन्नरीभिः - கின்னரப் பெண்களால், त्रिपुरविजयः - முப்புர வெற்றி, गीयते - பாடப்படுகின்றது; कन्दरेषु - குகைகளில், ते - உன்னுடைய (கர்ஜனையின்), निर्ह्रादः - எதிரொலி, मुरजे-ம்ருதங்கத்தில் (எழும்), ध्वनिः इव - ஒலி போல், स्यात् चेत् - இருக்குமாயின், तत्र - அங்கு (சிவபிரானுடைய அடிச்சுவடு இருக்கும் இடத்தில்), पशुपतेः - சிவபிரானுக்கு, सङ्गीतार्थः - ஸங்கீதம் என்ற பொருள், समग्रः - முழுமை பெற்றதாக, भावी ननु - திண்ணமாக ஆகும்.

கருத்துரை: — மேகமே, திருவடிச்சுவடுகள் இருக்குமிடத்தில் காற்று நிரம்பிய துளையுள்ள மூங்கில்கள் இனிதே ஒலிக்கின்றன. இவை புல்லாங்குழலின் ஒலிபோல் உள்ளன. கின்னரப் பெண்கள் ஒன்று சேர்ந்து இனிய குரலில் சிவபெருமான் திரிபுர்ஸம்ஹாரம் செய்த வரலாற்றினைப் பாடுகின்றனர். இவற்றுடன் மிருதங்கத்தினின்றும் எழும் ஒலிபோல் மென்மையான உனது ஒலி குஹைகளினின்றும் எதிரொலிக்குமாயின் அங்கு நித்யவாஸம் செய்கின்ற சிவபிரானுக்கான ஸங்கீதத்திற்குத் தேவையான சுருதி பாட்டு தாளம் என்ற மூன்று பொருளும் சேர்ந்து ஸங்கீதம் முழுமை பெறும். ஸங்கீதத்திற்குத் தேவையான மற்றொரு காரணமான மேக ஒலியும் சேருவதைக் கூறுதலால் ஸமாதி என்ற அலங்காரம்.

விளக்கவுரை: — कीचकाः शब्दायन्ते- காடுகளிலுள்ள மூங்கில்களில் வண்டுகள் துளையிடும். அங்கு வீசும் காற்று அத்துளை வழியே புகுந்து வெளி வரும் போது புல்லாங்குழலின் ஓசையைத் தரும். இவ்வொலி கின்னர ஸ்த்ரீகளுக்கு சுருதியாக இருந்தது.

संसक्ताभिः - கின்னரப்பெண்கள் சேர்ந்து பாடினர். 'மூங்கில் ஒலியுடன் இணைந்தவர்களாக' என்றும்

பொருள் கூறலாம். संरक्तामि: என்ற பாடத்திற்கு 'இனிய குரலுடைய' என்பது பொருள்.

त्रिपुर - மயன் என்ற அசுரன் தங்கம், வெள்ளி, தாமிரம் இவற்ருலான மூன்று நகரங்களைப் படைத்து வித்யுன்மாலி, ரக்தாக்ஷன், ஹிரண்யாக்ஷன் என்று மூன்று அசுரர்களுக்குக் கொடுத்தான். அந்நகரங் களினுல் துன்பம் ஏற்படவும், அவற்றை எரித்துச் சிவ பிரான் வெற்றி கொண்டார். இவ் வெற்றியை வைத்துப் பாடிக் கொண்டிருந்தனர் கின்னரப் பெண்கள்.

निर्ह्राद:-மேகத்தின் ஒலி. இங்கு குஹைகளிலிருந்து வரும் எதிர் ஒலியைக் குறித்தது. மிருதுவான மேக கர்ஜனையின் எதிரொலி, மிருதங்கத்தினின்றும் எழும் சத்தம் போல் இருந்து, தாள ஒலியாக அமையும்.

पशुपति: - ஜீவராசிகளின் தலைவர்; சிவபிரான். இவர் அங்கு நித்யவாசம் செய்பவர்.

संगीत-अर्थ: - ஸங்கீதம் - பாட்டு என்ற பொருள் அல்லது பயன். समग्र: - நிறைவு பெற்றதாக ஆகும்.

ஸங்கீதம் என்ற சொல் நிருத்யம், பாட்டு, வாத் யம் என்ற இம்மூன்றினையும் குறிக்கும் என்பர் தக்ஷிணு வர்த்தர். அங்கு சிவபிரான் நர்த்தனம் ஆடுவதாகவும் கூறுவர். मुरज: - மிருதங்கம்.

'निर्ह्रादी'-'मुखे'-'पशुपतेः नृत्यतः तत्र पूर्णः' என்பது அவர் கொண்ட பாடம். शब्दायन्ते गीयते - என்ற நிகழ்கால வினைச்சொற்கள் ஒலியும் பாட்டும் எப்பொழுதும் நிகழ்வன என்பதைக் காட்டின.

ஐம்பத்திரண்டு தொடங்கி ஐம்பத்தாறு வரையுள்ள ஐந்து சுலோகங்களில் ஹிமயமலையின் இயல்பு கூறப்பட்டது.

प्रालेयाद्रेरुपतटमतिक्रम्य तांस्तान्विशेषान्
हंसद्वारं भृगुपतियशोवर्त्म यत्क्रौञ्चरन्ध्रम् ।
तेनोदीचीं दिशमनुसरेस्तिर्यगायामशोभी
श्यामः पादो बलिनियमनाभ्युद्यतस्येव विष्णोः ।।५७।।

பதவுரை:— प्रालेयाद्रेः - பனி மலையான ஹிமாலயத்தின், उपतटम् - பிரதேசங்களுக்கு அருகில், तान् तान् - அந்தந்த (பலவிதமான), विशेषान् - (பார்க்க வேண்டிய) சிறப்பானவற்றை, अतिक्रम्य - (பார்த்துக்) கடந்து, हंसद्वारम् - ஹம்ஸங்கள் (மானஸரோவரம் செல்வதற்கு) வாசலாகவும், भृगुपति-यशोवर्त्म-பரசுராமருடைய புகழின் மார்க்கமுமாக, यत् - எந்த, क्रौञ्च-रन्ध्रम् - க்ரௌஞ்ச மலையின் த்வாரம் (குகைப்பாதை) இருக்கின்றதோ, तेन - அதன் வழியாக, बलि-नियमन-अभ्युद्यतस्य - பலி சக்ரவர்த்தியை அடக்குவதில் ஈடுபட்ட, विष्णोः - விஷ்ணுவின், श्यामः पाद इव - கருநிறமான பாதம் போல், तिर्यग्-आयाम-शोभी (सन्) - குறுக்கே நீண்டிருத்தலால் சோபிக்கின்றவனாக இருந்து கொண்டு, त्वम् - நீ, उदीचीम्-दिशम् - வடக்கு திசையை நோக்கி, अनुसरेः - பயணத்தைத் தொடர்வாயாக (செல்வாயாக).

கருத்துரை: — மேகமே, ஹிமயமலையின் சிகரத்தைச் சூழ்ந்துள்ள இடங்களில் பார்க்கத்தக்க பலவற்றையும் கண்டு அவற்றை எல்லாம் கடந்து மானஸஸரோவரம் செல்லும் அன்னப்பறவைகளுக்கு நுழைவாயிலாக இருப்பதும் பரசுராம

ச்ரால் துளைக்கப்பட்டதுமான க்ரௌஞ்ச மலையின் குஹைப் பாதை வழியாக, உன் உடலை நீள வடிவினதாக்கிக் (குறுக்காகக்) கொண்டு வடக்கு நோக்கிச் செல். இந்நிலையில் நீண்ட உனது உடல், பலியை அடக்கத் தொடங்கின திருமாலின் கருத்த திருப்பாதத்தின் அழகைப் பெற்றிருக்கும். உவமையணி.

விளக்கவுரை:— प्रालेयः - பனி. अद्रि - மலை. विशेषाः- காண வேண்டிய சிறப்புப் பொருட்கள். ஸுப்ரஹ்மண்யரும் பரசுராமரும் சிவபிரானிடம் வில்வித்தை பயின்றனர். குமரன் ஒரு சமயம் தமது பாணத்தால் க்ரௌஞ்ச மலையைத் துளைத்தார். அதனால் அவருக்கு क्रौञ्चदारणः என்ற பெயர் ஏற்பட்டது. அவரது புகழைக் கண்டு பொறாமை கொண்ட பரசுராமரும் ஒரு அம்பை எறிந்து அம்மலையில் பெரிய த்வாரத்தை உண்டாக்கி ஸுப்ரஹ்மண்யருக்குத் தாம் சமமானவர் என்பதை நிரூபித்தார். இந்த த்வாரமே இவருக்குப் புகழ் தரும் வழியாயிற்று (यशोवर्त्म).

हंसद्वारम् - மழைக்காலத்தில் கலங்கிய நீர் குடிக்க விரும்பாத அன்னங்கள் க்ரௌஞ்ச மலைக்கும் வடக்கிலுள்ள தெளிந்த நீருடைய மானஸஸரஸ் என்ற ஏரியையடைய இந்த த்வாரத்தையே வாயிலாக-வழியாக உபயோகித்தன. எனவே, அந்த த்வாரத்தை ஹம்ஸத்வாரம் என்று கூறினர்.

क्रौञ्चरन्ध्रम्-रन्ध्रं-द्वारम् - மலைகளில் குடைந்து ஒரு புறமிருந்து மறுபுறம் செல்ல செய்யப்பட்ட குஹைப் பாதை-சுரங்கம் அல்லது குடையப்பட்ட வழி. भृगु - ஒரு மஹரிஷி, அவர் வம்சத்தில் வந்து சிறந்தவராக இருந்ததால் பரசுராமர் भृगुपति என்று கூறப்பட்டார்.

बलिनियमन - விரோசனன் புத்ரனான பலி என்ற அஸுர சக்கரவர்த்தி தேவர்களின் செல்வத்தைக் கவர்ந்ததால் அவனை அடக்க விரும்பி விஷ்ணு வாமனராக வந்து மூன்றடி மண் யாசித்து நெடிதுயர்ந்து ஓரடியால் பூமியை அளந்து மற்றொரு அடியால் ஆகாயத்தையளந்தார். அவ்வாறு அளக்க முற்பட்ட பொழுது தூக்கப்பட்டுக் குறுக்காக இருக்கும் நிலையில் அவருடைய திருவடி மேகத்திற்கு உவமையாயிற்று.

மேகமும் குகைப்பாதையில் நுழைய தன் உடலைக் குறுக்காக நீட்டிக்கொள்ளும்படி கூறப்பட்டது. तिर्यग्-आयाम - குறுக்காக நீண்ட; க்ரௌஞ்ச மலை எதுவென்று கூற இயலவில்லை என்பர் வில்ஸன்.

गत्वा चोर्ध्वं दशमुखभुजोच्छ्वसितप्रस्थसंधेः
कैलासस्य त्रिदशवनितादर्पणस्यातिथिः स्याः ।
शृङ्गोच्छ्रायैः कुमुदविशदैर्यो वितत्य स्थितः खं
राशीभूतः प्रतिदिनमिव त्र्यम्बकस्याट्टहासः ॥ ५८ ॥

பதவுரை:—ऊर्ध्वम् च गत्वा - (குகைப்பாதையினின்றும் வெளி வந்த பின்) மேல் நோக்கிச் சென்று, यः - எந்த கைலாஸ மலை, कुमुद-विशदैः - ஆம்பல் மலர் போல் வெண்ணிறமான, शृङ्ग-उच्छ्रायैः - உயர்ந்த சிகரங்களால், खम् - ஆகாயத்தில், वितत्य - வியாபித்து, प्रतिदिनम् - ஒவ்வொரு நாளும், राशीभूतः - குவியலான, त्र्यम्बकस्य - சிவபிரானுடைய, अट्टहासः इव - பெரும் சிரிப்பு போல், स्थितः - இருக்கின்றதோ, तस्य-அந்த, दशमुख-भुज-उच्छ्वसित-प्रस्थ-सन्धेः - ராவணனுடைய கைகளால் தளர்ந்த சிகரங்

களின் இணைப்பையுடையதும், त्रिदश-वनिता-दर्पणस्य-தேவ மகளிரின் கண்ணாடியுமான, कैलासस्य-கைலாஸ மலைக்கு, अतिथिः - விருந்தினனாக, स्याः - ஆவாயாக.

கருத்துரை: — மேகமே, க்ரௌஞ்ச மலையின் குகைப் பாதை வழியே சென்று வெளிவந்து மேலே ஆகாயத்தை அடைந்து கைலாஸ மலைக்குச் செல். அம்மலை ஆம்பல் மலர்க் குவியல் போல் வெண்ணிறமான சிகரங்களால் திசை எங்கும் பரவி இருப்பது, சிவபெருமானின் அட்டஹாஸமே பிரதி தினம் சேமிக்கப்பட்டு குவிக்கப்பட்டது போல் உள்ளது. கைலாஸ மலை தேவமகளிரான அப்ஸரஸ்களுக்கு தம் முழு அழகு நோக்க அமைந்த பெரிய கண்ணாடி போலுள்ளது. ராவணன் தூக்க முயன்று அசைத்ததால் அதன் சிகரங்களின் இணைப்புக்கள் தளர்ந்திருக்கின்றன. அண்மையிலுள்ள இத் தகைய கைலாஸத்தை அடைவாயாக. உத்ப்ரேக்ஷா அலங்காரம்.

விளக்கவுரை: — दशमुख...सन्धेः: கைலாஸ மலையின் அழகைக் கண்டு வியந்த ராவணன் அதை லங்கைக்குக் கொண்டு செல்ல விரும்பி தனது இருபது கைகளையும் அதன் அடியில் கொடுத்துப் பெயர்த்து அசைத்ததால் அம்மலையின் சிகரங்களின் இணைப்பு தளர்ந்தது. சிவ பிரான் மலையை அழுத்த ராவணன் கைகள் மலைகளின் கீழே அழுத்தப்பட்டன. அவன் ஸாமகானம் செய்து சிவபிரானை மகிழ்வித்து விடுதலை பெற்றான்.

त्रिदश...दर्पणस्य - ஸ்படிகக் கல்லினாலோ வெள்ளி யினாலோ அமைந்திருந்ததால் கைலாஸ மலை தேவ வனிதையரான அப்ஸரஸ்களுக்குத் தங்களது முழு உட லழகையும் காண்பதற்குக் கண்ணாடியாக இருந்தது.

खम् विततय - ஆம்பல் மலர் போல் வெண்ணிறமான சிகரங்கள் விண் அளாவி இருந்தன.

अट्टहासः - உரத்த சிரிப்பு; अट्टहासो महाहासः என்பது வைஜயந்தி நிகண்டு. சிவபிரான் பிரதி தினம் செய்த அட்டஹாஸம், சேமிக்கப்பட்டு குவியலாக வைக்கப்பட்டது போல் வெள்ளிமலை இருந்தது என உத்ப்ரேக்ஷித்தார். சிரிப்பை வெண்ணிறமுடையதாகக் கூறுவது கவி மரபு.

अतिथिः स्याः - விருந்தினனாக ஆவாயாக. செல்வாயாக என்பது கருத்து. ஐம்பத்தெட்டு முதல் அறுபத்திரண்டு வரையுள்ள ஐந்து சுலோகங்கள் திருக்கைலாஸத்தை வருணிப்பன.

उत्पश्यामि त्वयि तटगते स्निग्धभिन्नाञ्जनाभे
सद्यःकृत्तद्विरददशनच्छेदगौरस्य तस्य ।
शोभामद्रेः स्तिमितनयनप्रेक्षणीयां भवित्री-
मंसन्यस्ते सति हलभृतो मेचके वाससीव ॥ ५९ ॥

பதவுரை:—स्निग्ध-भिन्न-अञ्जनाभे - மிருதுவான-நன்கு குழைக்கப்பட்ட மை போன்ற நிறம் உடைய, त्वयि - நீ, तटगते - அம்மலையின் சிகரத்திற்கு அருகிலுள்ள ஸமதளத்தில் இருக்கும் போது, सद्यः कृत्त-द्विरद-दशनच्छेद-गौरस्य- அப்பொழுதே அறுக்கப்பட்ட யானை தந்தத் துண்டு போல் வெண்ணிறமான, तस्य अद्रेः - அம்மலைக்கு, मेचके - நீலநிறமுடைய, वाससि - வஸ்திரம், अंसन्यस्ते (सति) - தோளில் வைக்கப்பட்ட போது, हलभृतो इव - பலராமருக்கு இருக்கும் சோபை போல, स्तिमित-नयन-प्रेक्षणीयाम्- இமைக்காத கண்களால் காணத் தகுந்த, शोभाम् - சோபை, भवित्रीम् - வரப்போவதை, उत्पश्यामि - எதிர்பார்க்கிறேன்.

கருத்துரை: — மேகமே, அம்மலையையடையும் போது உன்னால் அம்மலைக்கு ஒரு சிறந்த சோபை ஏற்படும் என்பதை எதிர்பார்க்கிறேன். அப்பொழுதே வெட்டப்பட்ட யானை தந்தத் துண்டம் போல் வெண்ணிறமுடையது அம்மலை. நீயோ நன்கு குழைக்கப்பட்டு பளபளப்பாக இருக்கும் மை போல் கருநிறமுடையவன். நீ அம்மலையின் சிகரத்திற்கு அடுத்துள்ள ஸமதளத்தில் தங்குவாய். அப்போது வெண்ணிற மான தேஹமுடைய பலராமர் தம் தோளில் நீலநிறப்பட்டுத் துணியைப் போட்டிருக்கும் போது எவ்விதமான அழகுடன் இருப்பாரோ அந்த அழகைப் பெற்று கைலாஸம் விளங்கும். கைலாஸத்திற்கும் அத்தகைய அழகைத்தரும் வாய்ப்பினை நீ பெறுவாய் என நினைக்கிறேன். உவமை அணி.

விளக்கவுரை: — स्निग्ध - வழவழப்பான, ம்ருது வான, கையில் ஒட்டும்படியான பசைத்தன்மை யுடைய என்றெல்லாம் இப்பதத்திற்குப் பொருள். பட்டு வஸ்திரத்திற்கும் இவ்விசேஷணங்கள் பொருந் தும். காளிதாஸர் स्निग्ध என்பதைப் பல பொருள் களில் உபயோகிக்கிறார். भिन्न-நன்கு குழைக்கப்பட்ட; सद्यः कृत्त - என்பதை दशनच्छेद என்பதுடன் சேர்க்க. புதி தாக வெட்டப்பட்ட தந்தம் வெண்மையாக இருக் கும். நாளானால் பழுப்பு நிறம் கொள்ளும்; தந்தம் போல் வெண்மையானது என்பதை கைலாஸ மலைக் கும் பலராமருக்கும் விசேஷணமாகக் கொள்ள வேண்டும். மலையும் வெண்ணிறம், பலராமரும் வெண்ணிறமுடையவர்.

मेचक-நீலமான; கறுத்த என்ற பொருளும் உண்டு. कृष्णे नीलासितश्याम कालश्यामलमेचकाः என்பது அமரம். वासः- வஸ்த்ரம். இங்கு பட்டுத்துணி.

नीलाम्बरः என்று பலராமனுக்கு ஒரு பெயர் உண்டு. பலராமர் எப்போதும் நீல வஸ்த்ரமே தரிப்பவர்.

हल - கலப்பை, அதை ஆயுதமாக தரிப்பவர் பலராமர். स्तिमित - அசைவற்ற; இமைக்காத; பார்ப்பவர்களின் இமைகள் வியப்பினால் இமைக்கவும் மறக்கும். எனவே "இமைக்காது நோக்க வேண்டிய அழகு" என்று கூறினர்.

हित्वा तस्मिन्भुजगवलयं शंभुना दत्तहस्ता
क्रीडाशैले यदि च विचरेत्पादचारेण गौरी ।
भङ्गीभक्त्या विरचितवपुः स्तम्भितान्तर्जलौघः
सोपानत्वं कुरु मणितटारोहणायाग्रयायी ॥ ६० ॥

பதவுரை: — तस्मिन् - அந்த, क्रीडाशैले - கேளிக்கைக்கான மலையில் (கைலாஸத்தில்), शम्भुना - சிவபிரானால், भुजग-वलयम् - பாம்புக் கங்கணத்தை, हित्वा-நீக்கி விட்டு, दत्तहस्ता - கைகொடுக்கப் பெற்ற, गौरी-பார்வதி, पादचारेण च - பாதங்களால் நடந்து, विचरेत् यदि - உலாவுவாளேயானால் (அப்போது), अग्र-यायी-(அவர்களுக்கு) முன்னால் செல்பவனாகவும், स्तम्भित-अन्तर्जलौघः—सन् - உள்ளே இறுக்கிய ஜலத்திரளையுடையவனாகவும், भङ्गी-भक्त्या - படிகளின் வடிவில், विरचित-वपुः (सन्) - அமைக்கப்பட்ட உடல் உடையவனாகவும் இருந்து கொண்டு, मणि-तट-आरोहणाय - ரத்னமயமான இடங்களை பார்வதி ஏறுதற்காக, सोपानत्वम् - படிக்கட்டுகளாக இருக்கும் நிலையை, कुरु - செய்து கொள்வாயாக.

கருத்துரை:—மேகமே, சிவபிரான், பார்வதி அச்சுறுவாள் என்ற காரணத்தால் கையிலுள்ள பாம்பு வளையலை நீக்கிவிட்டு

பார்வதிக்குக் கை கொடுத்து அம்மலையில் பல இடங்களுக்கு அவளை அழைத்துச் செல்வார். உமாதேவி அப்போது நடந்து உலாவுவாள். நீ அவ்விருவருக்கும் முன் சென்று உன்னிட முள்ள நீரை இறுக வைத்துப் படிக்கட்டுகள் போல் உன் உடலை அமைத்துக் கொண்டு மணிமயமான இடங்களை ஏறுதற்கு வசதியான படிகளாக அமைவாயாக. மேகத்தைப் படியாக மாறச் சொன்னதால் பரிணும அலங்காரம் என்பர்.

விளக்கவுரை: — *இதுவரை சிவபிரானுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பினைப் பெற்ற நீ இப்போது உமாதேவிக்கும் தொண்டு செய்யும் பெரும் பேற்றினைப் பெறுவாய் என்கிறார்.*

क्रीडाशैले - *விளையாடுதற்கான மலை; "சிவபிரான் உமையுடன் விளையாடி மகிழ்தற்காக கைலாஸம், மேருமலை, மந்தரம், கந்தமாதனம் என்ற இம்மலைகள் படைக்கப்பட்டன" என்று சம்புரஹஸ்யம் என்ற நூல் கூறும்.* कैलास: कनकाद्रिश्च मन्दरो गन्धमादन: । क्रीडार्थं निर्मिता: शम्भो: देवै: क्रीडाद्रयोऽभवन् *என்பது காண்க.*

எனவே, கைலாஸத்தை क्रीडाशैल *ம் என்ற சொல் லால் குறித்தார்.* भुजगवलयं हित्वा-*பார்வதியின் கையைப் பிடிக்கும்போது அவள் அச்சமுறாதிருக்க தம் கையின் அணியான பாம்பையும் நீக்கிவிட்டார் சிவபிரான்.* दत्त-हस्ता-*மேடுபள்ளங்களில் இடறாமல் இருக்க பார்வதிக் குக் கையைக் கொடுத்தார். இன்ப உணர்ச்சி பெறு தற்காகவும் எனலாம்.*

पादचारेण-*வாஹனத்தில் சென்றால் காண வேண்டி யதைக் காண முடியாமல் போகலாம் என்பதற்காகப் பாதங்களால் நடந்து சென்றாள். உலாவுதல் என்றும் கொள்ளலாம்.* च *என்பது வாக்யாலங்காரம்.* भङ्गी -

அலைவரிசை போன்ற படிக்கட்டுகளின் வரிசை. भक्ति- செய்தல் அல்லது பிரித்தல்; 'படிவரிசைகளைச் செய்தலால்' அல்லது "மேகத்தை பகுத்துக் கொள்வதால்" என்பது பதப்பொருள் - அலைகளைப் போல உன் வடிவினை அமைத்துக் கொள் என்று கருத்து.

स्तम्भित - 'திரவமான நீரைக் கடினப்பொருளாகச் செய்து' என்பது பொருள்; மேகம் தன்னுள் இருக்கும் நீரை இறுக்கிக் கடினமாகச் செய்தாலன்றி, அதனைப் படியாக அமைத்து அதன் மேல் ஏறி நடத்தல் இயலாது. मणितट - ரத்னங்களால் அமைக்கப்பட்ட இடம்.

तत्रावश्यं वलयकुलिशोद्घट्टनोद्गीर्णतोयं
नेष्यन्ति त्वां सुरयुवतयो यन्त्रधारागृहत्वम् ।
ताभ्यो मोक्षस्तव यदि सखे घर्मलब्धस्य न स्यात्
क्रीडालोलाः श्रवणपरुषैर्गर्जितैर्भाययेस्ताः ॥ ६१ ॥

பதவுரை: — तत्र - அங்கு (கைலாஸ மலையில்), सुर-युवतयः - தேவ மகளிர் (அப்ஸரஸ் ஸ்த்ரீகள்), वलय-कुलिश-उद्घट्टन-उद्गीर्ण-तोयम्-கங்கணங்களின் கூரான முனைகளால் குத்துவதால் வெளியிடப்பட்ட நீரையுடைய, त्वाम् - உன்னை, अवश्यम् - திண்ணமாக, यन्त्र-धारा-गृहत्वम् - இயந்திரத்தினால் நீர்பெருக்குடைய அறையின் நிலையை, नेष्यन्ति - அடைவிப்பார்கள்; सखे - நண்பனே, घर्म-लब्धस्य- கோடையில் கிடைக்கப் பெற்ற, तव - உனக்கு, ताभ्यः - அவ்வனிதையரிடமிருந்து, मोक्षः - விடுதலை, न स्यात् यदि - இராமற்போனால், क्रीडालोलाः - விளையாட்டில் விருப்புடைய, ताः - அப்பெண்களை, श्रवणपरुषैः - கேட்பதற்கு

கடோரமான, गर्जितैः - *கர்ஜனைகளால்,* **भाययेः** - *அச்சுறுத்துவாயாக.*

கருத்துரை: — நண்பனே, சிவஸேவை செய்வதற்காகவோ, மகிழ்வதற்காகவோ, தேவமகளிர் கைலாஸம் வந்திருப்பர். கோடை வெப்பத்திஞல் துன்புறும் அவர்கள் நீரை உள்ளடக்கிய உன்னைக்கண்டதும் தங்கள் கங்கணங்களிலுள்ள முனைப்பகுதியால் உன்னைக்குத்தித் துளையிட்டு அதன் மூலம் நீரை வெளிவரச் செய்து அதை அனுபவிக்க முயல்வர். எனவே, உன்னை இயந்திர உதவியால் ஒரு தாரையாகவோ பல தாரையாகவோ தண்ணீருடைய ஒரு அறையாகச் செய்வர். இப்படிப் பலர் ஒரே காலத்திலோ, ஒருவர் பின் ஒருவராகவோ உன்னை உபயோகிப்பரேல் என் காரியம் கெடும். அப்பெண்கள் இதை ஒரு விளையாட்டாகவும் கருதி அதில் விருப்புடன் இருப்பர். உனக்கு அவர்களிடமிருந்து விடுதலை கிடைப்பது அரிதாயின் காதிற்கு வலி தரும் கர்ஜனைகளைச் செய்து அவர்களை அச்சுறுத்து. நீயும் விடுதலை பெறுவாய்.

இடையில் வரும் இடையூற்றைப் போக்கிக் கொள்ள உபாயம் கூறப்பட்டது இச்சுலோகத்தில். இச்சுலோகத்தில் பரிஞமம், அப்ரஸ்துத ப்ரசம்ஸா என்ற இரண்டு அணியும் இருப்பதாகக் கருதுவர் பூர்ணஸரஸ்வதி.

விளக்கவுரை: — कुलिश - *வஜ்ராயுதம்.* இது பல *முனைகளையுடையது. இங்கு இப்பதம் 'முனைகளை மாத்திரம் குறித்தது' என்பர் மல்லிநாதர்.* वलयकुलिश - *பெண்கள் அணிந்துள்ள வளையல் அல்லது கங்கணத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறிது கூரான பகுதி.* उद्घट्टन - *இடித்தல்; மோதுதல்; இங்கு அம்முனையால் குத்துதலைக் குறிக்கும்.*

यन्त्र-धारा-*மேகத்தினின்றும், மலைகளிலிருந்தும் நீர் தாரையாக வருவது இயற்கை. ஆனல் அவ்வகையில்*

நீர்த்தாரையை வீடுகளில் பெற இயந்திரங்களை உப யோகித்தனர். இதனை ஒரு அறையில் அமைப்பர். எனவே இயந்திரத்தின் உதவியால் பெறப்படும் நீர்த் தாரையுடைய அறை என்பது பொருள். இங்குள்ள गृह என்ற சொல் விசாலமான அறையைக் குறிக்கும். மேகத்தைப் பெண்கள் வளையல் முனையால் குத்தி நீரைப் பெறுவதால் மேகத்தை 'யந்திரதாராக்ருஹம்' என்றார். இது போன்ற கருத்து ரகுவம்சத்திலும் கூறப்பட்டுள்ளது.

यन्त्रप्रवाहैः शिशिरैः परीतान् रसेन धौतान् मलयोद्भवस्य। शिलाविशेषान् अधिशय्य निन्युः धारागृहेष्वातपमृद्धिमन्तः 16-49.।

घर्मलब्ध - வெப்பமுள்ள கோடையில் வந்த மேகத்தை, விட்டுவிட மனம் அப்பெண்களுக்கு வராது. श्रवणपरुष- காதிற்குக் கடோரமான என்றும் பொருள் கொள்ள லாம். भायये: - அச்சுறுத்து; அதற்குமேல் அதிகமான துன்பத்தைத் தரவேண்டாம் என்பது கருத்து.

हेमाम्भोजप्रसवि सलिलं मानसस्याददानः
कुर्वन् कामं क्षणमुखपटप्रीतिमैरावतस्य ।
धुन्वन्कल्पद्रुमकिसलयान्यंशुकानीव वातै-
र्नानाचेष्टैर्जलद ललितं निर्विशेस्तं नगेन्द्रम् ॥ ६२ ॥

பதவுரை: — जलद - மேகமே, हेम-अम्भोज-प्रसवि - தங்கத்தாமரை மலர்களையுடைய, मानसस्य - மானஸ ஏரியினுடைய, सलिलम् - ஜலத்தை, आददानः - பருகுபவ னாகவும், ऐरावतस्य - ஐராவதத்திற்கு, क्षण-मुखपट-प्रीतिम् - ஒரு நொடிப் பொழுது முகபடாம் அளிப்பதின் மகிழ்ச் சியை, कुर्वन् - செய்பவனாகவும், कल्पद्रुम-किसलयानि-கல்பக

விருக்ஷங்களின் தளிர்களை, अंशुकानि इव - பட்டுத்துணிகளை அசைப்பது போல், वातैः - (உனது) காற்றினாலே, धुन्वन् - அசைப்பவனாகவும் இருந்து கொண்டு, नानाचेष्टैः - பலவித செயல்களையுடைய, ललितैः - உனது விளையாட்டுக்களால் (மன மகிழ்ச்சிக்கான செயல்களாலோ), तम् नगेन्द्रम् - அந்த மலையை, कामम् - (உன்) விருப்பப்படி, निर्विशेः - அனுபவிப்பாயாக.

கருத்துரை: — மேகமே, கைலாஸ மலை உனது நண்பன். எனவே, நண்பனது இல்லத்தில் ஸுகம் அனுபவிப்பது போல் அங்கும் நீ உன் மனம் விரும்பியபடி இன்பம் துய்ப்பாயாக. தங்கத்தாமரைகளைப் பூக்கும் மானஸ ஸரோவரத்தின் கலக்கமற்ற நீரைப்பருகி இன்பமடைவாயாக. அங்கு குளிக்கவும் நீர் பருகவும் வரும் ஐராவதத்தின் முகத்தின் மேல் படிந்து ஒரு க்ஷணம் முகபடாம் போலிருந்து அதற்கு மகிழ்ச்சி தருவாயாக. அந்த ஏரியின் கரையிலுள்ள கல்பக விருக்ஷங்களின் தளிர்களைப் பட்டுத்துணியை அசைப்பது போல் மெதுவாக உனது காற்றின் மூலம் அசைப்பாயாக. மின்னுதல், மெதுவாக ஒலித்தல் போன்ற பலவகைச் செயல்களையுடைய உனது கேளிக்கைகள் மூலம் கைலாஸ மலையை அனுபவித்து ஸுகம் பெறுவாயாக. சிறந்த பொருள் கூறப்பட்டதால் உதாத்தம் என்ற அலங்காரம்.

விளக்கவுரை: — मानस - மானஸம் என்று பெயர் பெற்ற மானஸஸரஸ், பெரிய ஏரி. हेम-अंभोज-प्रसवि- प्रसवः-புஷ்பம். प्रसवि-புஷ்பமுடையது அல்லது புஷ்பிக்கும் தன்மையுடையது. தங்கமயமான தாமரைப் புஷ்பங்களையளிப்பது. தங்க நிறமுள்ள தாமரைப் பூக்களைத் தருவது என்றும் பொருள் கொள்ளலாம்.

ऐरावत - ஐராவதத்திற்கு, अभ्र—मातंगः - 'மேகத்தின் நண்பன்' என்ற பெயரும் உண்டு. எனவே உன்

நண்பன் நீர் பருகவும், குளிக்கவும், தாமரைக் காட்டினை உண்ணவும் வரும் போது அதன் முகத்தில் படிந்து ஒரு க்ஷணம் முகபடாமாக இருப்பாயாக. मुखपट - யானைகளுக்கு அணியாகவும் பிறயானைகளைப் பாராமலிருப்பதற்கும் முகத்தில் ஒரு வகை அணியை அணிவிப்பர். இதனைத் தமிழில் முகபடாம் என்பர்.

अंशुकानि इव - பட்டுத்துணி போன்ற தளிர்களை, நகரத்திலுள்ள கொடிகளை அசைப்பதுபோல் அசைப்பாயாக. अंशुकानि स्ववातैः - என்ற பாடம் கொண்டு கல்பகவ்ருக்ஷத்தின் துளிர்களான பட்டுத்துணிகளை என்று உரை கூறுவர் தக்ஷிணாவர்த்தரும் பூர்ணஸரஸ்வதியும். ललित - இச்சொல்லுக்கு அழகு என்ற பொருளிருப்பது போல் கேளிக்கை, விளையாட்டு என்ற பொருளும் உண்டு. ललितं त्रिषु सुन्दरे । अस्त्रियां प्रमदागारे क्रीडिते என்று, சப்தார்ணவம் என்ற நிகண்டு கூறும். மேகம்-பர்வதம், தாமரை-ஸூர்யன், கடல்-சந்திரன், மயில்-மேகம் இவைகள் ஒன்றோடொன்று இயற்கையிலே நட்புடையன என்று கவிகள் கூறுவர். ஆதலால் கைலாஸத்தை மேகத்தின் நண்பனாகக் கூறி நண்பன் வீட்டில் தடையின்றிப் பலவகை இன்பங்களை அனுபவிக்கலாம் என்றான் யக்ஷன்.

तस्योत्सङ्गे प्रणयिन इव स्रस्तगङ्गादुकूलां
न त्वं दृष्ट्वा न पुनरलकां ज्ञास्यसे कामचारिन् ।
या वः काले वहति सलिलोद्गारमुच्चैर्विमाना
मुक्ताजालग्रथितमलकं कामिनीवाभ्रबृन्दम् ॥ ६३ ॥

பதவுரை: — कामचारिन् - விருப்பப்படி ஸஞ்சரிக்கும் மேகமே, प्रणयिनः-காதலனுடைய, उत्सङ्गे - மடியிலே (சாய்ந்திருக்கும்), स्रस्तगंगादुकूलां - தளர்ந்த கங்கை போன்ற வெண்பட்டுடையையுடைய, कामिनीं इव காதலியைக் காண்பது போல், तस्य - அக்கைலாஸ மலையின், उत्सङ्गे - சிகரத்திலுள்ள ஸமதளத்தில், स्रस्तगंगादुकूलाम् - நழுவிய (அருகிலே பிரவஹிக்கின்ற) வெண்ணிறப் பட்டு போன்ற கங்கையையுடைய, अलकाम् - அளகாபுரியை, दृष्ट्वा - பார்த்து, त्वम् पुनः - நீ, न ज्ञास्यसे न - 'இதுதான் அளகை' எனத்திண்ணமாக அறிந்து கொள்வாய். उच्चैर्विमाना-உயர்ந்த ஏழு அடுக்கு மாளிகைகளையுடைய, या - அந்த அளகாபுரி, वः काले – உங்களுடைய (மேகங்களுடைய) காலத்தில் (மழைக் காலத்தில்), सलिलोद्गारम् - மழைத் தாரையைத் தருகின்ற, अभ्र-वृन्दम् - மேகத்திரளை,-उच्चैः विमाना-(ஏணவனிடம்) முற்றிலும் கோபம் நீங்கிய, कामिनी - காதலி ஒருத்தி, मुक्ता-जालग्रथितम्-முத்துச் சரங்களைச் சேர்த்து அணி செய்விக்கப்பட்ட, अलकम्-इव - கேசபாசத்தைத் தாங்கி இருப்பதுபோல், वहति - தாங்கியிருக்கின்றது.

கருத்துரை: — விருப்பப்படி ஸஞ்சரிக்கும் மேகமே! கைலாஸ மலையின் மேல் பரப்பில் வெண்ணிறப்பட்டு போன்ற கங்கை ப்ரவாஹத்தினை சுற்றிலுமுடைய அளகாபுரியை நீ நிச்சயம் அடையாளம் கண்டு, இதுதான் அளகாபுரி எனத் தானே அறிந்து கொள்வாய். கைலாஸ மலைமேல் உள்ள அந்த நகரம், காதலன் மடியில் வெண்ணிறப்பட்டுடை நழுவப் படுத்திருக்கும் ஒரு காதலி போல் காட்சியளித்து உன் மனத்தை மகிழ்விக்கும். அளகாபுரி ஏழு அடுக்கு மாளிகைகளைக் கொண்டது. மழைக்காலத்தில் மேகங்கள்

அம்மாளிகைகளின் மேல் தங்கி முத்துச்சரம் போன்ற நீர்த் தாரைகளைப் பொழியும். கருத்த மேகங்களைத் தாங்கியுள்ள அந்த நகரம் இந்நிலையில், வெண்ணிற முத்துச்சரங்களால் தன் அலகத்தை அணிசெய்து கொண்ட ஒரு மங்கை போல் காணப்படும். உவமையணி.

விளக்கவுரை: — கைலாஸத்திற்குக் காதலனும் கைலாஸ சிகரத்தின் ஸமதளத்திற்கு அவன் மடியும், அளகாபுரிக்கு அவன் மடியில் சரிந்து கிடக்கும் காதலியும், அளகாபுரியைச் சுற்றி ஓடும் வெண்ணிற கங்கைக்கு அவளது வெண்ணிற உடையும் உபமானங்கள். இவ்வுவமைக்குச் சேர उत्संगे स्रस्तगंगादुकूलां कामिनीं என்ற பதங்களைக் கூட்டிப் பொருள் கூறப்பட்டது. சுலோகத்தின் பிற்பகுதியில் ஏழடுக்கு மாளிகையின் மேல் தங்கியிருக்கும் மேகத்திற்குப் பெண் ஒருத்தியின் அலகமும், வெண்ணிற நீர்த்தாரைகளுக்கு அலகத்தினை அணி செய்யும் முத்துச் சரங்களும் உபமானங்கள்.

अलका - அளகாபுரி, குபேரனது நகர்; अलक-கூந்தல், அல்லது சுருளுடைய கூந்தல்; நெற்றியில் மேற்பகுதியில் தவழும் சுருள் குழல். இதனை முத்துச் சரத்தினால் சேர்த்துக் கட்டி அழகுறச் செய்வர். न ज्ञास्यसे न அறியமாட்டாய் என்பதில்லை; திண்ணமாக அறிவாய் என்பது கருத்து. அறிதலில் உள்ள உறுதியைக் காட்ட இரண்டு 'ந' காரங்கள் வந்தன; இப்படிக் கூறுவது ஸம்ஸ்கிருத மொழியின் தனி மரபு.

इति महाकवि श्रीकालिदासकृते मेघसन्देशे

प्रथमाश्वासः समाप्तः ॥

द्वितीयाश्वासः

विद्युत्वन्तं ललितवनिताः सेन्द्रचापं सचित्राः
संगीताय प्रहतमुरजाः स्निग्धगम्भीरघोषम् ।
अन्तस्तोयं मणिमयभुवस्तुङ्गमभ्रंलिहाग्राः
प्रासादास्त्वां तुलयितुमलं यत्र तैस्तैर्विशेषैः ॥ १ ॥

பதவுரை:— यत्र-எந்த அளகாபுரியில், ललित-वनिताः-அழகிய வனிதையரையுடையனவும், सचित्राः - (பல வர்ணங்களில் தீட்டப் பெற்ற) சித்ரங்களையுடையனவும், सङ्गीताय - ஸங்கீதத்திற்காக, प्रहतमुरजाः - வாசிக்கப்பட்ட மிருதங்கங்களையுடையனவும், मणिमयभुवः - ஸ்படிகமயமான மதுபான பூமியின் தரைகளையுடையனவும், अभ्रं-लिहाग्राः-மேகத்தினளவு உயர்ந்துள்ளவையுமான, प्रासादाः-மாளிகைகள், विद्युत्वन्तम्-மின்னலுடையவனும், सेन्द्र-चापम्-வானவில்லுடன் கூடியவனும், स्निग्ध-गम्भीर-घोषम् - இனிய கம்பீரமான ஓசையுடையவனும், अन्तस्तोयम्-உள்ளே நீருடையவனுமான, त्वाम्-உன்னோடு, तैः तैः विशेषैः - அந்தந்த சிறந்த குணங்களால், तुलयितुम् - ஒப்புமை பெறுவதற்கு, अलम् - திறமையுடையனவாக இருக்கின்றனவோ, (तत्र) - அங்கு (அந்த அளகாபுரியில்), (अगारम्)-(என்) மாளிகை, (लक्ष्यम्)-காணப்பெறும்.

கருத்துரை: — அந்த அளகாபுரியில் என் வீட்டை நீ காணலாம். அளகாபுரியிலுள்ள மாளிகைகளும் உன்னோடு ஒப்புமை பெறும் பாக்யம் பெற்றுள்ளன. மாளிகைகள் உன்னைப் போன்றுள்ளன. உன்னிடம் மின்னல் உள்ளது.

மாளிகைகளில் மின்னற்கொடி போன்ற அழகிய வனிதையர் இருக்கின்றனர். உன்னிடம் பல நிறமுடைய வானவில் உள்ளது. மாளிகைகளில் பல வர்ணங்களில் தீட்டப்பெற்ற சித்ரங்கள் உள்ளன. உன்னிடம் செவிக்கினிய கம்பீரமான கர்ஜனை உள்ளது. மாளிகைகளிலும் ஸங்கீதத்திற்காக வாசிக்கப்படும் மிருதங்கங்களின் ஒலியுள்ளது. உன்னுள் பளிங்கு போன்ற நீருள்ளது. மாளிகைகளில் பளிங்குக் கற்களாலான விளையாடுமிடங்களும் மதுபான ஸ்தலங்களும் உள்ளன. அம் மாளிகைகளும் நீ ஆகாயத்தில் உயர்ந்திருப்பது போல் உன் அளவு உயர்ந்துள்ளன. இவ்வாறு உனக்கும், மாளிகைகளுக்கும்-பொதுவான பண்புகள் பல நான் கூறினேன். நான் கூறாத-பொதுவான-வேறு பல சிறப்புக்களும் உண்டு. எனவே, அம்மாளிகைகள் உன்னுடன் ஒப்பிடப்பெறும் திறமை வாய்ந்தன. நீ அவற்றை உன் இனமாகக் கருதி நட்பு கொள்ள இயலும். உவமையணி.

விளக்கவுரை: — *முன் ஆச்வாஸத்தில் மேகம் அளகாபுரிக்குச் செல்ல வழி கூறிய யக்ஷன் இதில் தன் காதலிக்குக் கூறவேண்டிய செய்தியைக் கூறப்போகின்றவனாக, அதற்கு முன், தன் வீடு இருக்கும் அளகாபுரியையும், தன் வீட்டின் அடையாளங்களையும், அதை அடைதல், காதலியைக் காண்டல், காணுங்கால் அவள் உள்ள நிலை, அவளை அணுக வேண்டிய முறை என இவற்றையும் கூறுகின்றான்.*

இங்கு எட்டு சுலோகங்களால் அளகாபுரி வர்ணிக்கப்படுகிறது. இந்த எட்டு சுலோகங்களிலும் உள்ள **யத்ர, யஸ்யாம்** *என்ற சொற்கள் அளகாபுரியைக் குறிக்கின்றன. எனவே, அளகாபுரி என்றே பொருள் கூறிவிடலாம். ஆயினும் வாக்யான்வய முறைப்படி யத்ர என்பதனை ஒன்பதாவது சுலோகத்திலுள்ள தத்ர*

என்ற பதத்துடன் சேர்த்துப் பொருள் கூறுவதே சரியான முறையாகும். அவ்வாறே ஒன்பதாவது சுலோகத்திலிருந்து **தத்ர அகாரம் லக்ஷ்யம்** என்ற மூன்று பதங்களை வருவித்துக் கூட்டிப் பொருள் கூறப்பட்டது. வித்யுல்லதா என்ற உரை எழுதிய பூர்ண ஸரஸ்வதி என்பவர் எட்டு சுலோகங்களிலுள்ள यत्र என்பதை முன் ஆச்வாஸத்தின் கடைசியிலுள்ள சில பதங்களுடன் சேர்த்துப் பொருள் கூறலாம் என்பர். அவர் கூறும் வகை. "यत्र......तां अलकां न न ज्ञास्यसे" "எந்த அளகையில் மாளிகைகள் மேகத்தோடு ஒப்பிட தகுந்தனவாக உள்ளனவோ அத்தகைய அளகாபுரியை, மேகமே, நீ நிச்சயமாக அடையாளம் கண்டு கொள்வாய்" என்பதாம்.

இங்கு மாளிகைகள் உவமைகள். மேகம் உபமானம். உவமையைவிட உபமானம் எப்பொழுதும் மேன்மையுடையதாகும். மாளிகைகளுக்கு மேகத்தை உபமானமாகக் கூறுவதன் மூலம் மேகத்திற்குப் பெருமை தருகிறான் யக்ஷன். மேகத்திற்கும் மாளிகைகளுக்கும் பொதுவான தன்மைகள் சில கூறப்பட்டுள்ளன.

1. மேகத்தில் மின்னல்; மாளிகைகளின் அழகான பெண்கள். 2. மேகத்தில் வானவில்; மாளிகைகளில் பலவர்ணச் சித்திரங்கள். 3. மேகத்தில் செவிக்கினிய ஒலி; மாளிகைகளில் மிருதங்க ஒலி. 4. மேகத்தில் பளிங்குநிற நீர்; மாளிகைகளில் பளிங்குத்தரை. இவை தவிர வேறு சிலவும் உண்டு என்பது, तैः तैः विशेषैः என்ற சொற்களால் கூறப்பட்டது.

प्रासाद: - தேவர்கள் உறையும் மாளிகைகள். मणि- ரத்னம். இந்த பொருள் பொருத்தம் கருதி வெண் ணிறப் பளிங்குக் கற்களைக் குறித்தது.

हस्ते लीलाकमलमलके बालकुन्दानुविद्धं
नीता लोध्रप्रसवरजसा पाण्डुतामानने श्रीः ।
चूडापाशे नवकुरबकं चारु कर्णे शिरीषं
सीमन्ते च त्वदुपगमजं यत्र नीपं वधूनाम् ॥ २ ॥

பதவுரை: — यत्र - எந்த அளகாபுரியில், वधूनाम् - பெண்களுடைய, हस्ते-கையில், लीलाकमलम् - மனமகிழ்ச் சிக்கான தாமரை மலரும், अलके - முன்னெற்றியில் புரளும் கூந்தலில், बालकुन्द-अनुविद्धम् - புதிய மல்லிகை மலரின் பசருகுதலும், आनने - முகத்தில், लोध्रप्रसव-रजसा - லோத்ர மலரின் மகரந்தப் பொடிகளால், पाण्डुताम् - வெண்ணிறம், नीता - அடைவிக்கப்பட்ட, श्रीः - காந்தி யும், चूडापाशे -கூந்தலில், नवकुरबकम्-புதிய மறுதோன்றிப் பூவும், कर्णे - காதில், चारु - அழகான, शिरीषम् - வாகை மலரும், सीमन्ते - வகிட்டுப் பகுதியில், त्वदुपगमजम् - நீ வருவதால் உண்டான (மழை காலத்தில் உண்டான), नीपं च - கதம்பப்பூவும், (सन्ति) - உள்ளனவோ, (तत्र) - அத்தகைய அளகாபுரியில் (अस्मदीयं अगारम्)-எமது வீடு, (लक्ष्यम्) - காணப்பெறுவதாகும்.

கருத்துரை:—மேகமே, அளகாபுரியில் வருஷம் முழுவதும் ஆறு ருதுக்களும் (பருவங்களும்) இருக்கின்றன. பிற இடங் களில் வருவது போல் ஒன்றன் பின் ஒன்ருக அவை வருவன் அல்ல. எனவே, அந்தந்த ருதுவிலே பூக்கும் மலர்கள் எப் பொழுதும் அங்கு உண்டு. பெண்கள் சரத்காலத்தில் பூக்கும் தாமரை மலர்களை அழகிற்காகவும், மனமகிழ்ச்சிக்காகவும்

கையில் வைத்திருப்பர். அலகத்தில் (முன்னெற்றியில் புரளும் சுருள் குழலில்) ஹேமந்த ருதுவில் (முன்பனிக் காலத்தில்) மலரும் மல்லிகை மலரைச் செருகி இருப்பர். சிசிர ருதுவில் (குளிர் காலத்தில்) மலரும் லோத்ர மலரின் மகரந்தப் பொடிகளைப் பூசி முகத்திற்கு வெண்ணிறச் சோபையுண்டாக்குவர். கூந்தலில் வஸந்த ருதுவில் மலரும் மருதோன்றி (மருதாணி) மலரை அணிவர். கிரீஷ்ம ருதுவில் மலரும் வாகைப்பூவைக் காதின் மேல் அணிவர். நீ வருவதால் ஏற்படும் ருதுவான வர்ஷ ருதுவில் (மழைக் காலத்தில்) பூக்கும் கதம்ப மலரை வகிட்டுப் பகுதியில் அணிவர். இவ்வலங்காரங்கள் அங்குள்ள பெண்களுக்கு வருஷம் முழுவதுமே இருப்பவையாகும்.

அந்தந்த ருதுவிலுள்ள பயனைக்கூறி அதன் மூலம் காரணத்தைக் கூறுவதால் அப்ரஸ்துத ப்ரசம்ஸா அலங்காரம் என்பர் பூர்ண ஸரஸ்வதி.

விளக்கவுரை:— अनुविद्धम्—अनुवेध: என்று பொருள். வாக்யத்தை முடிக்க सन्ति என்ற பதம் வருவித்துப் பொருள் கூறப்பட்டது. बालकुन्द அப்பொழுதே மலர்ந்த மல்லிகை அல்லது மலராத மொட்டு.

சரத்ருதுவின் மலர்-தாமரை. ஹேமந்த ருதுவின் மலர்-மல்லிகை. சிசிர ருதுவின் மலர்-லோத்ரம். இதனைத் தமிழில் வெள்ளிலோத்தி என்பர். வஸந்த ருதுவின் மலர்-மருதோன்றி. கிரீஷ்ம ருதுவின் மலர்-வாகை. வர்ஷ ருதுவின் மலர்-கடம்ப மலர்.

यत्रोन्मत्तभ्रमरमुखराः पादपा नित्यपुष्पाः
हंसश्रेणीरचितरशना नित्यपद्मा नलिन्यः ।
केकोत्कण्ठा भवनशिखिनो नित्यभास्वत्कलापाः
नित्यज्योत्स्नाः प्रतिहततमोवृत्तिरम्याः प्रदोषाः ॥

பதவுரை: — यत्र - எந்த அளகையில், पादपाः-மரங்கள், नित्यपुष्पाः - எப்பொழுதும் புஷ்பமுடையனவாகவும், उन्मत्त-भ्रमर मुखराः - களிப்புற்ற வண்டுகளினுல் ஒலியுடையனவாகவும் (இருக்கின்றனவோ), नलिन्यः - தாமரைத் தடாகங்கள், नित्यपद्माः-எப்போதும் தாமரை மலருடையனவாகவும், हंसश्रेणी-रचितरशनाः - அன்னப்பறவைகளால் அமைந்த மேகலையுடையனவாகவும், (இருக்கின்றனவோ), भवनशिखिनः - வீட்டு மயில்கள், नित्य-भास्वत्-कलापाः-எப்போதும் ப்ரகாசிக்கின்ற தோகையுடையனவாகவும், केकोत्कण्ठाः-கூவுவதற்காகக் கழுத்தை நிமிர்த்தியனவாகவும் (இருக்கின்றனவோ), प्रदोषाः - இரவுகள், नित्यज्योत्स्नाः-எப்போதும் நிலவுடையனவாக, प्रतिहत-तमोवृत्तिरम्याः - இருள் நீக்கப்பெற்று அழகாகவும், (सन्ति) - உள்ளனவோ, (तत्र)-அத்தகைய அளகையில், (अस्मदीयं) - எங்களுடைய, (अगारम्) - மாளிகை, (लक्ष्यम्)- காணப்பெறுவதாகும்.

கருத்துரை: — மேகமே, அந்த அளகையில் மரங்களில் எப்பொழுதும் மலர்கள் உண்டு; குறிப்பிட்ட ருதுவில்தான் என்பதில்லை. எனவே, மலர்த்தேன் பருகி களிப்புற்ற வண்டுகள் அம்மலர்களில் அமர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கும். தாமரைத் தடாகங்கள் சரத் ருதுவிலன்றி எல்லா ருதுக்களிலும் மலருடையன. எனவே, அன்னப்பறவைகளின் வரிசை அவ்வோடைகளுக்கு மேகலைபோல் எப்போதும் இருக்கும். வீட்டில் வளர்க்கப்படும் மயில்கள் வர்ஷாகாலம் மாத்திரமின்றி எல்லா ருதுக்களிலும் தோகைகளை இழக்காமல் தோகையுடனிருக்கும். அவைகள் அகவும் போது அவற்றின் கழுத்து நீண்டிருக்கும். (கழுத்தை நீட்டிக்கூவும்). இரவுகளில் எப்பொழுதும் சந்திரனின் நிலவு இருப்பதால் இருள் பரவுவதில்லை. இத்தகைய சிறப்பு வாய்ந்த அளகையில் என் வீட்டை நீ காணலாம். உதாத்தம் என்ற அணி.

விளக்கவுரை: — नलिन्यः - தாமரைக் குளங்களைக் குறிக்க नलिनी என்ற பெண்பாற் சொல்லை உபயோகித்துப் பெண்ணாகக்கருதி அன்ன வரிசைகளை அதற்குச்சேர மேகலையாகக் குறிப்பிட்டார்.

இச்சுலோகத்தையும், அடுத்துள்ளதையும் இடைச்செருகல் எனக்கருதி உரையாசிரியர்கள் உரையிடவில்லை. இடைச்செருகல் என்றே கூறும் மல்லிநாதர் இவற்றிற்கு உரை செய்துள்ளார். முன் சுலோகத்தில் கூறிய கருத்தே இதிலும் கூறப்படுவதால் இதை இடைச்செருகலாகக் கருதினார்கள்.

आनन्दोत्थं नयनसलिलं यत्र नान्यैर्निमित्तै-
र्नान्यस्तापः कुसुमशरजादिष्टसंयोगसाध्यात् ।
नाप्यन्यस्मात्प्रणयकलहाद्विप्रयोगोपपत्ति-
र्वित्तेशानां न च खलु वयो यौवनादन्यदस्ति ॥

பதவுரை: — **यत्र** - எந்த அளகையில், **वित्तेशानाम्** - யக்ஷர்களுக்கு, **आनन्दोत्थम्**-மகிழ்ச்சியினால் (மாத்திரமே) வரும், **नयनसलिलम्** - கண்ணீர், **अस्ति** - உள்ளதோ, **अन्यैः** - வேறு, **निमित्तैः** - காரணங்களால், **न**- இருப்பதில்லையோ, **इष्टसंयोग-साध्यात्** - காதலித்தவர்களுடன் இணைவதன் மூலமே நீக்கப்படக்கூடியதும், **कुसुम-शरजात्** - மன்மத பாணத்தால் உண்டாவதுமான, **तापः (अस्ति)**- வருத்தமே உளதோ, **अन्यः न** - வேறு வகைத் தாபம் இல்லையோ, **प्रणयकलहात्** - அன்பினாலே வரும் ஊடலினாலேயே, **विप्रयोग-उपपत्तिः (अस्ति)** - பிரிவு அடைதல் என்பது ஏற்படுகிறதோ, **अन्यस्मात् अपि न** - வேறு காரணத்தால் ஏற்

படுவதில்லையோ, यौवनात् - யௌவனப் பருவத்தைத் தவிர்த்து, अन्यत्-வேறு, वयः - ஒரு பருவம், न-च-अस्ति खलु- இருப்பதில்லையோ, (तत्र) - அத்தகைய அளகாபுரியில், (अस्मदीयं अगारम्) - எமது வீடு, (लक्ष्यम्) - காணப்பெறும்.

கருத்துரை: — மேகமே, குபேரன் நகரமான அளகாபுரியில் அவனுடைய பிரஜைகளான யக்ஷர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியுடனேயே இருப்பர். கண்களில் நீர் வருதல் அவர்களுக்கு ஆனந்தத்தினால்தான். துக்கம் முதலிய விரும்பத்தகாத காரணங்களால் இல்லை. மன்மத தாபம் தவிர வேறு தாபம் அவர்களுக்குக் கிடையாது. இதற்குப் பரிஹாரம் உண்டு. அவரவர்கள் விரும்பியவர்களை அவரவர்களுடன் சேர்ந்து இருக்கச் செய்வதே இத்தாபத்தைப் போக்குவதற்கான முறையாகும். காதலனுக்கும், காதலிக்கும் பிரிவு என்பது ஊடல் காரணமாக இருக்குமேயன்றி வேறு காரணத்தால் இல்லை. அன்பு மிகுதியால் ஒருவரோடு ஒருவர் கோபித்துப் பிரிந்திருப்பர். யக்ஷர்கள் எப்பொழுதும் யௌவனப் பருவம் உடையவர். கிழப்பருவம் அவர்களுக்குக் கிடையாது. உதாத்தம் என்ற அணி.

விளக்கவுரை: — प्रणय-कलहः - அதிக அன்பினால் காதலர்களுக்குள் ஏற்படும் பிணக்கு. தமிழிலே இதை ஊடல் என்பர். विप्रयोग - பிரிவு; उपपत्तिः - உண்டாகுதல். वित्तेशः - குபேரன்; யக்ஷர்கள் என்ற பொருளும் உண்டு. वित्ताधिपः कुबेरः स्यात् प्रभौ धनिकयक्षयोः என்பது சப்தார்ணவ நிகண்டு.

यस्यां यक्षाः सितमणिमयान्येत्य हर्म्यस्थलानि
ज्योतिश्छायाकुसुमरचितान्युत्तमस्त्रीसहायाः ।
आसेवन्ते मधु रतिफलं कल्पवृक्षप्रसूतं
त्वद्गम्भीरध्वनिषु शनकैः पुष्करेष्वाहतेषु ॥ ३ ॥

பதவுரை: — यस्याम् - எந்த அளகாபுரியில், उत्तम-स्त्री-सहाया: — மிக அழகிய ஸ்த்ரீகளைத் துணையாகக் கொண்டு, सित-मणि-मयानि - பளிங்குக் கற்களாலானவை யும், ज्योति:-छाया-कुसुम-रचितानि - நக்ஷத்ரங்களின் பிரதி பிம்பம் எனும் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட வையுமான, हर्म्य-स्थलानि - மாளிகைகளின் மேற்தளங் களை (திறந்த வெளிகளை), एत्य - அடைந்து, त्वद्गम्भीर-ध्वनिषु- உன்னுடைய கம்பீரமான ஓசை போன்ற ஓசை யுடைய, पुष्करेषु - வாத்யங்கள், शनकै: - மெதுவாக, आहतेषु - வாசிக்கப்படும் போது, कल्पवृक्ष-प्रसूतम् - கல்பக விருக்ஷத்தில் உண்டான, रतिफलम् - ரதிபலம் என்ற பெயருடைய, मधु - மதுவை, आसेवन्ते - ஆர்வத்துடன் அனுபவிக்கின்றனரோ, (तत्र)-அத்தகைய அளகையில், (अस्मदीयम्) - எமது, (अगारम्)-மாளிகை, (लक्ष्यम्)-காணப் பெறுவதாகும்.

கருத்துரை: — அளகையில் யக்ஷர்கள் முன்னிரவில் அழகான அங்கனைகளுடன் சேர்ந்து இருந்து கொண்டு ஸ்படிகக் கல்லிழைக்கப்பட்டனவும் நக்ஷத்ரங்களின் பிரதிபிம்பம் காரணமாகப் புஷ்பங்கள் வைத்து அலங்கரிக்கப்பட்டவை போல் இருப்பனவுமான மாளிகையின் திறந்த வெளியுடைய மேல் தளங்களில் அமர்ந்து, மேகமே, உன்னுடைய செவிக்கினிய கம்பீரமான கர்ஜனைமேல் இருக்கும்படி மெதுவாக ம்ருதங்கங் கள் வாசிக்கப்படும் போது, கல்பக விருக்ஷத்தினின்றும் கிடைத்த 'ரதிபலம்' என்ற மதுவை ஆர்வத்துடன் பருகி மகிழ்கின்றனர். அத்தகைய அளகையில் எமது வீடு உன்னால் காணப்பெறும். உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை: — उत्तमस्त्रीसहाया: - மதுபானத்தை ரஸிக்க, ஸ்த்ரீகளும் உடன் மது அருந்துவது மிகவும் உதவும் என்பதற்காக ஸ்த்ரீகளையும் துணையாகக்

கொள்வர். அளகையில் எல்லாப்பெண்களுமே சிறந்த அழகுடையவர் என்பதைக் காட்ட வந்தது உத்தம ஸ்த்ரீ என்ற சொல். எல்லோருமே அழகுடையவர்கள் தான். இந்த விசேஷணத்தால் அழகில்லாதவர்கள் இருக்கிறார்களோ என சந்தேகம் கொள்ளுதல் கூடாது.

பானம் செய்வது பொதுவாக முன்னிரவில் மாளிகையின் மேல் தளத்தில் தான். அந்த மேல் தளம் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டதால் ஆகாயத்திலுள்ள நக்ஷத்ரங்கள் பிரதிபலித்தன. இதனால் ஆங்காங்கு புஷ்பங்கள் வைத்துத் தரை அலங்கரிக்கப் பட்டது போல் இருந்தது. कल्पवृक्ष - தேவருலகில் உள்ளவையும், விரும்பியதைத் தருபவையுமான மரங்கள் ஐந்தினுள் ஒன்று கல்பகம். இது நினைத்ததை தர வல்லது. யக்ஷர்கள் விரும்பிய மதுவை இம்மரமே தந்தது என்பதால் மதுவின் சிறப்பு அறியப்படும். மதுவின் பெயரான 'ரதிபலம்' என்பது காரணப் பெயர். ரதி-காதல் இன்பம்; அதைப் பயனாக உடையது என்பது பதப்பொருள். இம் மது அருந்தப்படின், அது இன்ப நுகர்ச்சிக்கான ஊக்கத்தையும், ஆக்கத்தையும் தரவல்லது.

आ-सेवन्ते - நன்கு அனுபவிக்கின்றனர். पुष्कर - ம்ருதங்கம் முதலிய வாத்யங்களில் இருபுறமும் உள்ள தோல் பகுதி. இங்கு அத்தகைய வாத்யத்தைக் குறித்தது.

शनकैः आहतेषु- மெதுவாக புஷ்கரம் வாசிக்கப்பட்ட போது; மதுபானம் துரிதமாகச் செய்யப்படும் செயல்

அன்று. நின்று, நிறுத்தி, சுவைத்துக் களித்துச் சிறிது சிறிதாக உத்ஸாகம் பெற்று அனுபவிக்க வேண்டிய தால் ம்ருதங்கமும் மெதுவாக வாசிக்கப்பட்டது. आसेवन्ते என்பதில் உள்ள மூன்று நெடிலும் பானம் வெகு நேரம் செய்யப்படுவதைக் காட்டும்.

यत्र स्फटिकहर्म्येषु नक्तं सोपानपङ्क्तिषु ।
ज्योतिषां प्रतिबिम्बानि प्राप्नुवन्त्युपहारताम् ॥

என்ற குமார ஸம்பவ ச்லோகம் (6-42) இச்சுலோகத்தின் கருத்தை ஒத்துள்ளது.

मन्दाकिन्याः सलिलशिशिरैः सेव्यमाना मरुद्भि-
र्मन्दाराणामनुतटरुहां छायया वारितोष्णाः ।
अन्वेष्टव्यैः कनकसिकतामुष्टिनिक्षेपगूढैः
संक्रीडन्ते मणिभिरमरप्रार्थिता यत्र कन्याः ॥

பதவுரை: — यत्र - எந்த அளகாபுரியில், अमर-प्रार्थिताः - தேவர்களாலும் விரும்பப்பட்ட, कन्याः- பெண்கள், मन्दाकिन्याः-மந்தாகினி நதியின், सलिलशिशिरैः-நீரினால் குளிர்ந்துள்ள, मरुद्भिः - காற்றினாலே, सेव्यमानाः - உபசரிக்கப்பட்டவர்களாக, अनुतट-रुहाम् - நதியின் கரையில் தோன்றியுள்ள, मन्दाराणाम् - மந்தார மரங்களின், छायया - நிழலினால், वारितोष्णाः - வெய்யிலின் வெப்பம் நீக்கப்பெற்றவர்களாக, कनक-सिकता- मुष्टि - निक्षेप - गूढैः - பொன் மணலில் கை முஷ்டியால் வைத்து ஒளித்து வைக்கப்பட்டுள்ளனவும், अन्वेष्टव्यैः - தேடப்பட வேண்டியனவுமான, मणिभिः - ரத்னங்களால், संक्रीडन्ते - விளையாடுகின்றனரோ, (तत्र) - அத்தகைய அளகாபுரி

யில், (अस्मदीयम्) - எமது, (अगारम्) - வீடு, (लक्ष्यम्) - காணப்பெறுவதாகும்.

கருத்துரை: — அளகாபுரியில் உள்ள பெண்கள் மிக அழகுடையவர்கள். அது காரணமாகவே ஸ்வர்க்கத்தில் ரம்பை, ஊர்வசி முதலியவர்களைப் பார்த்த தேவர்கள் கூட அவர்களைக் காட்டிலும் அழகுடைய அளகையிலுள்ள பெண்களை அடைய விரும்புவர். அத்தகைய பெண்கள் கங்கா நதியினின்றும் வீசும் குளிர்ந்த காற்றினால் இன்பம் துய்ப்பர். கரைகளில் வளர்ந்துள்ள மந்தார மரங்களால் நிழல்தரப் பெற்று சூரிய தாபத்தை உணராமல் விளையாடுவர். கங்கையின் பொன்னிற மணலில் தமது மூடிய கைகளில் ரத்னத்தை எடுத்து வந்து புதைத்துப் பிறர் அறியா வண்ணம் மறைப்பர். அதை வேறு சில பெண்கள் கண்டுபிடிக்க வேண்டும். இத்தகைய விளையாட்டில் ஈடுபாட்டுடன் இருக்கும் அழகிய கன்னிகைகள் அளகையில் உள்ளனர். பிற இடங்களில் காண முடியாத அழகை அங்கு காணலாம். ஸ்வபாவோக்தி அலங்காரம்.

விளக்கவுரை:—मन्दाकिनी - தேவநதியான கங்கை. मन्दार - தேவருலகிலுள்ள ஐவகை மரங்களில் ஒன்று. अन्वेष्टव्यैः - 'தேடப்பட வேண்டிய' இந்த விளையாட்டிற்கு गूढमणि - (பதுக்கப்பட்ட ரத்னமுடையது) என்று பெயர் எனவும், இது ஒருவகை தைசிககேளி दैशिककेलि எனவும் கூறி விளக்குவர் மல்லிநாதர்.

रत्नादिभिर्वालुकादौ गुप्तैर्द्रष्टव्यकर्मभिः ।
कुमारीभिः कृता क्रीडा नाम्ना गुप्तमणिः स्मृता ॥

என்பது சப்தார்ணவம்.

ரத்னத்திற்குப் பதிலாக வேறு பொருளை ஒளித்து விளையாடும் விளையாட்டு இப்போதும் கிராமங்களில்

இருப்பதுதான். மல்லிநாதர் உரை செய்த இந்த ச்லோகத்தை பிற உரையாசிரியர்கள், பருவம் நிறைந்தவர்களின் செயல்களை விட்டு சிறு பிள்ளைகளின் விளையாட்டை வர்ணிப்பது இடப்பொருத்தமுடையதன்று என்பதால் இடைச்செருகலாகக் கருதுகின்றனர். कनकसिकता: - பொன் மணல்; அல்லது பொன்னிறமுடைய மணல். मुष्टि-மூடிய கை. கையில் மறைத்து எடுத்துப் போய் பல இடங்களில் ஒளிப்பது போல் பாவனை செய்து ஓரிடத்தில் மறைத்து வைக்க இம்முஷ்டி உதவுகிறது.

नीवीबन्धोच्छ्‌वसितशिथिलं यत्र बिम्बाधराणां
क्षौमं रागादनिभृतकरेष्वाक्षिपत्सु प्रियेषु ।
अर्चिस्तुङ्गानभिमुखमपि प्राप्य रत्नप्रदीपान्
ह्रीमूढानां भवति विफलप्रेरणा चूर्णमुष्टिः ॥ ४ ॥

பதவுரை: — यत्र - எந்த அளகாபுரியில், अनिभृत - करेषु - துருதுருத்த கைகளையுடைய, प्रियेषु - காதலர்கள், नीवीबन्ध-उच्छ्‌वसित-शिथिलम् - இடையிலுள்ள வஸ்த்ரத்தின் முடிச்சு அவிழ்தலால் தளர்ந்திருக்கின்ற, क्षौमम् - பட்டுத்துகிலை, रागात् - காதல் மிகுதியால், आक्षिपत्सु - (பிடித்து) இழுக்கும் போது, ह्री-मूढानाम् - வெட்கத்தினால் செய்ய வேண்டுவதையறியாத, बिम्ब-अधराणाम् - (கோவைப்பழம் போன்ற உதடு உடைய) யக்ஷப் பெண்களின், चूर्णमुष्टि:-கை நிறைந்த வாசனைப் பொடி, अर्चि:-तुङ्गान् - ஒளிமிகுந்திருக்கின்ற, रत्नप्रदीपान् - ரத்னதீபங்களை, अभिमुखम्-प्राप्य-अपि - நோக்கிச் சென்று அடைந்த பிறகும், विफलप्रेरणा - பயனற்ற தூவுதலை

யுடையதாக, भवति - ஆகின்றதோ, (तत्र) - அந்த அளகையில், (अस्मदीयं अगारम्) - எமது வீடு, (लक्ष्यम्) - காணப் பெறுவதாகும்.

கருத்துரை: — அளகாபுரியில் காதலர்களான யக்ஷர்கள் தனிமையில் காதலிகளின் இடையிலணிந்துள்ள துகிலின் முடிச்சு சிறிதே தளர்ந்து இடையினின்றும் நழுவும் போது அதனைத் தமது துருதுருத்த கைகளால் பற்றி இழுக்க முயல்வர். அப்போது வெட்கத்தினால் மானம் காக்கும் வகையறியாது காதலிகள், வாசனைக்காகக் கைவசம் வைத்திருந்த வாசனைப் பொடிகளைப் பிடிபிடியாக எடுத்து சயன கிருஹத்திலுள்ள ஒளி மிகுந்த ரத்னதீபங்கள் மேல் வீசி எறிந்து அவற்றை அணைத்து இருள் உண்டாக்கத் தூவுவர். திண்ணமாகக் குறிதவறாது அப்பொடிகள் தீபத்தை அடையத்தான் செய்தன. அந்தோ! எண்ணெயும், திரியும் இட்டு ஏற்றப்பட்ட விளக்காயின் இப்பொடியால் அணையும். ரத்ன மயமான விளக்குகள் எண்ணெயும் திரியுமின்றி தம்மொளியாலே இருள் நீக்க ஒளிர்வன. எனவே, அப்பொடிகளால் விளக்கு அணையுமா? ஆதலால் பெண்கள் செய்த வீசி எறிதல் என்ற அம் முயற்சி பயனற்றதாயிற்று. இவ்வாறு இன்பம் துய்க்கும் யக்ஷர்களையும், யக்ஷிகளையும் உடையது அளகாபுரி. அங்கு எமது வீட்டைக் காண்பாய். உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை:—ह्रीमूढानां चूर्णमुष्टिः विफलप्रेरणा भवति - "வெட்கத்தினால் செய்வதறியாத பெண்களின் கை நிறைந்த வாசனைப்பொடி பயனற்றதாகிறது" என்பது முக்கியமான வாக்யம். விளக்கு அணைவதற்காகப் பொடி தூவப்பட்டது என்ற காரணம் இருப்பினும் அணைதல் என்ற கார்யம் ஏற்படாததால் இதனை விசேஷோக்தி என்ற அணி என்பர். प्रेरणा - தூண்டுதல், எறிதல், தூவுதல். नीवी - பெண்களின் இடைத் துகிலில் உள்ள முடிச்சு; बन्ध என்ற பதம் வந்துள்ள

தால் துகில் என்ற பொருளை மாத்ரம் கொள்ள வேண்டும். बिम्ब-अधराः - கோவைப்பழம் போன்ற உதடு உடையவர்கள் என்ற பொருளுடையதாயினும் ஒருவகைச் சிறந்த பெண்களைக் குறிக்கும் என்பர். 'विशेषाः कामिनीकान्ता-भीरुबिम्बाधराङ्गनाः' என்பது சப்தார்ணவம். अर्चिः-ஒளி, रत्नप्रदीपाः-ரத்னங்களால் செய்யப்பட்ட தீபங்கள்; அல்லது ரத்னமே தமது ஒளிமூலம் தீபத்தின் வேலையைச் செய்தலால் அதனையே ரத்னமெனும் தீபம் என்றும் கூறலாம். चूर्णः-முகம், உடல் இவற்றில் பூசவும், அறையின் வாசனைக்காகவும் வைக்கப்பட்டுள்ள நறுமணப் பொடிகள்; मुष्टिः-மூடிய கை. இங்கு கை நிறைய எடுத்த வாசனைப் பொடியைக் குறித்தது.

नेत्रा नीताः सततगतिना यद्विमानाग्रभूमी-
रालेख्यानां सलिलकणिकादोषमुत्पाद्य सद्यः ।
शङ्कास्पृष्टा इव जलमुचस्त्वादृशा जालमार्ग-
धूमोद्गारानुकृतिनिपुणा जर्जरा निष्पतन्ति ॥ ५ ॥

பதவுரை: — (मेघ) - (மேகமே), नेत्रा - கொண்டு செல்கின்ற, सतत-गतिना - காற்றினாலே, यद्विमान-अग्रभूमीः - எந்த அளகாபுரியின் ஏழடுக்கு மாளிகையில் உயர்ந்த இடத்திற்கு, नीताः - கொண்டு போகப்பட்ட, त्वादृशाः - உன் போன்ற, जलमुचः - மேகங்கள், आलेख्यानाम्-(அங்கு அறைகளிலுள்ள) படங்களுக்கு, सलिल-कणिका-दोषम् - (தமது) நீர்த்துளிகளால் கெடுதலை, उत्पाद्य - உண்டாக்கிய பின், सद्यः - உடனே, शङ्कास्पृष्टा-इव - அச்சத்தினால் தீண்டப்பட்டன போல், धूम-उद्गार-अनुकृति-निपुणाः -

வெளிச்செல்லும் புகையை ஒத்து இருப்பதில் திறமை யுடையனவாகவும், जर्जराः (सन्तः) - சிதறியனவாகவும் இருந்து கொண்டு, जाल-मार्गैः - ஜன்னல்களின் வழியாக, निष्पतन्ति - வெளியேறுகின்றனவோ, (तत्र) - அத்தகைய அளகையில், (अस्मदीयं) - எமது, (अगारम्) - வீடு, (लक्ष्यम्)- காணப்பெறும்.

கருத்துரை: — மேகமே, எப்பொழுதுமே ஓடிக்கொண்டிருப்பது காற்று. மேகங்களை ஓரிடத்தினின்றும் மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வது. அளகையில் ஏழுநிலை மாளிகைகள் உண்டு. அங்கு காதலர்களுக்குக் காம உணர்ச்சி குறைந்த போது அவ்வுணர்ச்சியைத் தோற்றுவிப்பதற்கென எழுதப்பட்ட சித்ரங்களும் பல உண்டு. காற்றினல் உந்தப் பட்ட நீர் நிறைந்த மேகங்கள் உச்சியிலுள்ள ஏழாவது மாடத் தினுள் சென்று இருக்கும் போது அவற்றின் நீர்த்துளிகள் படங்களின் மேல்பட்டுப் படத்தின் வர்ணம் கெடும். இப்படி நீர்த்துளியால் சித்திரங்களைக் கெடுத்துவிட்டோமே என்று அஞ்சிய மேகங்கள், பெண்கள் கேசத்திற்கு நறுமணமூட்டப் போடும் புகையின் வேடம் தாங்கி (புகை போல் அனுகரித்து) சிறு சிறு துணுக்குகளாக ஜன்னல்கள் வழியே வெளியேறி விடும். அத்தகைய அளகையில் எமது வீடு உள்ளது. உத்ப்ரேக்ஷா அலங்காரம்.

விளக்கவுரை : — கொண்டு செல்பவன் என்று பொருளுடைய नेता-என்பதன் மூன்றும் வேற்றுமைச் சொல் नेत्रा - என்பது. सततगति - எப்போதும் சென்று கொண்டிருப்பது காற்று. विमान - ஏழு அடுக்குள்ள மாளிகை. विमानोऽस्त्री देवयाने सप्तभूमौ च सद्मनि என்பது வைஜயந்தி. जलमुचः - நீருள்ள மேகங்கள். எனவே, அவற்றினின்றும் சிறுதுளிகள் படங்களில் பட ஏது வுண்டு. आलेख्यम्-இழந்த காதலுணர்ச்சியைத் தூண்டு

வதற்காக வைக்கப்பட்டுள்ள படங்கள் என்று உரை கூறுவர் பூர்ண ஸரஸ்வதி. स्वजलकणिका-दोषम् - மேகங்களின் நீர்த்துளிகளால் படங்களின் வர்ணம் நிறம் மாறுதல், மங்குதல், அழிதல் போன்ற குறைபாடு நேரலாம். शङ्का-स्पृष्टाः-தம்மால் படங்களுக்குக் குறைவு ஏற்பட்டனவே என அஞ்சியவை போல் என்பது உத்ப்ரேக்ஷா. धूम-उद्गार பெண்கள் கூந்தலுக்கு ஊட்டிய நறுமணப்புகைகளின் வெளி வருகை.

अनुकृति-निपुणाः; अनुकृति - ஒரு பொருளின் செயலை தானும் செய்தல். மேகங்கள், நறுமணப்புகை தான் வெளி வருகின்றதோ என நினைக்கும்படி புகையின் தோற்றம் கொண்டு வெளிவருகின்றன. புகையை 'அனுகரித்தல் என்ற செயலைத் தாமும் திறமையுடன் செய்கின்றன.

जर्जराः - சிதறியனவாக. "அந்தப்புரத்துப் பணியாளன் ஒருவனால் ரஹஸ்யமாக அந்தப்புரத்துள் அழைத்துச் செல்லப்பட்ட ஒருவன் அங்குள்ள ஸ்த்ரீகளுடன் பழகியபின் மறைவான வழியாக, வேறு தோற்றத்தில் வெளிவருகிறான்" என்ற கருத்தும் இதில் தொனிக்கிறது என்பர் மல்லிநாதர். மல்லிநாதரின் இக்கருத்து ஏற்கக் கூடியதில்லை. இதை ஏற்றுக் கொள்வதாயின் தூது போகும் மேகத்தின் இனத்திற்குக் குற்றம் கூறுவதாகும். அது மேகத்திற்கு மகிழ்ச்சி தராது.

त्वादृशाः - மேகத்தை நோக்கி "உன் போன்ற மேகங்கள்" என்று கூறுவது அளகையிலுள்ள மாளிகைகளுக்கும், மேகத்திற்கும் முன்பே தொடர்பு

(நட்பு) உள்ளது என்பதைக் காட்ட யக்ஷன் ஒவ்வொரு சுலோகத்திலும் மேகத்தின் தொடர்பைக் கூறுவது கவனித்தற்கு உரியது. இயற்கையாக ஏற்படும் ஒரு ஸம்பவமே இங்கு கூறப்பட்டது.

यत्र स्त्रीणां प्रियतमभुजोच्छ्वासितालिङ्गितानाम्-
मङ्गग्लानिं सुरतजनितां तन्तुजालावलम्बाः ।
त्वत्संरोधापगमविशदैश्चन्द्रपादैर्निशीथे
व्यालुम्पन्ति स्फुटजललवस्यन्दिनश्चन्द्रकान्ताः ॥ ६ ॥

பதவுரை: — यत्र - எந்த அளகாபுரியில், निशीथे - நடு இரவில், त्वत्संरोध-अपगम-विशदैः - உன்னால் ஏற்படும் மறைப்பு நீங்குவதால் நிர்மலமான, चन्द्रपादैः - சந்திர கிரணங்களால் (சந்திர கிரணங்கள் படுவதால்), स्फुट-जललव-स्यन्दिनः - (குளிர்ந்த) தெளிவான ஜலத்துளிகளை பெருக்குகின்ற, तन्तुजालावलम्बाः - (விதானங்களிலுள்ள) நூல் திரளில் தொங்குகின்ற, चन्द्रकान्ताः - சந்திர காந்தக் கல்லின் (சிறு) மணிகள், प्रियतम-भुजोच्छ्वासित-आलिङ्गितानाम्-அன்புமிக்க காதலர்களின் புஜங்களினால் இறுகச் (செய்யப்பட்டுப் பிறகு) சிறிதே தளர்த்தப்பட்ட தழுவுதல்களையுடைய, स्त्रीणाम् - ஸ்த்ரீகளுக்கு, सुरत-जनिताम् - கலவியினால் உண்டான, अङ्गग्लानिम् - சரீரத் தளர்ச்சியை, व्यालुम्पन्ति - முற்றிலும் போக்குகின்றனவோ, (तत्र) - அத்தகைய அளகாபுரியில், (अस्मदीयम्)- எமது, (अगारम्) - மாளிகை, (लक्ष्यम्) - காணப்பெறும்.

கருத்துரை: — அளகையில் மாளிகைகளின் மேல் தளத்தில் திறந்த வெளியில் விதானமுள்ள கட்டிலில் காதலர்களால் இறுகச் செய்யப்பட்டுப் பின் சிறிதே தளர்ந்த தழுவுதலைப்

பெற்ற காதலிகள், நெடுநேரக்கலவியினுல் சரீரத்தளர்ச்சியை பெற்றிருப்பர். கட்டிலில் கட்டியுள்ள விதானங்களின் முனைகளில், நூல்களில் அழகிற்காக கோர்க்கப்பட்டுள்ள சந்திர காந்த மணிகள் உண்டு. மேகமே, நீ விலகியவுடன், பிரகாசமான சந்திர ஒளிபட்டு குளிர்ந்த பளிங்கு போன்ற நீர்த்துளிகளை அக்கற்கள் கசியும். அவை பெண்களின் உடலில் படுவதன் மூலம் உடல் அயர்ச்சியைப் போக்குகின்றன. இவ்வகையில் இன்பம் துய்க்கும் யக்ஷர்களையுடைய அளகையில் எமது வீடு காணப்பெறுவதாகும். உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை: — निशीथे - நள்ளிரவு. நள்ளிரவு வரை கலவி நடந்ததைக் காட்டியது. அயர்ச்சி ஏற்படும் காலமாகவும் நள்ளிரவை குறித்தது காண்க. त्वत्संरोध - ஆகாயத்திலுள்ள மேகம் விலகினுல் சந்திர கிரணம், தெளிவாக சந்திரகாந்த மணிகள் மேல் படும். स्फुटजललवस्यन्दिनः-स्फुट - தெளிவான, கண்களுக்குப் புலனுகிற, स्यन्द - பெருக்குகின்ற, அல்லது சிறு துளியாகக் கசிகின்ற, சொரிகின்ற என்றும் பொருள். चन्द्रकान्ताः - சந்திரகாந்தம் என்ற ஒருவகைக் கல் சந்திர கிரணம் பட்டால் ஜலத்துளியை பெருக்கும் என்பர். இங்கு இந்த சொல் அக்கல்லினுல் செய்யப்பட்டுள்ள முத்து போன்ற மணிகளைக் குறித்தது. तन्तु - நூல், जाल - ஸமூகம். तन्तुजाल अवलम्बाः - பல நூல்களில் கோக்கப்பட்டு அவற்றினின்றும் தொங்குபவை. இந்த சந்திரகாந்த மணிகளின் ஸரங்கள் கட்டிலின் மேல் கட்டியுள்ள விதானங்களைச் சுற்றிலும் அழகிற்காகக் கட்டித் தொங்கவிடப்பட்டன. प्रियतम-மிகவும் பிரியமான காதலர்கள்; उच्छ्वासितं - என்பதற்கு தளர்ந்த என்றும் உறுதியான என்றும் உரைகாரர்கள் கூறுகின்றனர். நடு இரவாகிவிட்டதால் காதலர்களின்

தழுவுதல் தளர்ந்திருந்தது என்பர் மல்லிநாதர். "காதலர்களின் புஜங்களால் இறுகத் தழுவப்பட்ட" என்று வித்யுல்லதா கூறுகின்றது; இறுக்கமாகவோ, தளர்வாகவோ இருப்பினும் ஆலிங்கனம் உண்டு என்பது தெளிவு.

अङ्ग - என்ற சொல் உடல் உறுப்பைக் குறிக்குமாயினும் இங்கு உடலைக் குறித்தது. ज्यालुम्पन्ति-மணிகளிலிருந்து வருகின்ற குளிர்ந்த நீர்த் துளிகள் காற்றினால் பெண்கள் மேல் தூவப்பெற்று அவர்களது களைப்பை நீக்குகின்றன. இவ்வாறு ச்ரமத்தைப் போக்குதல் என்பது ஆண்களுக்கும் பொதுவானது தான். இந்த சுலோகத்திலும் அளகாபுரிக்கு உள்ள மேகத்தொடர்பு கூறப்பட்டுள்ளது காண்க. சில பதிப்புகளில் இதுவும் முன் சுலோகமும் முன்பின்னதாகத் தரப்பட்டுள்ளன.

अक्षय्यान्तर्भवननिधयः प्रत्यहं रक्तकण्ठै-
रुद्गायद्भिर्धनपतियशः किन्नरैर्यत्र सार्धम् ।
वैभ्राजाख्यं विबुधवनितावारमुख्यासहाया
बद्धालापा बहिरुपवनं कामिनो निर्विशन्ति ॥

பதவுரை: — यत्र - எந்த அளகாபுரியில், अक्षय्य-अन्तर्भवननिधयः - வற்றாத செல்வமளிப்பதும், வீட்டினுள் இருப்பதுமான சங்கம் முதலான (ஒன்பது) நிதியுடையவர்களும், विबुध-वनिता-वारमुख्या-सहायाः - தேவ வனிதைகள் என்ற சிறந்த கணிகைகளுடன் இருப்பவர்களும், बद्धालापाः - (பரஸ்பரம்) தொடரப்பெற்ற சம்பாஷணையுடையவர்களுமான, कामिनः - காமுகர்களான யக்ஷர்கள்,

प्रत्यहम् - தினந்தோறும், रक्तकण्ठैः - இனிய குரலுடையவர்களும், धनपतियशः - குபேரனின் புகழை, उद्गायद्भिः - உரத்துப்பாடுகின்றவர்களுமான, किन्नरैः साधम्-கின்னரர்களுடன், वैभ्राजाख्यम्-வைப்ராஜம் என்று பெயருடைய, बहिरुपवनम् - (நகரத்திற்குப்) புறத்திலுள்ள உத்யான வனத்தை, निर्विशन्ति - அனுபவிக்கின்றனரோ, (तत्र) - அத்தகைய அளகையில், (अस्मदीयम्) - எமது, (अगारम्) - மாளிகை, (लक्ष्यम्) - காணப்பெறுவதாகும்.

கருத்துரை: — யக்ஷர்களின் மாளிகைகளில் அழிக்க முடியாத நிதிகள்-ரத்னங்கள் இருக்கின்றன. எனவே, யக்ஷர்கள் அவைகளிடமிருந்து தேவையான செல்வத்தை எப்பொழுதும் பெற்று வாழ்வதால் பொருளீட்டும் கவலை அவர்களுக்கு இல்லை. இவர்கள் காமம் மிகுந்தவர்கள். தேவர்களின் ஸ்த்ரீகளான ரம்பை முதலான சிறந்த கணிகைகளை இன்பமாகப் பொழுது போக்குதற்குத் துணையாகக் கொள்வார்கள். வைப்ராஜம் என்ற குபேரனுடைய உத்யான வனத்தில், கின்னரர்கள் குபேரன் புகழை இனிய குரலில் பாடுவர். இத்தகைய சூழலில் யக்ஷர்கள் அவ்வுத்யான வனத்தில் வேசிகளுடனும் பாடும் கின்னரர்களுடனும், மற்றும் தங்களுக்குள்ளேயும் ஸம்பாஷணை செய்து கொண்டு அந்த உத்யானத்தை அனுபவிப்பர். அத்தகைய அளகையில் எங்களுடைய வீட்டை நீ காணலாம். உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை: — अक्षय - அழிக்க முடியாதது. மஹாபத்மம், பத்மம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், கர்வம் என ஒன்பது நிதிகள் குபேரனிடம் இருப்பவை. அவற்றை யக்ஷர்களுக்கும் உரியனவாகக் கூறினர். வீட்டிலுள்ள அவை எவ்வளவு செல்வம் கேட்பினும் தரும் ஆற்றல் உடையவை. இதனால் யக்ஷர்கள் தேவையான செல்

வம் பெற்று வாழ்க்கையை இனிதே போக்கும் வழியுடையவர்கள். நிதியின் பெயர்கள், महापद्मश्च पद्मश्च शङ्खो मकरकच्छपौ । मुकुन्दकुन्दनीलाश्च खर्वश्च निधयो नव ॥ वार - பொது மக்கள். அவர்களுக்கு உரியவர்கள், வாரவனிதையர்கள், அப்ஸரஸ்கள். वारमुख्या:-வாரவனிதையரிலும் சிறந்த அழகிகள் என்று மதிக்கப்பட்டவர்கள் வாரமுக்யர்கள். सत्कृता वारमुख्या: स्यु: என்பது அமரம். பொழுது போக்கிற்கு உடனிருப்பவர்கள் (सहाया:) இவர்கள்; बद्ध-आलापा: - உரையாடுபவர்கள்; இங்கு யாருடன் பேசுபவர்கள் என்பது கூறப்படாததால் வனிதைகளுடனும், கின்னரர்களுடனும், தம் இனத்தவருடனும் பேசுபவர்கள் என்று கொள்ள வேண்டும்.

कामिन: - மிகுதியான காமம் உடையவர்கள். யக்ஷர்கள் அத்தகையோர் என்பது ப்ரஸித்தம். वैभ्राजम्-विभ्राजन् - என்ற சிவஸேவகத்தலைவனால் பாதுகாக்கப்படுவதால் உத்யானத்திற்கு இப்பெயர். विभ्राजेन गणेन्द्रेण त्रातं वैभ्राजमाख्यया என்று சம்பு ரஹஸ்யம் கூறும் என்பர் மல்லிநாதர். சைத்ர ரதம் என்ற குபேரனுடைய உத்யானத்திற்கான மற்றொரு பெயர் இது. இந்த சுலோகத்தில் சிறப்பான பொருள் இல்லாததால் இதை இடைச் செருகலாகக் கருதி பூர்ண ஸரஸ்வதியும், தக்ஷிணாவர்த்தநாதரும் உரை எழுதவில்லை.

गत्युत्कम्पादलकपतितैर्यत्र मन्दारपुष्पै:
पत्त्रच्छेदै: कनककमलै: कर्णविभ्रंशिभिश्च ।
मुक्ताजालै: स्तनपरिसरच्छिन्नसूत्रैश्च हारै-
र्नैशो मार्ग: सवितुरुदये सूच्यते कामिनीनाम् ॥ ७ ॥

பதவுரை:—यत्र - எந்த அளகாபுரியில், कामिनीनाम् - அபிஸாரிகைகளின், नैशो मार्गः- இரவு வழியானது, सवितुः- சூரியனின், उदये (सति) - உதயம் ஏற்பட்ட பொழுது, गति-उत्कम्पात् - (வேகமான) நடையினால் ஏற்பட்ட (உடல்) அசைவினாலே (குலுக்கலினாலே), अलक-पतितैः- அலகங்களிலிருந்து (தரையில்) வீழ்ந்த, मन्दारपुष्पैः - மந்தார மலர்களாலும், पत्रच्छेदैः - (கீழே விழுந்துள்ள) அலங்காரத் தளிர்களின் துணுக்குகளாலும், कर्ण-विस्रंसिभिः - காதினின்றும் நழுவிய, कनककमलैः - பொன் னிறத் தாமரை மலர்களாலும், मुक्ताजालैः - பல முத்துக் களையுடையனவும், स्तन-परिसरच्छिन्नसूत्रैः - ஸ்தனங்களின் மேல் தவழ்தலால் நூல் அறுந்தவையுமான, हारैः च - முத்து மாலைகளாலும், सूच्यते - காண்பிக்கப்படு கிறதோ, (तत्र) - அத்தகைய அளகையில் (अस्मदीयम्) - எமது, (अगारम्) - மாளிகை, (लक्ष्यम्) - காணப்பெறுவ தாகும்.

கருத்துரை: — அளகையில், காதலர்களை இரவில் சில இடங்களில் சந்திப்பதாகக் கூறிய அபிஸாரிகைகள் தங்களை அலங்கரித்துக் கொண்டு செல்வர். ஆனால் அவர்கள் எந்த வழியில் இரவில் சென்றனர் என்பதை அவர்களின் அணி கலன்களே சூரியோதயம் ஆனவுடன் பலரும் அறியக்காட்டும். மந்தார மலரை முன்னெற்றியிலுள்ள குழலில் அணிந்திருப்பர். அச்சத்தாலும், அவசரத்தாலும் வேகமாக நடக்கும் போது உடலில் ஏற்படும் நடுக்கத்தாலும் குலுக்கல்களாலும் மந்தார மலர்கள் வழியிலே விழும். அதே போல் தளிர்களாலும் கன்னம், நெற்றி முதலிய இடங்களில் அலங்காரம் செய்திருப் பர். அத்தளிர்களும் விழும். காதில் வைத்திருந்த பொற்றாமரை மலரும் வழியில் விழும். ஸ்தனத்தின் மேல் அணிந்திருந்த முத்துமாலையும் நூல் அறுந்து முத்துக்கள் தரையில் சிதறிக்

கிடக்கும். இரவு அவர்கள் சென்ற வழியை இவற்றின் மூலம் அறியலாம். அத்தகைய அளகையில் என் மாளிகை உள்ளது. அதனை நீ காண்பாய். உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை:—अलक - நெற்றியின் மேல் புரளும் குழற்கற்றை. कामिनी-காதலர்களை சந்திப்பதற்காகக் குறிப்பிட்ட இடம் செல்பவர்கள்; இவர்கள் அபிஸாரிகைகள் எனப்படுவர். पत्त्रच्छेदैः - தளிர்துணுக்குகளையும் அலங்காரமாக உபயோகிப்பர் என்பது இதனால் தெரிகிறது. हारैः - முத்துக்கள் நூலில் கோக்கப்பட்டு அணியப்படுவன. வேகமாகச் செல்லும் போது மாலை ஸ்தனங்களின் மேல் உராய்வதால் நூல்கள் இற்றுப்போகின்றன. இந்த சுலோகத்திற்கு பூர்ணஸரஸ்வதியும், தக்ஷிணாவர்த்தரும் உரை எழுதவில்லை. இதனை இடைச்செருகலாக அவர்கள் கருதியிருக்கலாம்.

वासश्चित्रं मधु नयनयोर्विभ्रमादेशदक्षं
पुष्पोद्भेदं सह किसलयैर्भूषणानां विकल्पान् ।
लाक्षारागं चरणकमलन्यासयोग्यं च यस्या-
मेकः सूते सकलमबलामण्डनं कल्पवृक्षः ॥

பதவுரை: — यस्याम् - எந்த அளகாபுரியில், चित्रम् - பலநிறமுடைய, वासः - வஸ்த்ரம், नयनयोः - கண்களுக்கு, विभ्रम-आदेश-दक्षम् - அழகிய செயல்களை உபதேசிப்பதில் திறமை வாய்ந்த, मधु - மது, किसलयैः सह - தளிர்களுடன் கூடிய, पुष्पोद्भेदम् - புஷ்பங்களின் தோற்றம் (புஷ்பங்கள்), भूषणानाम् - ஆபரணங்களின், विकल्पान् - சிறந்த பல வகை ஆபரணங்கள், चरण-कमल-न्यास-योग्यम् - தாமரை

மலர் போன்ற பாதங்களில் பூசுவதற்குத் தகுதியுள்ள, लाक्षारागम् - செம்பஞ்சுரஸம் (என்ற), अबलामण्डनम् - பெண்களின் அணிகலனாகிய, सकलम् - எல்லாவற்றை யும், कल्पवृक्ष: एक: - கற்பக விருக்ஷம் ஒன்றே, सूते - தரு கின்றதோ, (तत्र) - அந்த அளகையில், (अस्मदीयम्) - எமது, (अगारम्) - மாளிகை, (लक्ष्यम्) - காணப்பெறுவ தாகும்.

கருத்துரை: — அளகாபுரியில் பெண்களுக்குத் தேவை யான அணிகலன்கள் முதலியவற்றைக் கற்பக விருக்ஷம் ஒன்றே நினைத்த மாத்திரத்தில் தருகிறது. எனவே பெண்கள் இதற்காக வேறு யாரையும் அணுக வேண்டியதில்லை. பல விதமான நிறத்தில் வஸ்த்ரங்கள், கண்களின் மூலம் காதல் உணர்ச்சியை தோற்றுவிப்பதற்கான திறமை தருகின்ற மது, தளிர்கள், மலர்கள், பாதங்களில் பூசுவதற்கான செம்பஞ்சு ரஸம், சிறந்த ஆபரணங்கள் என எல்லாவற்றையும் கற்பக விருக்ஷம் ஒன்றே தருகிறது. பாற்கடலில் தோன்றி தேவர் உலகில் இருந்து கொண்டு விரும்புபவர்களுக்கு விரும்பிய தைத் தரும் மந்தாரம் முதலிய ஐந்து மரங்கள் இருப்பினும் கற்பகத்தை விட்டுப் பிற மரங்களை அணுக யக்ஷர்களுக்குத் தேவையில்லை. உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை: — கேசத்திலே அணியப்படுவது, உடலிலே அணியப்படுவது, இடையிலே உடுத்தப் படுவது, நறுமணப் பூச்சு என ஸ்த்ரீகளின் அணிகலன் களை நான்கு வகையில் கூறியுள்ளார்கள். विकल्प என் பதற்குச் சிறந்த என்று பொருள் கொள்வர் மல்லி நாதர்.

केशधार्यं देहधार्यं परिधेयं विलेपनम् ।
चतुर्धा भूषणं प्राहु: स्त्रीणामन्यच्च दैशिकम् ॥

என ரஸாகரம் என்ற நூல் கூறுவதாக மல்லிநாதர் விளக்குகின்றார். केशधार्यम् - புஷ்பம், தளிர் முதலியன, देहधार्यम् - ஆபரணங்கள், परिधेयम् - உடுக்கப்படுவன: உடைகள், विलेपनम् - செம்பஞ்சு த்ரவம், வாசனைப் பொடிகள் முதலியன. மதுவும் இதில் அடங்கும். नयनयोः मधु - காதலை வெளியிடுவதிலும், பிறர்மனத்தில் காதல் உணர்ச்சியைத் தூண்டுவதிலும் கண்கள் சக்தி வாய்ந்தவை. அத்தகைய கண்களில் பலதரப்பட்ட செயல்களை உண்டாக்குவதில் திறமை வாய்ந்தது மது. பூர்ணஸரஸ்வதியும், தக்ஷிணாவர்த்தரும் இந்த ச்லோகத்தை இடைச்செருகலாகக் கருதி உரை எழுதவில்லை.

मत्वा देवं धनपतिसखं यत्र साक्षाद्वसन्तं
प्रायश्चापं न वहति भयान्मन्मथः षट्पदज्यम् ।
सभ्रूभङ्गप्रहितनयनैः कामिलक्ष्येष्वमोघै-
स्तस्यारम्भश्चतुरवनिताविभ्रमैरेव सिद्धः ॥ ८ ॥

பதவுரை: — यत्र - எந்த அளகாபுரியில், मन्मथः - மன்மதன், धनपतिसखम् - குபேரனுக்கு நண்பரான, देवम् - சிவபிரானை, साक्षात् - தமது சுயவடிவினில், वसन्तम् - உறைபவராக, मत्वा - அறிந்து (கருத்தில் கொண்டு), भयात् - (அவரிடமுள்ள) அச்சத்தால், षट्पदज्यम् - வண்டுகளின் வரிசைகளாலான நாண் உடைய, चापम् - (தனது) வில்லை प्रायः-பெரும்பாலும், न वहति - (கையில்) எடுப்பதே இல்லையோ, तस्य - (ஆனால்) அவனுடைய, आरम्भः - முயற்சி (செயல்), सभ्रूभङ्ग-प्रहित-नयनैः - புருவ நெறிப்புடன் வீசப்பட்ட கண்ணோக்குகளையுடைய

வும், कामिलक्ष्येषु - காமுகர்கள் என்ற குறிகளில் (லக்ஷ்யங்களில்), अमोघैः - திண்ணமாய் பயனளிப்பவையுமான, चतुर-वनिता-विभ्रमैः एव - திறமை மிகுந்த வனிதையரின் ச்ருங்காரச் செயல்களாலேயே, सिद्धः - நிறைவேறிவிடுகிறதோ, (तत्र) - அத்தகைய அளகாபுரியில், (अस्मदीयम्) - எமது, (अगारम्) - மாளிகை, (लक्ष्यम्)-காணப்பெறுவதாகும்.

கருத்துரை: — மேகமே, குபேரனுடைய நண்பர் சிவபிரான். அவர் தமது சுய வடிவத்திலேயே (விக்ரஹ வடிவில் அல்ல) பார்வதியுடன் அளகையின் அருகில் கைலாஸத்தில் வசிக்கிறார். அவர் அங்கிருப்பதை நன்கு உணர்ந்து மன்மதன் முன்பே அவரால் தண்டிக்கப்பட்ட காரணத்தால் அவ்விடம் அச்சமுற்று மக்கள் மனத்தில் காமத்தைக் தூண்டுதற்காக வண்டுகளாலாகிய நாண் கயிற்றையுடைய தனது க்ரும்புவில்லைக் கையில் எடுப்பதேயில்லை. ஆனால் காமத்தைத் தூண்டுவது என்ற அவன் தொழில் வெற்றி பெற்றுவிடுகிறது எவ்வாறு? புருவத்தை நெறித்து ஆண்களை மயக்குவதில் திறமைமிக்க வனிதையர்கள், காமுகர்களைக் குறிவைத்து கண்ணோக்குகளை வீசுகின்றனர். அப்பார்வைகளே மன்மதனின் மலர்க்கணைகள் செய்யும் வேலையைச் செய்து அவனை வெற்றி வீரனாக்குகின்றன. காதல் புரியும் அரம்பையர் போன்ற இளம் பெண்கள் இருக்கின்ற நகரமாதலால் யாவரும் அங்கு இன்பமனுபவிக்க இயலும். அத்தகைய நகரத்தில் எமது மாளிகையை நீ காணலாம்; புருவ நெறிப்பும், கண்ணோக்குகளும் இருப்பதால் மன்மதனின் வில் பயனற்றதெனக் கூறியதால் ப்ரதீபம் என்ற அணி.

விளக்கவுரை: — देवम्—महादेवम् । स्वयम् - தமது நிஜ வடிவிலே மூன்று கண்களுடன் பார்வதியுடன் வசிப்பவர் சிவபிரான். லிங்க வடிவில் அல்ல. मत्वा - அறிந்து; நினைத்து. भयात् - அச்சத்தினால்; முன்பு எரிக்கப்பட்ட

வனுதலால் அது காரணமான அச்சம், தற்போது உயிர்ப்பிக்கப்பட்டவனுயினும் அவனை விட்டு நீங்க வில்லை. षट्पद - ஆறுகால்களையுடையது என்பது பதப் பொருள்; வண்டு; வண்டுகளின் வரிசையை மன்மத னின் நாண் கயிருகக் கூறுவர்; आरम्भ:-இங்கு மக்களின் மனத்தில் காமத்தைத் தோற்றுவிக்கும் அவனது தொழிலைக் குறிக்கின்றது. कामि-लक्ष्य - பெண்களின் கண்ணேக்குகள் என்ற அம்புகளுக்கு குறிகளாக இருப்பவர்கள்; காம உணர்ச்சி வசமாக்கப்பட வேண் டியவர்கள். கண்ணேக்கு தாக்கியவுடன் ஏற்படும் நிலையை कामी என்ற சொல்லால் குறித்தார். இதனல் கண்ணேக்கு அம்புகள் குறிதவருமல் சென்று நிச்சய மாகப் பயனளிப்பவை என்பது பெறப்படும். चतुर-वनिता - சாதுர்யம் மிகுந்த பெண்கள். இங்கு கூறப் பட்ட சாதுர்யம் ஆண்களை வசீகரிப்பதில் உள்ள திறமையைக் குறித்தது. सिद्ध-இது, பயன் நிறைவேறிய தென்பதைக் காட்டிற்று.

वासश्चित्रम्, मत्वा देवम् - என்ற இரண்டு சுலோகங் களும் சில பதிப்புக்களில் முன்பின்னதாக உள்ளன. 1. विद्युत्वन्तम्, 2. हस्ते लीला, 3. यस्यां यक्षा:, 4. नीवीबन्ध, 5. नेत्रानीता:, 6. यत्र स्त्रीणां, 7. मत्वा देवम् என்று தொடங் கும் ஏழு சுலோகங்களையே பூர்ணஸரஸ்வதியும் தக்ஷிணு வர்த்தநாதரும் அளகையை வர்ணிக்கும் சுலோகங் களாகக் கருதி உரையிட்டுள்ளனர். மற்ற 1. यत्रोन्मत्त, 2. आनन्दोत्थं, 3. मन्दाकिन्या:, 4. अक्षय्यान्तर्भवन, 5. गत्युत्क-म्पात्, 6. वासश्चित्रम् என்ற ஆறு சுலோகங்களை அவர்கள் இடைச்செருகல் என ஒதுக்கிவிட்டனர். (அவைகளை

விலக்குவதே முறையாயினும்) மல்லிநாதர் உரை செய்துள்ளதால் அவை இதில் சேர்க்கப்பட்டன. 1. கலவி இன்பமனுபவிக்கத்தக்க இட வசதி, 2. கால அழகு, 3. உணர்ச்சியைத் தூண்டுதற்கான பொருள்களின் நிறைவு, 4. மிகச்சிறந்த இன்பத்தில் ஈடுபட்டிருத்தல், 5. காதலுணர்ச்சிக்குக் குறைவு வருமாயின் அதனை ஊக்குவிக்க உதவும் சித்திரங்கள் 6. கலவியினால் ஏற்படும் களைப்பை நீக்குவதற்கான வசதி, 7. அங்குள்ள யுவதிகளின் வடிவழகு, உடையழகு, செயலழகு இவை ஒப்புமையற்றவை என்ற-காதல் சுவைக்கு உயிரான—இவ்வேழும் முறையே ஏழு சுலோகங்களில் கூறப்பட்டன என்பர் பூர்ண ஸரஸ்வதி. சுலோகத்தின் இரண்டாவது அடியில் भयात् என்பதற்குப்பின் त्वामपि प्रेक्ष्यकाम: என்று கொள்வர் தக்ஷிணாவர்த்தர். गत्युत्कम्पात् என்ற ஏழாவது சுலோகத்தை ஸாஹித்ய அகடமி பதிப்பு சேர்த்துள்ளது. இதுவும் இடைச்செருகலாகக் கருதப்பட வேண்டியதுதான்.

तत्रागारं धनपतिगृहादुत्तरेणास्मदीयं
दूराल्लक्ष्यं सुरपतिधनुश्चारुणा तोरणेन ।
यस्योपान्ते कृतकतनय: कान्तया वर्धितो मे
हस्तप्राप्यस्तवकनमितो बालमन्दारवृक्ष: ॥ १ ॥

பதவுரை: — यत्र - அந்த அளகையில், धनपतिगृहात् - குபேரனுடைய மாளிகைக்கு, उत्तरेण - வடக்கில், अस्मदीयम् - எமது, अगारम् - வீடு (மாளிகை), सुरपति-धनु:-चारुणा - வானவில் போல் அழகான, तोरणेन - தோரணத்தைக்

கொண்டு (நுழைவாயிலின் அமைப்பினால்), दूरात्-வெகு தொலைவிலிருந்தே, लक्ष्यम् - காணக்கூடியதாக உள்ளது. यस्य - அம்மாளிகையின், उपान्ते - அருகில், मे - எனது, कान्तया - அன்பு மனைவியால், वर्धित: - வளர்க்கப்பட்டதும், कृतकतनय: - வளர்ப்பு மகனும், हस्त-प्राप्य-स्तबक-नमित:- கையினால் எட்டிப்பிடிக்கக்கூடிய பூங்கொத்தின் கனத்தால் தாழ்ந்திருப்பதுமான, बालमन्दारवृक्ष: - ஒரு. இளம் மந்தார மரம், (अस्ति) - உள்ளது.

கருத்துரை: — அந்த அளகாபுரியில் குபேரனுடைய வீட்டிற்கு வடக்கில், எங்களுடைய வீடு உள்ளது. பலவகை ரத்னங்களால் அமைக்கப்பட்ட உயர்ந்த தோரண வாசலுடையதால் அதனை அடையாளமாகக் கொண்டு வெகு தொலைவிலிருந்தே அவ்வீடு காண இயலும். மற்றும் ஒரு அடையாளம் உண்டு. வீட்டைச் சுற்றிலுமுள்ள அதன் உட்புறத்தில், வீட்டின் அருகிலேயே என் மனைவியினால் தன் மகனாகக் கருதி வளர்க்கப்பட்ட ஒரு இளம் மந்தார மரம் உள்ளது. அதன் கிளைகளில் புஷ்பம் கொத்துக் கொத்தாக இருப்பதால் தாழ்ந்து உள்ளது. தரையில் நின்று கொண்டு கை நீட்டிப் பறிக்கும்படி அப்பூங்கொத்துக்கள் உள்ளன. உதாத்தம் அலங்காரம்

விளக்கவுரை: — மேகம் தன் மாளிகையைக் கண்டு கொள்வதற்காக இது முதல் ஆறு சுலோகங்களாலே அதனை வர்ணிக்கின்றான். तत्रागारम् - तत्र என்பதற்கு அடுத்து வந்துள்ள अगारम् என்பதனை अगारम्-आगारम् என இருவகையிலும் பிரிக்கலாம். பொருள் ஒன்றுதான். வீடு-மாளிகை. धनपति...उत्तरेण - குபேரன் மாளிகைக்கு வடக்கில் இருப்பதாகக் கூறுவதாலும் பின்வரும் வர்ணனைகளிலிருந்தும் யக்ஷனது மாளிகை

மிகச்சிறந்துள்ளதென்பதும் யக்ஷனும் ஒரு உயர்ந்த நிலையில் இருந்தான் என்பதும் புலனாகும்.

अस्मदीयम् - எமது-எங்களுடைய வீடு என தன் மனைவியையும் சேர்த்துச் சொன்னதாகக் கொள்ள வேண்டும்; 'நமது' என்ற பொருளும் கொண்டு மேகத்தையும் சேர்த்து நட்புத் தோன்ற நமது வீடு என்று கூறியதாகவும் கொள்ளலாம். 'எந்த மாளிகையின் உட்புறத்தில் இளம் மந்தாரமரமுள்ளதோ அது எமது' என்று பொருள் கூறுவது பொருத்தமாயினும், பொருள் தெளிவு கருதி 'அந்த மாளிகையின்' என்று பொருள் கூறப்பட்டது. उप-अन्त-அருகில்; பாதுகாப்பு சுவருக்கும் வீட்டிற்கும் இடையிலுமுள்ள இடத்தில். 'வீட்டின் அருகில்' என்று பொருள்.

कृतकतनय: - வளர்ப்பு மகன்; மகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. तनयकृतक: என்றும் இச்சொல் வரும். "பார்வதி பரமசிவன் இருவரும் ஒரு தேவதாரு மரத்தைத் தம் மகனாக ஏற்றுக் கொண்டுள்ளனர்" என்று கவி ரகுவம்சத்தில் (2-36) கூறியுள்ளார். स्तबक-என்பது பொதுவாகக் கொத்தைக் குறிப்பதாயினும் இங்கு பூங்கொத்து (पुष्पस्तबक) என்று பொருள் கொள்ள வேண்டும். हस्तप्राप्य: - கையினால் எட்டிப் பறிக்கக்கூடிய நிலையில் உள்ளது. स्तबकनमित- பூங்கொத்தின் சுமையால் கிளைகளுடன் மரமும் தாழ்ந்துள்ளது. बाल - இளம், मन्दार - மந்தாரம்; தேவ மரங்களில் ஒன்று. மல்லிநாதர் 'கல்பகம்' என்கிறார். இது சரியில்லை. தேவதாருக்கள் பிற இடங்களில் வளர்க்கப்படும் தன்மையுடையன எனப் புராணங்கள் கூற

வில்லை. எனவே, யக்ஷன் மனைவி வளர்த்த இளம் மந்தாரை, செம்மந்தாரை என்ற செடியாக இருக்கலாம். வெண்ணிறப் பூவுடையதாயின் இதனை கொக்கு மந்தாரை எனலாம்.

वापी चास्मिन्मरकतशिलाबद्धसोपानमार्गा
हैमैश्छन्ना विकचकमलैः स्निग्धवैदूर्यनालैः ।
यस्यास्तोये कृतवसतयो मानसं संनिकृष्टं
नाध्यास्यन्ति व्यपगतशुचस्त्वामपि प्रेक्ष्य हंसाः ॥१०

பதவுரை: — अस्मिन्-இதில் (எமது மாளிகையில்), मरकत-शिला-बद्ध-सोपान-मार्गा:-மரகதக் கற்களால் கட்டப்பட்ட படிகளாலமைந்த (இறங்குவதற்கான) வழியுடையதும், स्निग्ध वैदूर्य नालैः-காண்பதற்கினிய வைடூர்ய ரத்னத்தினலான காம்புகளையுடைய, हैमैः - தங்கத்தாலான, विकच-कमलैः - மலர்ந்த தாமரைப் புஷ்பங்களால், छन्ना - வியாபித்திருப்பதுமான, वापी च - ஒரு நடவாவியும், (अस्ति) உள்ளது. यस्याः - அந்த நடவாவியின், तोये - நீரில், कृत-वसतयः - வஸிக்கின்ற, हंसाः - அன்னங்கள், त्वाम् - உன்னை, प्रेक्ष्य-अपि - கண்டபிறகும் கூட, व्यपगत-शुचः-மனக்கலக்கமற்றனவாக இருந்து கொண்டு, सन्निकृष्टम्-அருகிலேயே உள்ள, मानसम्-மானஸ ஏரியைப் பற்றி, न आध्यास्यन्ति - நினைக்கமாட்டா.

கருத்துரை: — மேகமே, எனது மாளிகையில் நீண்ட சதுர வடிவினில் ஒரு வாவி உள்ளது. பச்சை நிற மரகதக் கற்களால் அதில் இறங்குவதற்கான படிகள் அமைக்கப்பட்டுள்ளன. வைடூர்ய ரத்னக் காம்புகளையுடைய தங்கத்தாமரை மலர்கள் அதில் நிறைந்து இருக்கும். அன்னங்களும் அவ்வாவியில்

எப்போதும் வசிக்கின்றன. உன் போன்ற மேகங்கள் வந்தால் அவை பொழியும் மழையால் நீர் கலங்கிவிடும் என்று பிற இடங்களில் வசிக்கும் அன்னங்கள் அச்சம் கொள்ளும். என்னுடைய வாவியில் மழை பொழிந்தாலும் நீர் கலங்காது. எனவே, அங்கு வசிக்கின்ற அன்னங்கள் மனக்கலக்கமடையா; மேலும், மானஸ ஸரஸ் மிக அண்மையில் இருந்தும் அங்கு செல்வதைப் பற்றி அவைகள் நினைப்பதில்லை. உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை:— अस्मिन् - இந்த வீட்டில்; வீட்டின் அருகில்; சுற்றுச் சுவருக்குள் என்று பொருள் கொள்ள வேண்டும். वापी - பெரிய கிணற்றையும் வாவி என்பர். இங்கு நீண்ட சதுரமான-விசாலமான தடாகத்தைக் குறித்தது.

मरकत - பச்சை நிறமுள்ள ரத்தினம்; இதனால் படிகள் அமைக்கப்பட்டிருந்தன.

वैडूर्य-வைடூர்யம் பூனைக்கண் நிறமுடைய ரத்தினம். மாகம்-3.45 காண்க. இக்கல்லாலான நீண்ட தண்டுகளையுடையன தாமரை மலர்கள். हैमैः - மலர்கள் தங்கத்தினாலானவை. தேவர்கள் வசிக்குமிடமாதலால் இத்தகைய தாமரை மலர்கள் உண்டு என்பர் சிலர். பொன்னிறத் தாமரை என்று பொருள் கொள்வதே சாலச் சிறந்தது.

यस्याः तोये - வாவி ஆழமானதாலும் நீர் நிறைந்துள்ளதாலும், பெரு மழையிலும் அதன் நீர் கலங்காததால் அன்னங்கள் மேகத்தைக் கண்டு அச்சம் கொள்வதுமில்லை. மானஸ ஏரிக்குச் செல்வதைப் பற்றி நினைப்பதுமில்லை. आध्यास्यन्ति - ஏக்கத்துடன் ஏற்படும் நிலையைக் குறிக்கும் இது. 1. छन्ना-स्फीता 2. विकचकमलैः-

कमलमुकुलै:; 3. स्निग्ध-दीर्घं 4. तोये-तीरे; 5. आध्यास्यन्ति-न ध्यास्यन्ति; என்பன பூர்ண ஸரஸ்வதியின் பாடங்கள்.

तस्यास्तीरे रचितशिखरः पेशलैरिन्द्रनीलैः
क्रीडाशैलः कनककदलीवेष्टनप्रेक्षणीयः ।
मद्गेहिन्याः प्रिय इति सखे चेतसा कातरेण
प्रेक्ष्योपान्तस्फुरिततडितं त्वां तमेव स्मरामि ।। ११ ।।

பதவுரை:—तस्याः- அந்த வாவியின், तीरे - கரையில், पेशलैः - மிக அழகான, इन्द्रनीलैः – இந்திர நீல ரத்தினங்களால், रचित-शिखरः - அமைக்கப்பட்ட சிகரமுடையதும், कनक-कदली-वेष्टन-प्रेक्षणीयः - தங்கமயமான வாழை மரங்கள் சூழ்ந்திருப்பதால் மிக அழகாயிருப்பதுமான, क्रीडा-शैलः - விளையாட்டுக்குன்று ஒன்று, (अस्ति) - உள்ளது; सखे - நண்பனே, उपान्त-स्फुरित-तडितम् - அருகில் (சுற்றிலும்) மின்னுகின்ற மின்னலையுடைய, त्वाम् - உன்னை, प्रेक्ष्य - பார்த்து, 'मद्गेहिन्याः - எனது காதலிக்கு, प्रियः - மிகவும் விருப்பமானது (அம்மலை)', इति- என்ற காரணத்தால், कातरेण - (சிறிது) அச்சமுள்ள (ஏக்கமுடைய), चेतसा - மனத்தால், तमेव - அம்மலையையே (உன்னைக் கண்டவுடன்), स्मरामि - (இப்போது) நினைக்கின்றேன்.

கருத்துரை: — மேகமே, அந்த வாவியின் கரையில் இந்திர நீல ரத்தினங்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சிகரமுடைய ஒரு விளையாட்டுக் குன்று உள்ளது. அதனைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கும்படி தங்கமயமான வாழைகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. நடுவில் நீல நிறமும் சுற்றிலும் தங்க நிறமுமுடையது அக்குன்று. நீயும் கறுத்த நிறமுடையவன். சுற்றிலும் மின்னலுடையவன். எனவே வடிவினில் நீ அதனை

ஒத்து இருக்கின்ருய். நானும் என் காதலியும் அக்குன்றில் தங்கி மகிழ்ந்திருக்கின்ரேம். எனவே அக்குன்று என் காதலிக்கு மிக விருப்பமானது. அக்குன்று போன்றுள்ள உன்னைக் கண்டவுடன் அது எனது நினைவில் வருகிறது. நான் இல்லாத பொழுது அக்குன்றுக்கு எவ்வித ஊறும் நேர்ந்திருக்கக் கூடாதே என்ற அச்சத்துடன் அதனைத் தற்போது நினைக்கின்றேன். ஸ்மரணம் என்ற அணி. உதாத்தமும் உண்டு.

விளக்கவுரை: — रचित-शिखर - சிகரம் இந்திர நீல ரத்தினத்தினுல் அமைக்கப்பட்டது என்பதால் பிற பகுதிகள் வேறு ரத்தினங்களால் அமைக்கப்பட்டிருக்கலாம். क्रीडा-शैल - விளையாடுவதற்காக-மன மகிழ்ச்சிக்காக அமைக்கப்பட்ட செய்குன்று. कनक-कदली - மலையின் நிறத்திற்கு வேறுபட்ட நிறத்தில் சுற்றிலுமுள்ள மரங்கள் இருக்கவேண்டுமென்பதற்காக தங்க வாழைகள் வளர்க்கப்பட்டன. मद्गेहिन्याः प्रियः-பல நாட்கள் இன்பம் துய்த்த இடமாதலால் அக்குன்று யக்ஷிக்குப் பிரியமானது. त्वाम् प्रेक्ष्य - உன்னை (மேகத்தை)க் கண்டு; ஒப்புமையுள்ள பொருளில் ஒன்றைக் காணின் பிறிதொன்று நினைவு வருதல் இயற்கை. குன்று கறுத்து தங்க வாழையால் சூழப்பட்டது. மேகமும் கறுத்த நிறத்தில் இருப்பது. பொன்னிறமான மின்னலால் சூழப்பட்டது. कातरेण चेतसा - யக்ஷனின் நினைவில் அச்சம் கலந்துள்ளதற்குக் காரணம், தானில்லாத காலத்தில் அச்செய்குன்றிற்கு ஏதேனும் ஊறு நேர்ந்திருக்குமோ என்பது தான். காதலிக்கும் மகிழ்ச்சிக் குறைவு இருக்குமே என்ற நினைவும் அச்சத்திற்குக் காரணமாகலாம். तमेव स्मरामि - இங்குள்ள एव என்பது "மலையையே நினைக்கின்றேன்

மற்றவற்றை இல்லை''என்பதைக் காட்டியது. ஆனந்த அனுபவங்களில் சிறிது அச்சமும் கலந்திருக்கும் என்று கூறி மல்லிநாதர் அதற்கான ஆதாரம் காட்டுகிறார். ''भयं चात्र सानन्दमेव। 'वस्तूनामनुभूतानां तुल्यश्रवणदर्शनात्। स्मरणात्कीर्तनाद्वापि सानन्दा भीर्यथा भवेत् ॥ इति रसाकरे दर्शनात् ॥ என்பர்.

रक्ताशोकश्चलकिसलयः केसरश्चात्र कान्तः
प्रत्यासन्नौ कुरबकवृतेर्माधवीमण्डपस्य ।
एकः सख्यास्तव सह मया वामपादाभिलाषी
काङ्क्षत्यन्यो वदनमदिरां दोहदच्छद्मनाऽस्याः ॥१२॥

பதவுரை:— अत्र - இங்கு (இம்மலையில்), कुरबकवृते: - மருதோன்றிச் செடிகளாலான வேலியையுடைய, माधवीमण्डपस्य - குருக்கத்திக் கொடியினாலான கொடி வீட்டிற்கு, प्रत्यासन्नौ- அருகில் இருப்பனவாக, चलकिसलय: - (காற்றில்) அசைகின்ற தளிர்களையுடைய, रक्ताशोक: - சிவப்பு அசோக மரமும், कान्त:- அழகான, केसर: - மகிழ மரமும், (स्त:)-வளர்ந்து இருக்கின்றன. एक:-(அவற்றில்) ஒன்ருன அசோகம், मया सह - என்னுடன், तव सख्या: - உனது தோழியான (என் காதலியின்), वामपाद-अभिलाषी- இடது காலை-இடது காலால் தரப்படும் ஸ்பர்சத்தை விரும்புகின்றதாக, (अस्ति)- இருக்கின்றது. अन्य: - மற்றொன்று-மகிழமரம், (मया सह - என்னுடன்), दोहदच्छद्मना- தோஹதம் என்ற வ்யாஜத்தில், अस्या: - அவளுடைய, वदन-मदिराम् - வாய் நிறைந்த மதுவை, काङ्क्षति - விரும்புகின்றது.

கருத்துரை: — மேகமே, அச்செய்குன்றில் குருக்கத்திக் கொடியே மேற்கூரை போல் அமைந்த ஒரு கொடிவீடு உண்டு. அம்மண்டபத்திற்குச் சுற்றிலும் மருதோன்றிச் செடிகள் சுவருக்குப் பதிலாக மறைப்பாக (வேலி போல்) உள்ளன. இதன் அருகில்-நுழைவாயிலின் இருபுறத்திலும் காற்றில் படபடவென அசையும் அழகிய செந்தளிரையுடைய சிவப்பு அசோக மரமும் பசுமையான இலைகள் நிறைந்து எப்பொழுதும் நிழல் தரும் ஒரு மகிழமரமும் உள்ளன. அவ்விரண்டினுள் ஒன்றுன அசோகம், தோஹதம் என்ற வ்யாஜத்தில் உன் தோழியின் இடது காலால் தரப்படும் ம்ருதுவான உதையை (நான் பெறுவது போல் தானும்) பெற வேண்டுமென விரும்புகின்றது. மகிழ மரமோ என்னுடன், தோஹதம் என்ற வ்யாஜத்தில் அவளது வாயினின்றும் தரப்படும் மதுவை தானும் பெற வேண்டுமென, விரும்புகின்றது. ஸஹோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — माधव: - வைகாசி மாதம். அதில் பூப்பதால் இதற்கு மாதவி எனப் பெயர் வந்தது. माधवी - குருக்கத்தி, முல்லைக்கொடி. मण्डप - குருக்கத்திக் கொடியையே கூரையாகக் கொண்ட கொடி வீடு. இதற்குச் சுற்றிலும் சுவராக அமைந்தது மருதோன்றிச் செடி. प्रत्यासन्नौ - அருகில் உள்ளவை. மண்டபத்தில் புகும் வழியில் ஒரு புறத்தில் அசோகமும், மறுபுறத்தில் மகிழ மரமும் இருப்பதாகக் கொள்ளலாம். रक्ताशोक:-அசோகமும் சிவப்பு, வெளுப்பு என இருவகையாகும். சிவந்த தளிர்களும், புஷ்பங்களும் உடையது சிவப்பு அசோகம். இது காதலைத் தூண்டுவது. வெண்ணிறப் பூவுடையது வெண் அசோகம். दोहद: - பூப்பதற்குரிய காலமில்லாத பொழுதும் மரம், செடி, கொடிகளில் பூவை உண்டாக்கக் கருதிச் செய்யப்படும் செயலை தோஹதம் என்பர்.

तरुगुल्मलतादीनामकाले कुशलैः कृतम् । पुष्पाद्युत्पादकं द्रव्यं दोहदं स्यात्तु तत्क्रिया - என்பதைக் காண்க. இதற்கான சில முறைகள் கூறப்பட்டுள்ளன. அழகான பெண்கள் உதைப்பதால் அசோகமும், அவள் வாயினின்றும் ஊற்றப்பட்ட மதுவினால் மகிழ மரமும் பூக்கும் என்பர். பூக்காமல் இருந்து தோஹதம் தேவை என்ற பொய்க்காரணம் காட்டி, யக்ஷியின் இடதுகால் உதையைப் பெற அசோகமும், வாய்மதுவைப் பெற மகிழ மரமும் விரும்புகின்றன என்கிறான் யக்ஷன். छद्म - பொய்க்காரணம். दोहदच्छद्म - தோஹதம் வேண்டுதல் என்ற பொய்க் காரணம். मया सह - என்னுடன் சேர்ந்து விரும்புகின்றன. நான் விரும்புவது போல் அவைகளும் விரும்புகின்றன. என்னுடன் சேர்ந்து அந்த ஸுகத்தை அனுபவிக்க விரும்புகின்றன. அடிக்கடி நான் பெற்ற இன்பத்தைத் தாங்களும் பெறவிரும்புகின்றன. எனக்கே உரிய அவ்வின்பத்தை நான் பெறும்போது தாங்களும் பெற விரும்புகின்றன என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். எந்தெந்த மரத்திற்கு எந்தெந்த தோஹதம் தரப்பட வேண்டும் என்பதை கீழ்வரும் சுலோகம் தொகுத்துக் கூறுகின்றது.

पादाघातादशोकः तिलककुरबकौ वीक्षणालिङ्गनाभ्याम
स्त्रीणां स्पर्शात् प्रियंगुः विकसति वकुलः सीधुगण्डूषसेकात्।
मन्दारो नर्मवाक्यात्, पटुमृदुहसनात् चम्पकः वक्त्रवाता-
च्चूतो गीतान्नमेरुः विकसति च पुरो नर्तनात्कर्णिकारः ॥

तन्मध्ये च स्फटिकफलका काञ्चनी वासयष्टि-
मूले बद्धा मणिभिरनतिप्रौढवंशप्रकाशैः ।
तालैः शिञ्जावलयसुभगैर्नर्तितः कान्तया मे
यामध्यास्ते दिवसविगमे नीलकण्ठः सुहृद्वः ॥ १३ ॥

பதவுரை:—(किं) च - மேலும், तन्मध्ये - அவ்விரண்டு மரங்களுக்குமிடையில், अनति-प्रौढ-वंश-प्रकाशैः - இளம் மூங்கிற்கொப்பான வெளிர் பச்சை நிறமுடைய, मणिभिः - மரகதக் கற்களால், मूले - அடியில், बद्धा - சிறு மேடை கட்டப்பட்டதும், स्फटिक-फलका - அமர்வதற்காகப் பளிங்குக்கல் பலகையுடையதுமான, काञ्चनी - பொன் மயமான, वासयष्टिः - (பறவை) வசிப்பதற்கான (அமர்வதற்கான) ஒரு கொம்பு, (अस्ति)-இருக்கின்றது. शिञ्जा-वलयसुभगैः - இனிய ஒலியுடன் இருக்கின்ற வளையலுடையதால் அழகான, तालैः - கைத்தாளங்களினால், मे कान्तया - என் அன்புக் காதலியால், नर्तितः - நர்த்தனம் செய்விக்கப்பட்டதும், वः - உங்களுடைய (உன் இனத்தவரான மேகங்களுக்கு), सुहृत् - நண்பனுமான, नीलकण्ठः - மயில், दिवस-विगमे-பகற்பொழுது சென்றபின் (ஸாயங்காலத்தில்), याम् - அந்தக் கொம்பின் மீது, अध्यास्ते - உட்காருகின்றது.

கருத்துரை: — மேகமே, அவ்விரண்டு மரங்களுக்குமிடையில் என் காதலி வளர்க்கும் மயில் உட்காருவதற்காக ஒரு தங்கக்கொம்பு உள்ளது. அது உறுதியாக நிற்பதற்காக அதன் அடிப்பகுதியில் மூங்கில் குருத்து போல் வெளிர் பச்சை நிறமுடைய ரத்தினங்களால் உறுதியான பீடம் அமைக்கப்பட்டுள்ளது. தங்கக்கொம்பின் உச்சியில் வசதியாக உட்காரப் பளிங்குக் கல்லால் ஒரு சிறு பலகை வைக்கப்பட்டுள்ளது. என்

மனைவி தன் கை வளை ஒலிப்பக் கைத்தாளம் கொட்டி அம் மயிலை நடனம் ஆடும்படி பழக்கியிருக்கிருள். வளையின் ஒலி யும் தாளமும் கேட்க இனிதாக இருக்கும். தோட்டத்தில் பக லெல்லாம் உலவி வரும் அம்மயில் பொழுது சாய்ந்தவுடன் அக்கொம்பில் வந்து அமரும். உதாத்த அணி.

விளக்கவுரை: — तरुमध्ये - மரங்களுக்கிடையில் என்பர் மல்லிநாதர். வீட்டின் முன்னுள்ள இடத்தில் என்பர் பூர்ண ஸரஸ்வதி. वंश: - மூங்கில்; प्रौढ-முதிர்ந் தது, अनतिप्रौढ - மிக முதிராத; இளம் மூங்கில்; குருத்து; மூங்கில் முளை. இதன் நிறம் வெளுத்த பச்சை நிற மாக இருக்கும். முதிர்ந்தால் நல்ல பச்சை நிறமாகும். मणि: - வெளிர் நிறமுள்ள பச்சை ரத்தினம்; मूले-அடிப் பகுதி; அடிப்பாகம்; बद्धा - கட்டப்பட்டது; கொம்பு உறுதியாக நிற்க அடிப்பகுதி பச்சை ரத்தினத்தால் கட்டப்பட்ட சிறுமேடையுடையது. உயர்ந்த கொம் பின் மேல் உட்காரும் மயிலின் தோகை தரையில் புரளாமலும் இருக்கும். स्फटिकफलका - பளிங்குக்கல் பலகை. இது தங்கக் கொம்பின் மேல், மயில் வசதி யாக உட்கார குறுக்காக அமைக்கப்பட்டது. மயில் கள் குளிர்ச்சியை விரும்புவனவாதலால் குளிர்ந்த ஸ்பர்சமுடைய பளிங்குக்கல் ஆஸனமாக வைக்கப் பட்டது என்பர் பூர்ண ஸரஸ்வதி. "பளிங்குக் கல்லும் அடியிலே உள்ள மேடையில் உள்ளது" என்று சிலர் கருதுவது சரியில்லை.

वास-यष्टि: - வாசம் செய்வதற்கான கொம்பு-தண்டு; शिञ्जा - ஒலி; தாளம் போடும் போது வளையல் கள் ஒலிப்பதால் தாள ஒலியும் இதனுல் அழகு பெறும். सुभग - இனிய, அழகான, हस्त-ताल-கைகளால்

போடப்படும் தாளங்கள். அம் மயில் தாளத்திற்கும், பாட்டிற்கும் தக்கபடி ஆடக்கற்பிக்கப்பட்டது. याम् - எந்தக் கொம்பில் என்பது பதப்பொருளாயினும் தெளிவு கருதி கொம்பின் மேல் என்று பொருள் கூறப்பட்டது. वः - உங்களுடைய; மேகத்தைக் கண்டால் மயில்கள் மகிழுமாதலால் மயிலை மேகங்களின் நண்பனாகக் (सुहृत्) கூறினார். नीलकण्ठः - நீலநிறமான கழுத்துடையது-மயில்.

एभिः साधो हृदयनिहितैर्लक्षणैर्लक्षयेथाः
द्वारोपान्ते लिखितवपुषौ शङ्खपद्मौ च दृष्ट्वा ।
क्षामच्छायं भवनमधुना मद्वियोगेन नूनं
सूर्यापाये न खलु कमलं पुष्यति स्वामभिख्याम्॥१४॥

பதவுரை: — **साधो** - பரோபகாரியே, **हृदय-निहितैः** - (உன்) மனத்துள் நன்கு இருத்திக் கொண்ட, **एभिः** - இந்த (நான் கூறிய), **लक्षणैः** - அடையாளங்களாலும், **द्वारोपान्ते** - வீட்டு வாயிலின் இருமருங்கிலும், **लिखितवपुषौ** - எழுதப்பட்ட வடிவினையுடைய, **शङ्खपद्मौ** - சங்கம், பத்மம் என்ற இரண்டு நிதிகளின் தேவதைகளையும், **दृष्ट्वा च** - பார்த்தும், **नूनम्** - திண்ணமாக, **अधुना** - தற்போது, **मद्वियोगेन** - எனது பிரிவினால், **क्षामच्छायम्** - ஒளி குறைந்துள்ள, **भवनम्** - எனது மாளிகையை, **लक्षयेथाः** - நீ அடையாளம் கண்டு கொள்வாயாக. **सूर्य-अपाये** - ஸூர்யனில்லாத பொழுது, **कमलम्** - தாமரை, **स्वाम्**-தன்னுடைய, **अभिख्याम्**-காந்தியை, **न पुष्यति खलु**-புலப்படுத்துவதில்லை அல்லவா?

கருத்துரை: — பரோபகாரியான மேகமே! நான் முன்பு கூறிய அடையாளங்களான தோரணம் முதலியவற்றை நன்கு மனத்தில் நினைவிற்கொள். மற்றுமொரு அடையாளம் சொல்கிறேன். என் வீட்டு நுழைவாயில், ஒரு புறத்தில் சங்கநிதி தேவதையின் வடிவமும் மற்றொரு புறம் பத்மநிதி தேவதையின் வடிவமும் எழுதப்பட்டு இருக்கும். இவ்வடையாளங்களைக் கொண்டு என் வீட்டை நீ காணலாம். ஆனால் நான் இருந்த காலத்தில் இருந்த சோபை அவ்வீட்டிற்கு நான் இல்லாத இவ்வமயம் இராதுதான். இந்நாட்களில் அது குறைந்து தான் இருக்கும். ஸூர்யன் இருக்கும் போது உள்ள சோபை அவன் மறைந்தவுடன் தாமரைக்கு இராதென்பது நீயும் அறிந்தது தானே. தாமரை மலர்போல் என் வீடும் நான் இல்லாத பொழுது சோபையுடன் இராது. த்ருஷ்டாந்த அலங்காரம்.

விளக்கவுரை: — साधुः - நல்லவன், *பரோபகாரி. திறமை வாய்ந்தவன் என்பர் மல்லிநாதர்.* निहितैः - *நன்கு மனத்தில் இருத்திக் கொண்ட, மறக்கப்படாத;* लक्षणैः - *தோரணம் முதலிய அடையாளங்களாலே;* द्वारोपान्ते - *வாசலின் அருகில் என்பது பதப்பொருளாயினும்* उपान्तयोः *என்று கொண்டு இருபுறங்களிலும் என்று பொருள் கொள்ள வேண்டும்.* लिखितवपुषौ-वपुः - *சரீரம்; சங்கம், பத்மம் என்பவை இரண்டு ரத்தினங்களாயினும் அவற்றின் தேவதா வடிவங்கள் எழுதப்பட்டுள்ளன. சங்க நிதி தேவதையின் தலைமேல் சங்கின் வடிவமும், பதுமநிதி தேவதையின் சிரஸில் தாமரையும் எழுதப்பட்டிருக்கும் என்பர் பூர்ண* ஸரஸ்வதி. सूर्य-अपाय - *இங்குள்ள* अपाय *என்ற சொல்லிற்கு விலகிச் செல்லுதல் என்று பொருள்.* अप - *விலகி,* अय - *செல்லுதல்.* पुष्यति - *வளர்க்கின்றது*

தோற்றுவிக்கின்றது, புலப்படுத்துகின்றது என்பது பொருள். தன் காதலி, பிரிவாற்றுமையால் ஏக்கம் கொண்டிருப்பாள் என்றும் அது காரணமாகவும் நன்கு பராமரிக்கப்படாமல் வீடு சோபையிழந்து இருக்கும் என்றும் யக்ஷன் கருதுவதாகக் கூறுவர் ஒரு உரையாசிரியர்.

गत्वा सद्यः कलभतनुतां शीघ्रसंपातहेतोः
क्रीडाशैले प्रथमकथिते रम्यसानौ निषण्णः ।
अर्हस्यन्तर्भवनपतितां कर्तुमल्पाल्पभासं
खद्योतालीविलसितनिभां विद्युदुन्मेषदृष्टिम् ॥ १५ ॥

பதவுரை: — (मेघ) - மேகமே, शीघ्र-सम्पात-हेतोः - சீக்கிரம் கீழே இறங்குவதற்குக் காரணமாக, सद्यः - (செய்குன்றைக் கண்ட) உடனே, कलभ-तनुताम्-யானைக் குட்டியின் உடல் அமைப்பை (சிறிய வடிவத்தை), गत्वा - அடைந்து (ஏற்று), प्रथमकथिते - (என்னுல்) முன்பு கூறப்பட்ட, रम्यसानौ - அழகிய சிகரமுடைய, क्रीडाशैले - விளையாட்டுக் குன்றத்தில், निषण्णः - நன்கு அமர்ந்தவனாக, अल्प-अल्पभासम् - மிகமிகக் குறைவான ஒளியுடையதும், खद्योत-आली-विलसित-निभाम् - மின்மினிப்பூச்சிக் கூட்டத்தின் ஒளிக்கு ஒத்ததுமான, विद्युदुन्मेष-दृष्टिम् - மின்னல் ஒளி என்ற (உனது) பார்வையை, अन्तः भवन-पतिताम् - வீட்டிற்குள் செலுத்தப்பட்டதாக, कर्तुम् - செய்ய, अर्हसि - தகுந்தவனுகின்றுய்.

கருத்துரை: — மேகமே, நீ அந்த விளையாட்டு மலையைக் கண்டவுடனேயே அதில் இறங்குவதற்கு வசதியாக ஒரு யானைக்குட்டியின் சரீர அளவிற்கு உன்னை சுருக்கிக் கொண்டு

அம்மலைச் சிகரத்தில் அமர்ந்து கொள். பின் மின்மினிப் பூச்சி களின் கூட்டத்திற்கு எந்த அளவு ஒளி இருக்குமோ அந்த அளவிற்கு மிகமிகச் சிறிய ஒளியுடைய உன் மின்னல் எனும் கண்களை வீட்டினுள் செலுத்தி உள்ளே காண்பாயாக. உவமையும் ருபகமும் அலங்காரங்கள்.

விளக்கவுரை: — सम्पात: - *மலையின்மேல் இறங்குதல்;* कलभ: - *யானைக்குட்டி; மேகத்தின் கருநிறம் யானைக்குட்டியின் உருவினை யக்ஷன் மனத்தில் தோன்றச் செய்தது.* सानु - *மலையின் மேலுள்ள ஸமமான தரை.* निषण्ण: - *சிரம பரிஹாரம் செய்து கொள்ளும் அளவிற்கு வசதியாக அமர்ந்து,* अल्पाल्पभासम् - *மிகமிகக் குறைந்த ஒளியுடைய பார்வையை; இப்படிக் கூறியதில் திருப்தி கொள்ளாமல் ஒளியின் அளவை மேலும் குறிக்கிறான் யக்ஷன்* खद्योत आली विलसितनिभाम् *என்பதால்.* खम् - *ஆகாயம்; அதனை* द्योत - *ஒளிரச் செய்வது என்பது பதப்பொருள்.* खद्योत-*(இரவில்) ஆகாயத்தில் தோன்றும் மின்மினிப்பூச்சி;* आली - *வரிசை என்ற பொருளுடையதாயினும் இங்கு 'கூட்டம்' என்ற பொருள் கொள்ள வேண்டும். மின்மினிகள் கூட்டமாகப் பறக்குமேயன்றி வரிசையாகப் பறப்பன அல்ல. இப்பூச்சிகளுக்கு ஒளியுண்டு.* विद्युत्-उन्मेष - *மின்னல் ஒளியையே மேகத்தின் கண்ணாகக் கூறினான் யக்ஷன்.* उन्मेष - *ப்ரகாசம் அல்லது பளிச்சிடுதல் - மின்னுதல்.* कर्तुं अर्हसि - *'செய்யத் தகுந்தவனாகிறாய்' என்பது ஒருவகை வேண்டுகோள். 'செய்வாயாக' என்பது கருத்து. இந்த சுலோகத்தில் மேகம் மலையில் அமர்ந்து ஜன்னல் வழியாக வீட்டிற்குள் இருக்கும் யக்ஷியைக் காணவேண்டும் என்கிறான். இனிவரும்*

பதினாறு சுலோகங்களில் யக்ஷனைப் பிரிந்துள்ள நிலையில் அவளை அறிவதற்கான சில அடையாளங்களையும் அவளது செயலையும் அவள் இருக்கும் நிலையையும் கூறுகின்றான் யக்ஷன்.

तन्वी श्यामा शिखरिदशना पक्वबिम्बाधरोष्ठी
मध्ये क्षामा चकितहरिणीप्रेक्षणा निम्ननाभिः ।
श्रोणीभारादलसगमना स्तोकनम्रा स्तनाभ्यां
या तत्र स्याद्युवतिविषये सृष्टिराद्येव धातुः ॥ १६ ॥

பதவுரை: — **तन्वी** - (அளவான) மெல்லிய சரீரமுடையவளும், **श्यामा** - கருநெய்தல் நிறமுடையவளும், **शिखरि दशना** - முனை மழுங்காத அழகிய பற்களையுடையவளும், **पक्व-बिम्बाधरोष्ठी** - பழுத்த கோவைப்பழம் போன்ற உதடுடையவளும், **मध्ये** - இடையில், **क्षामा** - சிறுத்தவளும், **चकित-हरिणी-प्रेक्षणा** - பயந்த மான் போல் மருண்ட பார்வையுடையவளும், **निम्ननाभिः** - ஆழ்ந்த நாபியுடையவளும், **श्रोणीभारात्** - இடையின் கீழ்ப்பகுதியின் பளுவால், **अलस-गमना** - மெதுவான நடையுடையவளும், **स्तनाभ्याम्** - ஸ்தனங்களால், **स्तोक-नम्रा** - சிறிது முன் சாய்ந்தவள் போலிருப்பவளும், **युवति-विषये** - யுவதிகளின் படைப்பு எனும் விஷயத்தில், **धातुः** - பிரம்மதேவரின், **आद्या** - முதன் முதலான, **सृष्टिः इव** - ஸ்ருஷ்டி போல், **स्थिता** - இருப்பவளுமாக, **या** - எவள், **तत्र**-அங்கு (வீட்டினுள்), **स्यात्** - இருப்பாளோ, **ताम्** - அவளை, **जानीथाः**-(என் அருமைத் துணைவியாக) அறிந்துகொள்.

கருத்துரை: — மேகமே, நீ காணும் போது நான் வர்ணிப்பது போன்ற ஒரு வனிதையைக் காண்பாயானல் அவள் என்

மனைவி என்பதை அறிந்து கொள். கொடி போன்ற மெல்லிய சரீரமுடையவள். நிறம் நீலோத்பலம் போன்றது. முனை மழுங்காத-அளவான கூர்மையுடைய-பல்வரிசைகொண்டவள். பழுத்த கோவைப்பழம் போன்றது அவளுடைய உதடு. இடை சிறுத்திருக்கும். மான் போன்ற மருண்ட பார்வையுடையவள். நாபி ஆழ்ந்தது. பின்னுள்ள இடையின் கீழ்ப்பகுதியின் பளுவால் மெதுவாக நடக்கும் இயல்புடையவள். ஸ்தனங்களின் கனத்தால் சிறிது முன்னேக்கிச் சாய்ந்திருப்பவள் போல் காணப்படுவாள். உலகைப்படைக்கும் சில்பியான பிரம்ம தேவர் யுவதிகளைப் படைப்பதில் மிக மிக முயன்று முதன் முதலாகப் படைத்த யுவதி போல் இருப்பாள். இத்தகைய ஒருத்தியை அவ்வீட்டினுள் காண்பாயாஞல் அவள் என் உயிர்க்காதலி என அறிந்து கொள். உவமையும், உத்ப்ரேக்ஷையும் அலங்காரங்கள்.

விளக்கவுரை: — *இங்கு ஸாமுத்ரிகா சாஸ்திரம் கூறிய வகையில் யக்ஷன் மனைவியின் வடிவம் அமைந்திருப்பதாகக் கருத வேண்டும்.* तन्वी - *பருமனாகவோ, மிக மெல்லியவளாகவோ இல்லாமல் அழகான வகையில் மெல்லியவளாக இருப்பவள்.* श्यामा - *நீலோத்பல இதழ் போன்ற அழகிய கருநிறமுடையவள் என்பர் பூர்ண ஸரஸ்வதி. யௌவனத்தின் நடுப்பகுதியில் இருப்பவள் என்பர் மல்லிநாதர். 16 வயது உடையவள், குழந்தை பெருதவள், இனிய குரலுடையவள் என்றும் இப்பதத்திற்குப் பொருள் உண்டு* शिखरि-दशना - *கூர்மையுள்ள; தேய்ந்து அழகற்றவையாக இல்லாமல் அழகிய முனையுடைய பற்களையுடையவள்.* दशन - *பல்; "மாதுளம்முத்துப் போலிருக்கும் ரத்தினத்தை ஒத்த பல் உடையவள்" என்பர் தக்ஷிணாவர்த்தர். அவர் பாடம்* शिखरदशना-*என்பது.* मध्ये क्षामा- *இடை சிறுத்த பெண்களே அழகுடையவர்கள்,* चकित-

हरिणी-प्रेक्षणा - யௌவனப் பருவத்தில் பெண்களின் பார்வையில் ஒரு மருட்சியிருக்கும். निम्न-नाभिः-கொப்பூழ் ஆழ்ந்திருப்பது சுபலக்ஷணம் என ஸாமுத்ரிகா சாஸ்திரம் கூறும். श्रोणी - இடையின் கீழுள்ள பிற்பகுதி; இதன் கனம் காரணமாக யக்ஷி மெதுவாக நடப்பவள். स्तोक - சிறிது, नम्रा - முன் சாய்ந்தவள்; ஸ்தன பாரத்தினால் முன் சாய்ந்திருப்பவள் என்று யக்ஷன் கூறினாலும் இது உண்மையல்ல. கண்களுக்குத் தோன்றும் ஒரு மயக்கம். आवर्जिता किञ्चिदिव स्तनाभ्याम् என்று குமாரஸம்பவத்தில் கவி, 3-56 இல் கூறியுள்ளதைக் கவனிக்க. इव - என்ற சொல்லைச் சேர்த்து नम्रा इव என்று கொண்டு, சாய்ந்தவள் போல் காணப்படுபவள் என்று கூறவேண்டும்.

आद्या सृष्टिः - பிரம்மதேவர் படைப்பதென்ற கலை அறிந்த சில்பி. நன்று கலை பயின்ற ஒரு சில்பி தனது திறமை முழுவதையும் உபயோகித்து தான் செய்யும் முதன் முதலான ஒரு படைப்பில் மிகக்கருத்துடையவனாக நன்கு படைப்பான். அவ்வாறே பிரம்மதேவர் என்ற ஒரு கலைஞரும் யுவதிகளைப் படைக்கும் கலையை நன்கு பயின்று அதன்பின் அவர் செய்த முதற் படைப்பு போல் இருப்பாள் யக்ஷி என்றான் யக்ஷன். இந்த சுலோகத்தில் வாக்யம் முற்றுப் பெறவில்லை. அடுத்துவரும் சுலோகத்திலுள்ள तां जानीथाः - என்பதுடன் சேர்த்துப் பொருள் கூறப்பட்டது. स्यात् - என்பதற்கு यदि என்ற பொருள் கொண்டு अस्ति - என்பதுடன் சேர்த்து 'अस्तिस्यात्-இருப்பாளாயின் அவளை என் காதலியாக அறிந்து கொள்'

என்பர் தக்ஷிணாவர்த்தர் "स्यात् - आख्यातप्रतिरूपमव्ययमिदं यद्यर्थे वर्तते । "तथा श्रीरामायणे प्रयोगः पठन् द्विजोवागृषभत्वमीयात् स्यात् क्षत्रियो भूमिपतित्वमीयात्" इति । என்பர். शिखर-दशना - தக்ஷிணாவர்த்தரின் பாடம். तन्वीश्यामा என்று தொடங்கும் இப்பகுதியைப் பற்றி வில்ஸன் என்ற மேனாட்டு அறிஞர் கூறுவது:- "மேக ஸந்தேசம் எனும் அழகிய இச்சிறுகாப்பியத்தில் யக்ஷன் மனைவியை வர்ணிப்பதான மிகமிக அழகிய பகுதிக்கு இப்போது வருகிறோம்" என்பதாம். யக்ஷன், யக்ஷியின் அழகில் பரவசமடைந்து மெய்மறந்து வியப்பில் சிறிது ஔசித்யத்தையும் ஒதுக்கி விட்டுப் பேசுகிறான் எனலாம்.

तां जानीथाः परिमितकथां जीवितं मे द्वितीयं
दूरीभूते मयि सहचरे चक्रवाकीमिवैकाम् ।
गाढोत्कण्ठां गुरुषु दिवसेष्वेषु गच्छत्सु बालां
जातां मन्ये शिशिरमथितां पद्मिनीं वाऽन्यरूपाम् ॥

பதவுரை: — सहचरे - ஆண் சக்ரவாகப் பறவை, दूरीभूते-सति - தொலைவில் இருக்கும்போது; चक्रवाकीम् इव - தனித்துள்ள பெண் சக்ரவாகம் போல், सहचरे - தோழனாகிய, मयि - நான், दूरीभूते सति - தொலைவில் இருக்கும் பொழுது एकाम् - தன்னந்தனியே (ஏக்கத்துடன்) இருப்பவளும், परिमितकथाम् - மிகக்குறைவாகப் பேசுபவளுமான, ताम् - அவளை, मे - என்னுடைய, द्वितीयम् - இரண்டாவது, जीवितम् - உயிராக, जानीथाः - அறிந்து கொள்; गाढोत्कण्ठाम् - ஆழ்ந்த மனவேதனை கொண்ட, बालाम् - அவ்விள நங்கையை, गुरुषु - (பிரிவாற்றாமையால்) கனத்திருக்கின்ற, एषु - இந்த, दिवसेषु - பல

நாட்கள், गच्छत्सु - சென்று கொண்டிருக்கும் பொழுது, शिशिरमथिताम् - பனியினால் சோபை இழக்கும்படி செய்யப்பட்ட, पद्मिनीम् वा - தாமரை ஓடை போல், अन्यरूपाम् - (மாறிய) வேறு தோற்றமுடையவளாய், जाताम् - ஆகி இருப்பவளாக, मन्ये - (நான்) எண்ணு கின்றேன்.

கருத்துரை: — மேகமே, நான் அவளது இணைபிரியாத நண்பன். எப்போதும் அவளுடன் இருப்பவன். இப்போது அவளைவிட்டு நீங்கி நான் வெகு தொலைவிலிருப்பதால் அந்த ஏக்கத்தினால் அவள், ஆண் சக்ரவாகப் பறவையைப் பிரிந் துள்ள பெண்சக்ரவாகப் பறவையைப் போல் தன்னந்தனியே வருந்திக்கொண்டு இருப்பாள். வெளியில் நடமாடும் எனது மற்றொரு உயிர் அவளே என அறிவாயாக. அதிகம் பேசா மலும் இருப்பாள். நான் முன்சொன்ன அடையாளங்கள் முற் றிலும் இல்லாமல் இருப்பதற்கும் காரணம் உண்டு. என் பிரிவிற்குப் பின் நாட்கள் பல சென்றன. ஒவ்வொரு நாளும் நெடியதாகவும், கனத்தும் இருந்து அவளுக்கு மிக வேதனை கொடுத்திருக்கும். எனவே, பனியினால் உருக்குலைந்து சோபை யிழந்து இருக்கும் தாமரை போல்-தாமரை ஓடை போல்-இந் நாட்களில் உருக்குலைந்து வேறு ஒருத்தி போல் காணப்பட லாம் என நினைக்கிறேன். எனவே, இதையும் நீ மனத்தில் கொண்டு அவளை நன்கு அடையாளம் கண்டு கொள். அதிச யோக்தியும் உவமையும் அணிகள்.

விளக்கவுரை: — सहचर - ஒருவனுடன் சேர்ந்து அவனை விட்டு நீங்காது சஞ்சரிப்பவன் என்பது பதப் பொருளாகி இணைபிரியாத நண்பர்களைக் குறித்தது. யக்ஷன் தன்னைக் கணவன் என்று கூறாது இணைபிரியாத் நண்பன் என்று கூறுவது கவனித்தற்குரியது. चक्रवाकी- சக்ரவாகம் என்ற ஆண் பெண் பறவைகள் எப் பொழுதும் சேர்ந்தே சஞ்சரிப்பவை. தம்பதிகளின்

அன்யோன்ய அன்பிற்கு உதாரணமானவை. இவை இரவிலே கண் தெரியாது ஒன்றை விட்டு ஒன்று பிரிந்துவிடின் இரவு முழுவதும் ஒன்றை ஒன்று விரும்பிக் கூவும். தனித்தே இருக்கும். பொழுது விடிந்தால் ஒன்று சேரும் என்பர். தன்னைப் பிரிந்திருக்கும் யக்ஷி, பெண் சக்ரவாகம் போல் தனித்து வருந்துவாள் என்கிறான் யக்ஷன்.

जीवितं मे द्वितीयं - எல்லோருக்கும் ஒரு உயிர்தான் உண்டு. அது அவரவர்களின் உடலுக்குள் உறையும். யக்ஷன் தனக்கு இரண்டு உயிர்கள் உண்டென்று கருதி வெளியில் நடமாடும் உயிராக இருப்பவள் அவனது அன்புக் காதலி என்கிறான். गाढ-उत्कण्ठा - தாங்கொணு மனவேதனை. "रागे त्वलब्धविषये वेदना महती तु या । संशोषणी तु गात्राणां तामुत्कण्ठां विदुर्बुधाः ॥" என்பதைக் காண்க. बाला - பதினறு வயதுடையவள்; அவள் வருந்தும் நிலையைக் கருதி இச்சொல்லால் அவளைக் குறித்தான். தேவமங்கையர் எப்பொழுதும் பதினெட்டு வயதுடையவர்களாகவே இருப்பார்கள் என்பர்.

गुरुषु दिवसेषु - நல்ல பொழுது போக்கு இருக்குமாயின் நேரம் போவதும், நாட்கள் செல்வதும் தெரியாது. வருத்தமுள்ள நிலையில் பொழுது செல்லாது. நாட்கள் நெடியனவாகவும், கனத்ததாகவும் இருந்து பெரும் சுமை ஒன்று அழுத்துவது போல் இருக்கும்; அதனலேயே அவள் உருக்குலைந்து அடையாளம் காண முடியாதபடி இருக்கலாம் என்று யக்ஷன் கூறுகின்றான். शिशिर-मथिता-"பனியினல் அல்லது சிசிருது

என அழைக்கப்படும் பனிக்காலத்தால் நாசம் செய்யப் பட்ட, சோபை இழக்கும்படி செய்யப்பட்ட;'' पद्मिनी- தாமரைக் கொடி அல்லது தாமரைக் குளம், अन्यरूपा- रूप - உரு, நிறம், வடிவம்; வேறு உரு உடையவளாக; உருக்குலைந்தவளாக; पद्मिनी वा - वा என்பது इव என்ற பொருளில் வந்தது. 'इववद्वायथाशब्दाः' என்பர் தண்டி (काव्यादर्श-2-57). இந்த ச்லோகத்தின் கருத்து கீழ்த் தந்துள்ள வால்மீகி ராமாயண ச்லோகத்தை அனு சரித்து வந்தது—

हिमहतनलिनीव नष्टशोभा
व्यसनपरम्परया निपीड्यमाना ।
सहचर-रहितेव चक्रवाकी
जनकसुता कृपणां दशां प्रपन्ना ।।

सुन्दरकाण्ड; स-१६; श्लोक-३०

नूनं तस्याः प्रबलरुदितोच्छूननेत्रं प्रियायाः
निःश्वासानामशिशिरतया भिन्नवर्णाधरोष्ठम् ।
हस्तन्यस्तं मुखमसकलव्यक्ति लम्बालकत्वा-
दिन्दोर्दैन्यं त्वदनुसरणक्लिष्टकान्तेर्बिभर्ति ।। १८ ।।

பதவுரை: — प्रबल-रुदित-उच्छून-नेत्रम् - மிகமிக அழுத லால் வீங்கிய கண்களையுடையதும், निःश्वासानाम् - மூச்சுக் காற்றின், अशिशिरतया - உஷ்ணத்தன்மையால், भिन्नवर्णाधरोष्ठम् - வேறு நிறம் பெற்ற கீழ் உதட்டையுடைய தும், हस्तन्यस्तम् - உள்ளங்கையில் வைக்கப்பட்டிருப் தும், लम्बालकत्वात् - முன்னெற்றியில் தொங்கும் குழற்

கற்றைகளால், असकल-व्यक्ति - முற்றிலும் புலனாகாதது மான, तस्याः प्रियायाः मुखम् - அந்த என் அன்பின் முகம், त्वदनुसरण-क्लिष्ट-कान्तेः - நீ அணுகுவதால் மங்கிய ஒளி யுடைய, इन्दोः - சந்திரனின், दैन्यम् - எளிய நிலையை, नूनम् - திண்ணமாக, बिभर्ति - ஏற்றிருக்கும்.

கருத்துரை: — அன்பனே, என் பிரிவினாலுண்டான வருத் தத்தால் அவள் மிகமிகப் புலம்பி கண்ணீர் வடித்திருப்பாள். அவளது கண்கள் அதனால் வீங்கி இருக்கும். சோகத்தினா லுண்டான உஷ்ணமான மூச்சுக்காற்று, கோவைப்பழம் போன்ற அவளது சிவந்த உதட்டில் பட்டு அதன் சிவப்பு நிறம் மாறியிருக்கும். அணி செய்து கொள்ளாததால் முன் சிரஸிலுள்ள குழல் கற்றை முகத்தில் படர்ந்து அவள் முகம் முற்றிலும் புலனாகாது. துன்பம் தாங்கும் அவள் தன் முகத்தை கையில் வைத்திருப்பாள். நீ அணுகும் போது சந்திரன் ஒளி குன்றியிருப்பானல்லவா? அவ்வாறே வ்யஸனத்தால் அவள் முகமும் (நிச்சயம்) ஒளி குன்றியிருக்கும். இவ்வாறு இருப் பினும் நீ அவளை அடையாளம் கண்டு கொள்வாயாக. நிதர்சனாலங்காரம்.

விளக்கவுரை:—1. प्रबल...नेत्रम् முதலியவை முகத் திற்கு விசேஷணங்கள். रुदित என்பது அழுகையையும், கண்ணீர் விடுதலையும் குறித்தது. கண் மாத்திரமே யன்றி இமைகளும் வீங்கியிருக்கும். 2. निःश्वास...ओष्ठम्- வெளிவரும் மூச்சுக் காற்று உஷ்ணமாக இருக்குமாத லால் செவ்விதழையும் நிறம் மாறச் செய்யும். 3. हस्तन्यस्तम् - உள்ளங்கையில் தன் கன்னத்தை வைத்து முகத்தைத் தாங்கியிருப்பாள். 4. लम्बालक... व्यक्ति - கூந்தலுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யா மல் இருப்பதால் அலகங்களுக்குரிய சுருளும் தன்மை நீங்கி முகத்திலே தொங்கிக் கொண்டிருப்பதால்

முகத்தை முற்றிலும் காணமுடியாதிருக்கும். 5. त्वदृष ... कान्तिम् - மேகமே நீ இல்லாத போது சந்திரன் பிரகாச மாக இருப்பான். நீ அணுகினால் அவன் காந்தி குறை யும். அப்போது சந்திரன் ஒளி எவ்விதமான எளிய நிலையைப் பெறுமோ, அந்நிலையை அவள் முகம் நிச்சய மாகப் பெற்றிருக்கும்.

विभर्ति என்பது நிகழ்காலவினை; பெறுகின்றது என்பது பதப்பொருள். பெறும் என்றோ, பெற்றிருக் கும் என்றோ பொருள் கொள்ள வேண்டும். नूनम् - என்பது ஊஹத்தையும், நிச்சயத்தையும் குறிக்கும். இடத்திற்கு ஏற்றவாறு பொருள் கொள்ளலாம். இந்த ச்லோகத்தில், "யக்ஷி உருமாறியிருக்கவும் கார ணம் உண்டு; கண் வீங்கி இருத்தல், உதட்டின் நிறம் மாறியிருத்தல், குழல்கற்றை கலைந்திருத்தல், முகத் தைக் கையில் ஏந்தி இருத்தல் என்ற இவைகளைக் கொண்டும் அவளைக் கண்டு கொள்ளலாம்" என்று கூறுகின்றான் யக்ஷன்.

இனி வரும் மூன்று சுலோகங்களில் யக்ஷி செய்யும் சில செயல்களைக் கொண்டு அவளை அடையாளம் கண்டு கொள்ளலாம் என யக்ஷன் கூறுகின்றான்.

आलोके ते निपतति पुरा सा बलिव्याकुला वा
मत्सादृश्यं विरहतनु वा भावगम्यं लिखन्ती ।
पृच्छन्ती वा मधुरवचनां शारिकां पञ्जरस्थां
कच्चिद्भर्तुः स्मरसि रसिके त्वं हि तस्य प्रियेति ।।१९।।

பதவுரை: — (मेघ) - மேகமே, सा - அவள், बलि-व्याकुला वा - தேவ பூஜையில் ஈடுபட்டவளாகவோ,

विरह तनु - பிரிவாற்றாமையால் மெலிந்த, भाव-गम्यम् - (அவளது) கருத்தினால் மாத்திரமே அறியக் கூடிய, मत्सादृश्यम् - எனது உருவத்தின் ஒப்புமையை (உருவத்தை), लिखन्ती वा - எழுதிக் கொண்டிருப்பவளாகவோ, मधुरवचनाम् - இனிய பேச்சுடையதும், पञ्जरस्थाम्- கூட்டிலிருக்கின்றதுமான, शारिकाम्-மைனாவை, "रसिके- (அன்பின்) சுவையறிந்தவளே, भर्तुः-(நமது) தலைவரை, स्मरसि-कच्चित् - நினைக்கின்றாயா? त्वम् - நீ, तस्य - அவருக்கு प्रिया हि - ப்ரியமானவள் அல்லவோ" इति - என்று, पृच्छन्ती वा - கேட்டுக் கொண்டிருப்பவளாகவோ, ते - உனது, आलोके-பார்வையில், पुरा निपतति-தென்படுவாள்.

கருத்துரை: — மேகமே, என்னைப் பிரிந்திருக்குங்கால், அவள் நான் சீக்கிரமே நலனுடன் வீடு திரும்ப வேண்டும் என்ற பெருவிருப்பால் தேவதைக்குப் பூஜை செய்வதில் ஈடுபட்டிருப்பாள், அல்லது பிரிவாற்றாமையால் மெலிந்த எனது உருவத்தை 'இது இப்படித்தான் இருக்கும்' என தனது கற்பனையால், ஊஹித்து எனது உருவத்தின் ஒப்புமையை-உருவத்தைப் படத்தில் தூரிகை கொண்டு எழுதிக்கொண்டிருப்பாள். அல்லது நாங்கள் வீட்டிலே வளர்க்கின்றதும், இனிதாக பேசுகின்றதும், கூண்டிலிருப்பதுமான மைனாவைப் பார்த்து "அன்பின் சுவையறிந்தவளே, நீ நம் தலைவருக்கு ப்ரியமானவளல்லவோ? இங்கில்லாத அவரை இப்பொழுது நினைக்கின்றாயா?" என அதனைக்கேட்டுக்கொண்டிருப்பாள். நீ பார்க்கும் போது, இவ்வாறு ஏதாவது ஒரு நிலையில், அவள் உனது பார்வையில் புலப்படுவாள். ஸ்வபாவோக்தி அணி.

விளக்கவுரை:— बलि-व्याकुला - बलि-பூஜா காலத்தில் தேவதைகளுக்கு அர்ப்பணிக்கப்படும் பொருள். இந்த பூஜையையே குறிக்கது. அன்பு மனைவியான யக்ஷி தன் கணவன் நலனுடன் திரும்ப வேண்டும்

எனக்கருதி தேவபூஜை செய்வது பழக்கத்தினுல் வந்த தாகும். मत्सादृश्यम्—लिखन्ती - பிரிவாற்ருமையால் என் உடல் இளைத்திருக்கும் என்பதை மனக்கண்ணுல் கண்டு அதற்கேற்ற வகையில் என் வடிவினை படத்தில் எழுதிக் கொண்டிருப்பாள் யக்ஷி; இது கவலையுற்ற வர்கள் பொழுது போக்கும் வழி. யக்ஷி சித்திரம் வரைவதில் தேர்ந்தவள் என்றும் புலனுகும். सादृश्यम् - ஒப்புமை என்பது பதப்பொருள். உருவம் எழுதாமல் ஒப்புமையை மாத்திரம் எழுதுவது ஸாத்யமில்லையாதலால் "सदृश - ஒத்த வடிவினை" என்று பொருள் கொள்ள வேண்டும். सादृश्य - என்ற சொல்லுக்குப் படம் என்ற இத்தகைய பொருள் உண்டு என்பதை आलेख्येऽपि च सादृश्यम् என்று அஜய நிகண்டுவைக் காட்டி விளக்குகிருர் தக்ஷிணுவர்த்தநாதர்.

शारिका-மைனு; கிளி போல் பேசும் ஆற்றல் இதற்கும் உண்டு என்பர். மனிதர்கள் அன்பினுல் வளர்க்கும் பறவைகளும், மிருகங்களும் மனிதர் காட்டும் அன்பை உணர்ந்து, மனிதர்களிடம் பன்மடங்கு அன்பு வைக்கும் ஆற்றலுடையவை. மைனுவும் யக்ஷன் வைத்த அன்பை உணர்ந்திருந்ததால் அதனை "रसिके - சுவை அறிந்தவளே" என அழைத்தாள். त्वं हि—हि என்பதை प्रिया என்பதுடன் கூட்டி "நீ பிரியமானவள் என்பது யாவரும் அறிந்ததே" என்று பொருள் கொள்ளலாம். प्रिया-प्रीणातीति प्रिया - என்பது இப்பதத்தின் விளக்கம். மகிழ்விக்கின்றது என்பது பொருள் யக்ஷனைத் தனது குரல், பேச்சு மற்றும் விளையாட்டு. இவற்ருல் மைனு மகிழ்விப்பதால் அதனை प्रिया என்ருள். रसिके என்பதற்குப் பதிலாக, सुभगे, गिरिके என்ற

பாடபேதமுண்டு. कच्चित् என்ற சொல் 'ஆம்' என்ற பதிலை எதிர்பார்த்து கேட்கப்படும் கேள்வியைக் குறிப்பது. மைனாவிடமிருந்து 'நினைக்கிறேன்' என்ற பதிலையே யக்ஷி எதிர்பார்க்கிறாள். புரா - என்ற சொல் உடன் சேர்ந்த நிகழ்கால வினைச் சொல் எதிர்காலப் பொருளுடையதாகும்.

उत्सङ्गे वा मलिनवसने सौम्य निक्षिप्य वीणां
मद्गोत्राङ्कं विरचितपदं गेयमुद्गातुकामा ।
तन्त्रीमार्द्रां नयनसलिलैः सारयित्वा कथंचि-
द्भूयो भूयः स्वयमपि कृतां मूर्च्छनां विस्मरन्ती ॥

பதவுரை: — सौम्य - நல்லவனே, **मलिनवसने** - அழுக்கடைந்த வஸ்த்ரமுடைய, **उत्सङ्गे** - மடியில், **वीणाम्** - வீணையை, **निक्षिप्य** - வைத்துக் கொண்டு, **मद्गोत्राङ्कं** - என்து பெயர் கொண்டதும், **विरचित-पदम्** - (அவளாலேயே) அமைக்கப்பட்ட பதங்களையுடையதுமான, **गेयम्** - பாட்டை, **उद्गातुकामा** - உரத்துப் பாடவிரும்பியவளாக, **नयन - सलिलैः** - கண்ணீராலே, **आर्द्राम्** - நனைந்த, **तन्त्रीम्** - (வீணையின்) கம்பியை, **कथञ्चित्** - (மிகமிக முயன்று) ஒருவாறு, **सारयित्वा** - துடைத்துப்பின் (பாடத் தொடங்கியும்), **भूयो भूयः** - அடிக்கடி, **स्वयम् कृताम् अपि** - தன்னால் தொடங்கப்பட்டதாயினும், **मूर्च्छनाम्** - ஸ்வரங்களின் ஆரோஹண அவரோஹண நிலைகளை, **विस्मरन्ती वा** - மறக்கின்றவளாகவோ, **सा** - அவள், **ते आलोके** - உனது பார்வையில், **पुरा निपतति** - தென்படுவாள்.

கருத்துரை: — நண்பனே, என் மனைவி இப்படியும் இருப்பாள். நான் இல்லாததால் நல்ல ஆடை உடுக்கமாட்டாள்.

உடுத்திய ஆடையும் மாசுற்றிருக்கும். அத்தகைய உடை யணிந்த அவள் தன் மடியிலே வீணையை வைத்துக்கொண்டு என் பெயரை வைத்து அவள் இயற்றிய பாடலை (கந்தர்வ கானத்தில்) உரத்துப்பாட விரும்புவாள். உடனே உணர்ச்சி மிகுதியால் கண்ணீர் உகுப்பாள். உகுத்த கண்ணீர் வீணையின் தந்தியின் மேல் விழுந்து அதனை ஒலி இழக்கச் செய்யும். அக் கம்பியை மிக முயன்று துடைத்துப் பாடத்தொடங்குவாள். ஆனால் தான் பாடியதேயானாலும் எந்த ஸ்வரத்தை எங்கு நிறுத்தினேம் என்பதை மறந்துவிடுவாள். இத்தகைய நிலையி லாவது அவள் இருந்து கொண்டு உனக்குப் புலப்படுவாள். ஸ்வபாவோக்தி அலங்காரம்.

விளக்கவுரை: — मलिनवसन - *கணவனைப் பிரிந் துள்ள நிலையில் ஆடை அணிகலன்களில் கருத்து கொள்ளார் அன்பு மனைவிகள். எனவே, மாசுபடிந்த உடையே தரித்திருந்தாள் யக்ஷி.* मद्गोत्र - *இங்கு* गोत्र *என்பதற்குப் பெயர் எனப்பொருள்.* गोत्रं नाम्नि कुलेऽपि च *என்பது அமரம்.* अङ्क-*அடையாளம், பாட்டில் யக்ஷன் பெயர் இடம் பெற்றிருந்தது. பெயர் இங்கு கூறப் படவில்லை.* विरचित-पदम् - *அழகுற அமைக்கப்பட்ட பதமுடையது. யக்ஷி தானே ஸாஹித்யம் இயற்றி இருக்கலாம்.* गेयम्-*பாடத்தக்கது; பாட்டு.* उद्गातुकामा- *உரத்த குரலில் பாடுவதை கந்தர்வ கானம் என்பர்.* तन्त्रीं आर्द्राम् - *வீணையின் தந்தி கண்ணீரால் நனைந்தது. இங்குள்ள* तन्त्री *என்ற சொல் ஒருமையா யினும் வீணைத்தந்திகளை முற்றிலும் குறித்தது.* तन्त्रीरार्द्राः *எனப்பன்மையில் பாடம் கொள்வர் பூர்ண ஸரஸ்வதி.*

सारयित्वा - *துடைத்து என்பது மல்லிநாதர் பொருள்; மறுபடியும் வேலை செய்யச்செய்து, ஒலிக்கச்*

செய்து, மீட்டி என்று பொருள் கொள்வது நலம். மூர்ச்சனா-ஸ்வரங்களின் ஆரோஹண, அவரோஹண நிலை.

क्रमात् स्वराणां सप्तानामारोहश्चावरोहणम् ।

सा मूर्च्छेत्युच्यते ग्रामस्था एताः सप्तसप्त च ॥

என்பதைக் காண்க.

"स्वराणां स्थापनाः सान्ताः मूर्च्छनाः सप्तसप्त हि" इति संगीतरत्नाकरे என்று மேற்கோள் காட்டுவர் மல்லி நாதர். स्वयमपिकृताम् தானே பாடிய 'மூர்ச்சனை'யை ஏக்கத்தினால் அடிக்கடி மறப்பாள்.

शेषान्मासान्विरहदिवसस्थापितस्यावधेर्वा

विन्यस्यन्ती भुवि गणनया देहलीदत्तपुष्पैः ।

संभोगं वा हृदयनिहितारम्भमास्वादयन्ती

प्रायेणैते रमणविरहेष्वङ्गनानां विनोदाः ॥ २१ ॥

பதவுரை: — विरह-दिवस-स्थापितस्य - பிரிவின் நாளில் ஏற்படுத்தப்பட்ட, अवधेः - எல்லையின், शेषान् - எஞ்சியுள்ள, मासान् - மாதங்களை, देहली दत्त-पुष्पैः - வாயிற் படியில் வைக்கப்பட்ட புஷ்பங்களால், गणनया - எண்ணுதற்காக, भुवि - தரையில், विन्यस्यन्ती वा - (புஷ்பங்களை) வைத்துக் கொண்டிருப்பவளாகவோ, हृदय-निहित-आरम्भम् - மனத்தில் (கற்பனையில்) வைத்துள்ள செயல்களையுடைய, सम्भोगम्-(என்னுடன்) கலவியை, आस्वादयन्ती वा - அனுபவித்துக் கொண்டிருப்பவளாகவோ, ते आलोके पुरा निपतति- உனது பார்வையில் அவள் புலப்படுவாள். प्रायेण - பெரும்பாலும், अङ्गनानाम् - உத்தம

மகளிர்க்கு, रमणविरहेषु - கணவரது பிரிவுக் காலங்களில், एते - இவைகள், विनोदाः - பொழுது போக்கும் வழிக ளாகும்.

கருத்துரை: — மேகமே, என் காதலி என்னுடைய பிரி விற்காக முதலில் குறிக்கப்பட்டுள்ள காலத்தின் முடிவிற்கு, எஞ்சியுள்ள மாதங்களை கணக்கிடுதற்காக வாயிற்படியில் பூஜைக்காக வைக்கப்பட்டுள்ள புஷ்பங்களை எடுத்துத் தரையில் வைத்து ஒரு மாதம், இரண்டு மாதங்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பாள். அல்லது என்னுடன் இன்பம் அனுபவிப்ப தாக நினைத்து அதற்கான செயல்களை மனத்தில் கொண்டு கற்பனைக் கலவி இன்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பாள். இவ்விரண்டில் ஏதாவது ஒரு நிலையில் இருக்குமவளைக் காண லாம். ஏனெனில் பெரும்பாலும் பெண்களுக்குக் கணவர்களை விட்டுப்பிரிந்திருக்கும் காலத்தில் துயரத்தை மறக்க இம் மாதிரிச்செயல்களே பொழுது போக்காக அமைகின்றன. ஸ்வபாவோக்தி அணி.

விளக்கவுரை: — अवधि - எல்லை, முடிவு - அதன் பகுதியாக எஞ்சியுள்ள (शेषान्) மாதங்களைக் கணக்கிடு வாள் யக்ஷபத்னி.

देहली - வாசற்படியின் அடியிலுள்ள மரம். வாசற் படிக்கு மஞ்சள் பூசி, குங்குமமிட்டு பூவை வைத்து பூஜை செய்யும் வழக்கம் தமிழ் நாட்டிலும் சிலரிடை உண்டு. அம்மரத்தில் வைத்த புஷ்பங்களை பூஜை முடித்த பின் எடுத்துத் தரையில் வைத்து மாதங்களை ஒன்று, இரண்டு என்று கணக்கிட்டு வைப்பாள். இது ஒரு பொழுது போக்கிற்காகச் செய்யப்படும் காரியம். பூவின் உதவியின்றிக் கணக்கிடத் தெரியாதென்ப தில்லை.

आरम्भ என்பதற்குக் தொடக்கம் என்ற பொருள் இருப்பினும் இங்கு ஆரம்பிக்கப்பட்ட செயலைக் குறிக்கும். கணவனுடன் இன்பம் துய்த்த காலத்தில் அவன் செய்த செயல்களைத் தற்போது கற்பனை செய்து மனத்தில் வருவித்து, நிறுத்திக் கலவி நுகர்வது போல் கற்பனை செய்து கொண்டு இன்ப நிலையிலும் அவள் இருக்கலாம். மூன்று ச்லோகங்களில் குறிப் பிட்ட செயல்களும் இவை போன்ற பிறவும் கணவனைப் பிரிந்து ஏக்கம் கொண்ட மகளிர்க்குப் பொழுது போக்கும் வழிகள்.

देहली - दत्त - देहली - मुक्त - என்பது பாடபேதம். பொருள் ஒன்றுதான்.

सव्यापारामहनि न तथा पीडयेद्विप्रयोगः
शङ्के रात्रौ गुरुतरशुचं निर्विनोदां सखीं ते ।
मत्संदेशैः सुखयितुमलं पश्य साध्वीं निशीथे
तामुन्निद्रामवनिशयनां सौधवातायनस्थः ॥ २२ ॥

பதவுரை:—(सखे) - நண்பனே, अहनि - பகற்பொழுதில், सव्यापाराम् - (முன் கூறிய பூஜை முதலிய) செயல்களையுடைய, ते-सखीम् - உன் தோழியை (என் மனைவியை), विप्रयोगः - பிரிவு, (रात्रौ यथा - இரவில் எந்த வகையில் வருத்துமோ), तथा - அந்த வகையில், न पीडयेत् - துன்புறுத்தாது. रात्रौ - இரவில், निर्विनोदाम् - பொழுது போக்கிற்கான செயலற்ற, ते सखीम् - உன் தோழியை, गुरुतरशुचम् - தாங்கொணாத வருத்தமுடையவளாக, शङ्के - நான் நினைக்கிறேன். निशीथे - இரவில், उन्निद्राम् - தூக்கமற்றவளும், अवनि-शयनाम् - தரையில்

படுத்திருப்பவளுமான, ताम् साध्वीम् - அப்பதிவ்ரதையை, मत्सन्देशैः - என் செய்திகளால், अलम् - நன்கு, सुखयितुम् - மகிழ்விப்பதற்காக, सौधवातायनस्थः सन् - மாளிகையின் ஜன்னலில் அமர்ந்தவனாக இருந்து கொண்டு, पश्य - (அவளைப்) பார்.

கருத்துரை: — நண்பனே, பகல் பொழுது பூஜை முதலான பல வேலைகளில் ஈடுபட்டுள்ள உன் தோழியை (யக்ஷியை) என் பிரிவு, (இரவு, துன்புறுத்தும் அளவு) துன் புறுத்தாது. பொழுது போக்கும் செயலற்ற இரவில் அவள் தாங்கொணாத துயருடையவளாக இருப்பாள் என நான் ஊஹிக்கிறேன். ஆதலால் நள்ளிரவில் தூக்கமின்றித் தரையில் படுத்திருப்பாள் அப்பதிவ்ரதை. நான் கூறும் செய்திகளைக்கூறி அவளை நன்கு மகிழ்விக்க இதுவே தக்க தருணமாதலால் நீ மாளிகையின் சாளரத்தில் அமர்ந்து அவளைக் காண்பாயாக. அகாலத்தில் அதுவும் நள்ளிரவில் ஒரு ஸ்த்ரீயைக் காண்பது தகுமோ எனக்கருத வேண்டாம். அவள் பதிவ்ரதை. எப்பொழுதும் அவளைக்காணலாம். காண்பதற்கான காரணம் பதிவ்ரதை என்பதைத் கூறிப்பார்க்கச் சொன்னதால் காவ்யலிங்கம் என்ற அணி உளது.

விளக்கவுரை: — ते सखी - உனது தோழி; யக்ஷன் மேகத்தை தன் நண்பனாகக் கருதியதால் தன் மனைவியை அவனது நட்பினளாக கூறினான்.

साध्वी - பதிவ்ரதை. பதிவ்ரதைகள் கணவரில்லாத பொழுது தரையில்தான் படுத்திருப்பர் என ராமாயணம் கூறுவதைக் காண்க.

अनन्यदैवत्वमियं क्षमा च भूमौ च शय्या नियमश्च धर्मे। पतिव्रतात्वं [रा. सु-स-28 श्लो-12]

सुखयितुमतः - अतः ஆதலால் என்று ஸாஹித்ய அகடமிப் பதிப்பில் பாடம் உள்ளது.

आधिक्षामां विरहशयने संनिषण्णैकपार्श्वां
प्राचीमूले तनुमिव कलामात्रशेषां हिमांशोः ।
नीता रात्रिः क्षण इव मया सार्धमिच्छारतैर्या
तामेवोष्णैर्विरहमहतीमश्रुभिर्यापयन्तीम् ॥ २३ ॥

பதவுரை: — आधिक्षामाम् - மனக்கவலையால் இளைத்திருப்பவளும், विरह-शयने - பிரிவு காலத்திற்கு ஏற்ற படுக்கையில், संनिषण्ण-एक-पार्श्वाम् - சரீரத்தின் ஒரு புறத்தில் (வலது புறத்திலோ இடது புறத்திலோ) படுத்திருப்பவளும், प्राचीमूले - கீழ்த்திசையின் அடியில் (அடிவானத்தில்), कला-मात्र-शेषाम् - ஒரு கலையை மாத்திரமே எஞ்சியதாக உடைய, हिमांशोः - சந்திரனின், तनुम् इव - வடிவம் போல், (स्थिताम् - இருப்பவளும்), या रात्रिः-எந்த இரவு, मया सार्धम् - என்னுடன் கூட, इच्छा रतैः - விரும்பிய கேளிக்கைகளால், क्षण इव - ஒரு நொடிப் பொழுது போல், नीता - போக்கப்பட்டதோ, विरह-महतीम् - பிரிவினால் நெடிதான, (ताम्-एव) - (அதே இரவை), उष्णैः - சூடான, अश्रुभिः - கண்ணீரால், यापयन्तीम् - போக்கிக் கொண்டிருப்பவளுமான, ताम्- அவளை, पश्य-நீ காண்பாயாக.

கருத்துரை: — மேகமே, பிரிவு காரணமாக ஏற்பட்ட மனக்கவலையால் அவள் இளைத்து இருப்பாள். விரஹ காலத்தில் படுப்பதற்காக உடலுக்கு சுகமளிக்காத படுக்கையில் தனது உடலின் ஒரு புறத்தை வைத்துப் படுத்திருப்பாள். (ஒருக்களித்துப் படுத்திருப்பாள் என்ற படி). கிருஷ்ணபக்ஷ சதுர்தசி இரவில் கீழ்த்திசையின் அடிவானத்தில் தோன்றும் ஒரு கலையையே உடைய சந்திரனுடைய மெலிந்த வடிவம் போல் இருப்பாள். என்னுடன், விரும்பிய பலவித கேளிக்கைகளால் இரவு முழுவதையும் ஒரு நொடிப்பொழுது போல்

போக்கிய அவள், நான் இல்லாத இக்காலத்தில் அதே அள வுள்ள இரவை-மிக நெடியதாகத் தோன்றும் இரவை-உஷ்ண மான கண்ணீரைப் பெருக்கி மெல்ல மெல்ல நகர்த்திக் கொண்டிருப்பாள்-போக்கிக் கொண்டிருப்பாள். அத்தகைய என் மனைவியை நீ பார். உவமையணி.

விளக்கவுரை: — आधि: - மனத்திலுள்ள நோவு; கவலை, வருத்தம் ஏக்கம் முதலியன. உடல் நலமின் மையை व्याधि என்றும், துன்புற்ற மனநிலையை आधि என்றும் கூறுவர். विरह-शयन - பிரிவுற்ற காலத்தில் சுகம் தரும் சயனத்தை உபயோகிப்பதில்லை. இக் காலத்திற்கேற்றவாறு சாதாரண படுக்கையையே உபயோகிப்பர்.

सन्निषण्णैक-पार्श्वाम् - உடலின் ஒரு புறத்திலே-வலது புறத்திலோ, இடது புறத்திலோ - சரீரம் முழுவதும் இருக்கும்படி இருத்தல்-ஒருக்களித்துப் படுத்தல்; அவ் வாறு படுத்திருப்பாள் யக்ஷி. பெண்கள் ஒருக்களித்து தான் படுக்க வேண்டும் என்பது பொதுவான கருத்து.

प्राची-मूले - கீழ்த்திசையின் அடியில் - அடிப்பகுதி யில், அடிப்பகுதி என்பது கீழ்த்திசையின் அடியானத் தை; கீழ்த்திசையின் அடிவானத்தில் க்ருஷ்ண பக்ஷ சதுர்தசியன்று காலையில் சந்திரனின் ஒரு கலை தெளி வாகத் தெரியும் என்பதால் मूले - என்றார். சயனத்தில் ஒரு புறத்தில் சயனித்திருக்கும் அம்மெல்லியவளுக்குப் பொருத்தமான உபமானமாக க்ருஷ்ண பக்ஷ இரவில் சதுர்தசியிலுள்ள சந்திர கலையைக் கூறினார். கற்பனை மிகுந்தவர்கள் கலையை ஒரு பெண்ணாக பாவிப்பது எளிது. க்ஷீணிக்கும் சந்திரனை உவமையாகக் கூறினாரே என்று குறை கூறுதல் தகாது. படுத்திருக்கும் நிலைக்கு

மாத்திரமே அடிவானத்தில் இருக்கும் சந்திரன் இங்கு உவமையேயன்றி மற்றவற்றில் இல்லை.

உவமை கூறும் போது கூறப்படும் இரண்டு பொருள்களும் எல்லா அம்சங்களிலும் ஒப்புமை பெற்றிருக்கா. சில அம்சங்களில் ஒப்புமையும் சில அம்சங்களில் வேற்றுமைப்பட்டும் தான் இருக்கும். ஒப்புமையுள்ள அம்சத்தை மாத்திரமே உவமைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். கண்ணுக்கு மகிழ்ச்சி தருதல் என்ற அம்சத்தில் ஒப்புமை இருத்தல் கருதியே ஒரு அழகிய பெண்ணின் முகத்திற்குச் சந்திரன் உவமையாகின்றான். சந்திரன் போல முகம் வட்ட வடிவமாகவும் வெண்ணிறமாகவும் ஒளி தருவதாகவும் இருப்பதில்லையே. ஸர்வஸாரூப்யம் — எல்லா அம்சத்திலும் ஒத்திருத்தல் தேவையில்லை. இயலவும் இயலாது என்பர் பாமஹர் என்ற ஆலங்காரிகர். அவர் ச்லோகங்கள்: —

सर्वं सर्वेण सारूप्यं नास्ति भावस्य कस्यचित् ।
यथोपपत्ति कृतिभिः उपमा सुप्रयुज्यते ।।
अखण्डमण्डलः क्वेन्दुः क्व कान्ताननमद्युति ।
यत्किञ्चित् कान्तिसामान्यात् शशिनैवोपमीयते ।।

பாமஹாலங்காரம். II. 43-44 பக்கம் 44

இதன் பொருள்:-"ஒரு பொருளுக்குப் பிறிதொரு பொருளுடன் எல்லா ஒப்புமையும் இருப்பதில்லை. ஏதோவொரு வகையைக் கொண்டு உவமை கூறப்படுகின்றது. பரிபூர்ண மண்டலமுடைய சந்திரன்

எங்கே? ஒளியில்லாத காதலியின் முகம் எங்கே? ஆயினும் ஏதோ ஒருவகையில் சிறிது ஒளியிருப்பதைக் கொண்டு முகம் சந்திரனுடன் உவமிக்கப்படுகிறது.

न सर्वसारूप्यमिति विस्तरेणोदितो विधिः ।

II-60 என பாமஹரே மறுபடியும் கூறியுள்ளார்.

வால்மீகி ஸீதைக்கு சுக்ல பக்ஷ தொடக்கத்தில் மேற்கில் தோன்றும் ஒரு சந்திர கலையை உவமையாகக் கூறினார்.

मलिनसंवीतां उपवासकृशाम् .... ।
ददर्श शुक्लपक्षादौ चन्द्रलेखामिवामलाम्

(रा. सु. स. 15, श्लो. 19)

இங்கும் ஸீதைக்கு சந்திர கலையுடன் ஸர்வஸாரூப்யம் இல்லை. சுக்ல பக்ஷத்திலுள்ள முதற்கலை கண்ணுக்குப் புலப்படாது என வால்மீகியிடம் குறைகாண இயலாது. हिमांशोः तनुः - 'ஒரு கலையையே உடைய சந்திரன் வடிவம் போல்' என்பது உபமானம்.

या रात्रिः-या - எந்த; 'எந்த அளவுள்ள' என்பது பொருள். சென்ற இரவு திரும்பவும் வராதாகையால் या - என்பது இரவின் அளவையும் குறித்தது. என்னுடன் கேளிக்கையினால் முப்பது நாழியுள்ள இரவு நொடிப் பொழுதுபோல் சென்றது. ஆனால் அதே முப்பது நாழியுள்ள இரவு பிரிவினால் நெடிதாகிவிட்டது.

उष्णैः अश्रुभिः - சோகத்தினால் கண்ணீர் சூடாக இருக்கின்றது. முன் ச்லோகத்திலுள்ள पश्य என்ற வினைச் சொல்லை வருவித்து வாக்யத்தை முடிக்க

வேண்டும். அடுத்து வரும் இரண்டு ச்லோகங்களுக்கும் पश्य என்பதே வினைமுற்று ஆகும். सव्यापाराम् (சு. 22) என்பதற்கும் आधिक्षामाम् (சு. 23) என்பதற்கும் இடையில் இரண்டு ச்லோகங்கள் செருகல்களாக உள்ளன. அவை :

(अ)

स्निग्धाः सख्यः कथमपि दिवा तां न मोक्ष्यन्ति तन्वी-
मेकप्रख्या भवति हि जगत्यङ्गनानां प्रवृत्तिः ।
स त्वं रात्रौ जलद शयनासन्नवातायनस्थः
कान्तां सुप्ते सति परिजने वीतनिद्रामुपेयाः ॥

(आ)

अन्वेष्टव्यामवनिशयने सन्निकीर्णैकपार्श्वाम्
तत्पर्यङ्क(न्त)प्रगलितल(न)वैश्छिन्नहारैरिवास्रैः ।
भूयो भूयः कठिनविषमां सारयन्तीं कपोला-
दामोक्तव्यामयमितनखेनैकवेणीं करेण ॥

இவ்விரண்டு ச்லோகங்களுக்கும் உரைகாரர்கள் உரை எழுதவில்லை. முதல் ச்லோகம் सव्यापारां என்பதில் உள்ள கருத்தையே கூறுவது. இரண்டாவது ச்லோகம், आधिक्षामाम्, आद्ये बद्धा என்பவற்றில் கூறப்பட்ட கருத்தையே கூறுகின்றது.

पादानिन्दोरमृतशिशिराञ्जालमार्गप्रविष्टान्
पूर्वप्रीत्या गतमभिमुखं संनिवृत्तं तथैव ।

चक्षुः खेदात्सलिलगुरुभिः पक्ष्मभिश्छादयन्तीं
साभ्रेऽह्नीव स्थलकमलिनीं नप्रबुद्धां नसुप्ताम् ॥२४॥

பதவுரை: — जालमार्गप्रविष्टान् - ஜன்னல் வழியே (மாளிகையினுள்) புகுந்த, अमृत-शिशिरान् - அமிருதத்தால் குளிர்ச்சியான, इन्दोः पादान् - சந்திரனின் கிரணங்களை, अभिमुखम् - நோக்கி, पूर्व-प्रीत्या - முன்பிருந்த விருப்பத்தினால், गतम् - சென்றதும், तथैव - அவ்வாறே, सन्निवृत्तम् - (விரஹ வேதனை காரணமாக சந்திர கிரணங்களினின்றும்) திருப்பியதுமான, चक्षुः - (தனது) கண்களை, खेदात् - வருத்தம் காரணமாக வந்த. सलिल-गुरुभिः - கண்ணீரால் கனத்துள்ள, पक्ष्मभिः - இமைகளால், छादयन्तीम् - மறைப்பவளும், साभ्रे - மேகமுடைய, अह्नि - பகல் பொழுதில், नप्रबुद्धाम् - மலராததும், नसुप्ताम् - குவியாததுமான, स्थलकमलिनीम् इव - நிலத்தாமரை போல், (स्थिताम्) - இருப்பவளுமான, (ताम्) - அவளை पश्य - நீ காண்பாயாக.

கருத்துரை: — மேகமே, ஜன்னல் வழியே சந்திரனின் கிரணங்கள் வீட்டினுள் புகும். நான் அவளுடன் இருந்த காலத்தில் அவை அவளுக்கு மகிழ்ச்சியளித்தன. எனவே, பழைய பழக்கத்தினால், ப்ரீதியினால் அவைகளை அனுபவிக்கக் கண்களை அவற்றை நோக்கிச் செலுத்துவாள். ஆனால் நான் இல்லாததால் அவை மகிழ்ச்சி தரா. எனவே, கண்கள் எப்படி துரிதமாகச் சென்றனவோ அதே வேகமாக அவை திரும்பி விடும். மேலும் துக்கம் காரணமாக மேன்மேலும் பெருகி வரும் கண்ணீரைத் தாங்குவதால் கண்ணிமைகள் கனத்திருக்கும். எனவே, சந்திரனின் ஒளியைப் பார்க்க வேண்டாம் என அத்தகைய இமைகளால் கண்களை மூடமுயல்வாள். கண்ணீர் முட்டி இருப்பதால் நன்கு மூடவும் முடியாது. ஆதலால்

கண்கள் பாதி திறந்தும், பாதி மூடியும் இருக்கும். மேகம் மூடியுள்ள பகற்பொழுதில் தரைத்தாமரை என்பது ஸூர்யன் ஒளி நன்கு படாததால் பாதி மலர்ந்தும், பாதி மூடியும் இருக்கும். பாதி மூடியும், பாதி திறந்துமுள்ள கண்களையுடைய அவள் அத்தகைய நிலத்தாமரை மலரை ஒத்த கண்ணுடைய வளாக இருப்பாள். அவளை நீ காண்பாயாக. உவமை அணி.

விளக்கவுரை: — अमृतशिशिर - சந்திர கிரணங்களில் அம்ருதம் உள்ளதால் அவை குளிர்ந்திருக்கின்றன என்பர். पूर्वप्रीति - முன்பிருந்த ப்ரீதி-ஆசை; முன்பு மகிழ்ச்சி தந்ததால் இப்போதும் மகிழ்ச்சி தரும் என எண்ணி கல்லுக்குச் சென்றது. गतम् सन्निवृत्तम् என்ற இரண்டும் चक्षुः என்பதற்கு விசேஷணம்; சென்றதும் கண்ணுக்கு தான். எப்படிச் சென்றதோ அப்படியே வேகமாகத் திரும்பியதும் அதுவே.

स्थलकमलिनी - இது ஒரு வகைப்பூ என்று மாத்திரம் தெரிகிறது. स्थल என்ற சொல்லோடு சேர்ந்த தாமரையைக் குறிக்கும். अरविन्दम् முதலிய எல்லாப் பதங்களுமே இதனைக் குறிக்கும் என்பர். தாமரையை ஒத்திருந்து தரையில் வளர்வதால் இதனை ஸ்தல [தரை] கமலம் என்றழைத்தனர் போலும். பல்லடர் என்ற காஷ்மீர கவி [803-903] பல்லட சதகம் என்ற தமது நூலில் (சு. 28) தாமரையினின்றும் இதை வேறுபடுத்திக் காட்டியிருக்கிறார். அவர் கூறுவது: — "ஸ்தல கமலமே! நீ தாமரை போல் சேற்றில் பிறக்கவில்லை. தாமரை போல் உனக்கு ஜலஸஹவாஸமும் (ஜட ஜனங்களின் ஸஹவாஸம்) இல்லை. (ल என்ற எழுத்திற்குப் பதிலாக ஸந்தர்ப்பத்திற்கு ஏற்ப ड என்பதை உபயோகிப்பது ஸம்ஸ்க்ருத மரபு. ஜலஸஹ

வாஸம் என்பதை ஜடஸஹவாஸம் என்றும் கூற லாம்.) சிவந்த ரத்னத்தின் நிறத்தை ஒத்த காந்தி (நிறம்) உன் மேனி முழுவதும் வியாபித்திருக்கிறது" என்பதாம். மேலும் அவர் கூறுவார்: "உன்னைப் படைத்த போக்கிரியான பிரம்மதேவன் உனது ஹ்ருதயத்தை (உன் உட்புறத்தை) பலமற்றதாகப் படைக்காதிருப்பாராயின் நீயே மஹாலக்ஷ்மிக்கு வாஸஸ்தானமாக இருந்திருப்பாய்" என்பதாகும். (தாமரையின் நடுவில் கர்ணிகா என்ற உறுதியான காய் இருப்பதால் அது லக்ஷ்மியின் ஸ்தானமாயிற்று என்று கருத்து.) இதனால் ஸ்தல கமலம் தாமரையை ஒத்தது. தரையில் வளர்வது. சிவந்த நிறமுடையது என்று தெரிகிறது.

குமுதம் என்ற சொல்லுக்கு சிவந்தச் தாமரை என்ற பொருளை அகராதிகள் தந்துள்ளன. 'ராஜ நிர்கண்டம்' என்ற நூல் स्थल कुमुद என்ற சொல்லைக் கொடுத்து, அதற்குப் பொருளாக करवीरम् என்ற சொல்லைத் தந்துள்ளது. கரவீரம் என்பது அரளி அல்லது அலரி என்பர் நட்கர்ணி. வெள்ளை அரளி, சிவப்பு அரளி, ஒற்றை இதழ் அரளி, பல இதழ் அரளி என்று பலவகை உள்ளன. வீட்டுத் தோட்டங்களில் பூவின் அழகைக் கருதி இச்செடி பயிரிடப்படுகிறது. ஆனால் இப்பூ தேவ பூஜையில் உபயோகப்படுவதில்லை. பெண்களும் தலையில் சூட்டிக் கொள்வதில்லை. இதில் கஸ்தூரிப் பட்டை என்று ஒருவகை உள்ளது. அதைத் தேவதைகளுக்குச் சுற்றும் மாலையில் தொடுக்கிறார்கள். மாகர், பாரவி பாணபட்டர், பட்டி கவி

முதலிய கவிகள் தரைத் தாமரையைத் தூது காவ்யங்களில் குறிப்பிட்டாலும் இதனை இன்னதென்று அடையாளம் காண முடியவில்லை. ஸ்தல கமலம் என்பதை அரளி எனக்கொள்ளலாம்.

भल्लटश्लोक:—

न पङ्कादुद्भूतिर्नजलसहवासव्यसनिता
वपुर्दिग्धं कान्त्या स्थलनलिन रत्नद्युतिमुषा ।
व्यधास्यद् दुर्वेधा हृदयलघिमानं यदि न ते
त्वमेवैकं लक्ष्म्या: परममभविष्य: पदमिह ॥

[மஹார்ஷிவாசுதேவாசாரியார் பதிப்பு 1898 பக்கம்-17]

பூர்ணஸரஸ்வதி पादाभिन्दगे: என்பதற்கு உரை எழுதவில்லை.

नि:श्वासेनाधरकिसलयक्लेशिना विक्षिपन्तीं
शुद्धस्नानात्परुषमलकं नूनमागण्डलम्बम् ।
मत्संभोग: कथमुपनमेत्स्वप्नजोऽपीति निद्रा-
माकाङ्क्षन्तीं नयनसलिलोत्पीडरुद्धावकाशाम् ॥२५॥

பதவுரை: — शुद्ध-स्नानात् - தூய்மையை மாத்திரம் கருதிச் செய்யப்படும் ஸ்நாநத்தால், परुषम्-வறண்டிருப்பதும், नूनम् - நிச்சயமாக, आगण्डलम्बम् - கன்னம் வரை தொங்கிக் கொண்டிருப்பதுமான, अलकम् - முன்னெற்றிச் சுழல் கற்றைகளை, अधर-किसलय-क्लेशिना - தளிர் போன்ற உதட்டை வருத்துகின்ற, नि:श्वासेन — மூச்சுக் காற்றினால், विक्षिपन्तीम् - அலையும்படி செய்பவளும்,

स्वप्नजः अपि - கனவிலுண்டாவதாயினும், मत्सम्भोगः - என்னுடைய கலவி, कथम् - எவ்வாறேனும், उपनमेत् - வருமோ என எண்ணி, नयन-सलिल-उत्पीड-रुद्धावकाशाम् - கண்ணீர்ப் பெருக்கினால் இடம் தரப்படாத, निद्राम् - தூக்கத்தை, आकाङ्क्षन्तीम् - விரும்புகின்றவளுமான, ताम् - அவளை, पश्य - காண்பாயாக.

கருத்துரை: — மேகமே, என்னைப் பிரிந்துள்ள நிலையில் அவள் எண்ணெய் முதலியன பூசி ஸுகந்தரும் ஸ்நாநம் செய்யாமல் தூய்மை கருதி தண்ணீரில் அமிழ்ந்து எழுந்திருப்பாள். இத்தகைய ஸ்நாநத்தினால் எண்ணெய்ப்பசையிழந்த அவளது அலகங்கள்-முன்னெற்றி குழல்கள் வறண்டு கரடுமுரடாகி கடின ஸ்பர்சமுடையனவாகச் சுருண்டிருக்கும் தன்மையையும் இழந்து நீண்டு நிச்சயம் கன்னங்களில் விழுந்து புரளும். ஏக்கத்தினால் அவள் விடும் உஷ்ணமான மூச்சுக்காற்று இளம் தளிர்போல் ம்ருதுவான ஸ்பர்சமும் செந்நிறமுடைய அவளுடைய உதட்டில் பட்டு அதனை வருத்துவதுடன் கன்னத்தில் படிந்துள்ள அலகங்களையும் அலைக்கும். நேரில் என்னை சந்திக்க இயலவில்லைதான். கனவிலாவது என்னுடைய சந்திப்பும், கலவியும் எவ்வாறேனும் வருமோ எனக்கருதி தூக்கத்தை விரும்புவாள். ஆனால் கண்ணில் பெருகும் நீர் தூக்கத்திற்கும் இடந்தராது. துக்கத்தினால் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பவளும், கண்ணீரால் தூக்கம் தடைபட்டிருப்பவளுமான என் காதலியை நீ காண்பாயாக. ஸ்வபாவோக்தியணி.

விளக்கவுரை:—शुद्ध-स्नान - தைலம் முதலியன உபயோகிக்காமல் சுத்தம் கருதிச் செய்யப்படும் சாதாரண முழுக்கு. இது தொடர்ந்து செய்யப்படின் கூந்தல் எண்ணெய்ப் பசையற்று கடின ஸ்பர்சமுடையதாகும். परुषम् - மிருது தன்மையற்றது, கரடுமுரடானது, தொடும்போது கடின ஸ்பர்சம் தருவது. अलकम्-முன்னெற்றியில் படியும் குழல். இங்கு வந்துள்ள

ஒருமைச் சொல் குழல் எனும் இனத்தைக் குறித்தது. எனவே, குழல்கள்-கேசங்கள் என்று பொருள் கொள்ள வேண்டும். आगण्ड-लम्बम्-गण्ड - கன்னம்; எண்ணெய்ப் பசை இல்லாததாலும், சரியாக பாலிக்கப்படாததாலும் சுருண்ட அக்குழல்கள் நீண்டு கன்னம் வரை தொங்கும். अधर:...विक्षिपन्तीम् - உதட்டை வருத்தும் மூச்சுக் காற்று கன்னங்களில் படிந்துள்ள குழல்களை அலைக்கும்-அசைக்கும்.

स्वप्नज: - சாபம் காரணமாக யக்ஷனை சந்திக்க முடியாது தான். ஆனால் தூக்கத்தில் கனவிலாவது அன்பனுடைய சந்திப்பு எவ்வாறேனும் நேருமோ என ஏங்குகின்றாள். नयनसलिलोत्पीडरुद्ध-अवकाशाम् தூக்கத்திற்கு இடமாகக் கண்களை கூறுவர். யக்ஷன் பணிவியின் கண்களில், கண்ணீர் பெருக்கு இடம் பிடித்துக் கொண்டதால் தூக்கம் இடம் (अवकाश) பெறவில்லை. எனவே, தூக்கமில்லாததால் கனவும் இல்லை. காதலனின் காவியும் இல்லை என்பது கருத்து. 'கண்ணீர்ப் பெருக்கினால் தடுக்கப்பட்ட இடமுடைய'' என்பது பதப்பொருள்.

आद्ये बद्धा विरहदिवसे या शिखा दाम हित्वा
शापस्यान्ते विगलितशुचा तां मयोद्वेष्टनीयाम् ।
स्पर्शक्लिष्टामयमितनखेनासकृत्सारयन्तीं
गण्डाभोगात्कठिनविषमामेकवेणीं करेण ॥ २६ ॥

பதவுரை:—आद्ये - முதலாவதான, विरहदिवसे - பிரிவு நாளில், (शिरो) दाम - (தலையிலணியும்) பூச்சரத்தை, हित्वा - விலக்கி, या - எந்த, शिखा - கூந்தல், बद्धा - (கூரே

பின்னலாக) அமைக்கப்பட்டுள்ளதோ, शापस्य-अन्ते - சாபத்தின் முடிவில், विगलित शुचा - துக்கம் நீங்கிய, मया- என்னால், उद्वेष्टनीयाम् - அவிழ்த்துவிடப்பட வேண்டியதும், स्पर्शक्लिष्टाम् - தொடுவதினாலே வலி தருவதும், कठिनविषमाम् - கடினமாகவும். கரடுமுரடாகவும் இருக்கின்றதுமான, ताम् एकवेणीम् - அந்த ஒற்றைப்பின்னலை, अयमित नखेन - வெட்டப்படாத நகங்களையுடைய, करेण - கையினால், गण्डाभोगात् - அழகிய கன்னத்திலிருந்து, असकृत् - அடிக்கடி, सारयन्तीम् - ஒதுக்கிக் கொண்டிருக்கும், ताम् - அவளை, पश्य - காண்பாயாக.

கருத்துரை: — மேகமே, என் பிரிவு நேர்ந்த அந்த முதல் நாளே அவள் தலையில் மலர் அணிவதை நீக்கி தன் கேசம் முழுவதையும் முறுக்கி ஒரே காலுள்ள பின்னலாக அமைத்திருப்பாள். எண்ணெய் முதலியன பூசப்படாததால் அக் கூந்தல் சிடுக்குற்று கரடுமுரடாக இருக்கும். சிடுக்கை விடுவிப்பதற்காகத் தொட்டால் மயிர்க்கால்களில் வலி ஏற்படும். சாபம் முடிந்து வ்யசனம் நீங்கிய அன்றே நானே வீடு சென்றவுடன் அவளது கூந்தலை அவிழ்த்துக் கோதி அதனை முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும். பிரிந்த காதலர்கள் தம் காதலிக்குச் செய்ய வேண்டிய முதற்கடமை இது. ஆகவே இதனை நானே செய்ய வேண்டும். அவளுடைய விசாலமான அழகிய கன்னங்களில் விழுந்து கிடக்கும் இதனை தன் கைகளால் அவள் அடிக்கடி ஒதுக்கிக் கொண்டிருப்பாள். அவளை நீ காண்பாயாக. ஸ்வபாவோக்தி அணி.

விளக்கவுரை: — आद्ये विरहदिवसे - சாபம் நேர்ந்த அந்த தினத்தில். दाम हित्वा - கணவரைப் பிரிந்துள்ள நிலையில் பெண்கள் அணி செய்து கொள்ளார். மலரிட்டு முடியார். எனவே, மலர்ச்சரம் அணிவதை நீக்கினாள். शिखा - இச்சொல் பெண்களின் கூந்தலையும்

குறிக்கும். बद्धा-'எந்த கூந்தல்-முடிச்சிடப்பட்டதோ என்பது சிலர் உரை. அடுத்து एकवेणी என்று ஒருதலால் முடியாமல் ஒரே சடையாக இருக்கும்படி முறுக்கி அமைக்கப்பட்டது என்று பொருள் கொள்வது நலம். मया उद्वेष्टनीया - 'என்னாலேயே அவிழ்த்துவிடப்பட வேண்டியது'. கணவரைப் பிரிந்த காலத்தில் மனைவியர் தம் கூந்தலை அலங்கரிக்காமல் ஒரே சடையாக வைத்திருப்பர் என்றும், திரும்பி வந்த கணவரே அக் கூந்தலை அழகுறச் செய்ய வேண்டும் என்பதும் மரபு. एक-वेणी - ஒரு பின்னல், இங்கு பின்னல் என்றது ஒரே சடையினால் அமைந்தது. மூன்று கால்களால் அல்ல. आभोग - விசாலமானது; அழகானது என்பது கருத்து. गण्ड - கன்னம் अयमित-नख - வெட்டப்படாத நகங்களை யுடைய கை. பெண்களும் நகங்களை வெட்டி அழகு செய்வது, இன்று போல் அன்றும் உண்டு என்பது கவனிக்கத் தக்கது.

सा सन्न्यस्ताभरणमबला पेशलं धारयन्ती

शय्योत्सङ्गे निहितमसकृद्दुःखदुःखेन गात्रम् ।

त्वामप्यस्रं नवजलमयं मोचयिष्यत्यवश्यं

प्रायः सर्वो भवति करुणावृत्तिरार्द्रान्तरात्मा ॥ २७ ॥

பதவுரை: सन्न्यस्त-आभरणम् - ஆபரணங்கள் நீக்கப் பெற்றதும், असकृत् - அடிக்கடி, दुःखदुःखेन - மிகமிக வருத்தத்துடன், शय्योत्सङ्गे - படுக்கையின் நடுப்பகுதியில், निहितम् - கிடத்தப்பட்டதுமான, पेशलम् गात्रम् - மிருதுவான (தனது) தேஹத்தை, धारयन्ती - தாங்கிக் கொண்டிருக்கும், सा अबला - அவ்விளநங்கை, त्वाम् अपि - உன்னை

யும் கூட, अवश्यम् - நிச்சயமா, नवजलमयम् - புதிய நீர்த்துளி மயமான, अस्रम् - கண்ணீரை, मोचयिष्यति – விடும்படி செய்வாள். प्राय:-பெரும்பாலும், आर्द्रान्तरात्मा - ஈரமுள்ள (கருணையுள்ள) நெஞ்சுடைய, सर्वः - எல்லோரும், करुणा-वृत्तिः - கருணையினால் தோன்றும் செயலுடையவர்களாக, भवति - இருப்பார்கள்.

கருத்துரை: — மேகமே, உடல் பலமற்ற அவள் ஆபரணங்களையும் தாங்க இயலாது அவற்றை நீக்கியிருப்பாள். தன் மிருதுவான தேஹத்தை படுக்கையில் கிடத்தித் தாங்கியிருப்பாள். இத்தகைய வருந்தத்தக்க நிலையிலுள்ள அவள் உன்னையும் கருணையினால் புதிய நீர்த்திவலை எனும் கண்ணீரை உகுக்கச்செய்வாள். உலகில் இளகிய மனமுடைய யாவரும் தாங்கள் கொள்ளும் கருணைக்கேற்ற செயலுடையவராக இருப்பர். அர்த்தாந்தர ந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை:—शय्योत्सङ्गे निहितम् - ஆஸனங்களில் உட்கார்ந்து இருக்க முடியாத நிலையில் படுக்கையில் இருப்பதாகவும், இரவு நேரமாதலால் படுக்கையில் இருப்பதாகவும் கொள்ளலாம். त्वामपि - அவளைக் காண்பவர் யாவரும் அவளிடம் இரக்கம் கொள்வர். நீ அதற்கு விலக்கல்ல. नवजलमयम् - உன்னிடமுள்ள புதிய நீர்த்திவலைகளே நீ உகுக்கும் கண்ணீராகும்.

आर्द्र-अन्तरात्मा-ஈரமுள்ள நெஞ்சமுடையவர், ம்ருதுவான மனமுடையவர் என்பர் மல்லிநாதர். மேகமும் நீருடையதால் உள்ளே ஈரமுடையது. करुणा-वृत्ति-वृत्तिः- செயல், கருணைக்குரிய செயல். ஈரமுடைய மனமுடையவர் கருணை கொண்டு அதற்கேற்ற செயலையும் உடையவராவர். மேகம் கருணையால் கண்ணீர் உகுக்கும் என்பது அதன் முதல் கருணைச் செயலாகும்.

ம்ருதுவான மனமுடையவன் எளிதிலேயே இரக்கம் கொள்வான் என்பது ச்லோகத்தின் நான்காவது அடிக்கு மல்லிநாதர் கூறும் பொருள்.

जाने सख्यास्तव मयि मनः संभृतस्नेहमस्मा-

दित्थंभूतां प्रथमविरहे तामहं तर्कयामि ।

वाचालं मां न खलु सुभगंमन्यभावः करोति

प्रत्यक्षं ते निखिलमचिराद्भ्रातरुक्तं मया यत्॥२८॥

பதவுரை: — (मेघ) - மேகமே, तव-सख्याः - உனது தோழியின் (யக்ஷியின்), मनः - மனத்தை, मयि - என்னிடம், सम्भृतस्नेहम् - குவிக்கப்பட்ட அன்புடையதாக, जाने - நான் (நன்கு) அறிவேன். अस्मात् (एव) - இக்காரணத்தாலேயே, प्रथमविरहे - இம்முதற்பிரிவில், ताम् - அவளை, इत्थम्भूताम् - இவ்வாறு, (நான் இதுவரை கூறியவாறு) இருப்பவளாக, अहम् - நான், तर्कयामि - ஊஹிக்கின்றேன். सुभगम्-मन्यभावः - ஒரு அழகியால் மிக விரும்பப்பட்டவன் என்ற எண்ணம், (அதனால் வரும் தற்பெருமை) माम - என்னை, वाचालम्-பல பேசுபவனாக, न करोति-खलु - செய்யவில்லை, भ्रातः - (என்) ஸஹோதரனே, मया - என்னால், यत् उक्तम् - எது கூறப்பட்டதோ (तत्) निखिलम् - அது முழுவதும், अचिरात् சீக்கிரமே, ते - உனக்கு, प्रत्यक्षम् - நேரில் காணப்படுவதாக, (भवि-ष्यति) - ஆகும்.

கருத்துரை: — நண்பனே, உனது தோழியின் மனம், என்னிடம் அவள் கொண்டுள்ள மிகுதியான அன்பினால் நிறைந்திருக்கிறது. அன்பு குவிக்கப்பெற்றுள்ளது அவள் மனம் என்பதை என் அனுபவத்தால் உறுதியாக உணர்ந்துள்ளேன்.

அதனால் தான் இம்முதற்பிரிவில் நான் இதுவரை கூறியுள்ள நிலையிலே அவள் இருப்பாள் என்பதையும் ஊஹிக்கின்றேன். அவள் என்னிடம் கொண்ட அன்பு காரணமாக நான் பல கூறினேன். உலகில் சிறந்த ஒரு அழகியின் அளப்பரிய பெறுதற்கரிய காதலை பெறும் பாக்யத்தைப் பெற்றுள்ளேன் என்ற இறுமாப்பு என்னை இவ்வாறு பல பேசப்படிச்செய்த தாக எண்ணாதே. நான் கூறிய யாவற்றையும் வெகு சீக்ரத்திலேயே நீ நேரிலே காணப்பெறுவாய். நான் சொன்னது எதுவும் அதிசயோக்தியில்லை. காவ்ய அனுமான அலங்காரம்.

விளக்கவுரை: — सम्भृतम् - சேமிக்கப் பட்டது; நிறைந்தது; प्रथमविरह - முதன் முதலாக ஏற்பட்ட பிரிவாதலால், துயரம் தாங்கொணாததாக இருக்கும். सुभग: - ஒரு அழகிய பெண்ணின் அன்பெனும் பேறு பெற்றவன். இந்நிலையை 'சௌபாக்யம்' என்பர். கணவனது அன்பைப் பெறும் பெண்ணை சௌபாக்யவதி என்ற சொல்லால் குறிப்பர். सुभगंमन्य: - பெற முடியாத ஒரு பெண்ணின் காதலைப் பெற்றவன், என்று நினைப்பவன்; அது காரணமாக வரும் எண்ணம்; सुभगंमन्यभाव: — இறுமாப்பு; தற்பெருமை; वाचाल:- அதிகம் பேசுபவன். நான் அழகியின் அன்பைப் பெற்றவன் என்ற நினைப்பில் இவ்வாறு பேசவில்லை எனத்தன் அடக்கத்தைத் தெரிவிக்கின்றான் யக்ஷன். தன்வீ ச்யாமா (சு 16) என்ற சுலோகத்தில் அளவுக்கு மீறித் தன் காதலியின் உடலழகைப் புகழ்ந்தானே என்ற குறைபாட்டிற்கும் இந்த சுலோகத்தில் கடைசி இரண்டு வரிகளில் கூறிய கருத்தே சமாதானமாக அமையும்.

रुद्धापाङ्गप्रसरमलकैरञ्जनस्नेहशून्यं
प्रत्यादेशादपि च मधुनो विस्मृतभ्रूविलासम् ।
त्वय्यासन्ने नयनमुपरिस्पन्दि शङ्के मृगाक्ष्याः
मीनक्षोभाच्चलकुवलयश्रीतुलामेष्यतीति ॥ २९ ॥

பதவுரை:—अलकैः - *அலகங்களால்,* रुद्ध-अपाङ्गप्रसरम् - *கடைக்கண் நோக்கு தடுக்கப்பெற்றதும்,* अञ्जन-स्नेह-शून्यम् - *மையினால் வரும் பளபளப்பற்றதும்,* अपि च - *மேலும்,* मधुनः - *மதுவை (மதுபானத்தை),* प्रत्यादेशात् - *நீக்கியதால்,* विस्मृत-भ्रू विलासम् - *காதல் உணர்ச்சியைக் காட்டும் புருவத்தின் அழகிய செயல்களை மறந்ததும்,* त्वयि - *(என் நற்செய்தி கொண்டு செல்கின்ற) நீ,* आसन्ने - *(அவளருகில்) இருக்கும் போது,* उपरि-स्पन्दि - *(கண்ணின்) மேற்பகுதியில் துடிக்கின்றதுமான,* मृगाक्ष्याः - *மான் விழியாளின் (யக்ஷியின்),* नयनम् -*(இடது) கண்,* मीनक्षोभात् - *மீனுடைய சலனத்தால்,* चल-कुवलय-श्री-तुलाम् - *அசைகின்ற குவளை மலரழகின் ஒப்புமையை,* एष्यति - *அடையும்,* इति - *என,* शङ्के - *நினைக்கிறேன்.*

கருத்துரை: — நண்பனே, அலகங்கள் முன்னெற்றியிலும் கன்னங்களிலும் படிந்து அவளுடைய கடைக்கண் நோக்கைத் தடுத்திருக்கும். (கண்களின் ஓரத்தினால் பார்க்க இயலாது). மையிட்டு எழுதாமையால் கண்களின் பளபளப்பும் இராது. மதுபானத்தை நீக்கியதால் காதலுணர்ச்சியைக் காட்டவல்ல புருவத்தின் அழகிய செயலும் இராது. இவை எல்லாம் இல்லாவிடினும் நற்செய்தி கொண்டு செல்கின்ற நீ அவளருகில் இருக்கும் போது அவளது இடது கண்ணின் மேற்பகுதி துடிக்கும். இது ஒரு நல்ல நிமித்தமாகும். தண்ணீருக்குள் மீன் துள்ளி ஓடும் போது கருநெய்தல் தண்டினை அசைத்து அம்

மலரையும் அசைக்கும். அவ்வாறுஅசைகின்ற அம்மலரின் அழகிற்கு ஒத்த அழகை, துடிக்கும் அவளது கண் பெறும். இதனையும் நீ காண்பாய். உவமை அணி.

விளக்கவுரை: — अपाङ्गप्रसर - கடைக்கண் நோக்கு, மையிட்டெழுதிய அழகிய கண், மதுபானத்தால் சுழன்று வரும் விழி, புருவ நெறிப்பு இவை உள்ளத்திலுள்ள காதலைக் காட்டும்; ஆனால் இவை அவளிடம் தற்போது இரா. स्नेह - நெய்ப்பு; பசை, ஒளி; मृगाक्षी - மான்விழி போன்ற விழியுடையவள். त्वयि आसन्ने - நற்செய்தி வருதலைக் காட்டும் துடிப்பு, நீ அணுகியவுடன் தோன்றும். उपरि स्पन्दि - பெண்களுக்கு இடது கண்ணின் மேற்பகுதி துடிப்பின் அது அன்பரது வரவைக் காட்டும் என்று நிமித்த நிதானம் என்ற நூல் கூறுகின்றது. "इष्टप्राप्तिं दृशोरूर्ध्वम्" என்பதைக் காண்க. वामभागस्तु नारीणाम् என்பது பெண்களுக்கு இடது புறம் துடிப்பே நல்ல நிமித்தம் எனக் கூறுகின்றது.

कुवलय - நீலோத்பலம்; கரு நெய்தல்; मीनक्षोभात् - காற்றடித்து அசைந்தால் பல புஷ்பங்கள் அசையலாம். இங்கு (இடது) கண் ஒன்றே அசைவதால் அதற்கு ஒரு மீனின் சலனத்தைக் காரணமாகக் காட்டி ஒரு மலர் அசைவதை உபமானமாகக் கூறினார். துடிக்கும் கண் நீலோத்பலத்தை ஒத்து இருக்கும் என்பது கருத்து. இதற்கு ஒத்த கருத்து வால்மீகி ராமாயணத்தில் உள்ளது.

प्रास्पन्दतैकं नयनं सुकेश्याः मीनाहतं
पद्ममिवाभिताम्रम् । सु. स. १९, श्लो. २.

रुद्धापाङ्गप्रसरम् 'தடுக்கப்பட்ட கடைக்கண் ஸஞ்சாரமுடையதும்' என்பதும் विस्मृतभ्रूविलासम् - "மறக்கப்பட்ட புருவத்தின் அழகிய செயல்களையுடையதும்" என்பதும் பதப்பொருள்.

वामश्चास्याः कररुहपदैर्मुच्यमानो मदीयै-
र्मुक्ताजालं चिरपरिचितं त्याजितो दैवगत्या ।
संभोगान्ते मम समुचितो हस्तसंवाहनानां
यास्यत्यूरुः सरसकदलीस्तम्भगौरश्चलत्वम् ॥ ३० ॥

பதவுரை:—मदीयैः - என்னுடைய, कररुह-पदैः - நகக் குறிகளாலே, मुच्यमानः - விடுபட்டிருப்பதும், चिर-परिचितम् - நெடுநாள் அணிந்து பழகிய, मुक्ता-जालम् - முத்து ஜாலம் என்ற அணியை, दैवगत्या - துரத்ருஷ்ட வசமாக, त्याजितः - (அணியப்படாமல்) விடப்பெற்றதும், सम्भोगान्ते - கலவியின் முடிவில், मम - என்னுடைய, हस्त-संवाहनानाम् - கைகளால் பிடித்து விடுதல் என்ற செயலுக்கு, समुचितः - பழகியதும், सरस कदली-स्तम्भगौरः - நன்கு அமைந்த வாழையின் அடிப்பகுதி போல் வெண்ணிறமுடையதுமான, अस्याः वामः ऊरुः च அவளது இடது தொடையும், चलत्वम् - துடிப்பை, यास्यति - அடையும்.

கருதுரை: — மேகமே, நீ நற்செய்தி கூற அவளருகில் செல்லும் போது அவளுக்கு மற்றும் ஒரு நன்னிமித்தம் தோன்றும். அவளுடைய இடது தொடை துடிக்கும். அத்தொடையின் தன்மையைக் கூறுவேன் கேள். கலவிக்காலத்தில் உடலில் பல இடங்களில் நகக்குறிகள் ஏற்படுவது வழக்கம். அவளது தொடையில் நான் உண்டாக்கிய நகக்குறிகள் முன்பு தோன்றி இருந்தன. ஆனால் தற்போது தொடை நகக்குறியற்றிருக்கும். முன்பு அவள் இடையில் அணிந்திடும் முக்தா

ஜாலம் (முத்துப்பதக்கம்) என்ற அணி அவள் தொடையில் படிந்திருக்கும். முத்தின் குளிர்ந்த ஸ்பர்சம் அவளுக்கு இதமாக இருக்கும். இப்போதோ அவ்வணியையும் இழந்துள்ளது அவளது தொடை. கலவிக்குப்பின் அவளுக்கு ஏற்படும் ஆயாஸத்தை நீக்க தொடைகளை என் இரு உள்ளங்கைகளாலும் அழுத்திப் பிடித்துவிடுவேன். இத்தகைய உபசாரத்தைப் பெற்றது, பெறத்தகுதியும் உடையது அவளது தொடை. நல்ல வாழைமரத்தின் அடிப்பகுதி போல் வெண்ணிறமுடையது. நீ நற்செய்தி சொல்வது என்ற ஒரு நற்செயல் நிகழப் போவதை இத்தகைய தொடை முன் கூட்டித் தெரிவிக்கும் வகையில் துடிக்கும். ஸ்வபாவோக்தி அணி.

விளக்கவுரை :—*யக்ஷன் தன் காதலியின் தொடைக்கு நான்கு விசேஷணங்கள் கூறுகிறான்.*

1. कररुह-पदैः मुच्यमानः—*கலவிக் காலத்தில் யக்ஷன் செய்த நகக்குறிகள் தொடையில் ஏற்பட்டிருந்தன. இப்போது கலவி இல்லாததால் நகக் குறிகள் அத் தொடையை விட்டு நீங்கின. நகக்குறிகள் அற்றது தொடை என்பது கருத்து.*

2. चिरपरिचितं मुक्ताजालं त्याजितः —*எப்பொழுதும் அணிந்து பழகிய முத்துப்பதக்கத்தை, கணவனைப் பிரிந்த நிலையில் அவள் அணிய மாட்டாள். இடுப்பிலே அணியப்படுவதாயினும் இது தொடையின் அருகிலேயே இருப்பது. பிரிவுற்ற நிலையில் தொடை முத்துப்பதக்கத்தை விடும்படி செய்யப்பட்டிருக்கும். முத்துப் பதக்கமின்றி இருக்கும் என்பது கருத்து.*

3. सम्भोगान्ते---समुचितः — *தொடைக்குத் தான் செய்த உபசாரத்தை யக்ஷன் இதில் கூறுகின்றான்.*

4. सरस... गीरः...; सरस —ஈரமுள்ள என்பது பதப் பொருள். வாழை முதிர்ந்தால் பழுத்து நிறம் மாறும். முதிராததாயின் பச்சை நிறமாக இருக்கும். எனவே முதிர்ந்து பழுக்காத வெண்ணிறமுடைய வாழைமரப் பகுதி போல் வெண்ணிறம் பெற்றது அத்தொடை. ஸூர்ய ஒளிபடாத பெண்களின் உடற்பகுதி வெளுத் திருப்பதும் இயல்பானதுதான்

वामः ऊरुः —பெண்களுக்கு இடது தொடை துடிப் பது வரப்போகும் இன்பத்தைக் குறிக்கும் என நிமித்த நிதானம் என்ற நூல் கூறும். ऊरोः स्पन्दाद् रतिं विद्यात् என்பது அவ்வாக்யம்.

प्रस्पन्दमानः पुनरूरुरस्याः रामं पुरस्तात् स्थितमाचचक्षे (सु.स.१९,श्लो.४)என்று வால்மீகி கூறுவதையும் காண்க.

तस्मिन्काले जलद यदि सा लब्धनिद्रासुखा स्या-
दन्वास्यैनां स्तनितविमुखो याममात्रं सहस्व ।
मा भूदस्याः प्रणयिनि मयि स्वप्नलब्धे कथंचित्
सद्यःकण्ठच्युतभुजलताग्रन्थि गाढोपगूढम् ॥ ३१ ॥

பதவுரை:—जलद-மேகமே, तस्मिन् काले-(நீ அணுகும்) அச்சமயத்தில், सा-அவள், लब्ध-निद्रासुखा-நித்ரா ஸுகம் அடைந்தவளாக, स्यात् यदि - இருப்பாளாயின், एनाम् अन्वास्य - அவள் அருகில் இருந்து, स्तनित-विमुखः – கர்ஜனை செய்வதில் நோக்கற்றவனாக (கர்ஜனை செய்யாதவ னாக), याममात्रम् - சிறிது நேரம் (ஒரு ஜாமப் பொழுது), सहस्व - பொறுத்துக் கொள். प्रणयिनि - அன்புக்காதல னாகிய, मयि - நான், कथंचित् - எவ்வாறோ, स्वप्न-लब्धे-

கனவில் கிடைத்திருக்கும் பொழுது, अस्याः - அவளுக்கு (என்னிடம் உண்டான), गाढ-उपगूढम्–இறுகத்தழுவுதல் (ஆலிங்கனம்), सद्यः - உடனே, कण्ठ-च्युत-भुजलताग्रन्थि - (என்) கழுத்தினின்றும், கொடி போன்ற (அவளது) கைகளின் பிடிப்பு நழுவியதாக, मा-भूत् - ஆகுதல் கூடாது.

கருத்துரை: — மேகமே, நீ அருகில் செல்லும் போது நித்திரையின் இன்பத்தைப் பெற்றிருப்பாளாயின் அவள் தூக்கம் கலையாதிருக்க நீ சத்தம் செய்யாமல் அவள் அருகில் இருந்து ஒரு ஜாமம் காத்திரு. ஏனெனில் என்னைப்பற்றியே நினைத்திருக்கும் அவள் என்னைக் கனவில் மிக சிரமப்பட்டுப் பெற்று என் கழுத்தில் தன் கொடி போன்ற கைகளைச் சுற்றிலும் இட்டு இறுகத் தழுவிக் கொண்டிருக்கலாம். நீ கர்ஜித்தால் தூக்கம் கலைந்து கழுத்திலே இட்ட கைகள் நழுவி இறுக்கமான அத்தழுவுதலை அவள் இழந்துவிடுவாள். எழுப்பாமல் இருத்தற்கு காரணம் கூறுவதால் அப்ரஸ்துத ப்ரசம்ஸா அணி என்பர் பூர்ணஸரஸ்வதி.

விளக்கவுரை:—याम:-மூன்று மணி நேரம் என்பர். இங்கு 'சிறிது நேரம் வரை'-அவள் தூங்கி எழும் நேரம் வரை என்று பொருள் கொள்வதே பொருத்தமானது. யாமம் என்பதை ஜாமம் என்று பேச்சு வழக்கில் கூறுவர். गाढ-उपगूढ - இறுக்கமான ஆலிங்கனம்.

भुजलता - கொடி போன்ற கைகள். ग्रन्थिः-முடிச்சு. இங்கு இறுகலாக உள்ள கைகளின் பிணிப்பு. कण्ठ-ग्रन्थिः - அத்தகைய ஆலிங்கனத்திற்கு இடையூறு ஏற்பட வேண்டாம் என மிக ஆவலுடன் விரும்புகிறான் யக்ஷன். स्वप्नलब्धम् - என்று பாடம் கொண்டு

கனவில் கிடைத்த ஆலிங்கனம்' என்றும் பொருள் கூறலாம்.

तामुत्थाप्य स्वजलकणिकाशीतलेनानिलेन
प्रत्याश्वस्तां सममभिनवैर्जालकैर्मालतीनाम् ।
विद्युद्गर्भः स्तिमितनयनां त्वत्सनाथे गवाक्षे
वक्तुं धीरः स्तनितवचनैर्मानिनीं प्रक्रमेथाः ॥ ३२ ॥

பதவுரை:— स्व-जल-कणिका-शीतलेन - உனது ஜலத் திவலைகளால் குளிர்ந்துள்ள, अनिलेन - காற்றினால், ताम् - அவளை, उत्थाप्य - விழிப்புறச் செய்து, अभिनवैः - புத்தம் புதிய, मालतीनाम् - மாலதிக் கொடிகளின், जालकैः समम् - அரும்புகளுடன் கூட, प्रत्याश्वस्ताम् - ஆறுதல் பெற்றுள்ளவளும், त्वत्सनाथे - (நீ இருக்கின்ற) உன்னுடன் கூடிய, गवाक्षे - ஜன்னலில், स्तिमितनयनाम् - சலனமற்ற கண்களை யுடையவளும், मानिनीम् - தன்மானம் உடையவளுமான, அவளிடம், विद्युद्गर्भः - மின்னலை உள்ளடக்கியவனாகவும், धीरः - தைரியமுடையவனாகவும், (सन्) இருந்து கொண்டு, स्तनितवचनैः - (உனது இனிய) கர்ஜனை எனும் சொற்களால், वक्तुम् - பேசுவதற்கு, प्रक्रमेथाः - தொடங்குவாயாக.

கருத்துரை: — மேகமே, அவள் தூங்கி எழுந்திருக்க வேண்டிய நேரத்தில் உன் நீர் திவலைகளுடன் சேர்ந்ததால் குளிர்ச்சி பெற்றுள்ள காற்றை வீசி அவளை விழிப்புறச்செய். அத்தகைய குளிர்ந்த காற்றினால் மாலதி அரும்புகள் வாடும் தன்மை நீங்கிப் புதுமை பெறும். அவைகள் புதுமை பெறும் அந்நேரத்திலேயே அவைகளுடன் அவளும் உனது காற்றினால் மனம் அமைதி பெறுவாள். பின், 'ஜன்னலின் அருகில் இருப்பது யார்' என அறிய விரும்பி ஜன்னலில் அசையாத

விழிகளை வைத்து உற்று நோக்குவாள். அவள் தன்மான முடையவள். பிறர் சிறிது தவறுதலாக நடக்கினும் பொறுக்க மாட்டாள். தைரியத்துடன் மனத்தில் குழப்பமின்றி உன்னு டைய இனிய கர்ஜனை என்ற வார்த்தைகளால் அவளுடன் பேசத்தொடங்கு. மின்னலை உன்னிடத்தே வைத்துக்கொள். வெளிக்காட்ட வேண்டாம். மாலதி அரும்புகளுடன் சேர்ந்து அவளும் களைப்பு நீங்கி அமைதி (புதுமை) பெறுவாள் என்ற தால் ஸஹோக்தி அலங்காரம் என்பர் பூர்ணஸரஸ்வதி.

விளக்கவுரை: — तां-उत्थाप्य - முன் ச்லோகத்தில் அவளுடைய நித்திரையைக் கலைக்க வேண்டாம் என்றும் சிறிது நேரம் பொறுத்துக் கொள் என்றும் கூறியதற்கு ஏற்ப இங்கு எழுந்திருக்க வேண்டிய நேரத்தில் அவளை விழிப்புறச் செய் என்றான். விழிப் புறச் செய்வதற்கான உபாயமும் शीतलेन अनिलेन என்பதால் கூறப்பட்டது. "மெதுவாக பாதத்தை வருடியும் உடல்மேல் காற்றை வீசியும் இனிய பாடல் களாலும் அரசர்களை எழுப்ப வேண்டும்" என்று போஜராஜர் கூறியதற்கு ஏற்ப யக்ஷன் தன் மனைவியை குளிர்ந்த காற்றை வீசி எழுப்பச் சொல் கிறான்.

मृदुभिर्मर्दनैः पादे शीतलैर्व्यजनैः तनौ । श्रुतौ च मधुरै-र्गीतैर्निद्रातो बोधयेत् प्रभुम् என்பது அவர் கூறுவது.

मालती-மாலதி என்பது ஜாதி என்ற சிறு சம்பகம் என்பர் ஒரு அகராதி ஆசிரியர். இப்பெயரிலேயே ஒரு மலர் உண்டு. மல்லிநாதர் இதை ஜாதி மல்லிகை என்கிறார். மாலதியின் மலரும் அரும்புகளும் பகல் வெய்யிலால் வாடியிருக்கும். இரவில் குளிர்ந்த காற்று

பட்டு அவை வாட்டம் நீங்கி புதுமையும், அழகையும் பெறும். மென்மையிலும், அழகிலும் மாலதி மலர்க் குவியல் போன்ற யக்ஷியும், மலர்கள் புதுமைபெறும் நேரத்திலேயே புத்துணர்ச்சி பெறுவாள் என்றான் யக்ஷன். त्वत्सनाथे गवाक्षे - 'நீ இருக்கின்ற ஜன்னலில்' அங்கு இருப்பது யார் என உற்று நோக்க முயலும் போது அவள் கண்கள் சலனமற்று ஜன்னலில் பதிந்து இருக்கும்.

मानिनी - தன்மானமுடையவள். பிறர் செய்யும் சிறு அவமதிப்பையும் பொறுக்காதவள்; எனவே முறை பிறழாமல் பேச வேண்டும் என்பது குறிப்பு. धीरः - தன்மானமுடையவள் என்பதால் அச்சம் கொள்ளாமல் தைர்யத்துடன் இருப்பாயாக என்றான். பேசும்போது குளறினால் சந்தேகம் ஏற்படலாம். विद्युद्गर्भः - மின்னினால் அவள் கண் கூசும். எனவே மின்னலை வெளிக்காட்டாது உள்ளடக்கிக்கொள் என்றான். स्तनित-वचन - மேகத்தின் இனிய கர்ஜனையே சொற்களாக அமையும். எனவே அதன் மூலம் பேசும்படி வேண்டுகிறான் யக்ஷன்.

भर्तुर्मित्रं प्रियमविधवे विद्धि मामम्बुवाहं
तत्संदेशैर्हृदयनिहितैरागतं त्वत्समीपम् ।
यो वृन्दानि त्वरयति पथि श्राम्यतां प्रोषितानां
मन्द्रस्निग्धैर्ध्वनिभिरबलावेणिमोक्षोत्सुकानि ।। ३३ ।।

பதவுரை:— अविधवे - வாழ்கின்ற கணவனையுடையவளே, "माम् - என்னை, भर्तुः - (உன்) கணவருடைய, प्रियं मित्रम् - ப்ரியமான நண்பனாகவும், हृदयनिहितैः - (என்)

மனத்துள் கொண்டுள்ள, तत्सन्देशैः - அவனுடைய நற்செய்திகளுடன், त्वत्समीपम् - உனது ஸமீபத்திற்கு, आगतम् - வந்திருப்பவனுமான, अम्बुवाहम् विद्धि - மேகமாக அறிந்து கொள்வாயாக”. यः - எந்த மேகம், मन्द्रस्निग्धैः - கம்பீரமான இனிய, ध्वनिभिः - ஒலியினால் (கர்ஜனையால்), अबला-वेणि-मोक्ष-उत्सुकानि (பிரிந்த) மகளிரின் பின்னலை அவிழ்த்து அலங்கரிப்பதில் ஆவல் கொண்டவர்களும், पथि - (வீடு திரும்பும்) வழியில், श्राम्यताम् - இன்னல் படுபவர்களுமான, प्रोषितानाम् - வெளிநாடு சென்ற காதலர்களின், वृन्दानि - கூட்டங்களை, त्वरयति - (வீடுதிரும்ப) துரிதப்படுத்துகின்றதோ, (तम्) - அத்தகைய மேகமாக, (मां विद्धि) என்னை அறிந்து கொள்.

கருத்துரை: — உயிர் வாழும் கணவரைப் பெற்றுள்ள நங்கையே! நான் உன் கணவரது ஆருயிர் நண்பன். ‘அவர் தந்துள்ள நற்செய்தியை மனத்தில் நன்கு இறுத்தி உனக்குக் கூற வந்த மேகம் நான்’ என அறிந்து கொள். நான் செய்தி மாத்திரம் கொண்டு வந்தவன் என்று கருத வேண்டாம். நானும் என் போன்ற பிற மேகங்களும் பிரிந்தவர்களைச் சேர்த்து வைக்கும் நற்பணியிலே ஈடுபட்டவர்கள். பொருளீட்டல் முதலிய செயல்களுக்காக பிறநாடு சென்ற கணவர்கள் மழைக்காலத்தில் வீடு திரும்பி, தமக்காக ஒற்றைச் சடையணிந்து காத்திருக்கும் மனைமகளிரின் அச்சடையை அவிழ்த்துக் கோதி அலங்கரிப்பதில் ஆவலுடையவர்களாக இருப்பார்கள். திரும்புங்கால் வழியில் பிரிவினாலும் மற்றும் பல காரணங்களாலும் இன்னலுற்றிருப்பவர்கள் அவர்கள். என் போன்ற மேகங்கள் கர்ஜனை செய்து மழைக்காலம் ஸமீபத்துள்ளதைக் காட்டி சீக்கிரமே வீடு திரும்ப அவர்களைத் துரிதப்படுத்துவன. நானும் அத்தகைய மேகங்களில் ஒருவன், உனக்கு ஆறுதல்கூற வந்துள்ளேன் என்று கூறு. அப்ரஸ்துத ப்ரசம்ஸா அலங்காரம்.

விளக்கவுரை: — अविधवा - "வாழும் கணவனை உடையவள்" என்ற பொருளுள்ளது இச்சொல்.

अविधवा भव वर्षाणि शतं साग्रं तु सुव्रता [खिलम्-3, 17]

என்று தொடங்கும் ஐந்து ரிக்குகளைக் கூறி ரிக்வேதிகள் விவாஹங்களில் மணமகளை தற்போதும் ஆசீர்வதிக்கின்றனர். ராமாயணத்தில் யுத்த காண்டத்தில் ऊचुलाक्षणिका ये मां पुत्रिणी अविधवेति च - (யு. 48.2) என்றும் ப்ரயோகம் உள்ளது. பிற்காலக் காவ்யங்களில் இச்சொல் உபயோகத்தில் இல்லை. சுலோகத்தில் முதற் பாதியில் மேகம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு பின் தான் வந்த காரியத்தை கூறுகின்றது. அடுத்து வரும் சுலோகம் மேகம் கூறியதைக் கேட்டபின் யக்ஷி எவ்வாறு நடந்து கொள்வாள் என்று கூறுகின்றது.

इत्याख्याते पवनतनयं मैथिलीवोन्मुखी सा
त्वामुत्कण्ठोच्छ्वसितहृदया वीक्ष्य संभाव्य चैव ।
श्रोष्यत्यस्मात्परमवहिता सौम्य सीमन्तिनीनां
कान्तोदन्तः सुहृदुपनतः संगमात्किंचिदूनः ॥ ३४ ॥

பதவுரை: — इति - இவ்வாறு, आख्याते - சொல்லப் பட்டவுடன், पवन-तनयम् - ஹனுமானை, मैथिली इव - ஸீதை (தலை நிமிர்த்திக் கண்டது) போல், सा - அவள், उन्मुखी-முகத்தை நிமிர்த்தியவளும், उत्कण्ठा-उच्छ्वसित-हृदया- ஆவலினால் மலர்ந்த மனமுடையவளாகவும், त्वाम् - உன்னை, वीक्ष्य - பார்த்து, सम्भाव्य च - கௌரவித்து, अस्मात् परम् - அதற்கு மேல் (பிறகு), अवहिता - மிக கவன

முடையவளாக, श्रोष्यति एव - (நீ கூறுவதை) கேட்கவே செய்வாள். सौम्य - நற்குணமுடையவனே, सीमन्तिनीनाम्- ஸ்த்ரீகளுக்கு, सुहृदुपनतः-நண்பர்களால் கொண்டுவரப் பட்ட, कान्त-उदन्तः- கணவருடைய செய்தி, सङ्गमात् - கணவனை நேரில் சந்திப்பதைக்காட்டிலும், किञ्चित्-ऊनः- ஒரு சிறிதே குறைவானது.

கருத்துரை: — மேகமே, நீ இவ்வாறு கூறியவுடன் சிம்சபா மரத்திலிருந்து கொண்டு ராமன் செய்தியை கூறிய ஹனுமானை சீதை தலைதூக்கிப் பார்த்தது போல், ஜன்னலில் இருக்கும் உன்னையும் தலைநிமிர்ந்து பார்த்து மனத்தினால் கௌரவித்து, கணவனிடமிருந்து செய்தி கொண்டு வருகிறாய் என்பதால் மிக கவனத்துடன் நீ கூறுவதை நிச்சயம் கேட்பாள். கணவரைப்பற்றித்தூதுவர் கொண்டு வந்து தரும் நற் செய்தி பெண்களுக்கு மகிழ்ச்சி தருவதாகும். இது, கணவரை சந்தித்தால் எந்த அளவு மகிழ்ச்சி ஏற்படுமோ அதற்குச் சற்றே குறைந்ததாக இருக்கும். ஏறக்குறைய சமமான தென்றே கூறலாம். அர்த்தாந்தர நியாஸ அலங்காரம். உவமை யும் உண்டு.

விளக்கவுரை:—इति - இவ்வாறு; இது முன் சுலோ கத்தில் கூறிய கருத்தை முற்றிலும் குறிக்கின்றது. पवनतनयम् मैथिली इव - ராமரைப் பற்றிச் சிலவார்த்தை கள் கூறிய ஹனுமானை தலை நிமிர்த்தி ஸீதை பார்த்த தாக வால்மீகி ராமாயணத்தில் கூறியுள்ளதை யக்ஷன் இங்கு உவமையாகக் கூறினான். வால்மீகியின் சுலோகம் :

ततः सा वक्रकेशान्ता सुकेशी केशसंवृतम् । उन्नम्य वदनं भीरुः शिंशपामन्ववैक्षत ।। सु-३१-१६

யக்ஷியை ஸீதையுடன் ஒப்பிட்டதால் அவளது கற்பும், மேகத்தை ஹனுமானுடன் ஒப்பிட்டதால் மேகமெனும் தூதனுடைய பெருமையும் கூறப் பட்டன.

उत्कण्ठा-हृदया - சோகத்தில் குவிந்து கிடந்த அவள் மனம் தற்போது ஆவலினால் விகாசம் பெறும். सम्भाव्य- உன்னை கௌரவிப்பாள். अस्मात्-परम् - भर्तुर्मित्रं என்று கூறியதற்குப்பின் என்பது கருத்து.

सौम्य - 'சந்திரன் போன்றவனே' என்பது பதப் பொருள். 'காட்சிக்கு இனியவனே' என்பது கருத்து. सीमन्त: - வகிடு - அதை உடையவர்கள், सीमन्तिन्य: - ஸ்த்ரீகள், संगम: - சந்திப்பு; கலவி என்ற பொருள் கூறு வாறும் உண்டு. किञ्चिदून: - செய்தியைப் பெறுவதால் ஏற்படும் மகிழ்ச்சி காதலனை நேரில் சந்திப்பதால் ஏற்படும் மகிழ்ச்சிக்குச் சற்றே தாழ்ந்ததாகும்.

அடுத்து வரும் மூன்று சுலோகங்களில் யக்ஷன் உபதேசித்தபடி மேகம் தானாகக் கூறும் செய்திகள் சில உள்ளன.

तामायुष्मन्मम च वचनादात्मनश्चोपकर्तुं
ब्रूया एवं तव सहचरो रामगिर्याश्रमस्थ: ।
अव्यापन्न: कुशलमबले पृच्छति त्वां वियुक्त:
पूर्वाभाष्यं सुलभविपदां प्राणिनामेतदेव ।। ३५ ।।

பதவுரை:— आयुष्मन् - பயனுள்ள சிறந்த ஆயுளைப் பெற்ற மேகமே, मम - என்னுடைய, वचनात् च - வார்த்தை காரணமாகவும், आत्मन:- தனக்கு (உனக்கும்),

उपकर्तुम् च - உதவி செய்து கொள்வதற்காகவும், ताम् - அவளிடம் (என் அன்புக்காதலியிடம்), एवम्-இவ்வாறு (நான் எடுத்துச் சொல்லும் வகையில்), ब्रूयाः - கூறுவாயாக. "अबले - அபலேயே, रामगिर्याश्रमस्थः-ராமகிரி ஆச்ரமத்தில் இருப்பவரும், अव्यापन्नः - எவ்விதமான தீங்கும் அற்றவரும், वियुक्तः - உன்னை விட்டுப் பிரிந்தவருமான், तव - உனது, सहचरः - கணவர், त्वाम्-உன்னிடம், कुशलम्-(உனது) நலனை, पृच्छति - (என் மூலம்) கேட்கிறார்". सुलभविपदाम्-எளிதிலே ஆபத்தில் சிக்கக்கூடிய, प्राणिनाम् - ஜீவர்களைப் பற்றி (மனிதர்களைப் பற்றி), एतदेव - இதுவே (குசலப்ரச்னம் செய்வதே), पूर्व-आभाष्यम् - முதன் முதல் பேசப்பட வேண்டியதாகும்.

கருத்துரை: — மேகமே, நான் முன்பே உன்னிடம் என் மனைவிக்கு என் நற்செய்தியைக் கொண்டு செல் என வேண்டியுள்ளதாலும் பரோபகாரம் செய்வதையே நீ உனக்கு ஏற்படும் நற்பேருகக் கருதுவதாலும் அவளிடம் முதலில் இதனைக் கூறு. "கணவரைப் பிரிந்து இருக்கும் அபலேயே; உன்னை விட்டுப்பிரிந்து ராமகிரியில் உள்ள ஆச்ரமத்தில் வசிக்கும் உனது கணவர் உடல் நலனுடன் இருந்து கொண்டிருக்கிறார். உன் நலனையும் விசாரிக்கின்றார் என்று சொல். ஏனெனில் மனிதர்களுக்கு விபத்து சுலபத்தில் ஏற்படுவதால் முதன் முதலில் நாம் பேச வேண்டியது குசலப்பிரச்னமே ஆகும். அர்த்தாந்தர நியாஸம் அலங்காரம்.

விளக்கவுரை: — आयुष्मन् - பரோபகாரம் செய்யும் பெருமையுடையதால் மேகத்தின் ஆயுளே சிறந்தது எனக்கருதி 'சிறந்த ஆயுளுடையவனே' என்றான். ஆசீர்வாதமாகவும் கொள்ளலாம்.

अबला - ஆண்களைவிட பலம் குறைந்தவர்களாதலால் பெண்களை இச்சொல் குறிக்கும். பிரிவாற்று

மையால் பலம் குன்றியிருப்பவள் என்றும் கொள்ள லாம்.

मम च वचनात्-என்னுடைய வேண்டுகோள் காரண மாக; सन्देशं मे हर என்று கீழே சொல்லியுள்ளதை நினைவுபடுத்துகின்றான்.

आत्मनश्च उपकर्तुम् - தன்னலம் கருதாமலும், வேண் டப்படாமலிருக்கும் பொழுதும் உதவுபவர்களில் முதல் உதாரணம் மேகம். மழை பொழிந்து யாவருக்கும் உதவுவதையே தான் பெறும் பேறாகக் கருதுவது மேகம். இத்தகைய உபகாரத்தையே தனக்குத் தான் செய்து கொள்ளும் உபகாரமாகக் கருதுவது. எனவே யக்ஷனுக்கு உதவினால் மேகம் தனக்கும் உதவி செய்து கொண்டதாகும். 'தனது வேண்டுகோளை நிறைவேற்றுவது, தனக்குத்தான் உதவிக்கொள்வது', என்ற இரண்டு காரணத்திற்காக யக்ஷியிடம் மேகம் பேச வேண்டும் என்கிறான் யக்ஷன்.

अव्यापन्नः - இறக்காதவன் என்பது பதப்பொருளா யினும், தீங்கின்றி நலமுடன் இருப்பவன் என்று பொருள் கொள்வது தான் சரியானதாகும்.

कुशलं पृच्छति—நீ ஸௌக்கியமாக இருக்கின்றாயா? என்று உனது நலனை முதன் முதலில் விசாரிக்கின்றான்.

सुलभः....एतदेव — மனிதர்களுக்கு வியாதி முதலிய பல காரணங்களால் விபத்து நேருவது ஸஹஜமாகை யால் நம்மைச் சேர்ந்தவர்களைப் பார்க்கும் போது நாம் முதலில் பேச வேண்டிய சொல் 'ஸௌக்கியமா?' என்பதே. பரஸ்பர குசலப்ரசனம் இப்பொழுதும் வழக்கத்தில் உள்ளதே.

अङ्गेनाङ्गं प्रतनु तनुना गाढतप्तेन तप्तं
सास्रेणाश्रुद्रुतमविरतोत्कण्ठमुत्कण्ठितेन ।
उष्णोच्छ्वासं समधिकतरोच्छ्वासिना दूरवर्ती
संकल्पैस्तैर्विशति विधिना वैरिणा रुद्धमार्गः ॥ ३६ ॥

பதவுரை:—दूरवर्ती - தொலேவிலுள்ளவனும், वैरिणा - பகைமை கொண்ட, विधिना - விதியிஞலே (சாபத்தின் மூலம்), रुद्धमार्गः- தடுக்கப்பட்ட வழியுடையவனுமான, तव सहचरः- உன் காதலன், तनुना - மெலிந்ததும், गाढतप्तेन- மிகவும் தாபம் அடைந்தும், सास्रेण - கண்ணீருடையதும், उत्कण्ठितेन - வேதனேயுற்றதும், समधिकतरोच्छ्वासिना- மிகமிக நெடிதுயிர்ப்பதுமான, अङ्गेन - தன் சரீரத்திஞலே, प्रतनु - மிக மெலிந்ததும், तप्तम् - விரஹவெப்ப முற்றதும், अश्रुद्रुतम् - பெருகும் கண்ணீருடையதும், अविरत-उत्कण्ठम्-ஓயாத வேதனேயுடையதும், उष्णोच्छ्वासम्- உஷ்ணமான பெருமூச்சுடையதுமான, (ते) உனது, अङ्गम् - சரீரத்தில், तैः- அந்த (அந்த), सङ्कल्पैः- பலவகை எண்ணங்களால், विशति - புகுகின்ருன் (இரண்டறக் கலக்க முயல்கின்ருன்).

கருத்துரை: — அபலேயே, தொலேவிலுள்ள உன் காதலன் இங்கு வரமுடியாதபடி பொல்லா விதி (சாபம்) அவன் வரும் வழியை அடைத்துள்ளது. உன்னேவிட்டுப் பிரிந்திருப்பினும் தனது மானஸிகமான கற்பனேகளால் உன்னுடன் ஒன்றிவிட விரும்பி முயல்கிருன். உன்னே மானஸிகமாக இறுகத் தழுவு கின்ருன். அவன் உடல் விரகத்தால் மெலிந்தது, வெப்ப முற்றது, கண்ணில் நீர் பெருக்குடையது, வேதனேயுடையது, நெடிதுயிர்ப்பது. இத்தகைய தன்னுடலே அதே போல் மெலிந்து, வெப்பமுற்று, கண்ணீர் பெருக்கி வேதனே கொண்டு பெருமூச்செறியும் உன் உடலுடன் நெருக்கமாக இணேத்து

மையால் பலம் குன்றியிருப்பவள் என்றும் கொள்ளலாம்.

मम च वचनात्-என்னுடைய வேண்டுகோள் காரணமாக; सन्देशं मे हर என்று கீழே சொல்லியுள்ளதை நினைவுபடுத்துகின்றான்.

आत्मनश्च उपकर्तुम् - தன்னலம் கருதாமலும், வேண்டப்படாமலிருக்கும் பொழுதும் உதவுபவர்களில் முதல் உதாரணம் மேகம். மழை பொழிந்து யாவருக்கும் உதவுவதையே தான் பெறும் பேருகக் கருதுவது மேகம். இத்தகைய உபகாரத்தையே தனக்குத் தான் செய்து கொள்ளும் உபகாரமாகக் கருதுவது. எனவே யக்ஷனுக்கு உதவினால் மேகம் தனக்கும் உதவி செய்து கொண்டதாகும். 'தனது வேண்டுகோளை நிறைவேற்றுவது, தனக்குத்தான் உதவிக்கொள்வது', என்ற இரண்டு காரணத்திற்காக யக்ஷியிடம் மேகம் பேச வேண்டும் என்கிறான் யக்ஷன்.

अव्यापन्नः – இறக்காதவன் என்பது பதப்பொருளாயினும், தீங்கின்றி நலமுடன் இருப்பவன் என்று பொருள் கொள்வது தான் சரியானதாகும்.

कुशलं पृच्छति—நீ ஸௌக்கியமாக இருக்கின்றாயா? என்று உனது நலனை முதன் முதலில் விசாரிக்கின்றான்.

सुलभः....एतदेव — மனிதர்களுக்கு வியாதி முதலிய பல காரணங்களால் விபத்து நேருவது ஸஹஜமாகையால் நம்மைச் சேர்ந்தவர்களைப் பார்க்கும் போது நாம் முதலில் பேச வேண்டிய சொல் 'ஸௌக்கியமா?' என்பதே. பரஸ்பர குசலப்ரசனம் இப்பொழுதும் வழக்கத்தில் உள்ளதே.

अङ्गेनाङ्गं प्रतनु तनुना गाढतप्तेन तप्तं
सास्रेणाश्रुद्रुतमविरतोत्कण्ठमुत्कण्ठितेन ।
उष्णोच्छ्वासं समधिकतरोच्छ्वासिना दूरवर्ती
संकल्पैस्तैर्विशति विधिना वैरिणा रुद्धमार्गः ।। ३६ ।।

பதவுரை:—दूरवर्ती - தொலைவிலுள்ளவனும், वैरिणा - பகைமை கொண்ட, विधिना - விதியினாலே (சாபத்தின் மூலம்), रुद्धमार्गः- தடுக்கப்பட்ட வழியுடையவனுமான, तव सहचरः- உன் காதலன், तनुना - மெலிந்ததும், गाढतप्तेन- மிகவும் தாபம் அடைந்ததும், सास्रेण - கண்ணீருடையதும், उत्कण्ठितेन - வேதனையுற்றதும், समधिकतरोच्छ्वासिना- மிகமிக நெடிதுயிர்ப்பதுமான, अङ्गेन - தன் சரீரத்திலே, प्रतनु - மிக மெலிந்ததும், तप्तम् - விரஹவெப்பமுற்றதும், अश्रुद्रुतम् - பெருகும் கண்ணீருடையதும், अविरत-उत्कण्ठम्-ஓயாத வேதனையுடையதும், उष्णोच्छ्वासम्- உஷ்ணமான பெருமூச்சுடையதுமான, (ते) உனது, अङ्गम् - சரீரத்தில், तैः- அந்த (அந்த), सङ्कल्पैः- பலவகை எண்ணங்களால், विशति - புகுகின்றான் (இரண்டறக் கலக்க முயல்கின்றான்).

கருத்துரை: — அபலையே, தொலைவிலுள்ள உன் காதலன் இங்கு வரமுடியாதபடி பொல்லா விதி (சாபம்) அவன் வரும் வழியை அடைத்துள்ளது. உன்னைவிட்டுப் பிரிந்திருப்பினும் தனது மானஸிகமான கற்பனைகளால் உன்னுடன் ஒன்றிவிட விரும்பி முயல்கிறான். உன்னை மானஸிகமாக இறுகத் தழுவுகின்றான். அவன் உடல் விரகத்தால் மெலிந்தது, வெப்பமுற்றது, கண்ணில் நீர் பெருக்குடையது, வேதனையுடையது, நெடிதுயிர்ப்பது. இத்தகைய தன்னுடலை அதே போல் மெலிந்து, வெப்பமுற்று, கண்ணீர் பெருக்கி வேதனை கொண்டு பெருமூச்செறியும் உன் உடலுடன் நெருக்கமாக இணைத்து

ஐக்கியமாக்க விரும்பி பலவகைக் கற்பனைகளைச் செய்து கொண்டு உன்னைத்தழுவுகின்றான். யதாஸங்க்யம் என்ற அணி என்பர் பூர்ண ஸரஸ்வதி.

விளக்கவுரை: — பாலும், நீரும் கலக்கும் போது வேறுபாடு தோன்றாது ஐக்கியமாவது போல், யக்ஷன் தன் சரீரம், யக்ஷியின் மேனி-என்ற பேதம் தெரியாது ஐக்கியமாவதை, ஒன்றுவதை, அவன் மனம் மாத்திரமேயறிந்த பலவகை விருப்பங்களால், கற்பனைகளால் அடைகின்றான். யக்ஷன் விரும்புவது யக்ஷி ஸாயுஜ்யம். இதை அறிந்து கூறுவது மேகம். இந்த சுலோகக்கருத்து யக்ஷனின் ஸந்தேசமில்லை. तैः 'அந்த' என்றது யக்ஷன் மாத்திரமே அறிந்துள்ளவை அந்த ஸங்கல்பங்கள் என்பதைக் காட்டிற்று.

आलिंगितायां पुनरायताक्ष्यामाशास्महे विग्रहयोरभेदम्

என்ற சுலோகப்பகுதியுடன் ஒப்பிட்டுப் பார்க்க.

ராமகிரிமலையில் இருந்து கொண்டே தன் மனத்தால் காதலியை அணைத்துக் கொள்வதின் காரணத்தை दूरवर्ती विधिनारुद्धमार्गः- என்ற இரண்டு விசேஷணங்கள் காட்டின.

अश्रुद्रुतम् என்பதை द्रुताश्रु என்று கொள்ள வேண்டும். பதங்கள் முன்பின்னாக மாறியுள்ளதை இலக்கணம் ஏற்கிறது. रुद्धमार्गः என்பதற்குப்பின் முன் சுலோகத்திலுள்ள तव सहचरः என்ற பதம் விசேஷ்யமாகச் சேர்க்கப்பட்டுப் பொருள் கூறப்பட்டது.

शब्दाख्येयं यदपि किल ते यः सखीनां पुरस्तात्

कर्णे लोलः कथयितुमभूदाननस्पर्शलोभात् ।

सोऽतिक्रान्तः श्रवणविषयं लोचनाभ्यामदृष्ट-
स्त्वामुत्कण्ठाविरचितपदं मन्मुखेनेदमाह ॥ ३७ ॥

பதவுரை: — (अबले) அபலேயே! यः ते (प्रियः) - எந்த உனது காதலன், सखीनाम्-(உன்) தோழிகளின், पुरस्तात्- எதிரில், आनन-स्पर्शलोभात् - (உனது முகத்தைத் தன் முகத்தால்) ஸ்பர்சிப்பதில் உள்ள ஆசையினுல், शब्दाख्येयम् - உரத்த சப்தத்தால் கூறத்தக்கதாக, यत् - எந்த விஷயம் இருந்ததோ, (तद्) अपि — அதையும் கூட, कर्णे - (உன்) காதில், - कथयितुम् - சொல்வதற்கு, लोलः - ஆசையுடையவனுக, अभूत्-किल - இருந்தானே, सः - அவன், श्रवणविषयम् - காதிற்கு எட்டும் நிலையை, अतिक्रान्तः - கடந்தவனுகவும், लोचनाभ्याम् - கண்களாலே, अदृष्टः - பார்க்கப்படாதவனுக, सन् - இருந்து கொண்டு, त्वाम् - உன்னிடம், उत्कण्ठा-विरचितपदम् - ஆவலே (வேதனையை)க் காட்டும் வகையில் அமைக்கப்பட்ட சொற்களையுடைய, इदम्- இதனை (மேற் கூறுவதை), मन्मुखेन - என் மூலம், आह - கூறுகின்ருன்.

கருத்துரை: — அபலேயே, உன் காதலனுக்கு உன் முகத்தோடு தன முகத்தைச் சேர்த்து ஸ்பர்சிக்க விருப்பம். ஆனல் அதை தோழிகளின் எதிரில் தன்னடக்கமின்றிச் செய்தால் அவர்கள் அவனே சபலபுத்தியுடையவன் என நினைப்பர் என்று கருதி எல்லோர் எதிரிலும் உரத்துச் சொல்லக்கூடிய விஷயத்தையும்கூட ஏதோ ஒரு ரஹஸ்யம் சொல்ல விரும்பியவன் போல் உன் காதருகில் முகத்தை வைத்துக் கூறுவானே! நினைவிருக்கின்றதா? பிரிவைப் பொறுக்காதவன் எப்பொழுதும் உனது ஸ்பர்சத்தை விரும்புகின்றவன் அவன். அந்தோ! அவனுடைய தற்போதைய நிலை என்ன? நீ கூப்பிட்டால் உன் பேச்சு காதில் விழக்கூடிய தொலைவில் தற்போது அவன்

இல்லை. உன்னால் பார்க்கவும் முடியாதபடி வெகுதொலைவில் உள்ளான். அவன் ஆவலினாலே தனது அன்பு முழுவதையும் கொட்டக்கூடிய சொல்லமைப்புடைய செய்தியை என் மூலம் உனக்குத் தெரிவிக்கின்றான். விஷமாலங்காரம் என்பர் பூர்ண ஸரஸ்வதி.

விளக்கவுரை :— शब्दाख्येयम् - உரத்துச் சொல்லத் தகுந்ததையும் ரஹஸ்யம் கூறுவது போல் காதலியின் கன்னத்திலே முகம் வைத்துக் கூறினான் யக்ஷன். ரஹஸ்யம் என்பது பொய்க் காரணம்-வ்யாஜம். யக்ஷன் உட்கருத்தை யக்ஷி அறிந்தவள் தான். 'யக்ஷன் இப்படிச் செய்தான்' என்பது மேகம் அறிய நியாய மில்லை. கவியும் இதனை முதலில் கூறவில்லை. எனவே மேகம் யக்ஷனிடமிருந்து தான் வருகிறது என்பதைக் காட்ட, இதை யக்ஷன் தனிமையில் நிகழ்ந்த, அபிஜ்ஞானமாக-அடையாளமாகக் கூறுகின்றான். யக்ஷனும், யக்ஷியும் மாத்திரம் அறிந்த ரஹஸ்யம் இது.

சுலோகத்தின் முற்பகுதி யக்ஷனும், யக்ஷியும் இருந்த நெருக்கத்தைக் காட்டியது. மூன்றாவது பாதம் தற்போது அவ்விருவருக்குமுள்ள முற்றிலும் மாறுபட்ட பிரிவுற்ற நிலையைக் காட்டியது.

'ஸீதையே, நாமிருவரும் ஆலிங்கனம் செய்து கொள்ளும் போது, அணிந்துள்ள முத்துமாலையும் முழு ஸ்பர்சத்திற்கு இடையூறாகும் என அதையும் விலக்கி இருந்தோம். இப்போது நீ லங்கையில் இருக்கின்றாய். நம்மிருவரிடையில் மலைகளும், நதிகளும், வனங்களும் தற்போது குறுக்கிடுகின்றனவே!'' என்று ராமன் தனி மையில் புலம்பியதாக ஒரு சுலோகம் உண்டு. வால்மீகி

ராமாயணத்தில் இது காணப்படாவிடினும் ஸஹ்ருத யர்கள் இதனைக் கூறுகின்றனர்.

हारोऽपि नार्पितः कण्ठे स्पर्शसंरोधभीरुणा ।
आवयोरन्तरे जाताः पर्वताः सरितो द्रुमाः ॥

ஸீதை ஹனுமானிடம் தனிமையில் நிகழ்ந்த சில ஸம்பவங்களை அடையாளமாகக் கூறுகின்றாள். இச் சுலோகத்தில் கூறிய கருத்து ஸந்தேசத்தில் சேராது. அடுத்து வரும் ஒன்பது சுலோகங்களில்தான் யக்ஷன் கூறுகின்ற ஸந்தேசம் உள்ளது. मन्मुखेनेदमाह என்பதி லிருந்து இது தெளிவாகும்.

श्यामास्वङ्गं चकितहरिणीप्रेक्षणे दृष्टिपातं
वक्त्रच्छायां शशिनि शिखिनां बर्हभारेषु केशान् ।
उत्पश्यामि प्रतनुषु नदीवीचिषु भ्रूविलासान्
हन्तैकस्मिन्क्वचिदपि न ते चण्डि सादृश्यमस्ति॥३८॥

பதவுரை :— (प्रिये) - எனது அன்பே! श्यामासु - ப்ரியங்குக் கொடிகளில், अङ्गम् - (உனது மெல்லிய) மேனியையும், चकित-हरिणी-प्रेक्षणे - பயந்த பெண்மானின் பார்வையில், दृष्टिपातम् - (உன்) கண்ணோக்கையும், शशिनि - சந்திரனிடத்தில், वक्त्रच्छायाम् - (உன்) முக ஒளி யையும், शिखिनाम् - மயில்களின், बर्हभारेषु - தோகைத் திரளிலே, केशान् - (உன்) கூந்தலையும், प्रतनुषु - மெல்லிய (சிறிய), नदी-वीचिषु - நதியின் அலைகளில், भ्रू-विलासान् - புருவ அசைவுகளையும், उत्पश्यामि - காண விழைகின் றேன்; हन्त - அந்தோ, चण्डि - கோபமுடையவளே,

क्वचिदपि एकस्मिन् - எந்த ஒரு பொருளிலும், ते - உனது, सादृश्यम् - முழு ஒப்புமையும், न अस्ति - இல்லை.

கருத்துரை: — என் அன்பே, உன்னைப்பிரிந்துள்ள நான் உன்னைக் காணவிழைகின்றேன். காண இயலவில்லை. ப்ரியங்குக் கொடிகளில் உன் மேனியழகைக் காணவிழைகின்றேன். மான்களின் மருட்சியுற்ற கண்களில் உன் கண்ணோக்கையும், சந்திரனிடம் உன் முக ஒளியையும், மயில் தோகைகளில் உன் கூந்தலழகையும், நதியில் தோன்றும் சிற்றலைகளின் சலனங்களில் உன் புருவ நெறிப்பினையும் எதிர்பார்க்கிறேன். அந்தோ, நான் ஒரு பொருளிலும் உன் அழகின் முழுமையையும் காண இயலவில்லை. ஸ்மரணம் என்ற அலங்காரம்.

விளக்கவுரை :— பிரிவுற்ற காதலர்கள் பிரிவாற்றாமையை 1. தாம் காதலிப்பவரின் ஒப்புமையை கண்டும், 2. அவர்களின் படத்தைப் பார்த்தும், 3. ஸ்வப்னத்தில் சந்தித்தும், 4. அவர்கள் உபயோகித்த பொருளை ஸ்பர்சித்தும் மன ஆறுதல் பெறுவர் என ரஸாகரம் என்ற நூல் கூறும். அவ்வகையில் யக்ஷன் தன் காதலியின் ஒப்புமையைக் காண முற்படுவதாக இச்சுலோகம் கூறும். பிற உபாயங்கள் அடுத்துவரும் ச்லோகங்களில் கூறப்படுகின்றன.

இந்த ச்லோகம் (38) தொடங்கி एतस्मान्माम् என்ற 46 வரையுள்ள ஒன்பது ச்லோகங்கள் யக்ஷனுடைய ஸந்தேசமாக உள்ளன.

श्यामा-ஒருவகைக் கொடி. தமிழ் நூல்கள் இதனை 'ஞாழல்' என்று குறிக்கின்றன. இதன் மென்மையும், வளைவும், தெளிவும் யக்ஷியின் உடலமைப்பை

ஙினூட்டுவன. अङ्गम् என்பது அவயவத்தை குறிப்பதாயினும், இங்கு மேனி முழுவதையும் குறித்தது.

चकित...दृष्टिपातम् — மான்கள் எளிதிலே அச்சமுறுவன. அது காரணமாகவே மருண்ட பார்வையுமுடையன. எனவே யக்ஷியின் கண்ணோக்குகளை அவற்றின் அழகை மான்களின் கண்களில் காணமுற்பட்டான்.

शशिनि....छायम् - முழுமதியில் முக அழகைக் காண ஆவலுற்முன்.

बर्हे...केशात् - பலநிறப் புஷ்பங்கள் அணிவிக்கப் பெற்றுள்ள யக்ஷியினுடைய கூந்தலின் அழகை மயில் தோகைகளிலே காண்பதற்கு முயன்முன்.

नदी...भ्रूविलासान् - யக்ஷி, புருவ நெறிப்பின் மூலம் தன் உணர்ச்சியை வெளிக்காட்ட முயல்வாள். எனவே புருவத்தின் அழகை நதியின் நீரில் தோன்றும் சிறு சிறு அலைகளிலே எதிர்பார்த்தான்.

हन्त - அந்தோ? என்ற சொல் யக்ஷனின் ஏமாற்றத்தைக் காட்டியது. ப்ரியங்குக் கொடியிலே யக்ஷியின் வடிவழகைக் காண எதிர்பார்த்தும் அது முற்றிலும் கிடைக்கவில்லை. சரீர ஒப்புமையை ஓரளவே காண முடிந்தது. இவ்வாறே பிற பொருள்களும் முழு ஒப்புமையைக் காட்டுவனவாக இல்லை.

न:...सादृश्यमस्ति - எனவே ஓரிடத்திலும் ஒரு அவயவத்தின் முழு அழகையும் காண இயலவில்லை என்று

யக்ஷன் கூறுகிறான். இதற்கு வேறு ஒருவகையிலும் பொருள் கூறலாம். ப்ரியங்குக் கொடியில் உன் மேனி யழகைக் கண்டேன். முக அழகைக் காண மதியிடம் செல்ல வேண்டியிருந்தது. உன் வடிவம், அங்கங்கள் இவற்றின் அழகை முழுவதையும் சேர்த்து ஒரே பொருளில் காண விரும்பின் அத்தகைய உனது முழு ஸௌந்தர்யம், காண்பதற்கு எளிதாக ஒரு பொருளி லும் இல்லை. "நீ அழகின் திரள். உன் அழகின் ஒப்பு மைகள் பிற பொருள்களில் சிதறிச் சிறிது சிறிதே உள்ளன" என்பதாம்.

उत्पश्यामि - எதிர்பார்க்கிறேன் என்று பொருள்.

चण्डि - 'கோபமுடையவளே'. அன்பினால் சிலர் எளிதில் கோபமடைவார்கள். யக்ஷியும் அப்படிப் பட்டவளாக இருக்கலாம். அல்லது யக்ஷனை அன்பினால் அவளை இச்சொல்லால் அழைப்பதாகக் கொள்ளலாம்.

त्वामालिख्य प्रणयकुपितां धातुरागैः शिलाया-
मात्मानं ते चरणपतितं यावदिच्छामि कर्तुम् ।
अस्रैस्तावन्मुहुरुपचितैर्दृष्टिरालुप्यते मे
क्रूरस्तस्मिन्नपि न सहते संगमं नौ कृतान्तः ॥ ३९ ॥

பதவுரை :— (प्रिये) - அன்பே, प्रणयकुपिताम्- (அன்பி னால் என்னிடம்) கோபம் கொண்டுள்ளவளாக, त्वाम् - உன்னை, धातुरागैः - தாதுப் பொடிகளாலான வர்ணப் பொருள்களாலே, शिलायाम् - பாறையின் மேல், आलिख्य - எழுதி, आत्मानम् - என்னை, ते - உன்னுடைய, चरण पतितम्- காலில் வீழ்ந்திருப்பவனாக, कर्तुम् - (செய்ய) எழுத,

यावत् - எப்போது, इच्छामि - விரும்புகின்றேனோ, तावत् - அப்போது, मुहुः - அடிக்கடி, उपचितैः - (மேன்மேலும் கண்களில்) தோன்றிய, अस्रैः - கண்ணீரால், मे - என்னுடைய, दृष्टिः - பார்வை, आलुप्यते - (அடியோடு) போக்கப்படுகிறது. क्रूरः - பொல்லா, कृतान्तः - விதி, तस्मिन्-अपि-அந்த சித்திரத்திலும் கூட, नौ-நமது, सङ्गमम्-சந்திப்பை, न सहते - பொறுக்கவில்லை.

கருத்துரை:—அன்பே, நீ என்னிடம் அன்பின் மிகுதியால் கோபம் கொண்டிருக்கும் நிலையில் உன் வடிவத்தை (மலைகளில்) எளிதிலே கிடைக்கின்ற பல நிறமுள்ள தாதுப்பொடிகளால் பாறையின் மேல் வரைந்து பிறகு மன்னிப்பைக் கோரி உன் காலில் வீழ்ந்திருக்கும் நிலையில் என் வடிவினை எழுத முற்பட்டவுடனேயே உன் பிரிவின் காரணமான ஏக்கத்தால் என் கண்களில் மேன்மேலும் தோன்றித் ததும்பும் கண்ணீரால் என் பார்வை மறைந்துவிடுகிறது. எனவே என் வடிவத்தை எழுத முடிவதில்லை. சித்திரத்திலாவது நாம் இருவரும் சேர்ந்திருக்கலாம் என்று விரும்பினால் அதையும் இப்பொல்லா விதி பொறுப்பதில்லை; எனின் நேரில் நமது சந்திப்பை அவ்விதி அனுமதிக்குமா? துல்யயோகிதா அலங்காரம் என்பர் பூர்ண ஸரஸ்வதி.

விளக்கவுரை :— प्रणय-कुपिता - அன்பின் மிகுதியே கோபம் கொள்ளச் செய்யும். இக்கருத்தையே முன் ச்லோகத்திலுள்ள चण्डि என்பதும் குறித்தது.

धातु -மனோசிலை போன்ற தாதுக்கள், राग-வர்ணப் பொடி, மனோசிலை போன்ற வர்ணப் பொடிகளால் யக்ஷியின் வடிவத்தை எழுதினான் யக்ஷன்.

यावत्-तावत् - இவ்விரண்டு சொற்களையும் இடையீடின்றி நடைபெறும் இரண்டு செயல்களைக் குறிக்க

உபயோகிப்பர். யக்ஷன் முயன்ற அதே நொடியிலேயே அவன் கண்களில் வரும் நீர், பார்வையை மறைக்கின்றது.

क्रूर: - கொடிய-காரணமின்றித் துன்புறுத்துகின்ற என்பது பதப்பொருள். कृतान्त: - விதி.

இந்த ச்லோகம் யக்ஷன் தன் காதலியை சித்திரத்தில் காண முயன்றதைக் கூறுகின்றது.

मामाकाशप्रणिहितभुजं निर्दयाश्लेषहेतो-
र्लब्धायास्ते कथमपि मया स्वप्नसंदर्शनेषु ।
पश्यन्तीनां न खलु बहुशो न स्थलीदेवतानां
मुक्तास्थूलास्तरुकिसलयेष्वश्रुलेशाः पतन्ति ॥ ४० ॥

பதவுரை :— स्वप्नसन्दर्शनेषु - கனவுக் காட்சிகளிலே, मया - என்னால், कथमपि - ஒருவாறு முயன்று, लब्धायाः - அடையப்பட்ட (பார்க்கப்பட்ட), ते - உன்னை, निर्दयाश्लेषहेतोः-இரக்கமின்றி (இறுகத்) தழுவுவதற்காக, आकाश-प्रणिहित-भुजम् - வெற்று இடத்தில் நீட்டிய கைகளையுடைய, माम् - என்னை, पश्यन्तीनाम् - பார்த்துக்கொண்டிருக்கின்ற, स्थली-देवतानाम् - வனப்ரதேச தேவதைகளின், मुक्ता स्थूलाः - முத்துக்கள் போல் பருமனான, अश्रुलेशाः - கண்ணீர்த் துளிகள், तरु-किसलयेषु - மரங்களின் தளிர்களிலே, बहुशः - வெகுவாக (மிகவும்), न खलु पतन्ति इति न- விழுவே செய்கின்றன.

கருத்துரை: — அன்பே, கனவிலே உன்னை எவ்வாறோ காண்கின்றேன். என் ஆசைகளை எல்லாம் சேர்த்து உன்னை இறுகத்தழுவ விரும்பி கைகளை நீட்டுகின்றேன். வெற்றிடத்

தில், ஆசையுற்றும் பயன் பெருத என்னுடைய இரங்கத்தக்க நிலையை காண்கின்ற வனதேவதைகள் (பெண்கள்) கண்ணீர் உகுக்கின்றனர். முத்துக்கள் அளவு பருமனுள அத்துளிகள் மரங்களின் தளிர்கள் மேல் மிகவும் விழுகின்றன. விசேஷ உக்தி என்ற அணி.

விளக்கவுரை :— முன்னிரண்டு சுலோகங்களில் யக்ஷன், யக்ஷியின் ஒப்புமை காண முயன்று அதனைப் பெறவில்லை என்றும் சித்திரத்தில் காண முற்பட்டதும் பயனளிக்கவில்லை என்றும் கூறப்பட்டது. இங்கு கனவிலும் இன்பம் பெறவில்லை என்பது கூறப்படுகிறது.

स्वप्न - தூங்கும் போது மனத்தில் தோன்றும் எண்ணம்; அதுவே உருவைப் பெற்று கண்களுக்குப் புலனுவது. दर्शनम्-கனவிலே உண்டான தோற்றத்திலே யக்ஷியைக் கண்டுத் தழுவ முயன்று கைகளை வீசுவது வெற்றிடத்தில்தான். யக்ஷனின் முயற்சி பயனளிக்காமை கண்டு வனதேவதைகளும் கண்ணீர் வடிக்கின்றனர்.

स्थली-वनस्थली; देवताः - வனத்திற்கு அதிதேவதையான இவர்கள் பெண்களாக இருக்கலாம்.

मुक्ता-स्थूला: - முத்துக்கள் போல் கண்ணீர்த் துளிகள் பருமனாக இருந்தன; लेशा: - துளிகள்.

तरु-किसलयेषु-தேவர்கள் தரையில் இறங்குவதில்லை. அவர்கள் மேலேயே இருப்பதால் நீர்த்துளிகள் மரத் தளிர்கள் மேல் விழுகின்றன.

'மஹான்கள், பெரியோர்கள், குரு, தேவதைகள் ஆகியோரின் கண்ணீர் தரையில் விழுந்தால் நாசம்

ஏற்படும்' என நிமித்த சாஸ்திரம் கூறுவதால் மரத்தின் மேல் விழுந்ததாகக் கூறினரெனலாம். (खलु) न पतन्ति-इति न விழவில்லை என்பது இல்லை என்பது பதப் பொருளாயினும் 'விழவே விழுந்தன' என்று உறுதியைக் காட்ட ஸம்ஸ்கிருதத்தில் இவ்வாறு இரண்டு 'न' காரங்களை உபயோகிப்பது மரபு. तस्योत्संगे (1.63) என்ற ச்லோகத்தில் இத்தகைய ப்ரயோகம் வந்துள்ளதைக் காண்க. யக்ஷனைக் கண்டு வனதேவதைகள் அழுதனர் என்று இங்கு கூறியது போலவே ரகுவம்சத்தில் அஜ மகாராஜன் துக்கத்தைக் கண்டு மரங்களும் கண்ணீர் உகுத்தன எனக் கவி கூறியுள்ளார். (ரகு.ஸ. 8, சு. 70 காண்க). மரங்களின் தளிர்கள் மேல் விழுந்த பனித் துளிகளையே தேவதைகளின் கண்ணீராகக் கூறினர் என்றாலும் பொருந்தும்.

भित्त्वा सद्यः किसलयपुटान् देवदारुद्रुमाणां
ये तत्क्षीरस्रुतिसुरभयो दक्षिणेन प्रवृत्ताः ।
आलिङ्ग्यन्ते गुणवति मया ते तुषाराद्रिवाताः
पूर्वं स्पृष्टं यदि किल भवेदङ्गमेभिस्तवेति ॥ ४१ ॥

பதவுரை:—गुणवति-நற்குணமுடையவளே, देवदारु-द्रुमाणाम्-தேவதாரு மரங்களின், किसलयपुटान्-தளிர்மொட்டுகளை, सद्यः - அப்பொழுதே, भित्त्वा - மலரச் செய்த பின், तत्क्षीरस्रुतिसुरभयः - தேவதாரு மரத்தின் பால் பெருக்கினால் நறுமணமுடையனவாக, ये - எந்த காற்று, दक्षिणेन (मार्गेण) . தென்திசை வழியாக, प्रवृत्ताः - வீசுகின்றதோ, ते – அந்த, तुषाराद्रिवाताः - ஹிமாலயக் காற்று, "पूर्वम् - முதலில், एभिः - இந்தக் காற்றினாலே, तव - உனது,

अङ्गम् – மேனி, स्पृष्टम् भवेत् यदि किल • தொடப்பட்டதாக இருக்கலாமல்லவா" इति - என்ற நம்பிக்கையாலே, अयां - என்ஞல், आलिङ्ग्यन्ते - தழுவப்படுகின்றது.

கருத்துரை: — அன்பே, ஹிமாலயத்தினின்றும் குளிர்ந்த காற்று தென்திசை வழியாக நான் இருக்குமிடம் நோக்கி வீசுகின்றது. அது வரும்போது தேவதாரு மரங்களின் மொட்டு போல் குவிந்துள்ள தளிர்களை விகஸிக்கச் செய்கின்றது. மரங்களினின்றும் பெருகும் பாலின் மணம் தாங்கி வருகின்றதால் ஹிமாலயத்தினின்றும் இது வருகிறதென்று உறுதி செய்கின்றேன். இக்காற்று என் காதலியின் மிருது ஸ்பர்சமுள்ள மேனியைத் தீண்டி வந்திருக்கலாமோ என்ற எண்ணத்தால் அக்காற்றைத் தழுவுகின்றேன். அப்ரஸ்துத ப்ரசம்ஸா அலங்காரம்.

விளக்கவுரை:—காதலர் தொட்டதைத் தொட்டு மனம் தேறுதல் என்ற நான்காவது உபாயம் இச் சுலோகத்தில் கூறப்படுகிறது. पुट - மொட்டு போல் இணைந்திருக்கும் தளிர்கள். காற்று அவற்றின் மேல் படும்போது அவை பிரிந்து கொள்ளுகின்றன. स्रुति - பெருகுவது. கசிவது. மரத்தினின்றும் கசிகின்ற பால் மணம் காற்றுடன் சேருகிறது. தேவதாரு மரம் ஹிமாலயத்தில் உள்ளதால் காற்றிலுள்ள பால்மணம், காற்று ஹிமாலயத்தினின்றும் வருவதாக உறுதிப்படுத்தும்.

'दक्षिणेन'-मार्गेण என்ற பதத்தைச் சேர்த்துத் தென் திசை வழியில் என்று பொருள் கொள்ள வேண்டும். ஹிமாலயத்திற்கு அருகிலுள்ள அளகாபுரி வழியாக வரும்போது இக்காற்று யக்ஷியைத் தொட்டிருக்க

லாம் என்று நினைத்து அதனை ஆலிங்கனம் செய்கின்றான்.

भवेद्यदिकिल- இச்சொற்கள் நிச்சயமாகத் தொட்டிருக்கும் என்று சொல்ல இயலாது என்ற ஸந்தேகத்தையும் காட்டும். [இச்சுலோகக் கருத்து,

वाहि वात यतः कान्ता तां स्पृष्ट्वा मामपि स्पृश ।
त्वयि मे गात्रसंस्पर्शः चन्द्रे दृष्टिसमागमः ॥

என்ற வால்மீகி (யு. 5-6) சுலோகத்தை ஒட்டிவந்தது.

गुणवति - 'குணமுடையவளே' இங்கு கூறிய குணம் தேஹத்தின் குணம்; ஆலிங்கனத்திற்குத் தேவையான ம்ருது ஸ்பர்சத்தைக் குறித்தது.

शक्यमरविन्दसुरभिः कणवाही मालिनीतरङ्गाणाम् ।
अङ्गैरनङ्गतप्तैरविरलमालिङ्गितुं पवनः ॥

என்ற சாகுந்தல ச்லோகத்திலும் (III-5) காற்றை ஆலிங்கனம் செய்து கொள்ளுதல் என்ற இதே கருத்தைக் கூறியிருக்கிறார்.

धारासिक्तस्थलसुरभिणस्त्वन्मुखस्यास्य बाले
दूरीभूतं प्रतनुमपि मां पञ्चबाणः क्षिणोति
घर्मान्तेऽस्मिन् विगणय कथं वासराणि व्रजेयु-
र्दिक्संसक्ताप्रविरलघनाव्यक्तसूर्यातपानि ॥

பதவுரை :— बाले - இளநங்கையே, धारा-सिक्त-स्थल-सुरभिणः - மழை நீரால் நனைக்கப்பட்ட பூமியின் மண

முடைய, अस्य त्वन्मुखस्य - இந்த உன் முகத்திற்கு, दूरीभूतम् - தொலைவிலிருப்பவனும், प्रतनुम् - இளைத்திருப்பவனு மான, मामपि - என்னையும், पञ्चबाणः - மன்மதன், क्षिणोति - துன்புறுத்துகிறான்; अस्मिन् घर्म-अन्ते - இக்கோடையின் முடிவில் (மழைக்காலத் தொடக்கத்தில்), दिक्संसक्त-अप्रविरल-घन-अव्यक्त-सूर्य-आतपानि - திசை எங்கும் பரவி, மிக நெருக்கமாக இருக்கின்ற, மேகங்களால் புலனு காத வெய்யிலையுடைய, वासराणि - நாட்கள், कथं - எவ்வாறு, व्रजेयुः - செல்லும்?

கருத்துரை:—நங்கையே, நன்கு காய்ந்த நிலத்தில் மழை பெய்யுமாயின் அதனால் நனைக்கப்பட்ட அம்மண்ணிலிருந்து ஒரு வகை மணம் வரும். அத்தகைய மணம் உன் முகத்திற்கு உண்டு. அதை அனுபவிக்க இயலாமல் வெகு தொலைவில் இருக்கின்றேன். உடலும் மெலிந்துள்ளேன். இந்நிலையிலும் மன்மதன் என்னைத் துன்புறுத்துகின்றான். கோடை முடிந்து மழைக் காலம் தொடங்கியுள்ளது. திசை எங்கும் மேகங்கள் பரவியுள்ளன. அவை நெருக்கமாக இருந்து ஸூர்யனின் வெய்யில் புலனாகாதபடி செய்கின்றன. எனவே இப்படி தொடங்கப் போகின்ற மழைக்கால நாட்கள் எப்படித்தான் எனக்கு வருத்தம் தராமல் செல்லுமோ? இப்போது பரிதாபத் திற்குரிய ஒரு கஷ்டம் நேர்ந்துள்ளது. ஸ்வபாவோக்தி அலங்காரம்.

இந்த ச்லோகம் இடைச்செருகல் என்பது உரை யாசிரியர்கள் கருத்து. மேலும் மல்லிநாதரின் உரை என இதற்கு சில பதிப்பில் உரை தரப்பட்டிருந்தா லும் அவருடைய உரையில் காணப்படும் சாயல் இதில் இல்லை. போஜராஜர் தமது ச்ருங்கார ப்ரகாசம் என்ற நூலில் (Vol. IV. பக்கம் 720) இதை காளிதாஸர் பெயரைக் குறிப்பிடாமல் உதாஹரித்திருப்பது

ஒன்றே இதற்கு சிறிது உயிர் தருகின்றது. இல்லை எனில் இதை விலக்கிவிடலாம்.

கர்ப்பிணியான சுதக்ஷிணை மண் தின்றதால் அவள் முகம் மண்வாசனையுடன் இருந்ததாகக் கவி ரகுவம்சத்தில் (3. 3) கூறியிருந்தாலும் யக்ஷி கர்ப்பிணி இல்லாததால் அவள் முகத்தில் மண் வாசனை இருப்பதாகக் கூறுவது பொருத்தமற்றது. இதைக் காளிதாஸர் கூறியிருக்கமாட்டார் என்பதில் ஸந்தேகமில்லை.

संक्षिप्येत क्षण इव कथं दीर्घयामा त्रियामा
सर्वावस्थास्वहरपि कथं मन्दमन्दातपं स्यात् ।
इत्थं चेतश्चटुलनयने दुर्लभप्रार्थनं मे
गाढोष्माभिः कृतमशरणं त्वद्वियोगव्यथाभिः ॥ ४२ ॥

பதவுரை: — दीर्घयामा - நெடிய யாமப் பொழுதையுடைய, त्रियामा - இரவு, क्षण इव-ஒரு நொடிப் பொழுது போல, कथम् - எவ்வாறு, सङ्क्षिप्येत - சுருக்கப்படலாம்? अहः अपि - பகற் பொழுதும், सर्वावस्थासु - எல்லாக் காலங்களிலும், मन्दमन्दातपम्-மிகமிகச் சூடற்ற வெய்யிலுடையதாக, कथम् - எவ்வாறு, स्यात् - ஆகும்? चटुलनयने - சஞ்சலமான கண்களையுடைய அன்பே, इत्थम् - இவ்வாறு, दुर्लभप्रार्थनम् - கிடைத்தற்கரிய விருப்பமுடைய, मे चेतः - என் மனம், गाढोष्माभिः- மிக அதிகமான வெப்பமுடைய, त्वद्वियोगव्यथाभिः - உன் பிரிவிலுண்டான வேதனைகளாலே, अशरणम् - ஆறுதலற்றதாக (நம்பிக்கை இழந்ததாக), कृतम् - செய்யப்பட்டுள்ளது.

கருத்துரை: — அன்பே, இரவின் பகுதிகளான யாமங்கள் நீண்டிருக்கின்றன. எனவே, இரவும் நீண்டுள்ளது. உன் பிரிவினால் வாடும் நான் இந்நெடிய இரவை ஏதாவது ஒரு உபாயத்தால் நொடிப் பொழுது போல் குறுகியதாகச் செய்ய இயலுமா என விரும்புகிறேன். பகற் பொழுது மிக உஷ்ண மாக உள்ளது. எனவே ,பகற் பொழுதும் எல்லாக் காலங்களி லும் மிகமிகக் குறைந்த வெப்பமுடையதாக எவ்வாறு ஆகும்? என்று யோசிக்கிறேன். இரவு நொடிப் பொழுதாக வேண் டும், பகலும் சூடற்று இருக்க வேண்டும் என்று நான் கருது கிற விருப்பம் நிறைவேறக் கூடியதில்லைதான். இத்தகைய விருப்பத்தைக் கொண்ட என் மனத்தை உன் பிரிவினாலுண் டான கடுமையான வேதனைகள் எவ்விதமான பாதுகாப்பும் அற்றதாகச் செய்கின்றன. விரோத அலங்காரம்.

விளக்கவுரை :—याम: - ஜாமப் பொழுது. மூன்று மணி நேரம். இரவு நான்கு யாமங்களையுடையதாயி னும் முதல் ஜாமத்தின் முதற் பாதியிலும், கடைசி ஜாமத்தின் பிற்பாதியிலும் மக்கள் தூங்காமல் தம் வேலைகளைக் கவனிப்பதால் இரவை மூன்று ஜாமங்கள் (त्रियामा) உடையதாகக் கொள்வர். दीर्घयामा - இரவின் பகுதிகளான ஜாமங்கள் நீண்டிருப்பதால் இரவு நீண்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஏதாவது ஒரு வகையில் (कथमपि) இரவை ஒரு நொடியாக மாற்ற முடியுமா (संक्षिप्येत) என்று யக்ஷன் விரும்புகிறான்.

अहः अपि-ஏதாவது வேலை செய்வதால் பகல் பொழுது நெடிதாகத் தோன்றுவதில்லை. மலைவாசம் செய்த யக்ஷனுக்கு ஸமஸ்தலவாஸத்தில் சூரிய வெப்பம் தான் பொறுக்க முடியாமல் இருக்கிறது.

सर्व-अवस्थासु - எல்லா நிலைகளிலும். अवस्था என்ற சொல் ருதுக்களைக் குறித்தது. எல்லா ருதுக்களிலும்

பகல் வெய்யிலின் கடுமை மிகமிகக் குறைந்ததாக இருக்க வேண்டும் என விரும்புகிறான் யக்ஷன்.

दुर्लभ-प्रार्थनम् - யக்ஷன் தான் விரும்பியது நிறை வேறாது என உணர்கின்றான். இரவின் நெடிய தன்மை யாலும், பகலின் வெப்பத்தாலும் வருந்தும் அவன் மனது, யக்ஷியின் பிரிவினால் ஏற்பட்ட கடுமையான வேதனைகள் காரணமாக எந்தவிதமான ஆறுதலும்-பற்றுக்கோடும் இல்லாததாக உள்ளது.

முன் ச்லோகங்களில் கூறிய உபாயம் ஒன்றி னாலும் யக்ஷியை அடையமுடியாத நிலையில் பகலும், இரவும் கூட எவ்வாறு துன்பமளிக்கின்றன என்பதை யக்ஷன் கூறுகின்றான்.

नन्वात्मानं बहु विगणयन्नात्मनैवावलम्बे
तत्कल्याणि त्वमपि नितरां मा गमः कातरत्वम् ।
कस्यात्यन्तं सुखमुपनतं दुःखमेकान्ततो वा
नीचैर्गच्छत्युपरि च दशा चक्रनेमिक्रमेण ॥ ४३ ॥

பதவுரை :—ननु (प्रिये)-அன்பே, बहु-विगणयन् -(சாபம் நீங்கியபின் அனுபவிக்க வேண்டிய இன்பங்கள்) பல வற்றை (மனத்தில்) நினைத்துக் கொண்டு, आत्मानम् - என்னை, आत्मनैव - என்னாலேயே (நானே), अवलम्बे-உயிர் வாழச் செய்து கொள்கிறேன் (தேற்றிக் கொள் கிறேன்). तत्-ஆதலால், कल्याणि-மங்களமுடையவளே, त्वमपि - நீயும், नितराम् - மிகவும், कातरत्वम् - பயந்த தன்மையை (அச்சத்தை), मा गमः - அடையாதே; कस्य-(இவ்வுலகில்) எவருக்கு, अत्यन्तम् - முடிவற்ற, सुखम् -

சுகம், उपनतम् - வந்துள்ளது? एकान्ततः - ஒரே நிலையாக, दुःखम् वा - துக்கம் தான் (उपनतम् - வந்துள்ளது?). दशा - (சுகதுக்கங்களின்) நிலை, चक्र-नेमि-क्रमेण - சக்கரத்தின் முனையின் முறையில், नीचैः - கீழும், उपरि च - மேலும், गच्छति - செல்கின்றது.

கருத்துரை:—அன்பே, எனக்கு ஆறுதல் தருபவர் யாரும் இங்கில்லை. ஆயினும் சாபத்தின் முடிவில் நாம் அனுபவிக்கப் போகும் பலவகை இன்பங்களை மனத்தில் கற்பனை செய்து கொண்டு என்னை நானே தேற்றிக் கொள்கிறேன். உனக்காக நான் வாழ்கின்றேன். நீயும் தற்போதுள்ள கஷ்டத்தை நினைத்து பயம் கொள்ளாதே. எனக்காகவும் நீ வாழ வேண்டும். கீழும், மேலும் வரும் சக்கரத்தின் முனை (விளிம்பு) போல் கஷ்டமும், சுகமும் மாறி மாறி வரும். முடிவில்லாத இன்பத்தையோ, துன்பத்தையோ அனுபவிப்பவர் யாருமில்லை. அர்த்தாந்தர ந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை :—बहु विगणयन् - தான் அனுபவிக்க விரும்பும் இன்பங்களை கற்பனை செய்து அச் சிந்தனையை பற்றுக்கோடாகக் கொண்டு ஆறுதல் பெறுகிறான் யக்ஷன். कल्याणि - நன்மைகளை "பெறுவதைக் காட்டும் சுபமான லக்ஷணங்களையுடையவளே" என்று கூறி அவன் இன்பம் துய்ப்பது திண்ணம் என்கிறான்.

अति-अन्तम् - अन्त - முடிவு, अत्यन्त-முடிவில்லாத, सुखम्- 'எல்லையில்லா இன்பம்'. एक अन्ततः-நிலையான முடிவில்லாத; नेमि - தரையில் பதியும் சக்கரத்தின் முனைப் பகுதி; சக்கரம் செல்லும் போது இப்பகுதி கீழும் மேலும் செல்கிறது. எனவே வாழ்க்கை எனும் சக்க

ரத்தின் விளிம்பு போன்ற சுகதுக்கங்களும், மக்களுக்கு மாறிமாறி வரும்.

பல வருஷங்கள் கஷ்டம் அனுபவித்தாலும் சுகம் ஒரு சமயம் மனிதனை அடையும் 'एति जीवन्तमानन्दः नरं वर्षशतादपि' என ஸீதை கூறுவதை (ஸு. 34-6) ஒட்டி சுலோகத்தின் கடைசிப் பகுதி வந்துள்ளது.

शापान्तो मे भुजगशयनादुत्थिते शार्ङ्गपाणौ
शेषान्मासान् गमय चतुरो लोचने मीलयित्वा ।
पश्चादावां विरहगुणितं तं तमात्माभिलाषं
निर्वेक्ष्यावः परिणतशरच्चन्द्रिकासु क्षपासु ।। ४४ ।।

பதவுரை: शार्ङ्गपाणौ - மஹாவிஷ்ணு, भुजग-शयनात्- ஆதிசேஷனாகிய படுக்கையினின்றும், उत्थिते - எழுந்த பொழுது, मे - என்னுடைய, शाप-अन्तः - சாபத்திற்கு முடிவு, भविष्यति - வரப்போகின்றது. शेषान् - (எனவே) எஞ்சியுள்ள, चतुरः - நான்கு, मासान् - மாதங்களையும், लोचने - கண்களை, मीलयित्वा - மூடிக்கொண்டு, गमय - போக்கு; पश्चात् - பிறகு, आवाम् - நாம் இருவரும், विरह-गुणितम् - பிரிவு காரணத்தால் பன்மடங்கான, तम् तम् - அந்த அந்த, आत्माभिलाषम् - நமது விருப்பங்களை, परिणत-शरच्चन्द्रिकासु - முதிர்ந்த சரத்கால நிலவுடைய, क्षपासु - இரவுகளிலே, निर्वेक्ष्यावः - அனுபவிப்போம்.

கருத்துரை: — அன்பே! நாம் கூடுவது எப்பொழுது என்பதைக் கூறுகிறேன். (கார்த்திகை மாதத்தில் முதல் ஏகாதசியன்று) மஹாவிஷ்ணு தமது சேஷசயனத்தினின்றும் எழுந்திருக்கும் போது என் சாபம் முடிவு பெறுகின்றது. எனவே

கண்ணை மூடிக்கொண்டு (மிகப்பொறுமையுடன்) எஞ்சியுள்ள இந்த நான்கு மாதங்களை கடத்துவாயாக. பின் நான் அங்கு வந்துவிடுவேன். நான் அங்கு வரும் போது காலம் சரத்ருதுவின் பின்பகுதியாகும். மேகங்கள் முற்றிலும் நீங்கி நிலா வெளிச்சம் இரவுகளில் தெளிவாக இருக்கும். அத்தகைய இரவுகளில் பிரிவு காரணமாக பன்மடங்காக வளர்ந்துள்ள பல வகையான, நாம் விரும்பிய இன்பங்களை அவ்விரவுகளிலே அனுபவிப்போம். உதாத்தம் அலங்காரம்.

விளக்கவுரை : भुजगशयनादुत्थिते-ஆடி மாத முதல் ஏகாதசியில் பகவான் சயனிக்கிறார். இதை சயன ஏகாதசி என்பர். கார்த்திகை மாத முதல் ஏகாதசியில் எழுந்திருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. இதை உத்தான ஏகாதசி என்பர். இன்று விஷ்ணுவிற்கு விசேஷ பூஜைகள் நடைபெறும். உத்தான ஏகாதசியன்று ஒரு வருஷம் முடிவதால் யக்ஷனின் சாபமும் முடிவுறுகிறது. चतुरो मासान् - மேகத்தை ஆடி மாதத்தில் முதலில் பார்த்ததால் நான்கு மாதங்கள் என்றான் யக்ஷன். நான்கு மாதங்களுக்கு மேல் சில நாட்கள் இருக்கலாம். लोचने मीलयित्वा-உலகத்தில் கஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ள, 'கண்களை மூடிக் கொண்டு பொறுத்திரு' என்பர். அதையே இங்கு யக்ஷன் கூறினான்

विरह-गुणित - பிரிவு காரணமாக அனுபவிக்கப் போகும் இன்பங்கள் கற்பனையில் பலவாகப் பெருகி இருக்கும்.

परिणत-शरच्चन्द्रिकासु - परिणत முதிர்ந்த - தெளிந்த; இதை நிலவு என்ற चन्द्रिका என்பதுடன் சேர்த்து

'தெளிந்த நிலவுள்ள' இரவுகளிலே என்று பொருள் கொள்ள வேண்டும்.

आत्म - अभिलाषम् - आत्मनोः - अभिलाषः - நீ ஒருவகை இன்பத்தை விரும்பலாம். நான் வேறு ஒரு வகை இன்பத்தை விரும்பலாம். எனவே இருவர் விருப்பப் படி அனுபவிக்கலாம் என முன்பே உறுதியளிக் கின்றான் யக்ஷன்.

क्षपासु - இனி எந்தவிதமான தண்டனையும் நேராத வகையில் இரவை இன்பம் நுகர்வதற்கு ஏற்ற கால மாகக் கூறினான்.

भूयश्चाह त्वमपि शयने कण्ठलग्ना पुरा मे
निद्रां गत्वा किमपि रुदती सस्वरं विप्रबुद्धा ।
सान्तर्हासं कथितमसकृत्पृच्छतश्च त्वया मे
'दृष्टः स्वप्ने कितव रमयन् कामपि त्वं मयेति' ॥

பதவுரை:— (अबले) - அபலையே, भूयः च - மேலும், आह - (உன் காதலர் என்னிடம்) கூறினார். "पुरा - முன் ஒரு சமயம், शयने - படுக்கையில், मे - என்னை, कण्ठलग्ना- अपि - கழுத்தில் இறுகத் தழுவியவளாக இருப்பினும், त्वम्-நீ, निद्राम् - நித்திரையை, गत्वा - அடைந்த பின், किमपि- ஏதோ காரணத்தால், सस्वरम् - (காதில் விழும்படி) சிறிது சத்தத்துடன், रुदती- அழுது கொண்டே, विप्रबुद्धा - கண் விழித்தாய். असकृत्- பலமுறையும், पृच्छतः-(அழுகை யின் காரணத்தைக்) கேட்கின்ற, मे - என்னிடம், 'कितव - வஞ்சகரே, त्वम् - நீர், कामपि-வேறு ஒரு ஸ்த்ரீயை, रमयन् - மகிழ்வித்துக் கொண்டிருப்பவராக, मया - என்

ஞல் (யக்ஷியால்), स्वप्ने - கனவில், दृष्टः' - பார்க்கப் பட்டீர், इति - என்று, त्वया - உன்னுல், सान्तर्हासम् - உள்ளடங்கிய சிரிப்புடன், कथितम् च - கூறப்பட்டது'' என்று உன் காதலன் கூறினுன்.

கருத்துரை:—மேலும் மேகம் கூறுகின்றது: ''அபலையே, நான் இதுவரை கூறியதை என்னிடம் சொன்ன பின் உன் காதலன், உங்கள் இருவருக்கும் மாத்திரமே தெரிந்துள்ள ஒரு ஸம்பவத்தை, நான் உன் காதலனிடமிருந்தே வந்துள்ளேன் என்பதைக் காட்டும் ரஹஸ்ய அடையாளமாக 'மேலும் இதைக்கூறு' என்று சொல்லி அதனைச் சொன்ஞன்''. ''ஒரு சமயம் இன்பம் துய்த்த களைப்பில் படுக்கையில் நீ உன் காதலனைக் கழுத்தில் இருகைகளாலும் இறுக அணைத்துக் கொண்டு சிறிது தூங்கிய பின் திடீரென சிறிதே உரத்து அழுது கொண்டே தூக்கம் நீங்கி எழுந்தாய். நீ அழுததின் காரணத்தைப் பல முறையும் உன் காதலர் கேட்க, நீ, ''போக்கிரி! நீ வேறொருத்தியை மகிழ்வித்துக் கொண்டிருப் பதைக் கனவில் நான் கண்டேன்'' என மனத்துள் நகைத்துக் கொண்டே சொன்ஞய்'' என்பதும் உன் காதலன் கூறிய அடை யாளம். ஸ்வாபவோக்தி.

விளக்கவுரை:—शयने कण्ठलग्ना - ஒரே படுக்கையில் கழுத்தைத் தழுவியிருக்கும் போது ஏற்படக்கூடாத ஸந்தேகம் உனக்கு நேர்ந்தது. ஆஞல் அது கனவு. किमपि - ஏதோ ஒரு காரணத்தால், விவரிக்க இயலாத வகையில், सस्वरम् - புலம்பல் காதில் விழும்படி ஓசை யுடன் இருந்தது. असकृत् - 'அடிக்கடி'. யக்ஷி தனது அசட்டுக் கனவை வெளியிட விரும்பாததால் யக்ஷன் பலமுறை கேட்கும்படியாயிற்று.

कितव - அன்பினுலே 'வஞ்சகரே' என்று அழைத் தாள். सान्तर्हासम्-சிரிப்பு உள்ளடங்கியிருந்தது. தான்

கண்டது கனவு என்பதை அறிந்து வெட்கமுற்று மனத்துள் சிரித்துக் கொண்டாள் யக்ஷி.

मन्मुखेनेदमाह - [சு-37] 'என் மூலம் இதை உன் கணவர் உனக்குக் கூறுகின்றார், என்று மேகம் கூறிய பின் श्यामास्वङ्गम् - என்பது தொடங்கி ஒன்பது சுலோகங்களில் யக்ஷன் தன் மனைவியை விளித்துக் கூறும் சுவை மிகுந்த ஸந்தேசத்தை அனுபவிக்கும் ரஸிகர்களுக்கு இடையிலே भूयश्चाह - என்ற குரலால் வரும் இடையூறு பானகத் துரும்பு போல் இருந்து கொண்டு ரஸ பங்கத்திற்குக் காரணம் ஆகும் என்று சிலர் கருத இடம் உண்டு.

ஆனால் இதற்கு ஒரு தக்க பதிலும் இருக்கிறது. शापान्तो मे என்ற ச்லோகம் ஸந்தேசத்திற்கு முடிவைக் காட்டுவது. "நான்கு மாதங்கள் பொறுத்திரு" என்று கூறி ஸந்தேசத்தை முடித்த பிறகு யக்ஷன் மனத்தில் ஒரு எண்ணம் உண்டாகியிருக்க வேண்டும். தன்னிடமிருந்து தான் மேகம் வந்திருக்கிறது என யக்ஷி நம்ப வேண்டுமே என்று சில க்ஷணங்கள் யோசித்துக் கொண்டு பேசாமலிருந்தான். பின் நல்லதோர் அடையாளம் கூறுவது நலமென்றெண்ணி சில க்ஷணங்களுக்குப் பிறகு त्वमपि शयने என்பதையும் एतस्मात् என்பதையும் மேலும் கூறியதால், மேகம் "யக்ஷன் சிறிது நேரம் ஆலோசித்து மறுபடியும் பேசலுற்றான்" என்ற முன்னுரையுடன் பேசத் தொடங்கியது என்பதை நினைத்தால் மேகத்தின் இடையீடு குறையாகத் தோன்றாது. பேச்சை முடித்த பிறகும் கூட யோசித்து மறுபடியும் பேசுவது உலக இயற்கை. अभिज्ञानं அல்லி

யம் தரப்பட வேண்டுமென்று கருதியே யக்ஷன் மேலும் பேசினான். சீதையும் ஹனுமாரிடம் சில அடையாளங்களை நினைத்து நினைத்துக் கூறியதை ஸுந்தர காண்டத்தில் காணலாம்.

एतस्मान्मां कुशलिनमभिज्ञानदानाद्विदित्वा
मा कौलीनादसितनयने मय्यविश्वासिनी भूः ।
स्नेहानाहुः किमपि विरहे ध्वंसिनस्ते त्वभोगा-
दिष्टे वस्तुन्युपचितरसाः प्रेमराशीभवन्ति ॥ ४६ ॥

பதவுரை: — एतस्मात् - இந்த, अभिज्ञान दानात् - அடையாளம் தருதல் மூலம், माम् - என்னை, कुशलिनम् - நலனுடன் இருப்பவனாக, विदित्वा-அறிந்து, असित-नयने கருத்த கண்ணுடையவளே, कौलीनात्-ஜனங்கள் கூறும் (வீண்) வதந்திகளாலே, मयि - என்னிடம், अविश्वासिनी-நம்பிக்கை யிழந்தவளாக, मा भूः - ஆகாதே; किमपि - (அதற்கான) காரணம் எதுவும், (नास्ति) - இல்லை; स्नेहान् - அன்பை, विरहे - பிரிவுக் காலத்தில், ध्वंसिनः - அழியுந்தன்மை யுடையனவாக, आहुः - (மக்கள்) கூறுகின்றனர்; (किं) तु - ஆனால், ते - அவ்வன்பு, अभोगात् — அனுபவிக்காததால் (விரஹத்தால்), इष्टे - விரும்பிய, वस्तुनि - பொருளில் (மனிதர்களிடத்தில்), उपचितरसाः - விருத்தியடைந்த ருசியுடையதாக, प्रेमराशी भवन्ति - ப்ரேமையின் குவியல் களாகின்றன.

கருத்துரை: — கருத்த கண்ணழகியே, நான் வாய்மொழியால் கொடுத்த அடையாளத்தைக் கொண்டு நான் நலனுடன் உன்னை சந்திக்கும் விருப்புடன் வாழ்ந்து வருகிறேன் என்பதை உறுதியாக அறிந்துகொள். நான் இறந்துவிட்டேன்

என்பர்; வேறு ஒருத்தியுடன் வாழ்ந்து வருகிறேன் என்பர் சிலர். இந்த ஜனவதந்தியை நம்பாதே. பிரிவிலே அன்பு குறையும், அழியும் என்று சிலர் கூறுவதும் சரியன்று. பிரிவுற்ற காலையில் காதலர்களின் அன்பு அனுபவிக்கப் பெருமையால் அனுபவிக்க வேண்டும் என்ற ருசி மிகுந்து கனத்த திரட்டப்பட்ட ப்ரேமையின் குவியலாக ஆகின்றது. அர்த்தாந்தரந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை: — असित-नयने என்று கூறும் யக்ஷன் யக்ஷியின் கண்ணழகை நினைத்து உருகுகின்முன். अभिज्ञानम् - அடையாளம். ஸீதை சூடாமணியை அடையாளமாகக் கொடுத்தாள். யக்ஷன் கீழ்க்கூறிய கனவுச் செய்தியையே அடையாளமாகக் கொடுத்தான் வாய்மொழியாக.

कुशलिनम् विदित्वा-வேறு யாரும் தரமுடியாத அடையாளத்தைக் கொடுத்ததால் இதைத் தரும் வகையில் நான் உயிரோடு இருக்கிறேன் என்பதை நீ உறுதி செய்து கொள்ளலாம்.

कौलीनम् - ஜனங்கள் கூறும் ஆதாரமற்ற வதந்தி. मयि अविश्वासिनी मा भूः - நான் உயிருடன் இல்லை என்று கூறுவதை நம்பாதே; ராமகிரியில் நான் வேறு ஒருத்தியுடன் இருக்கிறேன் என்று கூறினாலும் நம்பாதே. பின்னுள்ளதை சரித்ரவர்த்தனர் என்ற உரையாசிரியர் கூறுகிறார். "तस्य परस्त्रीसंगमः संभाव्यः" चरि; किमपि - என்பது न என்ற சொல்லைச் சேர்த்து அதற்குத்தக்க காரணம் இல்லை என்று உரை கூறுவர் மல்லிநாதர்.

ध्वंसिनः - அழியும் தன்மையுடையன. ஸ்நேகம் குறையும். (स्नेहः प्रवासाश्रयात्) என்று சிலர் கூறுவது சரி

யன்று என்று யக்ஷன் கூறுகின்றான். ह्रासिनः - என்று நாதரின் பாடம் உள்ளது. अभोगात्-பொருளில் ஏற்பட்ட அன்பு, அதனை அனுபவிக்காததால் ருசி மிகுந்து குவியல் குவியலாக ஆகும். ஒருவரைப் பார்த்தவுடன் ஏற்படும் விருப்பத்தை ராகம் என்பர். அவரை அடைய ஏற்படும் விருப்பத்தை-அபிலாஷையை-ஸ்நேகம் என்பர். அவரை விட்டு ஒரு க்ஷணமும் பிரிந்திருத்தல் கூடாது என்ற விருப்பத்தை ப்ரேமை என்பர். இம்மூன்று சொல்லும் காதலின் மூன்று நிலைகளைக் குறிக்கும். எனவே ஸ்நேஹம் முதிர்ச்சி பெற்று ஆழ்ந்ததாக ஆவதை ப்ரேமை என்று கொள்ள வேண்டும். பிரிவில் ஸ்நேஹம், ப்ரேமைத் திரளாக-குவியலாகக் குவிந்துவிடும் என்பது யக்ஷன் கொள்கை. "காதலியே, உன்னைப் பிரிந்ததால் உன்னிடம் உள்ள என் காதல் குறையவில்லை. அதற்கு மாறாக பன்மடங்கு அதிகமாகக் குவிந்து கொண்டிருக்கிறது" என்கிறான் யக்ஷன்.

स्नेहप्रेम्णोरवस्थाभेदाद्भेदः - तदुक्तम् -
आलोकनाभिलाषौ रागस्नेहौ ततः प्रेमा ।
रतिश्शृङ्गारौ योगे; वियोगगतः विप्रलम्भश्च ॥

'तद्वियोगासहं प्रेम' என்பது மல்லிநாதர் காட்டும் மேற்கோள்.

இத்துடன் யக்ஷன் காதலிக்குக் கூறும் ஸந்தேசம் முடிவுறுகின்றது. இனி அவன் கூறுபவை மேகத்திற்காகும்.

आश्वास्यैवं प्रथमविरहोदग्रशोकां सखीं ते
शैलादाशु त्रिनयनवृषोत्खातकूटान्निवृत्तः ।
साभिज्ञानप्रहितकुशलैस्तद्वचोभिर्ममापि
प्रातः कुन्दप्रसवशिथिलं जीवितं धारयेथाः ॥

பதவுரை: — **प्रथम-विरह-उदग्र-शोकाम्** - *முதற்பிரிவு என்பதால் மிக அதிகம் சோகமுடைய,* **ते सखीम्** - *உன் தோழியை,* **एवम्** - *இவ்வாறு (நான் கூறிய வகையில்),* **आश्वास्य** - *தேற்றி,* **त्रिनयन-वृष-उत्खात-कूटात्** - *சிவபெருமானுடைய வ்ருஷபத்தால் கிளறப்பட்ட சிகரமுடைய,* **शैलात्** - *மலையினின்றும் (கைலாயத்தினின்றும்),* **आशु** - *சீக்கிரமே,* **निवृत्तः** - *(இங்கு) திரும்பியவனாக,* **साभिज्ञान-प्रहितकुशलैः** - *அடையாளத்துடன் தரப்பட்ட நலனையுடைய,* **तद्वचोभिः** - *அவருடைய வார்த்தைகளால்,* **प्रातः** *விடியற்காலையிலே(உள்ள),* **कुन्द-प्रसव-शिथिलम्** - *மல்லிகை மலர் போல் தளர்ந்திருக்கும்,* **मम जीवितं अपि** - *என் உயிரையும்,* **धारयेथाः** - *தாங்குவாயாக, (தரிக்கச்செய்).*

கருத்துரை: — மேகமே, இதுவே எங்களுக்கு ஏற்பட்ட முதற் பிரிவு. இதனால் மிக அதிகமாக சோகம் கொண்டுள்ள உன் தோழியை-என் காதலியை-நான் உன்னிடம் கூறியதைச் சொல்லி மனம் ஆறுதல் பெறச் செய். பின் கைலாயத்தினின்றும் திரும்பு; என் காதலி தரும் அவளது நலனைப் பற்றிய செய்தியை அவள் கூறும் அடையாளத்துடன் எனக்குக் கூறு. காலை வேளையில் காம்பிலே தளர்ந்து இருக்கும் மல்லிகை மலர் போல் சோர்வுற்று இருக்கும் என் உயிரையும் காப்பாற்று. உவமையணி.

விளக்கவுரை:—साभिज्ञानम् *அவள் நலனைப் பற்றிய செய்தியைக் கொண்டு வரும் போது நாங்கள் இரு*

வருமே அறிந்துள்ள சில அடையாளங்களை கேட்டு வா. அதை கேட்பதில் எனக்கு அளவற்ற விருப்பு.

மேகத்தினிடம் அவநம்பிக்கை கொண்டு அடையாளம் கேட்டதாகக் கருதக் கூடாது. ஸீதையும் காகாஸுரன் செய்தி போன்ற சில அடையாளங்களை ஹனுமான் மூலம் ராமனுக்கு அனுப்பியதை நினைவில் கொள்ளலாம்.

प्रात: कुन्दप्रसवशिथिलम्-மல்லிகை முன்னிரவில் பூக்கும். விடியற்காலை வேளையில் காம்பின் பிடிப்பு தளர்ந்திருக்கும். சிறிது அசைந்தாலும் புஷ்பங்கள் பொல பொலவென்று உதிரும். தன் உயிரை மல்லிகையுடன் ஒப்பிட்டு அது நம்பிக்கை என்ற காம்பில் ஒட்டிக் கொண்டிருப்பதாகவும், அதனை நற்செய்தி மூலம் தரிக்கச் செய்தல் வேண்டும் என்றும் கூறுகின்றான் யக்ஷன்.

आशाबन्ध: कुसुमसदृशं प्रायशो ह्यंगनानाम्
सद्य: पाति प्रणयिहृदयं विप्रयोगे रुणद्धि

என கவி முன்பும் (மேக. சுலோகம். 1-10) கூறியதைக் காண்க.

कुन्द-மல்லிகை, प्रसव - மலர், शिथिल- தளர்ந்த, प्रात:-कुन्द என்று ஸமஸ்த பதமாகவும் கொள்ளலாம். பூர்ண ஸரஸ்வதி தக்ஷிணாவர்த்த நாதர் இருவரும் இதற்கு உரை எழுதவில்லை. இடைச்செருகல் எனக்கருதுவர்.

வரும் 48-ம் சுலோகத்தில் மேகத்தினிடம் காதலிக்குச் செய்தி கொண்டு செல்லும்படிச் செய்யும்

வேண்டுகோள் அனுசிதம் என்று கூறி மன்னிப்புக் கேட்கும் வகையில் பேசுகின்ற யக்ஷன், மேகத்தினிடம் திரும்பி வந்து 'எனக்கு என் காதலியின் செய்தியை கூறு' என்று கேட்கமாட்டான். மேக ஸந்தேசத்தை நன்கு ஆராய்ந்து ஹம்ஸ ஸந்தேசம் எழுதிய வேதாந்த தேசிகர் இந்த சுலோகத்திற்கு ஒத்த கருத்துடைய சுலோகத்தை எழுதவில்லை. அவரும் இதை இடைச் செருகல் என்றே கருதியிருப்பார்.

48-ம் சுலோகத்தில் एतत् कृत्वा... इष्टान् देशान् विचर "என் காதலிக்கு ஸந்தேசத்தைக் கூறிய பின் நீ விரும்புமிடம் செல்" என்று கூறியிருப்பதற்கு முரணானது आश्वास्य என்ற சுலோகத்தில் மேகம் ராமகிரி வரவேண்டும் என்று கூறுவது.

कच्चित्सौम्य व्यवसितमिदं बन्धुकृत्यं त्वया मे
प्रत्यादेशान्न खलु भवतो धीरतां कल्पयामि ।
निःशब्दोऽपि प्रदिशसि जलं याचितश्चातकेभ्यः
प्रत्युक्तं हि प्रणयिषु सतामीप्सितार्थक्रियैव ॥ ४७ ॥

பதவுரை: — सौम्य - காண்பதற்கினிய தோற்றமுடைய மேகமே, मे - என்னுடைய, इदम् बन्धुकृत्यम् - இந்த உறவினனுக்குச் செய்ய வேண்டிய தூது காரியம் என்பது, त्वया - உன்னால், व्यवसितम् कच्चित् - (ஏற்றுக் கொள்ள) நிச்சயிக்கப்பட்டதா? प्रत्यादेशात् - ('செய்கிறேன்' என்ற) உன் பதில் வார்த்தையைப் பெற்றே (பெற்ற பிறகே), भवतः - உன்னுடைய, धीरताम् - பெருந்தன்மையை, न कल्पयामि खलु - நான் கருதுகிறேன் (என்பது) இல்லை. याचितः - வேண்டப்

பட்ட நீ, निःशब्दोऽपि - மறுமொழி கூருதவனுயினும், चातकेभ्यः - சாதகப் பறவைகளுக்கு, जलम् - தண்ணீரை, प्रदिशसि हि - கொடுக்கின்ருய் அல்லவா? सताम् - பெரியோர்களுக்கு, प्रणयिषु - தங்களிடம் யாசிப்பவர்கள் திறத்தில், ईप्सितार्थक्रिया-एव - அவர்கள் விரும்பியதை (உடனே) செய்து விடுவதே, प्रत्युक्तम्- மறு மொழியாக (பதிலாக) (अस्ति) - உள்ளது.

கருத்துரை: — நல்லவனே, உன் நண்பனுக்கு இவ்வுதவி செய்தல் என்ற பணியை நீ ஏற்றுக் கொள்ளுகிருயா? செய்கிறேன் என்று நீ கூறும் பதிலே நான் எதிர்பார்க்கவில்லை. 'ஆம்' என்ற உன் பதிலிலிருந்துதான் நான் உனது பெருந்தன்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. ஏனெனில் உனது ஸ்வபாவம் நான் அறிந்ததுதான். சாதகப் பறவைகள் உன்னிடம் தண்ணீர் வேண்டும் போது கர்ஜனை மூலம் பதில் கூறி அதன் பின் நீ தண்ணீர் தருவதில்லை. மௌனமாக இருந்தே நீர் தந்து உதவுகின்ருய்.

தம்மிடம் ஒன்றை விரும்புவர்களுக்குப் பெரியோர்கள் தரும் மறுமொழி அவர் விரும்பியதை உடனே செய்து விடுவதே ஆகும். பதில் கூறுவதற்காக ஒரு நொடியும் காக்க வைக்காமல் உதவுவது பெரியோர்களின் இயற்கை. பெரியோர்களின் இனத்தைச் சேர்ந்த நீயும் மறுமொழி தராமலே என் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதாகக் கருதுகின்றேன். உன் மௌனமே நீ எனக்கு உதவியை உடனே செய்வாய் என்பதைக் காட்டுகிறது. அர்த்தாந்தர ந்யாஸம் அலங்காரம்.

விளக்கவுரை: — बन्धु - உறவினன், இங்கே நண்பனைக் குறித்தது. முன்பும் கவி இச்சொல்லை நண்பன் என்ற பொருளிலே உபயோகித்துள்ளார்.

कच्चित्-व्यवसितम् - உன்னல் என் வேண்டுகோள் ஏற்கப்பட்டுள்ளதா என மிக ஆவலுடன் யக்ஷன்

கேட்பதை कच्चित् என்பது குறிக்கும். இச்சொல் கேள்வியை மாத்திரம் குறிப்பதன்று. கேட்பவரின் ஆவலையும் காட்டுகின்றது.

प्रत्यादेशात् - कल्पयामि - प्रत्यादेश - என்பதற்கு மறுப்பு என்ற பொருள் தான் உண்டு. அது பொருந்தாததால் மல்லிநாதர் 'மறுமொழி' என்று வலிந்து பொருள் கொண்டு விளக்கியிருக்கிறார்.

प्रत्यादेशात् - உனது மறுப்பினால் भवत: - உனக்கு धीरताम् - இரக்கமற்ற தன்மையை न कल्पयामि - நான் நினைக்கவில்லை. "என் வேண்டுகோளை மறுப்பதின் மூலம் உன் இரக்கமற்ற தன்மையை காட்டுவாய் என்று நான் நினைக்கவில்லை" என்று பூர்ண ஸரஸ்வதியின் விளக்கம் உள்ளது.

प्रत्यादेशे என்று பாடம் கொண்டு, 'என் வேண்டுகோளை மறுக்கும் விஷயத்தில் உனக்குத் துணிவு இருக்கும் என்று நினைக்கவில்லை என்பது பொருத்தமானது. प्रत्याख्यातुम् என்று ஒரு பாடம் இருக்கிறது. 'மறுப்பதற்கு உனக்கு தைர்யம் வராது' என்பது இதன் கருத்து. காளிதாஸரைப் போற்றி மேக ஸந்தேசத்தை அனுசரித்து ஹம்ஸ ஸந்தேசம் எழுதிய வேதாந்ததேசிகர் प्रत्याख्यातुम् என்ற பாடத்தை ஏற்று இதே கருத்தை தமது காவ்யத்தில் கூறியிருக்கிறார்.

अप्येतत् ते मनसि निहितं साह्यमव्याजबन्धो
प्रत्याख्यातुं प्रभवति न खल्वानृशंस्यं त्वदीयम् ॥

ஹம்ஸ ஸந்தேசம் 2-47. இதன் பொருள்: "அன்னமே! நான்கூறியவை எல்லாம் உன்மனத்தில் பதியவைத்துக்

கொள்ளப்பட்டதா? தன்னலம் கருதாத நண்பனே, உனக்கு பரோபகாரம் செய்யும் இயல்புள்ள இரக்கம் இவ்வுதவியை (साह्यम्), மறுக்க (प्रत्याख्यातुम्), न भवति खलु திறனுடையது அல்ல'' என்பதாம். காளிதாஸரின் ஹ்ருதயத்தை அறிந்து வேதாந்த தேசிகர் எழுதியுள்ளதை ரஸிகர்கள் உவப்பர். மேகஸந்தேசம், ஹம்ஸஸந்தேசம் இரண்டிலும் இது 47 ஆம் சுலோகமாக உள்ளதையும் காண்க. காளிதாஸர் பாடத்தை அறிந்திட வேதாந்த தேசிகரின் நூலும் பயன் தருவதாகும்.

चातकः - ஒருவகைப் பறவை. இது மேகத்தினின்றும் வரும் நீர் தரையில் விழுவதற்கு முன்பே தம் அலகில் அதை ஏற்றுப் பருகும். எனவே சாதகம் நீர் விரும்பும் போது மறுமொழி கூறித் தாமதம் செய்யாமல் தண்ணீர் தருவதாகக் கூறினார்.

नाभ्यर्थितो जलधरोऽपि जलं ददाति-வேண்டப்படாமலும் கூட மேகம் தண்ணீர் தரும் என்று பர்த்ருஹரி கூறினார். எனின் வேண்டினால் தராமல் இருக்குமா? என்பது கருத்து.

ईप्सितार्थक्रिया-एव - கேட்ட உதவியைப் பெரியோர்கள் உடனே செய்வர். செய்கையே யாசிப்பவர்களுக்கு பதிலாகுமேயன்றி வார்த்தையல்ல; क्रिया केवलं उत्तरम् மாகம் 2, சு. 22 என்பதனையும் காண்க. யக்ஷன், உதவி செய்வாயா? என்று கேட்டு பதிலை எதிர்பார்க்காமல் தானே பதிலையும் கூறி மேகத்தை சங்கடமான நிலையிலிருந்து விடுவிக்கிறான். ஏனெனில் அசேதனமான மேகத்தினிடம் பதிலை எதிர்பார்க்க முடியாது.

एतत्कृत्वा प्रियमनुचितप्रार्थनावर्तिनो मे
सौहार्दाद्वा विधुर इति वा मय्यनुक्रोशबुद्धया ।
इष्टान् देशाञ्जलद विचर प्रावृषा संभृतश्री-
र्माभूदेवं क्षणमपि च ते विद्युता विप्रयोगः ॥ ४८ ॥

பதவுரை: — जलद - மேகமே, सौहार्दात् - (என்னிடம் நீ கொண்ட) நட்பினாலோ, विधुरः - (நான் காதலியைப்) பிரிந்திருப்பவன், इति वा - என்ற காரணத்தினாலோ, मयि - என்னிடம், अनुक्रोशबुद्धया वा - (காரணமின்றி ஒருவனிடம் வருகின்ற) இரக்கமுள்ள எண்ணத்தினாலோ, अनुचित-प्रार्थना-वर्तिनः - தகாத வேண்டுகோளில் நிலை பெற்று இருக்கின்ற, मे - எனக்கு, एतत् प्रियम् - (செய்தி கொண்டு சேர்த்தல் என்ற) இந்த ப்ரியத்தை, कृत्वा - செய்த பின், प्रावृषा-வர்ஷ ருதுவினால், संभृत-श्रीः-விருத்தியடைவிக்கப்பட்ட சோபையுடையவனாக, इष्टान् - (நீ) விரும்புகின்ற, देशान् - தேசங்களிலே, विचर - ஸஞ்சரிப்பாயாக. एवम् - (நான் தற்போது) இருக்கும் வகையில், क्षणमपि च - ஒரு நொடிப்பொழுதும் கூட, ते - உனக்கு, विद्युता - (உன் மனைவியான) மின்னலுடன், विप्रयोगः- பிரிவு, मा भूत् - உண்டாக வேண்டாம்.

கருத்துரை:-மேகமே, பிரதிபலன் கருதாமல் நீ என்னிடம் கொண்ட நட்பினாலோ, காதலியை விட்டுப் பிரிந்திருக்கிறேன் என்பதாலோ, கஷ்டமனுபவிப்பவனிடம் உண்டாகும் இரக்கத்தாலோ, உன் நிலைக்கு பொருந்தாத ஒரு வேண்டுகோளைச் செய்து நிர்பந்திக்கின்ற எனக்குச் செய்தியைக் கொண்டு செல்லுதல் என்ற உதவியைச் செய்வாயாக. செய்த பின் இப்போது உள்ள மழைக் காலத்தினால் உன் அழகு விருத்தியடையும். நீ விரும்பிய நாடுகளில் ஸஞ்சாரம் செய். நான்

என் காதலியை விட்டுப் பிரிந்திருப்பது போல் உனக்கு உன் காதலி மின்னலின் பிரிவு ஒரு நொடிப் பொழுதும் ஏற்படக் கூடாது என்பதுதான் எனது வேண்டுகோள். ஆசிஸ் என்ற அலங்காரம்.

விளக்கவுரை: — தனக்கு உதவிசெய்ய யக்ஷன் மூன்று காரணங்களைக் குறிப்பிட்டான். அவற்றில் ஒவ்வொன்றுமே போதுமான காரணம் என்பதை वा என்ற சொல் குறித்தது.

अनुचित-प्रार्थनावर्तिन: மேகத்தின் பெருமையைக் கருதும் போது யக்ஷன் தான் விரும்பும் உதவியில் மேகத்தைத் தூண்டுவது தகாது என்று கருதியதால், "அனுசித" என்றான். தூதர்களைப் பற்றிக் கூறும் போது, 'न हि प्रकृष्टाः प्रेष्यन्ते प्रेष्यन्ते हीतरे जनाः' 'உயர்ந்தவர்கள் தூதர்களாக அனுப்பப்படுவதில்லை. சாதாரண மனிதர்களே அனுப்பப்படுவர்' என வால்மீகி ராமாயணம் கூறுகின்றது. (सु. 68-22) प्रार्थना-वर्ती - வேண்டுகோளில் உறுதியாக இருப்பவன்; வற்புறுத்துபவன் என்பது பொருள்.

प्रावृषा-संभृतश्री: மழைக்காலம் மேகத்திற்கு அழகு செய்யும் என்றான். ஏனெனில் காடுகள் பசுமை கொள்ளும். மயில் முதலியவை மகிழ்ந்து ஆடும். இதெல்லாம் மேகத்தின் பயனாக இருந்து அதற்குச் சோபை தருவதாகும்.

इष्टान् देशान् विचर - அளகாபுரி செல்லும் வரையில் தான் நான் சொன்ன மார்க்கத்தில் செல்ல வேண்டும் பிறகு நீ விரும்பிய இடங்களுக்குச் செல்.

मा भूत् विप्रयोगः தனக்கும் தன் காதலிக்கும் உதவி, உயிர் காக்கும் மேகத்திற்கு நன்மையைக் கோரி ஆசீர்வாதம் செய்கின்றான் யக்ஷன்.

நாடகங்களின் முடிவில் நன்மையைக் கோரும் ச்லோகத்தை பரதவாக்யம் என்பர். அதுபோல் இச் ச்லோகத்தைக் கருதலாம்.

अन्ते काव्यस्य नित्यत्वात्कुर्यादाशिषमुत्तमाम् ।
सर्वत्र व्याप्तये विद्वान् नायकेच्छानुरूपिणीम् ॥

என்பது ஸாரஸ்வதாலங்கார நூல் கூறுவது மல்லிநாதர் உரையில் உள்ளது. காவ்யம் நிலைத்து நிற்பதால் அதன் முடிவில் காவ்ய நாயகன் விருப்பத்தை மனத்திற் கொண்டு அதற்கு ஒத்தவாறு எல்லோருக்கும் பொருந்தும் வகையில் சிறந்த ஆசீர்வாதத்தைக் கவி எழுத வேண்டும் என்பது இதன் கருத்து.

ஸம்போக ச்ருங்காரத்தைக் கவி குமாரஸம்பவத்தில் எட்டாம் ஸர்க்கத்தில் வர்ணித்தார். விப்ரலம்ப ச்ருங்காரம் அவர் காவ்யங்களில் கூறப்பட்டிருப்பினும் இதனை விரிவாக வர்ணித்து ஸஹ்ருதயர்களின் மனத்தில் இச்சுவையின் அனுபவம் பரிபூர்ணமாக ஏற்பட வேண்டும் என்பதற்காக மேகஸந்தேசம் எழுதினார். காவ்யத்தை இந்த சுலோகத்துடன் முற்றுப்பெறச் செய்ததற்குக் கவியின் நோக்கம், ரஸிகர்கள் காவ்யத்தைப் படித்து முடித்த பிறகும் தம் மனத்துள்

இதன் சுவையைச் சர்வணம் செய்து (திரும்பத் திரும்ப நினைத்து) அனுபவிக்க வேண்டும் என்பதாம்.

எனவே யக்ஷன் என்ன ஆனான் என்ற கேள்விக்குத் தேவையே இல்லை. அப்படிக் கேட்பது ரஸிகத் தன்மையின் குறைவையே காட்டும்.

ஆயினும் யக்ஷனிடம் இரக்கம் கொண்ட ஒரு கவி காளிதாஸனின் நடையைப் பின்பற்றி ஐந்து ச்லோகங்களை எழுதி யக்ஷன் இனிய வாழ்க்கை நடத்தினான் என்று எழுதியிருக்கிறார். அந்த ச்லோகங்களும் அவற்றின் கருத்துக்களும் தனியே தரப்பட்டுள்ளன.

வேதாந்த தேசிகரும் தாம் எழுதிய ஹம்ஸ ஸந்தேசத்தில் விப்ரலம்ப ச்ருங்காரம்-அதனடியாக வரும் கருணை - என்ற இரண்டையும் நன்கு புலப்படுத்தியுள்ளார். ஆனால் காவ்யம் இனிய முடிவுடன் இருப்பின் நல்லது என விரும்பினார். இவ்விஷயத்தில் அவர் காளிதாஸரின் கருத்தினின்றும் மாறுபட்ட கருத்து உடையவர் என்பது தெரிகிறது. 49-ஆம் சுலோகத்தில் அவர் கூறுவது; "இவ்வாறு ஸீதைக்கு ஹம்ஸத்தின் மூலம் செய்தியனுப்பி வானர ஸேனையுடன் அணையினால் கடலைக் கடந்து, ராவணனை யுத்தத்தில் வதம் செய்தபின், ஸீதையை அடைந்து மகிழ்ச்சியடைந்தவராக, பாதுகைகளால் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்ட ராஜ்யத்தை ஏற்று அனுபவிப்பவராக, ஸ்ரீராமன் தமது தலைநகரான அயோத்தியைத் தாம் ஆளுவதன் மூலம், நல்ல நாதன் உடையதாகச் செய்தார்" என்பது.

ஐம்பதாவது சுலோகத்தில், "தான் நன்கு ஆராய்ந்து எழுதிய ரத்தினம் போன்ற ஹம்ஸ ஸந்தேச காவ்யத்தை அறிஞர்கள், ஞானக்கண்ணைத் துணையாகக்கொண்டு காண வேண்டும்" என்று முடிக்கிறார். தாம் எழுதிய நூல்களின் முடிவில் அவற்றின் பெயரையும் தமது பெயரையும் குறிப்பது வேதாந்த தேசிகரின் சிறந்த பழக்கமாகும். இதனால் நூலின் பெயர் ஹம்ஸ ஸந்தேசம் என்று தெளிவாகிறது.

इति महाकविश्रीकालिदासकृते मेघसन्देशकाव्ये
द्रमिडभाषाव्याख्यानसहिते द्वितीयाश्वासः ॥

काव्यं च समाप्तम् ॥

प्रक्षिप्तश्लोकाः

इत्याख्याते सुरपतिसखः शैलकुल्यापुरीषु
स्थित्वा स्थित्वा धनपतिपुरीं वासरैः कैश्चिदाप ।
मत्वाऽगारं कनकरुचिरं लक्षणैः पूर्वमुक्तै-
स्तस्योत्सङ्गे क्षितितलगतां तां च दीनां ददर्श ॥१॥

கருத்துரை: — இவ்வாறு கூறியவுடன் இந்திரன் தோழனான மேகம், மலைகள், ஆறுகள், நகரங்கள் என்ற இடங்களில் தங்கித்தங்கி சில நாட்களில் குபேரன் நகரை அடைந்தது. முன் கூறிய அடையாளங்களைக் கொண்டு பொன் போல் மிளிர்கின்ற யக்ஷனின் வீட்டைக்கண்டு அம்மாளிகையினுள் எளிய நிலையில் தரையில் படுத்திருந்த யக்ஷியைக் கண்டது.

तस्मादद्रेर्निगदितपथः शीघ्रमेत्यालकायां
यक्षागारं विगलितनिभं दृष्टचिह्नैर्विदित्वा ।
यत्संदिष्टं प्रणयमधुरं गुह्यकेन प्रयत्ना-
त्तद्गेहिन्याः सकलमवदत्कामरूपी पयोदः ॥ २ ॥

கருத்துரை: — தன்னிச்சைப்படி வடிவெடுக்கும் ஆற்றலுடைய மேகம் ராமகிரியினின்றும் புறப்பட்டு, கூறப்பட்ட வழியாக அலகாபுரிக்கு வேகமாகச் சென்று தான் கண்ட அடையாளங்களைக் கொண்டு சோபை இழந்துள்ள யக்ஷன் மாளிகையைக்கண்டு, யக்ஷன் முயன்று அன்பினால் இனியதான என்ன செய்தி கூறினானோ அச்செய்தியை முற்றிலும் யக்ஷனின் மனைவிக்குக் கூறியது.

तं संदेशं जलधरवरो दिव्यवाचाऽऽचचक्षे
प्राणांस्तस्या जनहितरतो रक्षितुं यक्षवध्वाः ।
प्राप्योदन्तं प्रमुदितमनाः साऽपि तस्थौ स्वभर्तुः
केषां न स्यादभिमतफला प्रार्थना ह्युत्तमेषु ॥ ३ ॥

கருத்துரை: — மக்களின் நன்மையில் ஈடுபட்டுள்ள அச் சிறந்த மேகம் யக்ஷன் மனைவியின் உயிரைக் காக்க விரும்பி தனது தெய்வ வாக்கினால் அச்செய்தியைக் கூறியது. தன் கணவரது செய்தி கேட்டு அவளும் மகிழ்ந்த மனம் கொண்டவள் ஆனாள். சிறந்தவரிடம் செய்து கொண்ட வேண்டுகோள் யாருக்குப் பயனளிக்காமற் போகும்?

श्रुत्वा वार्तां जलदकथितां तां धनेशोऽपि सद्यः
शापस्यान्तं सदयहृदयः संविधायास्तकोपः ।
संयोज्यैतौ विगलितशुचौ दंपती हृष्टचित्तौ
भोगानिष्टानविर[भिम]तसुखं भोजयामास शश्वत् ॥

கருத்துரை: — மேகம் கூறிய செய்தியை குபேரனும் கேட்டு கோபம் நீங்கியவனாக இரக்கமுள்ள மனத்துடன் உடனே சாபத்திற்கு முடிவைச் செய்து அவ்விருவரையும் ஒன்று சேர்த்து, துக்கம் நீங்கி மனம் மகிழ்ந்தவர்களாக இடையறாது இன்பம் பெறும் வகையில் விரும்பிய ஸுகங்களை நிரந்தரமாக அவர்களை அனுபவிக்கச் செய்தான்.

इत्थं भूतं सुरचितपदं मेघदूताभिधानं
कामक्रीडाविरहितजने विप्रयोगे विनोदः ।
मेघस्यास्मिन्नतिनिपुणताबुद्धिभावः कवीनां
नत्वाऽऽर्याश्चरणकमलं कालिदासश्चकार ॥ ५ ॥

கருத்துரை: — கவிகளில் சிறந்த காளிதாஸர் காதலர்கள் இன்பம் துய்க்க வழியின்றிப் பிரிவாற்றாமையால் வருந்தும் காலத்தில் அவர்களுக்குப் பொழுது போக்காக இருப்பதும் நன்கு அமைக்கப்பட்ட பதங்களையுடையதுமான இத்தகைய மேகஸந்தேசம் என்ற காவ்யத்தை காளிதேவியின் சரண கமலங்களை வணங்கிச்செய்தார். இந்தக்காவ்யத்தில் மேகத்தின் மிகச்சிறந்த புத்தியின் திறமை நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது.

இவை எல்லாம் இடைச்செருகலாயினும் 3-ஆவது, 4-ஆவது சுலோகங்களுக்கு மாத்திரம் சில பதிப்புக்களில் மல்லிநாதரின் உரை என்று கூறப்பட வேண்டிய நிலையில் உரை உள்ளது. சரித்ரவர்த்தனரின் உரையும் உள்ளது.

प्रक्षिप्ताः श्लोकाः समाप्ताः ॥

। शुभमस्तु ।

मेघसन्देशश्लोकसूची



Professor V. S. Venkata Raghavacharya

Author of Tamil Commentaries on Kalidasa's *Raghuvamsa, Kumara-Sambhava* & *Meghaduta*, Dandin's *Dasakumaracharita*, Bharavi's *Kiratarjuniya*, *Sri Ramodanta*, etc.; Sanskrit Commentary on Jayadeva's *Chandraloka*. General works in Sanskrit — *Bhāratīyam Vrttam* (India's Cultural History), *Sikshamanovijnanam* (Educational Psychology). *Amarakosasangraha*. *Vishapaanam*. *Vaidyabandhu* (Both Sanskrit Dramas) and *Hasyachudaamani* (A Sanskrit Drama, an adaptation); Articles — Kalidasa's Psychology (in Sanskrit), Standardisation of Sanskrit Pronunciation, Critical Study of *Paramatabhanga*, Appayya Dikshita as a Commentator, etc.

Published *Vimarsa*, a Research Journal of RSK Samsthan, *Visvaamitrasamhitaa*, *Naaradiyasamhitaa*, *Visvaksenasamhitaa*, *Nyaayakalpalatikaa* and *Jnaapakasamgraha* as Principal, Kendriya Sanskrit Vidya Pitha, Tirupati (1962–1973).

Edited and published *Aasvalaayanagrhyakarmaprayoga* (1979).

A teacher of Sanskrit language and literature for 42 years; Professor of Sanskrit, Vivekananda College, Head of the Department of Sanskrit Education and Principal, Kendriya Sanskrit Vidya Pitha, Tirupati.

Blessed by His Holiness Jagadguru Sri Sankaracharya of Kanchi Kamakoti Pitham conferring the title of *Saahiti-vallabha* (1971).

Recipient of Rashtrapati's Certificate of Honour for service to Sanskrit (1978).

Associated with several Academic Bodies of the Universities; Secretary of the Sanskrit Academy for 20 years.

An M.A., B.O.L., B.T., Siromani (Mimamsa) of the Madras University.